




# ஆறாவடு

சயந்தன்




ஆறா வடு
சயந்தன்



# ஆறாவடு

சயந்தன்

தமிழினி

கடந்துபோன மூன்று தசாப்த காலத்தில் யுத்தத்தால் ஆசீர்வதிக்கப்பட்டிருந்த ஈழச் சனங்களின் வாழ்வில் அவ்வப்போது அமைதிக்கால ஒளிக்கீற்றுக்கள் சட்டென மின்னி மறைந்திருக்கின்றன.

இந்திய இராணுவம் அந்த மண்ணில் போய் இறங்கிய போது அப்படியொரு நம்பிக்கை அந்த மக்களிடத்தில் முகிழ்த்திருந்தது. பதுங்கு குழியற்ற வாழ்வொன்றை பாரதம் தந்துவிடுமென அவர்கள் எதிர்பார்த்திருந்தார்கள். முடிவில் நம்பிக்கைகள் சிதைந்தழிந்தன. சனங்களின் முகங்களில் போர் ஓர் அமிலமாய் தெறித்தது.

நீண்ட பத்தாண்டுகளின் பிறகு மற்றுமொரு அமைதிக்கான காலம் ரணில் — புலிகள் பேச்சுக்காலத்தின் போது அரும்புவதாக அந்தச் சனங்கள் நம்பினார்கள். பேச்சுவார்த்தையின் தேனிலவுக்காலம் அதீத நம்பிக்கைகளை அவர்களிடத்தில் ஊட்டியிருந்தது. ஈற்றில் அந்த அமைதியின் முடிவும் முன்னெப்போதும் இல்லாத பெரும் ஊழிக்காலக் கொரூரத்தை உருவாக்கி கழிந்து போனது.

இப்படியான, 87 இல் தொடங்கி 2003 வரையான இந்த இரண்டு அமைதிக்கான காலங்களுக்கு இடையே இந்த நாவலின் கதைகள் நகர்கின்றன.

இந்நாவலை நான் எழுதிய வேளையில் என்னை ஊக்குவித்து உதவிகள் புரிந்த விருபா குமரேசன் இந்நாவலுக்குப் பெயர் சூட்டுவதில் உதவிய கவிஞர் மகுடேஸ்வரன், வெளியிடும் தமிழினி பதிப்பகத்திற்கு மனமார்ந்த நன்றி

சயந்தன்

இணையம்
www.sayanthan.com

மின்னஞ்சல்
me@sayanthan.com

## உள்ளே


1

2

3

4

5

6

7

8

9

10

11

12

13

14

15

16

17

18

19

20

21

# 1

நீர்கொழும்புக்கு அருகேயான கடற்கரையொன்றில் குந்தியிருந்து இத்தாலிக்கு எந்த ரூட்டால் போவது என்று இவன் யோசித்துக் கொண்டிருந்தபோது இரவாகியிருந்தது. உப்பும் குளிரும் சேர்ந்த மெல்லிய காற்று முகத்தில் வருடியபடியிருந்தது. கடலின் வாசம் சூழவும் நிறைந்திருந்தது. போட்டிருந்த சேர்ட்டினுள் காற்று நுழைந்து முதுகில் அது டப் டப் என்று சடசடத்தது. தண்ணீரில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிச்சங்கள் தெரிந்தன. இவனுக்கு அருகில் சிறியதொரு ட்ரவலிங் பை இருந்தது. அதற்குள் மூன்று சேர்ட், மூன்று ஜீன்ஸ், இரண்டு சாரம், பத்து ஜட்டி, ஒரு பனடோல் காட், ஒரு அல்பம் அல்பத்தில் இரண்டு அம்மாவின் படங்களும் இருபத்தியிரண்டு அகிலாவின் படங்களும் இருந்தன.

இவன் இத்தாலிக்கு புறப்பட்டு நீர்கொழும்புக் கடற்கரைக்கு வருவது இது மூன்றாவது தடவையாகவும் அனுப்பி வைக்கிற ஏஜென்சிக்கு முழுக்காசைக் கட்டி இது மூன்றாவது மாதமாகவும் இருந்தது. காசைக் கட்டிய இரண்டாவது நாளே ஏஜென்சியிடமிருந்து இவனுக்கு ரெலிபோன் அழைப்பு வந்தது. ‘‘இண்டைக்கு ஏத்தப்போறம். வாகனம் வரும். ரெடியா இரும்.’’ என அவன் சொல்லியிருந்தான்.

சுறுசுறுப்பும் வெளிநாடொன்றுக்குப் போகப் போகிற குறுகுறுப்பும் திரும்பவும் இவனுக்குள் ஓடத்தொடங்கின. அகிலா ஹொட்டேனாவில் உள்ள அம்மன் கோயிலுக்குப் போய் அர்ச்சனை செய்து கொண்டுவந்து கொஞ்ச விபூதியையும் குங்குமத்தையும் ட்ரவலிங் பை பொக்கட்டுக்குள் வைத்து இவனுக்கும் பூசிவிட்டு ‘‘இந்தமுறை எல்லாம் சரி வரும்’’ என்றாள்.

இவன் ரிப்ரொப்பாகத் தயாராகி வாகனம் வருமென்று பார்த்துக் கொண்டு நின்றான். அது வரவில்லை. இருட்டிய பிறகு ஏஜென்சியிடமிருந்து திரும்பவும் அழைப்பு வந்தது.

‘‘தம்பி தெரியும் தானே. கடற்பயணங்கள் எதுவும் சொல்லிக் கொண்டில்லை. உங்களை ஏத்துற கப்பல் வந்து சேரேல்லை. எல்லாம் சரி வந்தவுடன நான்

திருப்பக் கோல் பண்ணுறன்'' என்றவன் அடுத்த பதினைந்து நாட்களுக்கு கூப்பிடவேயில்லை. இவன் அழைத்தாலும் ஸ்விட்ச் ஓப் என்று தகவல் வந்தது. அங்கிங்கென்று விசாரித்துப் பார்த்தும் ஆள் சிக்கவில்லை.

''முழுக்காசையும் கட்டிய நீ ஒரு மொக்குப் பயல்தான்'' என்று ஆட்கள் இவனைத் திட்டினார்கள். ''இத்தாலியில் இறங்கினாப் பிறகுதான் காசு'' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாகப் பேசியிருக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். இவன் அப்பிடிப் பேசியிருக்காதவன் அல்ல.

''அண்ணை முழுக்காசையும் பாங்கில அகிலாவின்ரை எக்கவுண்டில போட்டிட்டு பாஸ் புத்தகத்தை உங்கடை கையில தாறன். நான் இத்தாலியில இறங்கிடோண அகிலா முழுக்காசையும் எடுத்து கையில தருவா.'' என்று இவன் பேசித்தானிருந்தான். ஆனால் ஏஜென்சி அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை.

''நான் இதை ஒரு தொழிலாச் செய்யேல்லை. எனக்கு என்ரை வருமானத்துக்கு ஆயிரத்தெட்டு வழி இருக்கு. இதை எங்கடை பிள்ளையளுக்காக ஒரு சேவையைத்தான் செய்யிறன். ஆனா இதில இலங்கைப் பொலிஸில இருந்து சோமாலியாக்காரன் எகிப்துக்காரன் எண்டு கனக்கப்பேர் இன்வோல்வ் ஆகியிருக்கினம். அவைக்கு நான் கதை சொல்ல முடியாது.'' என்றான் அவன்.

அவனை இன்னுமொரு உடன்பாட்டுக்கு இறக்க முடியுமா என்று இவன் முயற்சித்தான். ''நான் வேணுமென்றால் அரைவாசிக் காசை இப்ப தாறன். மிச்சத்தை இறங்கிடோண தரலாம்''

''ஐசே. இந்தச் சேர்விஸில நம்பிக்கைதான் முக்கியம். நான் உம்மை வற்புறுத்தேல்லை. நீர் உம்மடை கொன்டிஷன்களுக்கு ஓம் படுகிற வேறை ஆரையும் பிடிச்சு போகலாம்'' என்று ஏஜென்சி சொன்னதோடு இவன் முழுக்காசையும் கொடுக்கச் சம்மதித்தான்.

ஏஜென்சியை வங்கிக்கு வரச்சொல்லிவிட்டு இவன் அகிலாவையும் கூட்டிக்கொண்டு போனான். அவளது என்கவுண்டில்த்தான் காசு இருந்தது. காசு எடுக்கிற சீட்டில் பன்னிரெண்டு லட்சம் என எழுதி கவுன்டரில் கொடுத்த

கொஞ்ச நேரத்தில் ஹற்றன் நஷினல் வங்கி மனேஜர் அகிலாவைக் கூப்பிட்டான். அவள் இவனையும் கூட்டிக்கொண்டு உள்ளே போனாள்.

''இவ்வளவு பெரிய தொகையை ஏன் ஒரே நாளில் எடுக்கிறீர்கள்'' என்று மனேஜர் கேட்டான். அவன் இளைஞனாக இருந்தான். இவனின் வயதுகள் இருக்கலாம். அவன் ஒரு சிங்கள ஆள் என்பது இவனுக்கு அச்சமாக இருந்தது. பொலிசுக்குப் போன் பண்ணி ஏதாவது சொல்லிவிடுவானோ என்று யோசித்துக் கொண்டிருந்தான். அப்பிடியேதாவது நடந்தால் வெளியே நிற்கிற ஏஜென்சிக்காரனுக்கும் ஆபத்தாகி முடியும் என்றும் நினைத்தான்.

அகிலா அதைப்பற்றியெல்லாம் யோசித்ததாகத் தெரியவில்லை. ''இவரைத்தான் நான் கல்யாணம் கட்டப்போறன். இப்ப இவர் ஒரு பிஸினஸ் தொடங்கக் காசு தேவைப்படுது. அதுக்காகத்தான் இந்தக் காசை வெளியில எடுக்கிறன்'' என்று அவள் சொல்லிக் கொண்டிக்கும் போதே ''என்ன பிஸினஸ்'' என்று மனேஜர் கேட்டால் எதையாவது சொல்ல இவன் மூளையை அலையவிட்டான். ரெக்கோடிங் பார், ரெலிக்கொமினிசேஷன், படச் சிடிக் கடை என்றெல்லாம் ஓடி கடைசியாக யாழ்ப்பாணத்தில் ஒரு மொபைல் போன் கடை பிஸினெஸ் பொருந்தி வரும்போல் இருந்தது. ஆனால் மனேஜர் அதைப்பற்றி ஒன்றும் கேட்கவில்லை. அப்படி அவன் ஒன்றும் கேட்காமல் இருந்ததுவும் ஒருவிதத்தில் அந்தரமாக இருந்தது.

மனேஜர் இரண்டு மூன்று பேப்பர்களில் அகிலாவிடம் கையெழுத்து வாங்கினான். காசை வெளியில் கவுன்டரில் வாங்கச் சொன்னான். அவர்கள் வெளியேறினார்கள். ஆயிரம் ரூபாய்த்தாள்கள் அடங்கிய காசுக் கட்டுக்களை கவுன்டரில் இவர்களிடம் கொடுத்த போது கவுண்டரிலிருந்தவன் கண்களை ஆந்தையைப் போல விரித்து வைத்திருந்தான்.

அங்கேயே அமர்ந்திருந்து ஒவ்வொரு கட்டாக எண்ணி இவன் ஏஜென்சிக் காரனிடம் கொடுக்க அவன் அதனைத் திரும்பவும் எண்ணி றப்பர் பான்டினால் கட்டத்தொடங்கினான்.

''அண்ணை எல்லாம் சரிதானே. என்னை எப்ப ஏத்துறீங்கள்.'' என்று இவன் கேட்டான்.

‘‘முப்பத்தியிரண்டு, முப்பத்துமூன்று, முப்பத்துநாலு. என்று வாயும் கையும் எண்ணிக்கொண்டிருக்க தலையைக் குனிந்தவாறே கண்களை உயர்த்தி இவனைப் பார்த்த ஏஜென்சிக்காரன் பதிலொன்றும் சொல்லாமலிருந்தான். கடைசிக்காசுக் கட்டை எண்ணிமுடித்த பிறகு அவன் இப்படிச் சொன்னான்.

‘‘இண்டைய தேதியில ஈரோப்புக்கு போறதுக்கு இருபது லட்சத்துக்கு மேல வெளியால போகுது. அதுவும் இடையில பிடிபடுகிற கேசுகள்தான் கூட. உமக்கே தெரியும். நீர் முதல்ல போய் இடையில பிடிபட்டு எல்லாம் பிழைச்சுப் போய் திரும்ப வந்து நிற்கிறீர். என்ரை றூட் அப்பிடியில்லை. ஏறினால் நேரை இத்தாலிதான். இது உங்களுக்கு லக்கிப் பிரைஸ்.’’

இவன் மௌனமாக நின்றான். ஏஜென்சியின் வார்த்தைகளில் உண்மை இழைந்து கிடப்பதாகத் தோன்றியது. ‘‘ஒண்டுக்கும் யோசிக்க வேண்டாம். இத்தாலிக்குப் போன பிறகு அங்காலை சுவிஸ் பிரான்ஸ் ஜெர்மனி என்று நீங்கள் விரும்பின நாடுகளுக்குப் போகலாம். பிறகு இந்தக்காசை ஆறு மாசத்தில உழைச்சு எடுக்கலாம்’’ என்ற ஏஜென்சிக்காரன், இந்தக்காசு என்ற போது கையால் தன் பையைத் தட்டிக் காட்டினான்.

இப்பிடியெல்லாம் சொன்ன ஏஜென்சிக்காரன் கடைசியில தன் தலையில் மிளாகாய் அரைத்து விட்டான் என்ற வெப்பியாரத்தில் அவனையும் அவனது மனைவி பிள்ளைகளையும் இன்னும் அவனது ஏழேழு தலைமுறையையும் இவன் தூசணத்தால் திட்டிக்கொண்டிருந்த ஒரு பின்னேரப் பொழுதில் திரும்பவும் ஏஜென்சிக்காரன் அழைத்தான். ‘‘உங்கடை அலுவலாத்தான் எகிப்துவரை போட்டு வந்தனான். எல்லாம் சரிப்பண்ணியாச்சு. வாகனம் வரும். ரெடியா இரும்’’

அகிலா திரும்பவும் அம்மன் கோயிலுக்குப் போய் வீபூதியோடு வந்தாள். இரவு ஏழு மணிபோல டொல்பின் வாகனமொன்று வந்து இவனை ஏற்றியது. ஏறுவதற்கு முதல் ஒருதடவை அகிலாவை கட்டிப்பிடித்துக் கொஞ்சுவமோ என்று யோசித்தான். ஜன்னல் கண்ணாடி வழியே வேறு இளைஞர்களும் இவனைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இத்தாலியிலிருந்து கோல் பண்ணுவதாய் அகிலாவுக்குச் சொல்லிவிட்டு இவன் வாகனமேறினான்.

டொல்பின் வாகனம் ஏற்கனவே ஆட்களால் நிறைந்திருந்தது. அங்கிருந்த சின்னப்பெடியனை எழும்பச் சொன்ன ட்ரைவர் இவனை அந்தச் சீற்றில் இருக்கச் சொன்னான். பிறகு சின்னப் பெடியனை இவன் மடியில் இருத்தினான். அவனுக்குப் பதினான்கு வயதிருக்கலாம். அவனோடு வேறும் யாரும் அப்பாவோ அண்ணனோ வரக்கூடும் என்று நினைத்தான். ‘‘யாரோடை வாறீர்’’ என்று கேட்டபோது அவன் ‘‘தனியத்தான்’’ என்றொரு தனி வார்த்தையைச் சொல்லிவிட்டு வெளியே, எதிராய் ஓடுகிற வீதியைப் பார்க்கொண்டிருந்தான்.

கட்டுநாயக்கா எயார்போர்ட்டுக்குப் பிரிகிற வழி கழிந்த கொஞ்சத் தூரத்தில் பொலிஸ் இவர்களது வாகனத்தை மறித்து ஓரமாய் நிறுத்தச் சொன்னது. இரண்டு பொலிஸ்காரர்கள் கையில் டோர்ச் லைட்டுக்களுடனும் தோளில் தொங்கிய துப்பாக்கிகளுடனும் நின்றிருந்தனர். அவர்களில் ஒருவன் ட்ரைவருக்குக் கிட்டவந்து ‘‘எங்க போறது’’ என்றான்.

‘‘நீர் கொழும்புக்கு’’ என்று சொல்லிவிட்டு ‘‘ரூரிஸ்ட்டாகப் போகிறார்கள்’’ என்றும் ட்ரைவர் சொன்னான். இன்னொரு பொலிஸ்காரன் வாகனத்திற்குள் வந்து வெளிச்சம் பாய்ச்சினான். நீர் கொழும்பு, பீச்சும் பீச் ஹொட்டல்களும் உள்ள ரூரிஸ்ட் பிரதேசம்தான். ஆனால் இவர்கள் ரூரிஸ்டுக்களாக இல்லையென்பது அவனுக்குப் பார்த்த மாத்திரத்திலேயே விளங்கியிருக்க வேண்டும். ‘‘எல்லாரும் இறங்குங்க..’’ என்றான்.

ட்ரைவர் மட்டுமே இறங்கி ‘‘மாத்தையா.. மாத்தையா’’ என்று குழைந்து அவனுடன் சிங்களத்தில் ஏதோ கதைக்கத் தொடங்கிய கொஞ்சநேரத்தில் ரண்டுபேரும் கொஞ்சம் தூரவாகப் போய் நின்று கொண்டார்கள். அவர்களின் குரல்கள் தணிந்திருந்தன. மற்றவன் இவனின் முகத்தில் டோர்ச்சை அடித்து ‘‘எங்க இத்தாலிக்கா போறீங்க’’ என்றான். இவன் ‘‘இல்லை சேர்.. ரூரிஸ்ட்’’ என்னும்போதே குரல் உடைந்து விழுந்தது.

‘‘அப்ப மசாஜ் சென்ரருக்கு போறீங்களா’’ என்று பொலிஸ்காரன் கண்ணடித்துச் சிரித்தான். பிறகு சின்னப்பெடியனைக் காட்டி ‘‘இவனுமா’’ என்றான். இவன் பேசாமல் இருந்தான். சின்னப்பெடியன் இவனைத் திரும்பிப் பார்த்து தனக்காக ஏதேனும் கதைப்பீர்களா என்பதுபோலப் பார்த்தான்.

‘‘ஓம் சேர்.. இவரும்தான்’’

இப்பொழுது பொலிஸ்காரன் சிங்களத்தில் எதையோ சொல்லி சிரிசிரியென்று சிரித்தான். அங்கிருந்த சிங்களம் தெரிந்த ரூரிஸ்ட்டுக்களில் ஒருவன் பிறகொருநாள் அதனை மொழி பெயர்த்தபோது அது இப்படி இருந்தது.

“தமிழர்கள் சின்ன வயசிலேயே துவக்கையும் சாமானையும் கையில தூக்குகிறார்கள்.”

கொஞ்சம் தூரவாக நின்று கதைத்துக்கொண்டிருந்த பொலிஸ்காரனை அங்கேயே விட்டுவிட்டு ட்ரைவர் ஓடிவந்து மூச்சிரைத்தான். திறந்திருந்த கதவு வழியே தலையை உள்ளே நீட்டி “இப்ப நான் பொலிசோடை கதைச்சிருக்கிறன், கொஞ்சம் அவன்ரை கையுக்குள்ளை வைச்சமெண்டால் தப்பலாம். உங்களிட்டை டொலரா மாத்தின காசு இருக்கா” என்று அவன் கேட்டான்.

எல்லோரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தபடி இருந்தார்கள். அங்கே கொஞ்ச நேரம் மௌனம் நிலவியது. ட்ரைவர் தலையை நிமிர்த்தியும் பதித்தும் சரித்தும் ஒவ்வொருவராகப் பார்த்தான். “ஒருத்தரிட்டையும் டொலர் இல்லையா.. அவன் கேஸைப் போட்டானென்றால் நீர்கொழும்புச் சிறையில ரண்டு வருசம் தீட்டுவானே” என்று பிறகு சொன்னான்.

நீர்கொழும்புச் சிறை என்ற பெயரைக் கேட்டதும் இவன் தன்னிடமிருந்த முந்நூறு டொலர்களை முதலில் தூக்கிக் கொடுத்தான். இத்தாலியில் இறங்கின பிறகு அவசரத்துக்குத் தேவைப்படும் என்று அகிலா கொஞ்சப் பணத்தை டொலர்களாக மாற்றிக் கொடுத்திருந்தாள். “சும்மா எனக்குப் போன் பண்ணிச் செலவழிக்காமல் உருப்படியான செலவுக்குப் பாவியுங்கோ” என்றும் அவள் சொல்லியிருந்தாள்.

இவன் டொலர்களைக் கொடுத்த பிறகு எல்லோரும் தங்களிடமிருந்ததையும் கொடுத்தார்கள். ட்ரைவர் அவ்வளத்தையும் வாங்கி எண்ணிப் பார்க்காமலேயே எட்ட நின்ற பொலிஸ்காரனிடத்திற்குப் போனான். அவனுக்கு முன்னாலே நின்று பணத்தை எண்ணுவது இங்கிருந்து பார்த்தபோது தெரிந்தது. பொலிஸ்காரன் கையை நீட்டிப் பணத்தை வாங்கினான். அவர்கள் தொடர்ந்தும் சற்று நேரம் பேசிக் கொண்டார்கள். பிறகு திரும்பிய ட்ரைவர் “இண்டைக்கு கடற்கரைகளில செக்கிங் கூட என்று சொல்லுறான். போனால் பிடிபடுவமாம்.

இண்டைக்குச் சரிவராது. இந்த அளவில தப்பினதே பெரிய விசயம். திரும்புவம்'' என்றான். வாகனத்தை றோட்டில் வைத்தே யு வளைவில் திருப்பி பொலிசாருக்குக் கையசைத்தான்.

இவனுக்குச் இனியில்லையென்ற ஏமாற்றமாகிப் போனது. ஏதோ இத்தாலி வரைக்கும் போய்விட்டுத் திரும்புவது போல வெறுமையும் விரக்தியும் சூழ்ந்திருந்தன. வீட்டுக்கு வரும் வரைக்கும் சூரியன் எப் எம்மில் லோஷனைத் தவிர யாரும் யாருடனும் கதைக்கவில்லை. ட்ரைவர் விசிலடித்தபடி வந்தான்.

அந்தக் கிழமைப் பேப்பர்களில் நீர்கொழும்பு, புத்தளம் கடல்களில் களவாக வெளிநாடு போன நிறையப் பேரைப் பொலிஸ் பிடித்ததென்று செய்திகள் வந்தன. அன்றைக்கு இடையில் திரும்பி வந்தது நல்லதுதான் என்று இவன் திருப்திப் பட்டுக்கொண்டான். முன்னூறு டொலர்களோடு முடிந்து போனது. இல்லையென்றால் கைது கோர்ட் கேஸ் என்று பெரும் சில்லெடுப்பாக இருந்திருக்கும்.

இடையில் ஒரு தடவை ஏஜென்சிக்காரன் பேசினான். பேச்சின் இடையில் இதற்கு முன்னர் புறப்பட்ட குரூப் இத்தாலிக்கு போய்ச் சேர்ந்துவிட்டதாகச் சொன்னான். நீங்களும் போய்ச் சேருவீர்கள் என்றான். இலங்கையில இருந்து புறப்பட்டு கடலுக்குள் நுழைவதில்த்தான் சிக்கல் நீடிக்கிறது என்றும் மற்றும்படி இத்தாலி வரைக்கும் கப்பல் றூட் கிளியர் என்றும் அவன் சொன்னான்.

அவன் ஒவ்வொரு தடவையும் கப்பல் என்ற வார்த்தையைச் சொல்லும்போது இவனுக்கு டைட்டானிக் படத்தில பார்த்த கப்பலும் அதன் ஆழத்தில் உருளும் அலைகளும், இருளில் அதன் வெளிச்சங்களும் ஞாபகத்தில் வந்து வந்து போயின. டைட்டானிக்கை அகிலாவோடு சேர்ந்து பார்க்க இவன் கொஞ்சக் காலத்திற்கு முன்னர் விரும்பியிருந்தான். ஒருநாள் அகிலாவிடம் கேட்டபோது அவளது வார்த்தைகளை இவனால் மறக்க முடியவில்லை. அவள் ஒரு சிணுங்கலோடும் நளினத்தோடும் இப்பிடிச் சொன்னாள். ''ஆளையும் ஆளின்ரை ஆசையையும் பாரன், அந்தப் படத்தில கெட்ட கெட்ட சீன் எல்லாம் வருகுதாம். அதுகளைப் பாத்துப் போட்டு வந்து என்னை ஒரு வழி பண்ண..''

இவனது உடல் சற்று நேரத்திற்கு குளிர்ந்து தணிந்தது. என்னவோ மாதிரியான அதிர்வுகள் ஓடிப்பரவின. இப்பிடியொருத்தி இவனோடு பேசியிருந்தது

புதியதொரு அனுபவமாக இருந்தது. இரவு முழுவதும் ‘‘என்னை ஒரு வழி பண்ண..’’ என்ற அவளது சிணுங்கற் குரல் காதுகளுக்குள் கேட்டுக் கொண்டே இருந்தது. அகிலாவோடு அந்தப் படத்தைப் பார்க்கக் கிடைக்கவில்லை.

திடீரென்று இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் ஏஜென்சி அழைத்திருந்தான். அப்பொழுது இவன் ரிவி பார்த்துக் கொண்டிருந்தான். ரூபவாஹினியில் புலிப் பயங்கரவாதிகள் என்று சொல்லாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்று வாசித்துக் கொண்டிருந்தார்கள். லொட்சில் ஆட்கள் ஒன்றிரண்டு பேரே இருந்தார்கள். ஏ 9 பாதையைத் திறந்து விட்டபடியால் யாரும் இப்பொழுது லொட்சுகளில் தங்குவதில்லையென்றும், அதனால் பெருத்த நட்டமென்றும் லொட்ச்காரம்மா சொல்லியிருந்தார். பெரும்பாலும் இன்னும் கொஞ்சநாள் பார்த்துவிட்டு லொட்ச்சை மூடிவிடுவதற்கு அவர் திட்டமிட்டிருந்தார்.

‘‘ரெடியாத்தானே இருக்கிறீர். உடனை ஒரு ஓட்டோவைப் பிடிச்சுக்கொண்டு நீர்கொழும்பில நான் சொல்லுற இடத்துக்கு வாரும்.’’ என்று ஏஜென்சி இடத்தைச் சொன்னான். இவன் அகிலாவுக்குப் போன் செய்து விடயத்தைச் சொன்னபோது அவள் ஏஜென்சிக்காரனை ‘‘விசரன், பைத்தியக்காரன்’’ என்று திட்டினாள்.

‘‘மத்தியானமே சொல்லியிருக்கலாம் தானே.. நான் வந்து நிண்டிருப்பன். இப்ப வரட்டா’’ என்று கேட்டாள். இவனுக்கும் ஏஜென்சிக்காரன் மீது கோபம் வரத்தான் செய்தது. ‘‘இல்லை, நேரம் மட்டுமட்டு.. நான் வெளிக்கிடப்போறன்.’’

‘‘பாக்கிற்குள்ளை அம்மன்ரை வீபுதி இருக்கு. அது எப்பவும் உங்களோடை இருக்கட்டும். இறங்கிட உடனை போன் பண்ணுங்கோ.. ம் வேறை.. ’’ என்று அகிலா சொற்களை இழுத்தாள். இவனும் ‘‘ம்.. வேறை’’ என்றான். இருந்தாற்போல அந்தப் பக்கத்தில் அகிலா விம்முவது கேட்டது. ‘‘அங்கைப் போனாப்பிறகு என்னை மறக்கமாட்டியள் தானே..’’ என்று கேவினாள் அவள்.

‘‘போடி விசரி’’ என்று விட்டு இவன் ரெலிபோனை நிறுத்தினான்.

லொட்ச்கார அம்மாவிற்கும் மற்றவர்களுக்கும் இவன் பயணத்தை அறிவித்தான். ‘‘என்ன நடந்தாலும் யோசிக்காமல் இங்கேயே வாரும்’’ என்று

லொட்ச்கார அம்மா வழியனுப்பினார். மற்றையவர்களில் ஒருவனும் வெளிநாடு போவதற்காகவே வந்து அங்கு தங்கியிருந்தான். அவனுக்கு இன்னும் எதுவும் சரிவரவில்லை. அவன் இவனை ஒருவித ஏக்கத்தோடு பார்த்ததைப் போல இருந்தது. இவன் தெருவில் இறங்கினான். இன்னும் முழுக்க இருண்டு விடவில்லை. யாரோ ஒரு வயதான முனிசிபல் ஊழியர் உயர்ந்த தடியொன்றினால் தெருவிளக்குகளை ஒளிரச் செய்தபடி நடந்து போனார். அதுவொரு நல்ல முழுவியளமாக இருக்கலாம் என்று இவன் நம்பினான்.

இன்றைய பயணத்தையும் பொலிஸ் மறிக்கலாம். மறித்தால் என்ன சொல்வது என்ற யோசனை வந்தது. எயார்போட்டுக்கு யாரையாவது கூட்டிவரப்போவதாகச் சொல்லலாம். அல்லது தானே எயார்போட்டுக்கு பிளேன் ஏறப் போவதாகவும் சொல்லலாம். பாஸ்போட், பிளேன் ரிக்கெற் இன்னும் பலவற்றைக் கேட்பார்கள். யாழ்ப்பாணம் போகிறேன் என்று சொல்லலாம். ஆனால் யாழ்ப்பாணத்திற்கு யாரும் ஓட்டோவில் போவார்களா..

கடைசியில் நீர்கொழும்பு வரையும் பஸ்ஸில் போவதென்றும் அங்கே இறங்கி ஓட்டோ பிடிப்பதென்றும் இவன் முடிவு செய்தான். பெற்றாவில் குணசேகர மாவத்தையிலிருந்துதான் பஸ்கள் புறப்பட்டன. அதுவரைக்கும் ஓட்டோவேல் போகவேண்டியிருந்தது. ஓட்டோ ஒன்றை அழைத்து ஏறினான். ‘‘பெற்றா.. பஸ் ஸ்ராண்ட்..’’ என்றான்.

ஓட்டோ வீதியில் இரண்டு அடி நிலம் கிடைத்தால் போதும் என்ற நினைப்பில் ஓடியது. ஓட்டோக்காரனிடம் ‘‘நீர்கொழும்புக்குப் போக செக் பொயின்றுகள் இல்லாத வேறை பாதைகள் ஏதும் இருக்கா’’ என்று இவன் கேட்டான். ஓட்டோக்காரன் திரும்பி ஏன் என்பதைப் போலப் பார்த்தான்.

‘‘இல்லை, அவசரமாகப் போக வேணும். செக்கிங்கில ரைம் வேஸ்றதானே. அதுதான்.. ’’

‘‘மாத்தையா, இப்ப ஒரு செக் பொயின்றும் இல்லைத்தானே.. ரணில் ஒரு செக் போஸ்ட்டும் தேவையில்லை என்று பார்லிமென்ரில சொல்லியிருக்காராம். இனி பிரபாகரனும் பிரச்சனை இல்லாமல் வந்து போகலாம். ம்.. அங்கை பாருங்க’’ என்று அவன் வீதி மதிலொன்றைக் காட்டினான். அங்கு வரிசையாக ஒரே போஸ்டரை நீளத்துக்கு ஒட்டியிருந்தார்கள். போஸ்டரில் ரணில்

விக்கிரமசிங்கவும் ஆறுமுகம் தொண்டமானும் பிரபாகரனும் சிரித்தபடி தனித்தனியாக நின்றார்கள். மலையகத்தின் தேசியத்தலைவர் ஆறுமுகம் தொண்டைமான் என்று அதில் எழுதியிருந்தது. இவன் சட்டென்று பார்வையைத் திருப்பி ‘‘பெற்றாவில இருந்து நீர்கொழும்புக்கு எத்தினை மணிக்கு பஸ் இருக்கு’’ என்று கேட்டான்.

ஏஜென்சி குறித்துக் கொடுத்த இடம் நீர்கொழும்புக் கடற்கரையோடு குடிமனைகளை அண்மித்திருந்தது. கொஞ்சம் சனநடமாட்டமும் இருந்தது. கரையில் கூடி நின்ற இளைஞர்களை சனங்கள் சட்டை செய்ததாகத் தெரியவில்லை. அவர்கள் பழக்கப்பட்டிருக்கலாம்.

சென்றமுறை வந்திருந்த நான்கைந்து பேர் இம்முறை வரவில்லை. அவர்களுக்கு வேறு ரூட்டுக்கள் சரிவந்திருக்கலாம். அல்லது பழம் பிடுங்கிற விசாவில் போயிருக்கலாம். அவர்களைத் தவிர மிச்ச ஆட்கள் அங்கு நின்றார்கள். ஒன்றிரண்டு புதிய ஆட்களையும் இவன் கண்டான்.

சின்னப்பெடியன் முன்னரே வந்திருக்க வேண்டும், இவனின் பக்கத்தில் வந்து நின்று சிநேகமாகப் பார்த்தான்.

‘‘ஆ.. தம்பி ஆரோடை வந்தனீர்’’

‘‘அம்மா..’’ என்று அருகில் ஒரு பெண்ணைக் காண்பித்தான். இவன் முகத்தை அசைத்துச் சிரித்தான். அவரது முகம் இருளடைந்திருந்தது. அதற்கூடாக அவரது சிரிப்பு ஒரு கோடு போல உருவாகி மறைந்தது. ‘‘குறைநினைக்காமல் இவனை ஒருக்கா பார்த்துக் கொள்ளுங்கோ..’’ என்றார் அவர்.

இவன் ‘‘சரி’’ என்று தலையை ஆட்டினான். ‘‘நீங்கள் குறை நினைக்கக் கூடாது. அவர் சின்னப்பெடியனா இருக்கிறார். நீங்கள் தனிப்பயணத்துக்கு அனுப்புறியள்..’’ என்று மேலும் எந்த வார்த்தைகளைக் கொண்டு நிரப்புவதென்று அறியாது இவன் இடை நிறுத்தினான். சின்னப்பெடியனின் அம்மா முகத்தைக் கடல் வெளியை நோக்கித் திருப்பிக் கொண்டார். ‘‘அப்பா செத்த பிறகு பிறந்தவன், வயித்தில இரண்டு மாசம் இருக்கேக்கை, இந்தியன் ஆமி இவரைச் சுட்டது. ஏதோ பெயர் மாறிச் சுட்டதென்று சொன்னவை. அதுக்குப் பிறகு பதினைஞ்சு வருசம், எல்லாக் கஸ்ரமும் பட்டுட்டன். என்ரை

தம்பியொருத்தன் வெளியில போனாப்பிறகுதான் கொஞ்சம் மீண்டம். இப்பவும் அவன்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தது. ஏதோ மாமன்காரனிட்டைப் போய் இவனொரு நல்ல நிலைக்கு வந்திடவேணும். அதுக்குப் பிறகு எனக்கொரு வாழ்க்கையும் இல்லை..'' குரல் தழுதழுக்கத் தொடங்கிய போது அவரும் நிறுத்திக் கொண்டார். சின்னப் பெடியன் நீரில் கால்களை நனைத்தபடி நின்றிருந்தான்.

கடற்கரையில் ஆட்கள் சேர்ந்திருந்தனர். அவர்கள் ஆளாளுக்கு நின்று மெதுவாகப் பேசிக்கொண்டு நின்றனர். ஏஜென்சி அனுப்பிய ஆட்களென்று இரண்டு பேர் வந்தார்கள். தங்களுக்குள் சிங்களத்தில் பேசிக்கொண்டார்கள். பெரிய குடிதண்ணீர் பரலொன்றையும் அரிசி மூட்டையொன்றையும் பாதிப் பருப்புச் சாக்கொன்றையும் பெரிய கருவாட்டுச் சிப்பமொன்றையும் வாகனத்திற்குள் இருந்து இறக்கி கடலில் படகொன்றில் வைத்துத் தள்ளிக் காணாமற் போய், கொஞ்ச நேரத்தில் அவர்கள் திரும்பி வந்தார்கள். இன்னொரு பெட்டியில் குளுக்கோஸ் சேலைன் எலுமிச்சம்பழங்கள் என ஏற்றிக் கொண்டு போனார்கள். திரும்பி வருவதற்கிடையில் டொல்பின் வாகனொமொன்று கடற்கரைக்கு வந்து நின்றது. சிங்களத்தில் கதைக்கிற ஆட்கள் குதித்துக் குதித்து இறங்கினார்கள்.

''துலைஞ்சம்'' என்றான் இவன். சின்னப்பெடியன் தலையைத்திருப்பி அவர்களை மிரட்சியுடன் பார்த்தான். ட்ரைவர் சீற்றிலிருந்து ஏஜென்சிக்காரன் பருத்த உடலை அரக்கி இறங்கி நடந்து வந்துகொண்டிருந்தான். எதிர்ப்பட்ட இளைஞன் ஒருவனிடம் ''இப்ப சந்தோசம்தானே'' என்றான்.

''சிங்கள ஆட்கள் என்னத்துக்கு இங்கை வந்தவை'' என்ற யோசனை மட்டுமே இவனுக்குள் நின்றது. அவர்கள் ஒவ்வொருவரிடமும் இவனிடமிருப்பதைப் போன்றே சின்ன ட்ரவலிங் பைகள் இருந்தன. அவர்களும் தங்களோடு வரப்போகிறார்கள் என்பது இவனது மனதை அரிக்கத் தொடங்கியது. அதுவரை ஊறி நின்ற சந்தோசம் கால்களின் கீழே அலை நீரில் மணல் கரைவதைப் போல கரைவதை உணர்ந்தான். அவர்களில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதை மனது எண்ணத் தொடங்கியது. அதுவரையும் அங்கேயும்

இங்கேயுமென ஒன்றிரண்டாக நின்ற தமிழ் இளைஞர்கள் சிங்களவர்கள் வந்தபிறகு ஒன்றாகக் கூடி நின்றார்கள்.

ஒவ்வொரு பத்துப் பேராக போய் வள்ளமொன்றில் ஏறச் சொன்னபோது சிங்கள இளைஞர்களே முதலில் போய் ஏறிக்கொண்டார்கள். இவனின் முறை நான்காவது தடவையில் வந்தது. சின்னப்பெடியனும் இவனோடேயே ஏறிக்கொண்டான். அது ஒரு மீன்பிடி வள்ளம். மோட்டர் எஞ்சினை இயக்காது தடிகளாலேயே ஊன்றி வலித்துக்கொண்டு போய் கொஞ்சத் தூரத்தில் இன்னொரு மீன்பிடி வள்ளத்தில் ஏற்றினார்கள். ஆளையாள் நெருக்கிக் கொண்டு ஐம்பது பேர் அதற்குள் இருக்கலாம். வள்ளத்தின் பாதிக்கு மூடி அடைக்கப்பட்ட கூட்டுக்குள் ஒரேயொரு டிம் லைற் எரிந்து கொண்டிருந்தது. இருட்டுக்குள் எதுவும் பிடிபடவில்லை. கடலுக்கு முதுகைக் காட்டிக்கொண்டு எல்லோரும் இருந்தார்கள். இன்னும் இரண்டு குரூப்பில் வந்தவர்கள் ஆட்களுக்கு நடுவில் இடம் பிடித்துக் கொண்டார்கள்.

இவன் ட்ரவலிங் பை பொக்கட்டுக்குள் கைவிட்டு காய்ந்து முறுகிப் போயிருந்த வெற்றிலையில் படிந்திருந்த விபூதியைப் பூசிக்கொண்டான். எஞ்சின் அறைக்குள் இருந்து ஒருவன் வந்து ஒவ்வொருவராக “எக்காய் தெக்காய் துனாய் கத்தறாய்” என்று எண்ணிக் கொண்டு போனான். எஞ்சின் சத்தமும் டீசலின் வாசமும் பரவத் தொடங்கின. டீசல் மணம் வயிற்றைக் குமட்டுவதைப் போல இருந்தது. கொஞ்ச நேரத்திலேயே க்வாக் என்ற சத்தத்தோடு சின்னப்பெடியன் இவனுக்கு மேல ஓங்காளித்துச் சத்தி எடுத்தான். வேறு யாரும் சத்தி எடுப்பதைப் பார்த்தால் இவனுக்கும் சத்தி வரும். கண்ணை மூடிக்கொண்டு சேர்ட்டைக் கழட்டி சுருட்டி வைத்துவிட்டு இன்னொரு சேர்ட்டைப் போட்டான். காலை நீட்டியபோது அது யாரோவில் முட்ட சட்டென்று இழுத்துக் கொண்டான். சின்னப்பெடியன் இவனது மடியில் நித்திரையாகிப் போயிருந்தான். மணிக்கூட்டில் பச்சை வெளிச்சத்தில் நேரம் இரவு பதினொன்றைத் தாண்டியிருந்தது. எஞ்சின் சத்தம் ஒன்றைத் தவிர கடல் அமைதியாய் இருந்தது.

இவன் இத்தாலிக்கு எந்த ரூட்டால் போவது என்று திரும்பவும் யோசிக்கத் தொடங்கினான்.

# 2

ஐயாத்துரை பரந்தாமன் என்கிற எனக்கு இயக்கத்தில் இரண்டு பெயர்களை ஐந்து வருட இடைவெளியில் வைத்தார்கள். முதலாவது பெயரான இவான் இந்திய இராணுவம் வெளியேறிய இரண்டாவது மாதத்திலும் இரண்டாவது பெயரான அமுதன் இலங்கை இராணுவம் யாழ்ப்பாணத்திற்கு வர ஆறு மாதம் முன்னரும் வைக்கப்பட்டன.

எனக்கேதும் நடந்தால், அமுதன் என்று அழைக்கப்படுகின்ற ஐயாத்துரை பரந்தாமன் என்றே அறிவித்தல்கள் வருகிற அளவில் இரண்டாவது பெயரே பின்னர் நிரந்தரமாயிருந்தது. முன்னைய பெயரான இவான் ஒரு ரஷ்யச் சிறுவனின் பெயர் என்றும் அவனுக்கு ஒரு கதையிருந்தது என்றும் பிற்காலங்களில் கேள்விப்பட்டிருக்கிறேன்.

இவானின் கதை

ஹிட்லரின் படைகள் சோவியத்திற்குள் நுழைந்திருந்தார்கள். அந்த யுத்தத்தில் இவானின் அம்மா, அப்பா, தங்கையென்று எல்லோரும் செத்துப் போயிருந்தார்கள். தன் குடும்பத்தை அழித்தவர்களைப் பழிவாங்க வேண்டுமென்று அவனுக்குள் முடிவானது. ஹிட்லரின் நாசிப் படைகளை எதிர்த்து சோவியத் திரண்டெழுந்தபோது இவான் தன்னையும் அவர்களோடு இணைத்துக் கொண்டான். அப்பொழுது இவானுக்கு வெறும் பன்னிரண்டு வயதுதான் நடந்துகொண்டிருந்தது.

நான்கைந்து வருடங்களுக்கு முன்னர் ஒலரா ஒட்டணு மல்லாவிக்கு வந்து அண்ணையைச் சந்திக்கும் வரையும் இயக்கத்திலும் பன்னிரண்டு, பதின்மூன்று வயதுக்காரர் சேர்க்கப்பட்டுத்தானிருந்தனர். பலர் வீரச்சாவும் அடைந்திருக்கிறார்கள். அதனால் “வெறும் பன்னிரண்டு” என்று ஆச்சரியப்படத்தேவையில்லை என்று நினைக்கிறேன்.

ஆனாலும் இவான் சாதாரணமானவன் இல்லை. அவன் சோவியத் படைகளின் உளவாளியாக உருமாறினான். இவர்களுக்கும் எதிரிப்படை நிலத்திற்கும் குறுக்கேயிருந்த நதியைக் கடந்து அந்தப்பக்கம் போய் அவர்களின்

கூடாரங்களை மேய்ந்து செய்திகளைக் காவி மீண்டும் தளம் திரும்புகிற வேலையை அவன் செய்து கொண்டிருந்தான்.

இறுதியில் சோவியத் மகத்தான வெற்றியைக் கண்டது. ஜெர்மனியின் நாடாளுமன்றத்தில் சோவியத் செஞ்சேனையின் செங்கொடி காற்றில் சடசடத்துப் பறந்தபோது அதற்கு விலையாக இரண்டு கோடி சோவியத் உயிர்கள் தம்மைத் தந்திருந்தனர். அவர்களில் இவானும் ஒருவனானான். அவனை ஜெர்மனிய ராணுவம் சுட்டுக் கொன்றிருந்தது. பின்னர் அவர்கள் எழுதிய அவனது சாவுக் குறிப்பில் இவன் கெரில்லாக்களோடு தொடர்பு கொண்டிருந்தானென்றோ அவர்களுக்காக உளவுப் பணியேதும் செய்தானென்றோ நிரூபிக்கக்கூடிய எந்தச் சான்றுகளும் இல்லை என எழுதியிருந்தார்கள்.

எனக்குப் பெயர் வைக்கும் போது “இனி உமது பெயர் இவான்” என்பதை விடுத்து இந்தக் கதை பற்றி எதுவும் சொல்லப்பட்டிருக்கவில்லை. உண்மையில் இது ஒரு நல்ல பரப்புரைக் கதை. பன்னிரண்டு வயது, செங்கொடி, உளவாளியென்று பல இடங்களில் எங்களோடு பொருந்திப் போகிறது. இது பற்றியேதும் படங்கள் வந்திருக்கிறதா என்று தேட வேண்டும்.

இரண்டாவது பெயரை நானாகவே அமுதன் ஆக்கியிருந்தேன். அந்த நாட்களில் யாழ்ப்பாணத்திலிருந்த இங்கிலிஷ் கடைப்பெயர்கள் எல்லாம் தமிழுக்கு மாறிக் கொண்டிருந்தன. நகையகம், குளிரகம், எழிலகம், வெதுப்பகம் என்று ஒவ்வொருநாளும் புதுப்புதுப் பெயர்களோடு பலகைகள் முளைத்தன. கல்வியங்காடு முத்திரைச் சந்தியில் சைக்கிள் ரியுப் ஒட்டுகிற கடையொன்றின் முகப்பில் ராஜா ஒட்டகம் என்று பெரிய போர்ட் வைத்திருந்தார்கள். இரண்டு மூன்று நாட்களில் அது இராசா ஒட்டகம் என்று மாறியிருந்தது.

ஆனைக்கோட்டைச் சந்திக்கு கொஞ்சம் தள்ளி ரவுணுக்குப் போகிற வழியில் டில்ஷான் ரீ றூம் என்ற சாப்பாட்டுக்கடையொன்று இருந்தது. கடை ஓனர் தனது மகனின் பெயரை அப்படி வைத்திருந்தார். சீர்திருத்தம் வந்தபிறகு கடைப்பெயரை டில்ஷான் தேனீர்ச் சாலை என மாற்ற அவர் விரும்பினார். ஆனால் டில்ஷான் தமிழ்ப்பெயர் இல்லையென்று அவருக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. அடுத்த விண்ணப்பமாக தில்சான் தேனீர்ச் சாலையென்பதை

அவர் முன்மொழிந்தார். தமிழ்ச் சரித்திரத்திலேயே அப்பிடி ஒரு பெயர் இல்லையென்பதனால் அதுவும் மறுக்கப்பட்டது. கடுப்பாகிய ஓனர் கடைசியாக “தான் இன்னுமொரு பிள்ளையைப் பெற்று அதற்கொரு தமிழ்ப்பெயர் வைத்து அந்தப் பெயரைக் கடைக்கு வைப்பதாகவும் அதுவரை சும்மா தேனீர்ச் சாலையென்றே பெயர் வைக்கப் போவதாகவும் அறிவித்தார்.

சும்மா என்பது தமிழ்ப்பெயரா இல்லையா என்பதில் பொறுப்பானவர்களுக்கு குழப்பமிருந்தது. ஒரு தமிழ்ப்பண்டிதரிடம் இதை விசாரித்திருக்கிறார்கள். அவரும் சும்மா தமிழ்ப் பெயர்தான் என்றும் பழந்தமிழ் இலக்கியங்களில் இந்தப் பெயர் உள்ளதாகவும் சொன்னார். இதன் காரணமாக கடை ஓனர் சும்மா விடப்பட்டிருந்தார்.

இப்படியாகவே இயக்கப் பெயர்களும் மாற்றப்பட்டன. அதுவரைக்கும் கெனடி, லோறன்ஸ், மிரேஸ் என்று புழக்கத்திலிருந்த இயக்கப் பெயர்கள் நிலவன், வளவன், இரும்பொறை, இராவணன் என்று மாறின. நல்ல தமிழ்ப் பெயர்கள் என்றொரு சிறு நூல் வெளியீட்டுப் பிரிவினால் வெளியானது. அதில் அ வரிசையில் பத்தோ பதினைந்தாவது பெயராக அமுதன் இருந்தது.

பெயரை மாற்றிய பத்தாவது நாள் எனது அணியைக் கொண்டுபோய் சண்டிலிப்பாய் அளவெட்டி லைனில் நிறுத்தினார்கள். அவசர அவசரமாக அண்ணை அதனைத் திட்டமிட்டிருந்தார். பயிற்சிக்கென்று நேரமிருக்கவில்லை. இரவும் பகலுமென தொடர்ந்து ஷெல் பக்டரிகள் இயங்கின. அப்படியொரு நாள் நடுச்சாமத்தில் தாவடி ஷெல் பக்டரியில் ஏதோ பிசகாகி அது வெடித்து விளாசி எரிந்து இருண்ட வானத்தை சிவக்கச் செய்தது. சத்தம் கேட்டவர்கள் “சந்திரிக்கா புதுச் சாமான் ஒன்றை இறக்கிப்போட்டாள்” என்று நித்திரைகொள்ளாமல் அச்சத்தில் இருந்தார்கள். பக்டரியில் சம்பளத்திற்கு வேலை செய்த ஏழு பேர் கருகிச் சாம்பலானார்கள். அவர்களுக்கு இயக்கம் நாட்டுப்பற்றாளர் விருது கொடுத்தது.

யாழ்ப்பாணத்தில் அராலி, வட்டுக்கோட்டை தொடங்கி சண்டிலிப்பாய் வரை இராணுவம் மூன்று நாட்களில் பிடித்திருந்தது. நிறையைச் சனங்கள் செத்துப்போயிருந்தார்கள். நவாலியில் மட்டும் ஒரு சேர்ச்சில் இருநூறு

சடலங்கள் எண்ணப்பட்டிருந்தன. நல்லூர்க் கோவிலும் நகரத்துப் பாடசாலைகளும் சனங்களால் நிறைந்தன.

அநுரத்த ரத்வத்தை இன்னும் ஐந்து நாட்களில் மொத்த யாழ்ப்பாணத்தையும் பிடித்துவிடுவோம் என்றும் புலிகளில் அறுபதோ எழுபது வீதமான ஆட்களை அழித்தாயிற்று என்றும் ரூபவாகினியில் சொன்னாராம்.

தளபதிகளை அவசரமாக அழைத்த அண்ணை பெரிய யாழ்ப்பாண வரைபடத்தைக் கீழே விரித்து கையில் வைத்திருந்த றீப்பைத் தடியால் அளவெட்டியையும் சண்டிலிப்பாயையும் இணைத்து ஒரு கோடு கீறினார்.

பதின்மூன்றாம் திகதி நடுச்சாமம் பன்னிரண்டு மணி கழிந்த கொஞ்ச நேரத்தில் எங்கள் லைனில் நாங்கள் முழங்கத் தொடங்கினோம். கவிந்திருந்த இருளில் வெளிச்சங்கள் வெடித்து வெடித்துச் சிதறின. எங்களின் பெரிய சண்டைகள் ஐந்தாம் அல்லது முதலாம் நம்பர்களில்தான் தொடங்கும். ஆமிக்காரன் ஒன்பதாம் நம்பரில் தொடங்குவான். கொஞ்ச நேரத்திலேயே இராணுவத்தின் பங்கர்களும் மண்மூட்டைக் கூடுகளும் எங்களிடம் விழுந்து கொண்டிருந்தன. மூன்று நாட்களில் அவர்கள் அவ்வளவாக நிலையெடுத்திருக்கவில்லை.

சண்டையென்று வந்துவிட்டால் என் துப்பாக்கியிலிருந்து ரவுண்ஸ்சும் வாயிலிருந்து தூசணங்களும் பாய்ந்து கொண்டே இருக்கும். ரவுண்ஸை அளவாகப் பாவிக்கச்சொல்லி இயக்கத்துக்குள்ளே விதிமுறையொன்றிருந்தது. தூசணத்திற்கு அப்படியொன்றும் இருக்கவில்லை. இயக்கத்துக்கு வரமுதலே உள்ளநாட்டுத் தூசணமெல்லாம் எனக்குத் தண்ணிபட்ட பாடாயிருந்தது. என்னால் அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை. எனக்கு மட்டுமென்றில்லை. நிறையப் பேருக்கு இந்தப் பிரச்சனை இருந்தது. இதனாலேயே சண்டை வீடியோக்களை எடிற் செய்யும்போது சத்தங்களை நீக்கி பாட்டுக்களைப் போடவேண்டியிருப்பதாக நிதர்சனம் போராளிகள் சொல்வார்கள். இந்தச் சண்டையும் முழுவதும் பாட்டுக்களாலேயே நிரம்பியிருக்கும் என்று நான் நம்பத்தகுந்ததாக இருந்தது.

நிலம் கொஞ்சமாய் வெளித்த போது தலைக்கு மேலே புக்காரா விமானங்கள் வந்திருந்தன. சண்டையில் விமானங்கள் வந்தபிறகு ஆமிக்காரர்கள் உஷாராகி விடுகிறார்கள். நாங்கள் நெல்வயலொன்றில் வரப்பின் கீழே

நிலையெடுத்திருந்தோம். வயல் நாசமாகியிருந்தது. நெற்கதிர்கள் கருகிப் புகைந்து கொண்டிருந்தன. எனக்குப் பக்கத்தில் நின்றவனுக்கு இடுப்பைக் கிழித்துக்கொண்டு துப்பாக்கி ரவுண்ஸோ ஷெல் சன்னமோ பறந்திருக்க வேண்டும். கையால் பொத்திக் கொண்டு விழுந்த அவனது வயிறு முழுவதும் ரத்தச் சேறாகிக் கிடந்தது. இராணுவம் கைவிட்டுப் போன மண்மூட்டை மறைவொன்றுக்குள் அவனை இழுத்து வளர்த்தி என் இடுப்பில் சுற்றிக் கட்டியிருந்த சாரத்தால் வயிற்றைச் சுற்றிக் கட்டினேன். அவனது சயனைட்டைக் கழட்டி எடுத்தேன். அவன் ‘‘அம்மா.. அம்மா.. ’’ என்றும் ‘‘அடியுங்கோடா விடாதேங்கோடா’’ என்றும் மாறி மாறி கத்தினான். பிறகு அவனைப் பின்னுக்குத் தூக்கிச் சென்றார்கள். இனி அவனை மறந்து விடுவேன்.

இப்படித்தான் பூநகரிச் சண்டையில் கிட்டத்தட்ட சண்டையெல்லாம் ஓய்ந்துவிட்டபிறகு ஒரு ஷெல் விழுந்தது. சற்று முதல் பம்பலடித்துக் கொண்டு நின்ற எங்களில் ஏழுபேரைக் காணவில்லை. துண்டு துண்டாகிக் கிடந்தார்கள். புகைமூட்டம் தணிந்தபோது கொஞ்சம் தூரவாக ‘‘அண்ணோய்.. அண்ணோய்’’ என்ற குரல் மட்டும் கேட்டது. நான் ஓடிய போது பங்கருக்குள் பிள்ளையொருத்தி தலையை உயர்த்த முயற்சித்தபடி கிடந்தாள். அவளுக்கு என் தங்கச்சியின் வயதிருக்கலாம். இரண்டு கால்களும் முழங்காலுக்கு கீழே சிதைந்து போய் கால் தசைகள் இறைச்சியைப் போல் பிளந்தும் விரிந்தும் கிடந்தன. ஒரு கையைத் தூக்கமுடியாதளவிற்கு தோள்ப்பட்டையில் இரத்தமாயிருந்தது. முகத்தில் தூசியும் மண்ணும் அப்பியிருந்தது. இரண்டு தொடைகளையும் சுற்றி இறுக்கிக் கட்டிவிட்டு அவளது சயனைட் கயிற்றை வெட்டி அகற்றினேன். தனது ஒரு கையால் என் கையைப் பிடித்துக்கொண்டு அதைத் தந்துவிடும் படி அவள் கண்களால் கெஞ்சினாள். அவளை இரண்டு கைகளிலும் தூக்கிக்கொண்டு வெளியே ஓடினேன். அவளை நான் மறக்கவில்லை.

சண்டையில் நிற்கிற நேரங்களில் காயம் படலாம் என்றோ செத்துப் போவேன் என்றோ நினைப்பெதுவும் எனக்கு வருவதில்லை. சண்டைகளுக்குப் பிறகு சிலசமயம் யோசிப்பதுண்டு. வீரச்சாவடைந்த போராளிகளின் இறுதி ஊர்வலங்களில் அந்தச் சவப்பெட்டிகளில் நானே படுத்திருப்பது போன்ற

நினைப்பு ஓடும். அப்பொழுது கண்களில் நீர் முட்டிக்கொண்டு வரும். நான் சாவினை விரும்பவில்லை என்று நினைத்துக் கொள்வேன்.

அதற்காக சண்டையில் ‘‘கவர்’’ எடுத்து நிற்கிற ஆள் இல்லை. சண்டைகளில் நானொரு விறைத்த மண்டையன். என் முதற்சண்டையே ஒரு பெரும் சண்டையாய் அமைந்திருந்தது. ஆனையிறைவைச்சுற்றிய பொட்டல் வெளிகளுக்குள் அது நடந்தது. அப்பிடியொரு நேரடிச் சண்டை எனக்குப் புதியது. இயக்கத்திற்கும் புதியது. சண்டைக்காலம் ஒரு மாதத்தை நெருங்கிய போது எங்களது பக்கத்தில் சாவுத் தொகை முன்னூறு, நானூறு, ஐநூறு என்று அதிகரித்துக் கொண்டே போனது.

ஆனையிறவில் அதுவரை இருந்த எண்ணூறு இராணுவத்தினர், எண்ணாயிரம் ஆக உயர்ந்ததோடு நாங்கள் சண்டையை நிறுத்திப் பின்வாங்கினோம். அந்தச் சண்டைக்கு ஒபரேஷன் ஆ.க.வெ என்று அண்ணை பெயர் வைத்திருந்தார். அப்படியென்றால் ஆகாய கடல் வெளிச் சமர் என்று அர்த்தமாகும். சிலர் அதனை ஆனையிறவு கட்டைக்காடு வெற்றிலைக்கேணிச் சமர் என்றும் சொல்கிறார்கள். அதற்குப் பிறகு வென்ற சண்டைகளின் பெயர்களை மட்டும் இயக்கம் வெளியில் விட்டது. தோற்கிற சண்டைகளுக்குப் பெயர் இல்லை.

ஆ.க.வெயிற்குப் பிறகு பூநகரியில் தவளை, மண்கிண்டிமலையில் இதயபூமி, கிளாலியில் யாழ்தேவி, இப்பொழுது அளவெட்டியில் புலிப்பாய்ச்சல், அவ்வப்போது நொட்டல்கள் நொருடல்கள் என்று சண்டைகள் சண்டைகள் சண்டைகள்.. சண்டைகளை நான் விரும்பத் தொடங்கினேன்.

புக்காரா குத்திக்கொண்டு வந்ததுவும் டப் என்ற சின்னச் சத்தமும் இருபது முப்பது செக்கன் இடைவெளிகளுக்குள் நடந்தன. விமானத்தின் அடிப்பகுதியில் கரும்புகையும் நெருப்புச் சுவாலையும் பீறிட்டு கிளம்பின. தொலைவில் மரங்களுக்குப் புறத்தே நெருப்புக் கோளம் எழுந்த அந்தக் கணத்தில் இயக்கத்திடம் ஏவுகணைகள் இருப்பது எனக்கு உறுதியானது.

இயக்கத்தில் இருப்பதால் இயக்கத்தைப் பற்றி எல்லாம் தெரிந்திருக்கும் என்று நினைக்கிறார்கள். அப்படி இல்லையென்றால் சிரிக்கிறார்கள். மூன்று மாதத்திற்கு முன்னர் இயக்கம் இரண்டு அவ்ரோக்களைச் சுட்டபோது ஏவுகணைகள் வந்து சேர்ந்ததாக அரசல் புரசலாகக் கதையெழுந்திருந்தது.

ஆனால் அது என்னதென்றோ எங்கே வைத்துச் சுட்டது என்றோ இயக்கம் மூச்சும் விடவில்லை. இதோ இப்போதும் இந்த வயலுக்கும் மரங்களிற்கிடையிலும்தான் எங்கேயோ புக்காராவைச் சுட்டிருக்கிறார்கள். எனக்குத் தெரியவில்லை.

இப்படித்தான் மாத்தையா விடயத்திலும் இயக்கத்தில் நிறையப் பேருக்கு என்ன நடந்தது என்று தெரியாது. அவருக்கு றோவோடு தொடர்பு, அவர் கிட்டுவைக் காட்டிக்கொடுத்தார், அவர் அண்ணைக்கு கட்டிலுக்கு கீழே குண்டுவைக்கத் திட்டமிட்டார் என்று சனங்கள் பேசிக்கொள்வதுதான் எனக்கும் தெரிந்திருந்தது.

அன்று மத்தியானம் தாண்டி புக்காரா விழுந்த இடத்திற்குள் நுழைந்தோம். உருளைத் தகரம் ஒன்று இரண்டாகப் பிளந்து கிடந்து புகைந்து கொண்டிருந்தது. விமானமொன்றை இப்பொழுது தான் இவ்வளவு கிட்டத்தில் பார்க்கிறேன். அதை ட்ரக்டரில் ஏற்றிக் கொண்டு போனார்கள். இயக்கக் கண்காட்சிகளில் இவற்றை வைத்தால்தான் நிறையைச் சனங்கள் பார்க்க வருகிறார்கள்.

சண்டை தணிந்துகொண்டு வந்தது. இராணுவம் முன்னைய இடங்களையும் தாண்டி ஓடியிருந்தது. அங்காலே அராலி வட்டுக்கோட்டையிலும் அவர்கள் பின்வாங்கியிருந்தார்கள். அன்றைக்கு இரவு புலிகளின் குரலில் முன்னேறிப் பாய்வதென்ன அம்மா நீ பின்னாலே ஓடுவதேன் சும்மா என்ற பாட்டு ஒலிபரப்பானது.

ஆனால் சந்திரிக்கா ஒரேயடியாகப் பின்னாலே ஓடிவிடவில்லை. யாழ்ப்பாணம் அவவின் கனவாயிருந்தது. அதற்காக ரத்வத்தை பலாலியிலேயே படுத்தெழும்பியிருப்பார் என்று நினைக்கிறேன். பத்தாயிரம் ஆமியைப் பலாலியில் குவித்து புத்தூருக்கூடாக நகரைக் குறிவைத்து அவர்கள் முன்னேறத் தொடங்கியிருந்தார்கள். நாங்கள் புத்தூரில் வாழைத் வாழைத்தோட்டங்களில் ஆமிக்காரங்களுக்குள் நுழைந்தோம். மீண்டும் கண்மண் தெரியாமல் சண்டை தொடங்கியது.

பத்து ஆமிக்கு ஒரு புலி என்றொரு கணக்கு எங்களிடமிருந்தது. அந்தக்கணக்கு குழம்பத் தொடங்கியது. ஆமிக்காரர்களும் அவர்களது

டாங்கிகளும் வந்துகொண்டேயிருந்தன. ஒரு கட்டத்தில் அவர்கள் எங்களைப் பிரித்தபடி உள் நுழைந்தார்கள். என்னைத் தாண்டி எனக்குப் பின்னால் டாங்கியொன்று நிலத்தை உழுது நகர்ந்ததை நான் கண்டபோது, என் வயிறு ஒரு தடவை சில்லிட்டுக் குளிர்ந்தது. வயிற்றைப் பொத்திக்கொண்டு முழங்கால்களை ஊன்றிச் சரிந்தேன். கைவிரல் இடுக்குகளிற்குள்ளால் இரத்தம் கொளகொளத்தது. செத்துப்போய் விடுவேனோ என்று நினைத்தேன். எனக்கு முதலுதவிச் சிகிச்சை நடந்தபோது மயங்கிப் போனேன்.

யாழ்ப்பாணம் பெரியாஸ்ப்பத்திரி வார்ட்டுக்கள் இயக்கத்தின் காயக்காரர்களால் நிரம்பியிருந்தன. நான் வெறும் மேலுடனும் சாரத்துடனும் படுத்திருந்தேன். என் வயிற்றைச் சுற்றி வெண்ணிறத்துணிகளால் கட்டுப் போட்டிருந்தார்கள்.அவற்றில் இரத்தம் ஒரு சிறு புள்ளியாக ஊறியிருந்தது. இரவு முழுவதும் நான் தூசணத்தால் கத்திக்கொண்டிருந்ததாக அருகிருந்தவன் சொன்னான். நேர்ஸ் ஊசி போட வந்தபோது ‘‘எடி சந்திரிக்கா வேசை.. உனக்கு இருக்கடி ஒருநாளைக்கு’’ என்று திட்டியிருந்தேனாம். அவவைத் திரும்பப் பார்த்தால் மன்னிப்புக் கேட்க வேண்டும்.

ஈழநாதம் பேப்பரில் நேற்றைய சண்டையைப் பற்றி எதுவும் எழுதப்பட்டிருக்கவில்லை. சந்திரிக்காவிற்கு ஏதோ அரசியல் நெருக்குவாரம் என்று தலைப்புச் செய்தியில் போட்டிருந்தார்கள். வந்த கோபத்திற்கு ‘‘பூழல் பேப்பர் நடத்துறாங்கள்’’ என்று அதனைச் சுருட்டி வீசினேன். தோல்வியுற்ற சண்டைகளைப் பற்றி இயக்கம் செய்திகளில் சொல்வதில்லை. எனக்கு படபடப்பு அதிகரித்த படியிருந்தது. மூளைக்குள் விரிந்த யாழ்ப்பாணம் வரைபடத்தில் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் ரவுண் வரை ஒரு கோட்டைக் கீறினேன். யாழ்ப்பாணம் முழுவதும் அந்தக் கோட்டுக்குள் அடங்கியிருந்தது.

அடுத்தநாள் காலை வெளிச்சம் பரவ முன்னராகவே எல்லாக் காயக்காரர்களையும் வாகனங்களில் ஏற்றினார்கள். நாங்கள் ஐம்பது பேர் ரோசா மினிபஸ்சில் ஏறினோம். ஆஸ்பத்திரி வீதியில் சனசந்தடியைத் துப்பரவாகக் காணவில்லை. ‘‘சனத்தை இரவே எழும்பிப் போகச் சொன்னாச்சு’’ என்றார்கள் அழைத்துப் போனவர்கள்.

‘‘எங்கை’’

‘‘சாவகச்சேரிக்கு அங்காலை, வடமராட்சி தென்மராட்சி அல்லது வன்னிக்குப் போகச் சொல்லியிருக்கு’’

‘‘இப்ப நாங்கள் எங்கை போறம்’’ என்றேன் நான்.

‘‘சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு மாத்தச் சொல்லி இருக்கு’’

என் வயிற்றுக்குள் இன்னமும் சில்லிடுவதை நான் உணர்ந்தேன். ‘‘சண்டைக்கு என்ன நடந்தது’’

‘‘லைன் எல்லாத்தையும் உடைச்சுக் கொண்டு அவன் வந்திட்டான். சண்டை கோப்பாயில நடக்குது. உடனடியாச் சனங்களை வெளியேறச் சொல்லி இரவே சொல்லியாச்சு.’’

எனக்கு என்னவோ போல இருந்தது. பார்வையை வெளியே எறிந்தேன். இழுத்துப் பூட்டிய கடைகளும் ஆட்களற்ற தெருவும் கண்களில் நகர்ந்து கொண்டிருந்தன. ஒன்றிரண்டு நாய்கள் வாலை ஆட்டியபடி எங்களை ஏறிட்டன.

‘‘சனங்களை வெளியேறிப் போகச் சொன்னதால, இயக்கம் கெமிக்கல் ஏதோ அடிக்கப் போகுது என்று நினைக்கிறன்’’ என்றான் மணிக்கட்டோடு கை மொட்டையாய் இருந்தவன். சுற்றப்பட்டிருந்த வெள்ளைத் துணியில் இரத்தம் கசிந்திருந்தது. அப்பிடிச் சொல்லும்போது அவனின் கண்களில் வெளிச்சமிருந்தது.

ரோசா பஸ் அரியாலைக்குள் நெரிசலில் சிக்கிக் கொண்டது. சனங்கள் விலத்தித் தருவதாய்த் தெரியவில்லை. ‘‘அண்ணை கொஞ்சம் விலத்துங்கோ.. காயக்காரரைக் கொண்டுபோறம்’’ என்று பஸ்ஸை நகர்த்துவதற்கு முயற்சித்தார்கள்.

‘‘நீங்களும் எங்களோடைதான் வரோணுமே.. மேலாலை அவன் கண்டானெண்டால் நாங்களும் சிதறித்தான் சாக வேணும். ஒண்டில் எங்களை அனுப்பிப் போட்டு நீங்கள் கடைசியா வந்திருக்க வேணும். இல்லாட்டி நாங்கள் போகமுதலே ஓடித்தப்பியிருக்க வேணும்.’’ என்று நடுத்தர வயதுகளில் ஒருவர் கோபமாகச் சொன்னார். எனக்கும் இயக்கத்தில் கோபம் கோபமாய் வந்தது. பிறகு நான்தானே இயக்கம் என்ற நினைப்பும் வந்தது. பிறகு சனங்களில் கோபம் வந்தது.

“ஐயாயிரம் பேர் இயக்கத்துக்கு அவசரமாகத் தேவை” என்று ஆறு மாதங்களாக எத்தனை இடங்களில் பிரச்சாரம், எத்தனை இடத்தலே ஒளிவீச்சு, எத்தனை இடத்திலே தெருக்கூத்து என்று கத்தினோம். ஐயாயிரம் பேர் வந்தால் ரண்டாயிரத்திலே தமிழீழம் என்று கத்தியபோது பல்லை இளிச்சுக் கொண்டு திரிந்துவிட்டு இப்பொழுது குத்துது குடையுது என்றால் என்ன செய்வது.

இருந்தாற்போல எனக்கு அம்மாவின் நினைப்பு வந்தது. அவளுக்குத் தெரிந்த எவராவது சாவகச்சேரியிலேயோ கொடிகாமத்திலேயோ இருக்கிறார்களா என்று யோசித்தேன். அப்படி எவரும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஆனால் அம்மாவைப் பற்றி நான் அதிகம் யோசிக்கக்கூடாது. இந்திய இராணுவ காலத்தில் அண்ணையின் இரண்டு பிள்ளைகளும் நல்லூர்க் கோயிலில் அகதிகளோடு அகதிகளாக இருந்தார்களாம். காட்டிற்குள் அவர்களைப் பற்றி அண்ணி கவலைப்பட்டபோது அண்ணை சொன்னாராம். “தமிழீழத்தில மற்றப் பிள்ளைகளுக்கு நடக்கிறதுதான் என்ரை பிள்ளைகளுக்கும் நடக்கும்” என்று. தமிழீழத்தில் மற்ற அம்மாக்களுக்கு நடப்பதுதான் எனது அம்மாவிற்கும் நடக்கும் என்று நான் நினைத்தேன். என்ன.. அம்மாவிற்கு கொஞ்சம் வருத்தம்.

இரவு பன்னிரண்டு மணிக்குப் பிறகு சாவகச்சேரி ஆஸ்பத்தியில் எங்களைச் சேர்த்தார்கள். சின்னக் காயக்காரர்களை உடனேயே துண்டுவெட்டி அனுப்பினார்கள். மணியந்தோட்டத்திலிருந்த எனது முகாமினை எழுதுமட்டுவாளில் பெரும் ஏக்கர் கணக்கான தென்னந் தோட்டமொன்றுக்கு மாற்றியிருந்தார்கள்.

அடுத்த நாட்களில் நானும் ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறினேன். இயக்கம் தன்னை வன்னிக்கு நகர்த்தத் தொடங்கியிருந்தது. சனங்களிலும் நிறையப் பேர் வன்னிக்குப் போனார்கள். அப்பிடிப் போனவர்களில் சிலர் அங்கு இருக்கப் பிடிக்காமல் திரும்பி வந்தார்கள். அன்ரன் பாலசிங்கத்திற்கும் அண்ணைக்கும் நடந்த சந்திப்பொன்றில் சனங்களை வன்னிக்குப் போகச்சொல்லி வற்புறுத்த வேண்டாம் என்று பாலசிங்கம் சொன்னாராம்.

யாழ்ப்பாணத்தில் இன்னமும் சண்டை நடந்து கொண்டிருந்தது. அங்கிருந்து வெளியேறாத சனங்களையும் இயக்கம் வெளியேற்றிக் கொண்டிருந்தது.

இயக்கத்தின் கண்களில் படாத ஒன்றிரண்டு குடும்பங்கள் யாழ்ப்பாணத்திலேயே தங்கிவிட்டன. அவர்களில் தம்பு இராமலிங்கமும் ஒருவர். அவர் முன்னர் மன்னார் உதவி அரசாங்க அதிபராயிருந்தவர். அதனாலேயோ என்னவோ தனக்கு ஆமியிடமிருந்து பிரச்சனை வராது என அவர் நம்பியிருக்கலாம்.

மாவீரர் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் வெற்றிக் கொடியேற்ற ரத்வத்தை விரும்புகிறார் என்று நான் நினைத்தேன். அப்படி நடந்துவிடக் கூடாது என்று விரும்பினேன். நல்லவேளையாக அதற்கு ஐந்து நாட்கள் பிந்தி சிங்கக்கொடியை ரத்வத்தை ஏற்றினார். சிங்கக் கொடிக்குப் பக்கத்தில் நந்திக்கொடியொன்றை தம்பு இராமலிங்கம் ஏற்றினார். நான்கு மாதம் பிந்தி தென்மராட்சியிலிருந்தும் வடமராட்சியிலிருந்தும் இயக்கம் வெளியேறியது. சனங்கள் திரும்பவும் யாழ்ப்பாணம் போனார்கள். அதற்கு மூன்று மாதம் பிந்தி தம்பு இராமலிங்கத்தை வீட்டில் வைத்து இயக்கம் சுட்டது. அதற்கு ஒரு மாதம் பிந்தி செம்மணி செக்பொயின்ற்றில் கிருசாந்தியின் சைக்கிளை இராணுவம் மறித்தது.

# 3

சிவராசனால் தீர்மானமான முடிவுக்கு வரமுடியவில்லை. சனங்கள் கிளாலிப் பக்கமாக ஓடிக்கொண்டிருந்தார்கள். அவரது மனதிற்குள் பெரும் பிரளயமே நடந்துகொண்டிருந்தது. மட்டுவிலிலும், சாவகச்சேரியிலும் சனங்கள் இராணுவத்திடம் அகப்பட்டிருந்தார்கள். அவர்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றும், இல்லை சனங்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள் என்றும் இளம் பெண்களைத் தனியே பிரித்து எடுக்கிறார்கள் என்றும் ஒவ்வொருமாதிரிக் கதைக்கிறார்கள்.

சிவராசனின் குடும்பம் எழுதுமட்டுவாளில் ஒரு சேர்ச்சில் தங்கியிருந்தது. அவருக்கு மூன்றும் குமர்ப்பிள்ளைகள். அதுதான் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தது. அவர்களோடு யாழ்ப்பாணம் திரும்புவதை அவரால் நினைத்தும் பார்க்க முடியவில்லை. ஆமி கொடிகாமத்திற்கும் வந்தவிட்டதாய்ச் செய்தி வந்த போது அவர் ஒரு முடிவுக்கு வரவேண்டியிருந்தது.

‘‘அழகு, நீ பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு வன்னிக்குப் போ.. நான் யாழ்ப்பாணம் போறன்..’’ என்று மனைவியிடம் சொன்னார். அழகு தலையில் கை வைத்து ஒப்பாரி வைக்கத் தொடங்கினாள்.

‘‘என்ன புசத்திறியள் நீங்கள்.. எனக்கு வன்னியில ஆரைத்தெரியுமெண்டு போறது.. மூண்டு குமருகளை வைச்சு நான் அங்கை என்னத்தைச் செய்யிறது. நீங்களும் வாறதெண்டா வாங்கோ வன்னிக்குப் போவம். இல்லாட்டி ஆமிக்காரனிட்டைத் தப்பியொட்டினா யாழ்ப்பாணம் போவம். இனி அந்தக் கடவுள் விட்ட வழி’’

மூன்று பிள்ளைகளும் மிரண்டு போயிருந்தார்கள். மூத்தவள் தீபா ஏற்கனவே நவாலிச் சேர்ச்சில், புக்காரா அடியில் அகப்பட்டு அருந்தப்பில் உயிர் தப்பியிருந்தாள். அந்தக் காயத் தழும்புகள் இப்பொழுதும் முகத்தில் இருந்தன. அந்தச் சம்பவத்திற்குப் பிறகு குண்டுச் சத்தம் கேட்டாலோ விமானங்களின் இரைச்சலைக் கேட்டாலோ அவளது முகம் இருண்டு கொண்டு வந்துவிடும். இப்பொழுதும் அப்பிடித்தான், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் நெருங்கிக்கொண்டிருந்தன. ஆனையிறவில் இருந்து ஆட்லறிகள் இவர்களைக்

கடந்துபோய் வெடித்தன. அவள் தன்பாட்டில் காதுகளைப் பொத்திக்கொண்டு நிலத்தில் விழுந்து கிடந்து குளறுவதும் மரங்களுக்குப் பின்னால் ஒளிவதுமாக அந்தரித்துத் திரிந்தாள்.

இப்படியொரு அவலம் தனக்கு நேரும் என்று சிவராசன் கனவிலும் நினைத்ததில்லை. யாழ்ப்பாணத்தை விட்டு வேறு பகுதிகளுக்குச் செல்லுமாறு அறிவிப்பு வந்தபோது அவரின் குடும்பம் இரவுச் சாப்பாட்டை முடித்து தூங்குவதற்கு ஆயத்தமாயிருந்தது. சிவராசனின் அம்மா ஒரு பாரிசவாத நோயாளி. நடக்கவோ சைக்கிள்களில் ஏறி உட்காரவோ முடியாதவர். எண்பத்தியிரண்டு வயதுகளிலிருந்த அவர் படுத்த படுக்கையிலேயே நாட்களைக் கடத்தினார். ஒவ்வொரு நாளும் மருந்துகளை எடுக்க வேண்டியிருந்தது.

இடம்பெயரச் சொன்னபோது நாளைக்கே சிங்கள இராணுவம் யாழ்ப்பாணத்தில் பெரும் தாக்குதலைத் தொடுத்து மக்களைச் சிறைப்பிடிக்கத் திட்டமிட்டிருப்பதாகவும், அதன் சதிவலையில் இருந்து உங்களையும் உங்கள் குழந்தைகளையும் காப்பாற்ற இரவோடு இரவாக யாழ்ப்பாணத்தைக் கடக்கும்படி சொல்லப்பட்டிருந்தது.

சிவராசன் தன் மூன்று பிள்ளைகளைப் பற்றியே நினைத்தார். அதற்குக் காரணமிருந்தது. அவர் ஒரு இயக்க ஆதரவாளராகச் செயற்பட்டிருந்தார். இயக்கத்தின் தெருக்கூத்துக்களிலும், நாடகங்களிலும் அவர் இயங்கியிருந்தார். அவரது நாடகங்களில் ஊருக்குள் புகுந்த சிங்கள இராணுவத்தினர் முதலில் பெண்களைத் தேடித் தேடி இழுத்து ஸ்கிரீனுக்குப் பின்னால் இழுத்துச் சென்றார்கள். அதற்குப் பிறகு வீரிடும் பெண் குரல்களால் அவர் அரங்கினை நிறையச் செய்தார். தெருக்கூத்துக்களில் பச்சை உடையணிந்த ஆமிக்காரர்கள் பூதங்கள் வருவதைப் போல கைகளை வீசி கால்களை உதைத்து வந்து இளைஞர்களின் தலைகளை சீவி எறிந்தார்கள். நீண்ட கூரிய வாள்களால் அவர்களின் நெஞ்சைக் குத்திக் கிழித்தார்கள்.

அப்படியானவருக்கு தானும் பிள்ளைகளும் வெளியேறாதிருப்பது தற்கொலைக்குச் சமமானது என்பது புரிந்திருந்தது. ஆகக்குறைந்தது காலை வரை சமாளிக்க முடிந்தால் விடிந்ததும் அவரது பாரிசவாத அம்மாவினையும்

வெளியேற்ற முயற்சிக்கலாம் என்று அவர் நம்பினார். பிள்ளைகளிடம் உடுப்புக்கள், காணி வீட்டு உறுதிகள், நகைகளை எடுத்துப் பத்திரப்படுத்தச்சொல்லி விட்டு றோட்டுக்கு வந்தார்.

சனங்கள் சைக்கிளில் கட்டிய மூட்டை முடிச்சுக்களுடன் வெளியேறிக்கொண்டிருந்தனர். ''எட்டி நடவணை'' என்றும் ''கெதியில வா'' என்றும் குரல்கள் ஒலித்தபடியிருந்தன. இருட்டில் யாரோ சிவராசனை அழைத்தார்கள். ''சிவராசண்ணை, நல்லூரடிக்கு ஆமி வந்திட்டானாம். சனங்கள் அரியாலைக்கால வெளியில போகுதுகள். பொம்பிளைப் பிள்ளைகளை வைச்சிருக்கிறனியள். கெதியா வெளிக்கிடுங்கோ''.

சிவராசன் வீட்டுக்கு ஓடிவந்தார். ''பிள்ளையள் வெளிக்கிடுங்கோ.. அழகு அரிசிமாவும் கொஞ்சம் தண்ணியும் எடுத்துக் கட்டு. தீபா நீ ஆஷாவை ஏத்து. சோபா தன்ரை சைக்கிள்ளை வரட்டும்.'' என்றவர் அம்மா படுக்கும் கட்டிலருகே வந்தார். மருந்து டப்பாக்களையும் பெரிய ஐந்து க்ளாஸ்களில் தண்ணீரையும் நிரப்பி அம்மாவின் கை எட்டும் தூரத்தில் வைத்தார். அரிக்கன் லாம்புக்குள் கொஞ்ச மண்ணெண்ணெய் விட்டு வெளிச்சத்தைத் தூண்டி வைத்து ''அம்மா'' என்றார்.

''ம்..'' என்ற முனகல் மட்டும் கேட்டது. அம்மா கண்களைத் திறந்திருந்தார்.

''எணை இதில மருந்தும் தண்ணியும் இருக்கு. நான் இவளவையைக் கொண்டுபோய் சாவகச்சேரிப்பக்கமா விட்டுட்டு விடியுறதுக்குள்ளை வந்திடுவன்.'' அம்மா கைகளை நீட்டி சிவராசனின் கைகளைப் பற்றிக்கொண்டார். பிறகு ''நீ போட்டு வா, பிள்ளையள் பவுத்திரம். ஒரு இரவுதானே.. நான் இருப்பன்.. சலத்துக்கு அந்தச் சட்டியை வைச்சிட்டுப் போ.. ''

சிவராசனும் அழகுவும் பிள்ளைகளும் வீதிக்கு வந்தார்கள். அவர் தன் அம்மாவிடம் திரும்பி வருவதாகச் சொன்ன விடியற்காலை அவர்கள் அரியாலையில் நின்றனர். வானம் தூறிக்கொண்டிருந்தது. ஒரு அடி எடுத்து வைப்பதற்கு அவர்களுக்கு நிமிடங்கள் செலவானது. நாள் முழுதும் நடந்தார்கள். இரவு நடுச்சாமம் தாண்டியபிறகு சாவகச்சேரியில் பஸ் ஸ்ரான்ட் ஒன்றுக்குள் இடம்பிடித்து பிள்ளைகளைப் படுக்கவைத்துவிட்டு சிவராசன்

திரும்பவும் ஊருக்குப் புறப்பட்டார். சைக்கிளை ஓடிச் செல்ல முடியவில்லை. சனங்கள் இப்பொழுதும் எதிர்த்திசையில் வந்து கொண்டிருந்தார்கள். இறங்கி சைக்கிளை உருட்டிச் செல்ல ஆரம்பித்தார். அடுத்தநாள் காலை கைதடிப்பாலத்தில் வைத்து சிவராசனை இயக்கம் மறித்து ‘‘அங்காலே போகமுடியாது’’ என்றது.

‘‘என்ரை அம்மா அங்கை தனியக் கிடக்கிறா.. அவவைப் போய்க் கூட்டியரவேணும். என்னை விடுங்கோ.. வயசு போன நடக்கமாட்டாத மனிசி அவ..’’

‘‘போனால் வரமுடியாமல் போகும். ஆமி கிட்ட நெருங்கிட்டான். கடும் சண்டை நடக்குது. நீங்கள் திரும்பிப் போங்கோ’’ சிவராசனுக்கு விம்மி அழுகை வந்தது. ரோட்டோரமாக குந்தியிருந்து அழத்தொடங்கினார். இயக்கப் பெடியனொருவன் அருகில் வந்தான்.

‘‘எதுக்கும் நீங்கள் உங்கடை வீட்டு முகவரியைத் தாங்கோ.. உங்கடை ஏரியாப்பக்கம் நிக்கிற எங்கடை ரீமுக்கு அறிவிக்கிறம். அவையளாலை கண்டுபிடிக்க முடிஞ்சால் கடலால உங்கடை அம்மாவை எடுக்கலாம்’’

வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து முகவரியை அவன் நீட்டிய கொப்பியில் விபரமாக எழுதிக் கொடுத்தார். கேணியடிக்குப் போனால், கேணியடிக்கு நேரே போகிற ஒழுங்கையில் இரண்டாவதாக இன்னொரு குச்சொழுங்கை பிரிகிறது. அதில் இரண்டாவது ஓட்டு வீடு. முன்னாலே கிடுகில் வேய்ந்த தாவாரம் ஒன்று உள்ளது. அம்மா வெளிவிறாந்தையில் படுத்திருப்பா.

அப்படியே தனது முகவரியையும் அவர் எழுதினார். பருத்தித்துறை வழி பஸ் ஸ்ரான்ட், சாவகச்சேரிச் சந்தி.

அதற்குப் பிறகு காணுகிற தெரிந்த இயக்க ஆட்களிடமெல்லாம் அம்மாவைப் பற்றி சிவராசன் விசாரித்துத் திரிந்தார். யாழ்ப்பாணத்தில் தனித்துவிடப்பட்ட வயதுபோன ஒன்றிரண்டு பேரை இயக்கம் அழைத்து வந்திருக்கிறது என்ற கதை பரவியிருந்தது. கல்வியங்காட்டில் ஒரு வயதான பாட்டியை வெளிநாட்டிலிருந்த அவரின் பிள்ளைகள் வேலையாளை அமர்த்திப் பார்த்து வந்திருக்கிறார்கள். அன்றைக்கு இரவு பாட்டியை உள்ளே வைத்துப் பூட்டி

விட்டு வேலையாள் வெளியேறி விட, பாட்டி உள்ளே இருந்து நாள் ஓயாமல் கத்தியிருக்கிறார். அந்தப் பக்கங்களில் நின்ற இயக்கம் கதவை உடைத்து அவரை மீட்டு கொழும்புத்துறையில் படகில் ஏற்றி கச்சாயில் கொண்டுவந்து இறக்கியது. பேப்பரில் பாட்டியின் படத்துடன் வெளியான அறிவிப்பொன்றில் உறவினர்களைத் தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டிருந்தது. அப்படி அம்மாவின் படமும் பேப்பரில் வருமென்று சிவராசன் எல்லாப் பேப்பர்களையும் விடாமல் படித்தார். அந்த நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாகத் தூர்ந்து போனது.

சில உள் கிராமங்களில் சனங்கள் முழுவதுமாக வெளியேறிவிடாமல் ஒன்றிரண்டு பேர் அங்கேயே தங்கிவிட்டதாக சிவராசன் கேள்விப்பட்டிருந்தார். அவரது ஊரிலும் அப்படி யாரேனும் தங்கியிருக்கலாம் என்றும் அவர்கள் அம்மாவைக் கவனித்துக் கொள்ளக் கூடும் என்றும் அவரது அடிமனதிற்குத் தோன்றியது. அப்படியொரு நம்பிக்கையில் அவரால் நாட்களைக் கடத்த முடிந்தது.

சாவகச்சேரி பஸ் ஸ்ரான்டில் இருந்து சிவராசன் குடும்பம் எழுதுமட்டுவாளில் ஒரு சேர்ச்சுக்கு இடம் பெயர்ந்திருந்தார்கள். சேர்ச்சில் மொத்தம் பன்னிரண்டு குடும்பங்கள் தங்கியிருந்தன. அவர்களில் ஏழு குடும்பம் வன்னிக்குப் போயிருந்தது. மற்றவர்கள் இனி என்ன ஆனாலும் ஒரு அடி தன்னும் நகர்வதில்லை என்று சொன்னார்கள். இன்று காலை சாவகச்சேரிக்கு இராணுவம் வந்துவிட்டதாகக் கேள்விப்பட்ட போது ஆண்டவன் உயிரோடு விட்டு வைத்தால் யாழ்ப்பாணத்திற்கே திரும்பி விடப்போவதாக அவர்கள் சொன்னார்கள். சிவராசனால்த்தான் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. இந்த மூன்று பெண்பிள்ளைகளையும் தான் பெற்றிருக்கக் கூடாது என்ற ஒரு நினைப்பு அவருக்குள் ஓடி மறைந்த அடுத்த வினாடி “வெளிக்கிடுங்கோ கிளாலிக்கு” என்றார் அவர். அழகுவை சைக்கிளில் ஏற்றிக் கொண்டார். தீபா ஆஷாவை ஏற்றிக்கொள்ள சோபா தனியாக ரோட்டில் ஏறினார்கள். கிளாலிப்பக்கமாக சுப்பர்சொனிக் விமானங்கள் காதுகளைச் செவிடாக்கி இரைந்தன. தீபா சைக்கிளில் இருந்து குதிப்பதும் மரங்களுக்குள் விழுந்து பதுங்கி ஒளிப்பதுமாக இருந்தாள். கொஞ்சத்தூரத்தில் சனங்கள் எதிர்த்திசையில் ஓடிவந்தார்கள்.

‘‘கிளாலிப் பாதை மூடியாச்சு. கடைசியாப் போன வள்ளத்தை கடலில வைச்சே அடிச்சுக் கவிட்டுட்டாங்கள்’’ என்று இளைஞன் ஒருவன் கத்தியபடி ஓடினான்.

‘‘இயக்கம் சனங்களைக் கிளாலிக்கரையில நிக்கவேண்டாம் எண்டும் திரும்பி ஊருக்குப் போகச் சொல்லியும் சொல்லிட்டு போயிட்டுது’’

‘‘என்ரை ஐயோ.. நாங்கள் இடையில மாறுப்பட்டுட்டம், முதல் போட்டில என்ரை அவர் ஏறினவர். இங்காலை நான் போட் ஏறத்துக்கு முதல் திரும்பிப் போகச் சொல்லிப்போட்டினம். இவற்றை வள்ளம் வெளிக்கிட்டாப்பிறகுதான் கடலுக்கை ஆமி அடிச்சது. எனக்கெண்டால் என்ன செய்யிறது எண்டு தெரியேல்லை..’’

சிவராசன் நடக்கிறது நடக்கட்டும் என்று சைக்கிளைத் திருப்பினார். அவர் அழகுவிடம் சைக்கிளைக் கொடுத்து ஆஷாவை ஏற்றி உருட்டச் சொன்னார். தீபாவைத் தனது சைக்கிளில் ஏற்றிக் கொண்டார். கொடிகாமம் சந்திவரை அவர்கள் நடந்து வந்தார்கள். சந்தியில் சனங்களின் வரிசை நீண்டிருந்தது. கடைசித் தொங்கலில் நின்ற சிவராசன் அவரது நாடகங்களிலும் தெருக்கூத்துக்களிலும் வருவதைப் போன்ற பச்சை உடையும் சட்டித் தொப்பியும் அணிந்த ஒரிஜினல் ஆமிக்காரன் ஒருவனை மிகக்கிட்டத்தில் பார்த்தார். தீபா சைக்கிள் ஹான்டிலை இறுக்கினாள். இராணுவம் அவர்களின் பெயர்களையும் முகவரியையும் பதிவு செய்தது.

‘‘பொண்ணுக்கு எத்தனை வயசு..’’

‘‘பதினாறு... மற்றவக்கு பதின்னாலு.. கடைசிக்கு பத்து..’’

‘‘ம்..ம்... ’’ அவன் ஒரு மாதிரியாக ம் கொட்டினான். பிறகு வீட்டுக்குப் போகலாம் என்றான். சிவராசண்ணை மனதிற்குள் ‘‘தெய்வமே’’ என்றார்.

ஆறு மாதத்தில் றோட்டுகளும் ஒழுங்கைகளும் வளவுகளும் அடையாளமே தெரியாமல் மாறியிருந்தன. சருகுகளும் கஞ்சல்களும் குவிந்துபோய்க் கிடந்தன. வீட்டைக் கண்டதும் பொல பொலவென்று கண்ணீர் வந்தது. சிவராசன் படலையடியில் சைக்கிளைப் போட்டுவிட்டு அம்மா என்று கத்திக்கொண்டு கட்டில் அருகே ஓடினார். வளவிற்குள் ஒரு வித்தியாசமான

மணம் பரவியிருந்தது. வெளி விறாந்தைக் கட்டிலில் இன்னமும் ஊனம் வடிந்து கொண்டிருந்த எலும்புக் கூடொன்று நீட்டி நிமிர்ந்து கிடந்தது. அருகில் சில மருந்து டப்பாக்களும் தண்ணீர் இல்லாத ஐந்து பெரிய க்ளாஸ்களும் இருந்தன. கட்டிலில் புழுக்கள் நெளிந்தன.

# 4

விடிந்தபோது சுற்றவரக் கடல் இருந்தது. இவன் இரவு முழுவதும் நித்திரை கொள்ளவில்லை. ட்ரவலிங் பையை எடுத்து முதுகுக்கு அணைத்து கொஞ்சம் சாய்ந்து கண்ணயர்கிற போதெல்லாம் இரண்டு காரணிகள் இவனைக் குழப்பிக் கொண்டிருந்தன. ஒன்று ஏதாவது பெரும் அலையில் சாய்ந்து நிமிரும் வள்ளம். மற்றையது பக்கத்தில் படுத்திருந்த சின்னப் பெடியன். அவன் இவனைக் கட்டிப்பிடிப்பதும் இவனுக்குள் செருகிக் கொண்டு வருவதுமாக இருந்தான். சுற்றிப் பிடித்திருக்கிற அவனின் கையை வலுக்கட்டாயமாக ஒவ்வொரு முறையும் பிரித்துவிட்ட போதும் அவன் விடுகிறமாதிரித் தெரியவில்லை.

கொஞ்சநேரத்துக் கனவொன்றில் அகிலா வந்தாள். இவனும் அவளும் டைட்டானிக் கப்பலின் ஏதோ ஒரு தளத்தில் ஜீப் ஒன்றிற்குள் கிடந்தார்கள். ஜீப்பின் கண்ணாடிகளில் பனிப்புகை படிந்திருந்தது. அகிலா இவனைக் கட்டிப்பிடித்தாள். இவனுக்குள் செருகிக்கொண்டு வந்தாள். அகிலாவின் முகத்தை இவன் கைகளில் ஏந்தினான். சட்டென்று அவள் வாயைக் கடித்துக் கொஞ்சத்தொடங்கினான். அகிலா திமிறினாள்.

சின்னப்பெடியன் திடீரென்று எழுந்து இவனை மிரட்சியுடன் பார்க்கத் தொடங்கினான். இவன் தலையைக் குனிந்து கொண்டான். வெளிச்சம் பரவியபோது அவன் தன் பெட்சீற்றைச் சுருட்டிக்கொண்டு ஒரே தாவலில் போய் இன்னுமொரு இடம்பிடித்துக் கொண்டான். போகும்போது யாரையோ உழக்கிக் கொண்டு போனானென்று கத்தினார்கள்.

வள்ளம் வெளியிலும் உள்ளுக்கும் நிறைய இடங்களில் துருப் பிடித்திருந்தது. எஞ்சின் அறைக்கென ஒரு கூடிருந்தது. ஒரு காஸ் அடுப்பும் சிலிண்டரும் அங்கிருந்தன. அந்தக் கூட்டின் தளத்தில் ஒன்றுக்கு ஒன்று சதுர அடியில் ஒரு வாசலும் கீழே இன்னுமொரு அறையும் இரண்டையும் இணைத்து ஏணியொன்றும் இருந்தன. கீழறைக்குள் அரிசி பருப்புச் சாப்பாட்டுச் சாமான்களையும், மருந்துகளையும் பத்திரப்படுத்தியிருந்தார்கள். ஓட்டிகளின் அறையாகவும் அது இருந்தது. பயணிகள் வெளியே கடலைப் பார்த்தபடி இருக்க வேண்டும். ஆளுக்காள் அனுசரித்துக்கொண்டு படுக்க வேண்டும்.

இவனுக்கு வயிற்றுக்குள் கடமுடவென்ற சத்தம் காதுவரைக்கும் கேட்டது. இவன் காலையிலேயே கக்கூசு போகிற பழக்கம் உள்ளவனாயிருந்தான். அதற்காக வள்ளத்தின் விளிம்பிற்கு வெளியே நிற்கத்தக்கதாக நடுவில் ஓட்டை போட்ட கறள்பிடித்த பேசின் ஒன்றை ஸ்குரூ போட்டுப் பொருத்தியிருந்தார்கள். அதில் உட்கார்ந்து முன்னாலே கடல் தண்ணீர் நிரப்பி வைத்திருக்கிற மண்ணெண்ணெய் ட்ரம்மை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும்.

இவன் தனது முறைக்காக வரிசையில் பன்னிரெண்டாவதாக நின்றான். பதினொன்றாவதாக நின்றவர் எழும்பி வந்த பிறகு அங்கேயிங்கே என்று கையைப் பிடித்து ஊன்றி சாரத்தைத் தூக்கிக் குந்தி மண்ணெண்ணெய் பரலைக் கெட்டியாகப் பிடித்தான். தண்ணிக்குள் தொப் தொப் என்று விழுகிற சத்தங்கள் கேட்டன. திடீரென்று “ஆழக்கடலெங்கும் சோழ மகாராஜன் ஆட்சி புரிந்தானே அன்று” என்ற பாட்டு நினைப்பில் வந்தது. சோழ மகாராஜனும் இப்பிடித்தான் இருந்திருப்பான் என்று யோசனை வந்தது. கழுவியபோது குண்டியில் உடைந்து கிடந்த சூட்டுக் கட்டில் உப்புத்தண்ணிபட்டு எரியத் தொடங்கியது. கொஞ்சம் காற்றுப்பட சாரத்தை உயர்த்திக் கட்டி அங்கேயும் இங்கேயும் நடந்தான். சிங்கள இளைஞர்களின் சிலமனைக் காணவில்லை. கீழே ஓட்டிகளின் அறையில் அவர்கள் போர்த்துக் கட்டிக்கொண்டு ஆளுக்கொரு தலையணையில் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார்கள். அவர்களில் பத்துப்பேர் இருந்தார்கள். இவனுக்குப் பத்திக் கொண்டு வந்தது.

வள்ளத்தில் மத்தியானம் சோறும் பருப்புக் கறியும் கொடுத்தார்கள். கடலுக்குள் சீக்கிரமாகவே பசிக்கத் தொடங்குகிறது. இவன் அவுக் அவுக் என்று வாய்க்குள் அள்ளி எறிந்தான். அரை டம்ளரில் குடிக்கத்தண்ணி கிடைத்தது. சிங்களப் பெடியங்களைத் திரும்பவும் காணவில்லை. அவர்கள் கீழறையில் ஸ்பெஷலாக எதையாவது சாப்பிடுகிறார்களோ என இவனுக்கு டவுட் வந்தது. ஓட்டிகளில் ஒருவன் இவர்களிடத்திற்கு வந்து இன்றைக்கு முதல் நாள். அதனால் சரியான ஏற்பாடு எதுவும் செய்யவில்லையென்றும் நாளை முதல் இந்த வள்ளத்திலேயே மீன் பிடித்துச் சமைக்க உள்ளதாகவும் சொன்னான். மீன்பிடி, சமையல், துப்பரவு என வேலைகளை ஆட்களுக்குள் பிரித்துக் கொள்ளுமாறு அவன் மேலும் சொன்னான்.

“இந்த வள்ளத்தில எத்தனைபேர் போறம்” என்று நாற்பது வயதுகளில் உடல் தளர்ந்து போயிருந்த ஒருவர் ஓட்டியைப் பார்த்துக் கேட்டார். அவரை இன்று காலையில் யாரோ பெரியய்யா என்று அழைத்ததாக ஞாபகம். இடுப்பில் சுருட்டிவிட்ட சவுதிச் சாரமும் கையில்லாத வெள்ளை பெனியனுடனும் அவர் நின்றார்.

“எங்கள் ரண்டு பேரையும் விட்டுப்பாத்தா அறுபத்துநாலு” என்றான் ஓட்டி. அப்பொழுது ஒருநாளைக்கு ஒன்பது பேர் என்று வேலைகளைப் பிரிக்கலாம் என இவன் கணக்குப் போட்டான். சிங்கள இளைஞாகள் பத்துப் பேருக்கும் ஒருநாளைக் கொடுத்துவிடலாம்.

இவன் “பெரியய்யா” என்று அந்த வயதானவரைக் கூப்பிட்டான். அவர் திரும்பிப்பார்த்தார்.

“இங்கை வாற ஆக்களில நீங்கள்தான் வயசுக்கு மூத்தவர் எண்டு நினைக்கிறன். ஆளாளுக்கு என்ன வேலை, எப்ப வேலையெண்டதை நீங்கள்தான் கொண்டுநிண்டு நடத்தவேணும். என்ன சொல்லுறியள்” என்று எழும்பி நின்று இவன் அபிப்பிராயப்பட்டான். பெரியய்யா தயங்கினார். “இதில நான் என்ன செய்யிறது” என்றார்.

“அண்ணை சொல்லுறது சரி. சும்மா நாங்கள் இதுக்கை இருந்து ஆளையாள் மூஞ்சையைப் பாத்துக் கொண்டிருக்காமல் ஆளும் பேருமா வேலைகளைச் செய்தா பொழுது போறதும் தெரியாது. ஒரு ஒழுங்கு முறையாவும் இருக்கும். பெரியய்யா இனி நீங்கள்தான் எங்கடை கப்டன்” என்று இன்னுமொரு இளைஞனும் சொன்னான்.

பெரியய்யா கூச்சப்பட்டுத் தலையாட்டினார். அவரின் முகத்தில் பெருமித இழை ஓடியதை இவன் அவதானித்தான். பெரியய்யா முதல்வேலையாகச் செய்த காரியம் பின்வருமாறு,

பெரியய்யா எல்லோரையும் பார்த்து “வெட்கப்படாமல் சொல்லுங்கோ, ஆருக்கு விடிய முதல் ரொய்லெட் வாறது.” என்று கேட்டார். கிட்டத்தட்ட எல்லோருமே கை உயர்த்தினார்கள். விடியப் பழக்கமில்லாதவர்கள் ஏழோ எட்டுப்பேர்தான் இருந்தார்கள். பெரியய்யா ஓட்டிகளிடம் போய் நிலைமையை விளக்கினார்.

அவர்கள் இன்னொரு கறளப்பிடித்த மண்ணெண்ணெய் பரல் மூடியைக் கொடுத்தார்கள். அதில் நடுவில் வட்டமாக வெட்டப்பட்டிருந்தது. பெரியய்யா அதை வளைத்து நெளித்து வள்ளத்தின் இன்னொரு பக்க விளிம்பில் பொருத்தி கம்பிகளால் இறுக்கிக் கட்டினார். ஒருதடவை அதில் இருந்து பார்த்தார். வள்ளத்தின் சட்டங்களில் கயிற்றைக் கட்டி அதை புதிய ரொய்லெட்டுக்கு இழுத்து வந்தார். கயிற்றை கைகளில் சுற்றிப் பிடித்துக் கொண்டு இன்னுமொருதடவை இருந்து பார்த்தார். திருப்தியாய் எழுந்தார்.

பின்னேரம் சிங்களம் தெரிந்த ஒருவனைக் கூட்டிக்கொண்டு இவனும் பெரியய்யாவும் சிங்கள இளைஞாகளிடம் போனார்கள். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நீங்கள்தான் சமையல் துப்பரவு வேலைகளைச் செய்ய வேண்டும் என்றும் பிற நாட்களில் மற்றவர்கள் பார்த்துக் கொள்வார்கள் என்றும் பெரியய்யா சொன்னதை சிங்களத்தில் அவர்களுக்குச் சொன்னார்கள். அவர்களில் ஒருவன் பெரியய்யாவின் கையைப் பற்றி ''என்ட பேர் பண்டார.. உங்கட பேர் என்ன'' என்று தமிழில் கேட்டான். இவன் ''பெரியய்யா'' என்றான். ''பெரிய.. ஐயா..'' என்று உச்சரித்துப்பார்த்த பண்டார ''ஓக்கே லொக்கா, சன்டே எல்லா வேலையும் நாங்க பாக்கிறது'' என்று திரும்பவும் பெரிய்யாவின் கையைப் பிடித்துக் கொண்டு சொன்னான்.

திரும்பும்போது ''நல்லாப் பயந்திட்டாங்கள்'' என்றான் சிங்களத்தில் மொழிபெயர்க்க வந்த இளைஞன். தொடர்ந்தும் அவனே ''இதுவே நாங்கள் பத்துப்பேராயும் மிச்சம் அவங்களாயும் இருந்தால் என்ன நடக்கும் என்று யோசிச்சுப் பாருங்கோ'' என்றும் சொன்னான். பெரியய்யாவும் இவனும் பேசாமல் வந்தார்கள். இந்தக்கதை அன்றைய இரவுக்குள் ஐந்தாறு பேருக்குச் சொல்லப்பட்டது. அவர்களில் யாரோ ''இதுவே நாங்கள் பத்துப் பேராயும் மிச்சம் அவங்களாயும் இருந்தால் நேற்றைக்கு இரவே எங்களைத் தூக்கிக் கடல்லை போட்டிருப்பாங்கள்'' என்றார்.

வள்ளத்தில் சளக் சளக் என்று அலை நீர் அடித்துக் கொண்டிருந்தது. சிலசமயங்களில் தண்ணிர் உள்ளே தெறித்து விழுந்தது. இவனது கிராமத்து வீட்டில் மழைக்காலங்களில் வெளி விறாந்தையில் போர்த்துக்கொண்டு பாயில் படுத்தால் சோ என்ற மழை இரைச்சலும் காற்றுமாக மழைத்தண்ணீர்

தெறித்துக் கொண்டேயிருக்கும். அற்புதமான காலங்களாக அவையிருந்தன. தாலாட்டாமலேயே நித்திரை வரும். இப்பொழுது நித்திரைக்குப் பதில் பயம்தான் வருகிறது. நேற்றைக்கிருந்த கொஞ்சநஞ்ச நித்திரையும் இன்றைக்கு கிடையாதென இவன் நினைத்தான்.

திடீரென்று சின்னப்பெடியனின் நினைப்பு வந்தது. அவன் பெட்சீற்றால் முழுவதுமாகச் சுற்றிக்கொண்டு கொஞ்சம் தள்ளி குந்தியிருந்தான். இவனுக்குப் பக்கத்தில் இருந்தவர் சிகரெட் பற்றிக் கொண்டிருந்தார். இவனுக்குத் தொண்டைக்குள் கரகரவென்றிருந்தது. புகையும் மணமும் சினத்தை மூட்டின. அவர் இரண்டு மூன்று இழுவைகளுக்குப் பிறகு சிகரெட்டின் நுனியை விரல்களால் அமத்தி நூத்துப் பத்திரப்படுத்தினார். பிறகு இவனைப் பார்த்து "நாங்கள் இப்ப எங்கை நிக்கிறம். " என்று கேட்டார்.

வந்த ஆத்திரத்துக்கு இவன் "கடலில" என்றான். அவர் ஒரு குழந்தைப் பிள்ளையைப் போல "ஹா ஹா" என்று கெக்கட்டம் போட்டுச் சிரித்தார். அதன் பிறகு அவரில் இருந்த கோபம் இல்லாமற் போனது.

உண்மையில் கடலுக்குள் நிற்கிறோம் என்பதைத் தவிர வேறு எதுவும் இவனுக்கும் தெரிந்திருக்கவில்லை. இத்தாலி எந்தப்பக்கம் இருக்கிறது என்பதுவும் மட்டுக்கட்ட முடியாமல் இருந்தது. இந்தியா என்றொரு நாடு யாழ்ப்பாணத்துக்கு மேலே கொஞ்சத்துாரத்திற்தான் இருக்கிறது என்று அறியவந்த போதே இவனுக்கு கழுதை வயதாகியிருந்தது. அதைச் சொல்வதற்கு இந்தியாவிலிருந்து தலைப்பாகையும் தாடியும் வைத்த ஆமிக்காரன் ஒருவன் வரவேண்டியிருந்தது. இவன் இரண்டாவது முறையாகவும் அவர்களிடம் பிடிபடவேண்டியிருந்தது.

இந்திய இராணுவம் வருகிறதாம் எனக் கதையடிபட்ட போது இவனுக்கு இந்தியாவைப் பற்றி மூன்று சங்கதிகள் தெரிந்திருந்தன

1.இந்தியா ஒரு வெளிநாடு

2.இந்தியாவின் ஜனாதிபதி எம்.ஜி.ஆர். அவர் ஒரு தமிழர்.

3.இந்தியாவில் ரஜினிகாந்த் கமலஹாசன் விஜயகாந்த் முதலான நடிகர்களும் ராதா அமலா நதியா முதலான நடிகைகளும் வாழ்ந்து வருகிறார்கள்.

இந்திய இராணுவம் வந்தவுடன் இவனது மாமா புளுகம் தாங்காமல் ரோட்டாலே போகிற வருகிற சனங்களுக்கு இளநீர் வெட்டிக்கொடுத்துக் கொண்டாடினார். ‘‘இனித் தமிழீழம்தான்’’ என்று அவர் சந்தோஷப்பட்டார். ஒருநாள் மூக்கு முட்டக் குடித்துவிட்டு ‘‘எங்கள் தந்தையர் நாடென்னும் போதினிலே ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே.. ’’என்று பாடினார். மாமா நிறையக் குடித்தாரென்றால் பாடத் தொடங்கிவிடுவார்.

திலீபன் செத்த அந்த நாட்களில் தனக்குச் சோறுதண்ணி வேண்டாம் என்ற மாமா நிறைவெறியில் ‘‘வேசைமேன் ராஜீவ்காந்தி கழுத்தறுத்துப் போட்டான்’’ என்று ஒருவரைத் திட்டினார். அந்த சமயத்தில்தான் இவனுக்கு இந்தியாவில் எம் ஜி ஆருக்கு மேலே இன்னுமொரு ஜனாதிபதியும் இருக்கிறார் என்பது தெரியவந்தது.

பிறகொருநாள் மாமா பொன்னாலைப் பாலத்தடியில் கள்ளுக் குடித்துவிட்டு சைக்கிளில் உலாஞ்சிய படியே ‘‘தங்கத் தமிழும் தமிழீழ மண்ணும் எங்கள் இருவிழிகள். நாங்கள் விடுதலைப்புலிகள்’’ என்று பாடியபடி வந்தார். மூளாய்ச்சந்தியில் அவரை மறித்த இந்திய ஆமிக்காரனொருவன் மாமாவின் நெற்றியில் துவக்கை வைத்துச் சுட்டான். மாமாவைப் புலியென்று அவர்கள் அறிவித்தார்கள்.

இது நடந்த முன்னூறு நாட்களில் செருப்புத் திருட்டு வழக்கொன்றில் இவன் இந்திய ராணுவத்தால் முதற்தடவையாக கைது செய்யப்பட்டான்.

சோலாப்பூரிச் செருப்புத் திருட்டு வழக்கு

இவன் ஒரு சோடிச் சோலாப்பூரிச் செருப்பினை ஆசையாசையாக ரவுணில் வாங்கி வந்தான். அது தோலினாற் செய்யப்பட்ட ஒரு ப்ரவுண் கலர்ச் செருப்பு. மற்றைய செருப்புக்களை விட அது வித்தியாசமாக அந்தக்கால அரசர்களின் காலணி போல இருந்தது. ஒருநாட்காலை அது காணாமற் போனது. இவனது ஊரில் ஒரு பிரபல சில்லறைத் திருடன் இருந்தான். இப்படியான செருப்புக்கள் சென்ட் போத்தல்கள் சிலசமயங்களில் சின்னப் பிள்ளைகளின் கழுத்திலிருக்கும் செயின்கள் என்ற அளவிற்தான் அவனது திருட்டுக்கள் இருந்தன. அவையும் எப்படியாவது பிடிபட்டுவிடும். அவனது அப்பா கொழும்பில்

இலங்கைப் பொலிஸில் நல்ல பதவியிலிருந்தார். ‘‘பொலிஸ்காரன்ரை மகன் கள்ளன்’’ என்றதொரு புதுமொழி ஊரில் உருவாக அவன் காரணமாயிருந்தான்.

இவனுக்கு தன் செருப்புத் திருட்டுத் தொடர்பாக அவனில் தான் முதலில் சந்தேகம் வந்தது. அடுத்த நாள் இவனும் தேவபாலுவும் அவனை அழைத்துக் கொண்டு சீக்காய் வயல் காணிக்குப் போனார்கள். போகும் போது யானை மார்க் சோடாப் போத்தலொன்றை இவன் கையோடு கொண்டு போனான். அவனைத் தென்னைமரமொன்றின் அருகில் வைத்து இவன் கேட்டான்.

‘‘சொல்லடா, என்ரை சோலாப்பூரி செருப்பை களவெடுத்தது நீதானே..’’

‘‘போடா லூசா.. உன்ரை ஐஞ்சு சதத்துக்கும் பெறுமதியில்லாத செருப்பைக் களவெடுக்கிறதுதான் எனக்குத் தொழிலோ’’ என்று அவன் சொன்னான். வேறும் ஏதோ கதைக்க வெளிக்கிட்டான். இவன் சடார் என்று கையில் இருந்த போத்தலை தென்னைமரத்தில் அடித்து உடைத்து ஓங்கி அவனின் வயிற்றில் செருகுமாப்போல கொண்டு போனான். அவன் கண்களை இறுக்க மூடி ‘‘ ஐயோ நாளைக்குச் செருப்பைக் கொண்டு வந்து வீட்டை வைக்கிறன்.’’ என்று கத்தினான். இவன் அவனது சேர்ட் கொலரைச் சரிசெய்து ‘‘போ’’ என்றான்.

அடுத்தநாள் காலை, கிணற்றடியில் குளித்துக்கொண்டிருந்த இவனை இரண்டு இந்திய இராணுவத்தினர் கொற கொற என இழுத்துவந்து றோட்டில் குந்தி இருக்கச் சொன்னார்கள். பக்கத்தில் ஒரு ஆமிக்காரனை காவலுக்கு நிறுத்தினார்கள். இவன் தலையை உயர்த்தியபோதெல்லாம் அவன் தலையில் அடித்தான்.

அம்மா தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறத் தொடங்கினா. ஒவ்வொரு ஆமிகாரனுக்கும் முன்னால் போய் நின்று ‘‘என்ரை பிள்ளை ஒண்டும் அறியாதவன். அவனை விட்டுடுங்கோ ஐயா’’ என்று கெஞ்சினா. அவவை யாரும் கண்டுகொள்ள வில்லை. அவர்களில் ஒருவன் அவவை ‘‘அங்காலே போ’’ என்று தள்ளி விட்டான்.

வீதியில் நாலைந்து ஜீப்புக்களும் ஒரு உயரமான ட்ரக்கும் நின்றன. அதே ஒழுங்கையில் இருக்கிற பள்ளிக்கூட ஆசிரியர் ஒருவர் ஆமிப் பெரியவனிடம் தன்னை அறிமுகப்படுத்தி இவனுக்காக பரிந்து பேசினார். இவனும்

தேவபாலுவும் புலிகள் என்று தங்களுக்கு நம்பத்தகுந்த ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் அதனால் கைது செய்வதாகவும் அதற்கு ஒத்துழைக்கச் சொல்லியும் அவனால் அவருக்குச் சொல்லப்பட்டது. அதற்கு அவர் இவனைப் பிறந்ததிலிருந்தே தனக்குத் தெரியும் என்றும் இவனது அப்பா செத்துப் போனபிறகு இவனையும் தங்கச்சியையும் அம்மா கஸ்ரப்பட்டு வளர்த்ததாகவும் இவன் புலி ஈழம் என்று போகக்கூடிய ஆளில்லையென்றும் சொன்னார்.

பெரியவன் சற்றுநேரம் அமைதியாயிருந்தான். பிறகு ஆசிரியரைப் பார்த்து நீ புலிக்கு ஆதரவு அளித்தாய் என்று எந்தவித ஆதாராங்களும் இன்னும் கிடைக்கவில்லை என்றும் சிலவேளைகளில் இனி கிடைக்கலாம் என்றும் சொன்னான். ஆசிரியர் தனது மனைவியையும் பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்து கதவைப் பூட்டிக்கொண்டார்.

தேவபாலுவையும் அவனது வீட்டிலிருந்து இழுத்து வந்து இருத்தினார்கள். இவனது கண் பார்வை மட்டத்தில் சப்பாத்துக் கால்கள் மட்டுமே நடந்து திரிவது தெரிந்தது. அதில் ஒரு சோடி கால்கள் மட்டும் ஆமிப்பச்சை ட்ரவுசரில் சப்பாத்து இன்றி இவனுக்கு அருகில் வருவதும் எட்டப் போவதுமாக இருந்தது. இவனுக்குள் என்னவோ பொறிதட்ட சரேலென்று தலையை உயர்த்தினான். பச்சை உடையில் கறுப்புத் துணியால் முகத்தை மறைத்துச் சுற்றி தலைக்குப் பச்சைத் தொப்பி அணிந்திருந்த அந்த மெல்லிய உருவம் கால்களில் இவனது சோலாப்பூரிச் செருப்பைப் போட்டிருந்தது.

இவனையும் தேவபாலுவையும் பின்னால் கைகளைக் கட்டி இவ்விரண்டு ஆமிக்காரர் சேர்ந்து தூக்கி ட்ரக்கில் எறிந்தார்கள். இவன் ட்ரக்கில் விழுந்தபோது நாரியில் நறுக் என்று ஏதோ கேட்டதாக உணர்ந்தான். ட்ரக் புறப்பட்ட போது அம்மா தலைவிரி கோலமாக பின்னாலேயே ஓடிவந்தா. வளைவில் திரும்பிய ட்ரக் பிறகு வேகமெடுத்தது. பிறகு அவவைக் காணவில்லை.

அன்றைக்கு விசாரணை தொடங்கியபோது சோலாப்பூரிச் செருப்புத் திருடன் ஆமிப் பெரியவனுக்குப் பக்கத்தில் சிகரெட் புகைத்தபடி நின்றான். விசாரணையின் போது இவனையும் தேவபாலுவையும் முழங்கால்களில் நிறுத்தியிருந்தார்கள். கைக் கட்டுக்கள் அவிழ்க்கப்படவில்லை. பெரியவன்

ஹிந்தி என்கிற ஒரு மொழியில் கதைத்தான். அதை இன்னொருவன் தமிழில் மொழிபெயர்த்தான். விசாரணை இப்படி இருந்தது.

"நீங்கள் இரண்டு பேரும் எங்களது ஆளின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து சுட்டு விடுவதாக மிரட்டினீர்களா இல்லையா.." இந்தக் கேள்விக்கு பதிலளிக்க முன்னர் இந்தக் கள்ளன் எப்பொழுது இந்திய இராணுவத்தின் ஆள் ஆகினான் என்பதுதான் இவனின் மூளைக்குள் ஓடியது.

"இல்லை சேர், நாங்கள் மிரட்டியது உண்மை. ஆனால் துப்பாக்கி எல்லாம் வைத்திருக்க வில்லை."

"நீங்கள் கிரேனைட்டை இடுப்பில் வைத்திருந்தீர்கள் என்று நமது ஆள் சொல்கிறார்"

"இல்லை சேர், நம்மிடம் கிரேனைட்டோ வேறு எந்த வெடிபொருட்களோ இல்லை. அதை வைத்திருப்பவர்களுடனும் ஒரு தொடர்பும் எமக்குக் கிடையாது."

"நமது ஆளை ஏன் கொலை செய்வதாக மிரட்டினீர்கள். அவர் நமக்குப் பலவழிகளிலும் உதவுகிறார் என்பதனாலேயா"

"இல்லை சேர், அவர் உங்களது ஆள் என்று எங்களுக்கு இன்று இந்தக்கணம் வரை தெரியாது. அப்படியிருக்க அதற்காக நாங்கள் மிரட்டியிருக்க முடியாதல்லவா"

"ஆனால் நீங்கள் கொலை செய்து விடுவதாக மிரட்டியிருக்கிறீர்கள். அது ஏன்"

"சேர், இவர் எனது புதிய செருப்புக்களைத் மூன்று நாட்களுக்கு முன்னர் திருடிவிட்டார். அதைத்தரும்படி அவரை நான் மிரட்டினேன். அவரும் தருவதாக ஒப்புக்கொண்டார். இதோ இப்போதும் என்னிடமிருந்து திருடிய செருப்புக்களையே அணிந்து கொண்டுள்ளார்."

பெரியவன் செருப்புத்திருடியவனைப் பார்த்து "இவர்கள் சொல்வது உண்மையா" என்று கேட்டான். அவன் இல்லை இல்லையென்று தலையாட்டி ஏதோ சொல்லத் தொடங்கினான். அந்தச் செருப்புக்களை தான் சங்கானையில்

வாங்கியதாகச் சொன்னான். மேலும் இவர்கள் புலிகளில் பயிற்சி எடுத்தவர்கள் என்றும் சொன்னான். பிறகொரு கட்டத்தில் புலிகளது செருப்புக்களைத் திருடுவது தவறில்லை என்றான். விசாரணைக்குச் சம்மந்தமே இல்லாமல் ‘‘நான் எப்போதும் உங்களுக்காக விசுவாசமாக இருப்பேன்’’ என்றும் சொன்னான். அவனது வார்த்தைகள் தடுமாறின.

இந்திய இராணுவத்திற்கு தங்களது ஆள் மீதே டவுட் வந்திருக்க வேண்டும். ‘‘ஸ்டாப்’’ என்று பெரியவன் கத்தினான். ‘‘புல் ஷிற்’’ என்றும் சொன்னான். ஒரு பெரிய சுருட்டை வாயில் வைத்து பற்றத் தொடங்கினான்.

அடுத்த நாள் காலை இவனையும் தேவபாலுவையும் வீட்டுக்குப் போகச் சொன்னார்கள். இவன் காம்பில் நின்ற அத்தனை பேருக்கும் நன்றி சொன்னான். ஆமிப் பெரியவனின் அறைக்குத் தேடிப்போய் அவனுக்கும் ஒரு நன்றி சொன்னான். அவன் ‘‘ம்..ம்’’ என்று ஏதோ சொல்லி போகலாம் என்று கையைக் காட்டினான். பிறகு இவன் புதியதாக ஒரு சோடி சோலாப்பூரிச் செருப்பு வாங்கிக்கொண்டான். மேசன் வேலைக்கு எப்போதாவது ஆட்கள் தேவைப்பட்டால், சீனியர் கூப்பிட்டார். போய்ச் செய்தான். மற்றைய நேரங்களில் நண்பர்களோடு காணிகளில் முயல் பிடித்தும் கள்ளக் கோழி அடித்து இறைச்சி சமைத்தும் பாணோடு தொட்டுச் சாப்பிட்டான். பறாளாய்க்குப் போகிறவழியில், மேல்வீட்டில் அடிக்கடி கேற்றில் நிற்கும் அழகான பெண்ணொருத்தியை காதலிக்கலாமா என்று யோசித்தான்.

மூன்று மாதங்களுக்குப் பிறகு இந்திய இராணுவம் இவனை இரண்டாவது தடவையாகப் பிடித்துக் கட்டியிழுத்துக் கொண்டு போவதற்கு முதல்நாள் பின்னேரம், கேணியடிச் சந்தியில் வைத்து சோலாப்பூரித் திருடனை இயக்கம் மண்டையில் போட்டது. போடுவதற்கு முன்பு அவனது கையில் திணிக்கப்பட்ட நோட்டீஸை உரத்து வாசிக்குமாறு அவன் பணிக்கப்பட்டான். ‘‘இந்திய இராணுவத்தோடும் தேசவிரோதக் குழுக்களோடும் நெருக்கமாக இணைந்து தேசத்துரோகக் காரியங்களிலும் காட்டிக்கொடுப்புக்களிலும் ஈடுபட்டமைக்காக இந்த மரணதண்டனை எனக்கு வழங்கப்படுகிறது’’ அவன் முடிக்கவும் வெடிக்கவும் சரியாயிருந்தது.

# 5

நிலாமதிக்கு குண்டுப்பாப்பா என்றொரு பட்டப்பெயரை ஊர்ப் பெடியன்களும் சில பெருசுகளும் வைத்திருந்தார்கள் என்பதை அவள் அறியாதவள் அல்ல. அவள் சாமத்தியப்பட்ட பிறகு அதுவொரு காரணப் பெயராக உருவானது. நேருக்கு நின்று பேசுகிற எவரது கண்களையும் சட்டென்று கீழிறங்கச் செய்யும் பெருத்த மார்புகள் அவளுக்கிருந்தன. வயதிற்கு வந்த கொஞ்ச நாட்களிலேயே அவள் அவற்றின் வேகத்தை உணர்ந்து கொண்டாள். ஏதேனும் நோயாக அது இருக்கலாம் என்ற பீதி அவளுக்கிருந்தது. அம்மா அப்படியெதுவும் இல்லையென்றும் அது பரம்பரை என்றும் சொன்னாள். அப்பாவின் வம்சத்தில் அப்படித்தானென்று அவள் அத்தையை உதாரணம் காட்டினாள். நடையின் வேகத்தைக் கொஞ்சம் அதிகரித்தாலே விம்மித் தணியும் மார்பின் அசைவுகள் நிலாமதிக்கு எரிச்சலை ஊட்டின. பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டிகளில் இருந்து அவள் ஒதுங்கிக் கொண்ட போது பி ரி சேர் ‘‘ஏன் என்ன நடந்தது’’ என்று கேட்டார். ‘‘மூச்சிளைக்கிறது.. ஆஸ்த்மாக் குணம், முடியாமலிருக்கிறது’’ என்று நிலாமதி சொன்னாள்.

உடுப்புக் கடைகளில் சைஸ் சொல்கிற நேரங்களில் கடைப் பெண்களும் கொடுப்புக்குள் சிரித்தார்கள். வீதிகளில் எதிர்ப்படுகிற விடலை இளைஞர்கள் ‘‘கோழிக்கு என்ன தீவனம் போட்டு வளக்கிறியள்’’ என்று கேட்டுவிட்டு ஓடினார்கள். ஒருநாள் மருதடிப் பிள்ளையார் கோயில் திருவிழா நெரிசலில் தலை நரைத்த மனிதரின் கையொன்று அவள் மார்பை அழுத்திக் கசக்கி விலகியது. அவளின் அப்பாவையொத்த வயது அவருக்கு இருக்கலாம். கோபமும் அழுகையும் வெடித்துக் கிளம்பின. இத் தசைக் கோளங்களை வெட்டியெறிந்தால் என்ன என்று நினைக்கிற அளவுக்கு அவள் வெறுப்புற்றிருந்தாள்.

நிலாமதி அரும்பொட்டில் சாதாரணதரப் பரீட்சையைப் பாஸ் பண்ணியிருந்தாள். ஊருக்கு வெளியேயான பள்ளிக்கூடத்துக்குப் போய்வரத் தொடங்கிய போது இந்திய இராணுவம் ஊருக்குள் புகுந்திருந்தது. அவர்களது முகாம்கள் வழக்கம்பரையிலும் சித்தன்கேணியிலும் மாவடியிலும் சுழிபுரத்திலுமாக

ஊரைச் சுற்றியிருந்தன. ஒவ்வொரு நாளும் வீதிச் சோதனைகளில் அவள் கால்கடுக்க நிற்க வேண்டியிருந்தது. இராணுவத்தினரின் கண்கள் எங்கு நிலைகுத்தியிருந்தன என்பதை அவள் அறிந்திருந்தாள். மண்மூட்டைக் கூடுகளுக்குள்ளிருந்த தலையாட்டிகளும் மார்புகளில் வெறித்தபடியே இல்லையென்று தலையாட்டினர். அவள் அவர்களுக்கு முன் மூச்சை அடக்கி நின்றாள்.

ஒருநாள் பள்ளிக்கூடத்தால் திரும்பியபோது அவளின் புத்தகப்பையில் புத்தகங்களுக்கிடையில் திலீபனின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நோட்டீசுகள் இருந்தன. அம்மன் கோயிற் திருப்பத்தில் அவளை மறித்த வெற்றி அந்த நோட்டீசுக் கத்தையை அவளிடம் கொடுத்தான். வெற்றியோடு இன்னும் மூன்றுபேர் மடித்துக் கட்டிய சாரங்களோடு வியர்த்துப் போய் நின்றார்கள். தூரத்தில் நாய்கள் குரைத்தன. நிலாமதி மூச்சை அடக்கி நின்றாள். வெற்றியை அவள் ஏற்கனவே அறிந்திருந்தாள். அந்த ஊரில் பிரபலமான இயக்கப் பெடியன் அவன். நாய்கள் குரைக்கும் நேரங்களில் வெற்றி வியர்க்க விறுவிறுக்க வீதிகளில் ஓடுவதும், சில சமயங்களில் சாரத்தை சுற்றி இடுப்பில் கட்டிவிட்டு வெறும் ஜட்டியோடு மதில்களையும் வேலிகளையும் பாய்ந்து தப்புவதும் இயல்பான சம்பவங்களாக அங்கு மாறியிருந்தன.

‘‘ஒரு உதவி செய்யவேணும்’’ என்ற வெற்றி தனது தோளில் மாட்டியிருந்த பையிலிருந்து நோட்டீஸ் கத்தையை எடுத்து நிலாமதியின் சைக்கிள் கரியரிலிருந்த புத்தகப் பைக்குள் செருகினான். ‘‘இதை ஒருக்கா வைச்சிருந்து பிறகு தரவேணும்..’’

நிலாமதி எதுவும் பேசாதிருந்தாள். வெற்றி பேசிக்கொண்டிருந்த போது மூச்சை அடக்கி நிற்கத் தேவையில்லை என்ற நினைப்பே அவளுக்குள் முதலாவதாக உருவாகியது.

‘‘பிரச்சனையொன்றும் இல்லைத்தானே’’ என்று வெற்றி கேட்டான். இல்லையென்று தலையாட்டினாள். ‘‘சரி பிறகு வந்து வாங்கிறம்.. ’’ வெற்றியும்

மற்றவர்களும் தெருவின் அருகிலிருந்த பனங்கூடலுக்குள் இறங்கி ஓடி மறைந்தார்கள்.

வீட்டிற்குள் நுழைந்ததிலிருந்து நிலாமதி தனக்குள் பரபரப்பை உணர்ந்தாள். அம்மா வீட்டிலிருந்தாள். அவளுக்குத் தெரியவேண்டாம் என்று நினைத்தாள். அறைக்குள் சென்று நோட்டீசுகளை முழுவதுமாக வெளியே எடுத்து ஒன்றாகச் சேர்த்து மேசையில் தட்டி சீரான கட்டு ஆக்கினாள். நோட்டீசுகளில் பெரிய கண்ணாடியோடு கைகளில் வோக்கி டோக்கியொன்றைச் சுமந்து தலையை திருப்பியபடிக்கு சிரித்தபடியிருந்த திலீபனின் கறுப்பு வெள்ளைப்படமும் ''ஐயா தீலீபா எங்கைய்யா போகிறாய்'' என்ற கவிதையும் இருந்தன.

நோட்டீசுகளை எங்கு மறைத்து வைப்பதென்று அவளுக்குத் தோன்றவில்லை. கோழிக்கூடு, குப்பை மேடு, ஓட்டுக் கூரை முகடு என ஒவ்வொன்றாகத் தோன்றுவதும் ச்சீ.. சரிவராது என்ற நினைப்பும் வரிசையாகத் தோன்றியபடியிருந்தன. பின்வளவில் பெரிய குப்பை மேடொன்றிருந்தது. பெட்டி வடிவில் வேலியடைத்து அதற்குள் சருகுகள், குப்பைகள், ஆட்டுப் புழுக்கைகள் கொட்டப்பட்டிருந்தன. வயல் செய்கிறவர்களுக்கு பசளைக்கென அவை தேவைப்பட்டிருந்தன. ஒரு வண்டில் லோட் இவ்வளவு காசு என்றொரு விலையை அம்மா நிர்ணயம் செய்திருந்தாள்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் அது நடந்தது. வெளியே நாய்கள் குரைத்தபடியிருந்தன. நிலாமதி அம்மாவின் தொள தொள சட்டையொன்றை அவசர அவசரமாக மாற்றியணிந்தாள். நாய்கள் குரைக்கும் போதெல்லாம் இப்படியாக வேண்டியிருக்கிறது. கொஞ்ச நேரத்தில் தெருவில் சப்பாத்து அணிந்த கால்கள் அலைவதை பனையோலை வேலியின் கருக்குக்களிடையே அவள் கண்டாள். படலை சாத்தப்பட்டிருந்தது. அதிலிருந்து சற்றேறக்குறைய நான்கு அல்லது ஐந்து அடிகள் தள்ளி வேலியின் இரும்புக் கம்பிகளை குறட்டினால் அறுத்து ஓலைகளை முன் தள்ளி விழுத்தியவாறு சர சர என்று இராணுவத்தினர் உள் நுழைந்தார்கள். இப்படியாகத்தான் ஒவ்வொரு தடவையும் செக்கிங் வரும்போது புதுப் புதுப் பாதைகளை அவர்கள் உருவாக்குகிறார்கள். வழியென்ற ஒன்றிருக்க இப்படி வேலிகளை அறுத்துக் கொண்டு எதற்கு வருகிறார்கள் என்பதில் முதலில் நிலாமதிக்கும் குழப்பம்

இருந்தது. பின் நாட்களில் அவளது வீட்டிற்கு மேலும் மேலும் புதிய வழிகளை இந்திய இராணுவம் வேலிகளை வெட்டி உருவாக்கிய போது, வழிகளில் கண்ணிவெடிகளைப் புதைத்துவிட்டுக் காத்திருக்கின்ற புலிகளுக்கு உச்சுக் காட்டுகின்ற வல்லரசு மூளை அதுவென்று அவளுக்குப் பிடிபட்டது.

அப்படி வந்தவர்கள் முதலில் வீடு முழுவதையும் சல்லடைபோட்டார்கள். குசினிக்குள் எல்லாப் பாத்திரங்களையும் கவிழ்த்து வைத்தார்கள். கயிறுகளில் தொங்கிய, சுருட்டி வைத்த பாய்களை கீழே இறக்கி விரித்து வைத்தார்கள். சாமியறையில் சாமிப்படங்களின் பின்னால் ஏதேனும் கிடக்கலாம் என்ற அச்சத்தில் படங்களை கீழே வளர்த்தி வைத்தார்கள். (சாமியறைக்குள் நுழைவதற்கு முதல் சப்பாத்துக்களைக் கழட்டி வெளியில் வைத்தார்கள்) புகைக்கூடு, கக்கூசு என ஒன்றும் விடாமல் கிளறியவர்கள் குப்பை மேட்டுக்கு வந்தார்கள். அது ஒரு குன்றைப் போல உயர்ந்து நின்றது. அவர்களில் ஒருவன் பக்கத்திலேயே கிடந்த குப்பை வாரியை எடுத்து உள்ளே தள்ளி அப்படியும் இப்படியுமாகத் துலாவினான். ஆட்டுப் புழுக்கைகளை விரல்கள் தொடும் அளவிற்கு குப்பை வாரி உள்ளே போனது. அவன் முகத்தைச் சுழித்துக் கொண்டான். குப்பைவாரியை வெளியே இழுத்தெடுத்தான். அம்மாவை அருகாக வரும்படி அழைத்தான்.

‘‘என்ன இது.. ’’

அம்மா மிகப் பவ்வியமாக ‘‘குப்பை ஐயா’’ என்றாள். அவன் முகத்தினில் சினத்தை உண்டாக்கினான்.

‘‘தெரியும்.. ஏன் இவ்வளவு.. ’’

‘‘பசளைக்கு விற்கிறனாங்கள். தோட்டம் செய்யிறவை வாங்குவினம்.. வருசத்துக்கு ஐஞ்சாறு லோட் குடுப்பம்.’’

அவன் திடீரென்று ‘‘மண்ணெண்ணெய் இருக்கிறதா’’ என்று கேட்டான். அம்மா தலையாட்டினாள். போனதடவை நிவாரணத்திற்குத் தந்ததில் பாவித்தது போக மிகுதி கலனோடு இருந்தது. கொண்டு வந்து கொடுத்தபோது ‘‘நீங்கள் தந்த நிவாரணம் தான் ஐயா’’ என்று அம்மா சொல்லிப் பார்த்தாள். அவன் கலனோடு

வாங்கிக் கொண்டான். இதற்கிடையில் மற்றைய சிப்பாய்கள் குப்பையைச் சுற்றி அடைத்திருந்த வேலியை வெட்டியெறிந்து ஓலைகளைக் குப்பையின் மீது போட்டார்கள். மண்ணெண்ணெய்யை ஓலையின் மீதும் சருகுக் குப்பையின் மீதும் தெளித்து ஊற்றினார்கள். ஒருவன் தனது லைட்டரில் நெருப்பு மூட்டி பற்ற வைத்தபோது ஓலை குப் என்று பற்றி, காய்ந்த சருகுகளில் மள மளவென்று படர்ந்து விளாசி எரியத் தொடங்கியது. கொஞ்ச நேரத்தில் சொக்கப்பானை எரிவதைப் போல பின்வளவில் நெருப்பு மேல் எழுந்தது. அண்டை வீடுகளில் இருந்து என்னவோ ஏதோ என்று பதறி வந்தவர்கள் இராணுவப் பச்சைகளைக் கண்டபிறகு பின்வாங்கியிருந்தார்கள். நெருப்பு வேலியில் பற்றிவிடக்கூடும் என்று அம்மா அந்தரமாயிருந்தாள். குப்பைக்குள் புலிகள் வெடிகுண்டுகளை மறைத்து வைத்திருந்தால், அவை வெடித்துச் சிதறும் என்பதால் இராணுவத்தினர் அப்பால் தள்ளி நகர்ந்து நிலங்களில் படுத்து நிலையெடுத்திருந்தனர். நெருப்புத் தணிந்து கொண்டு வந்தது. கடைசி வரைக்கும், சூடேறிய ஆட்டுப் புழுக்கைகள்தான் டப்பு டப்பு என்று வெடித்தபடியிருந்தன.

மீளவும் அம்மா கூடு அடைத்து குப்பைகளைச் சேர்க்கத்தொடங்கியிருந்தாள். நிலாமதி அதனையும் விடவும் பொருத்தமானதொரு இடத்தை தேடினாள். கிணற்றடிக்குப் பக்கத்தில் மழைக்கால இரவொன்றில் பாறிண்டு விழுந்த புளியமரமொன்றிருந்தது. இன்னமும் மண்ணுக்குள் வேர்விட்டிருந்ததால் அது பட்டுப் போகாமல் பூத்தும் காய்த்தும் கொண்டிருந்தது. நின்று கொண்டே புளியம்பழங்களை பறிக்க முடிவது புதிய அனுபவமாக இருந்தது. நிலத்தில் சரிந்து படர்ந்திருந்த அதன் கிளைகளை விலத்தி விலத்தி உட்சென்று பழங்களைப் பறித்தார்கள். அப்பொழுது வெளித் தெரியாத அளவிற்கு மறைந்து போக முடிந்தது.
திலீபனின் அஞ்சலி நோட்டீசுகளை புளியமரத்தின் இலைகளும் கிளைகளும் மூடிய நிலத்தினுள் மறைத்து வைக்கலாம் என்று நிலாமதி முடிவு செய்தாள். பொலித்தீன் பையொன்றில் நோட்டீசுகளைப் போட்டாள். அதன் வாயில் வாள் பிளேற்றொன்றை வைத்து விளக்கு நெருப்பில் சூடுகாட்டி இறுக்கினாள். மண்வெட்டியோடு புளியமரத்தின் இலைகளை விலத்தி உட்சென்று கொஞ்ச நிலத்தை அகழ்ந்தெடுத்து நோட்டீஸ் பையை வைத்து மூடினாள்.

புளியஞ்சருகுகளை மேலே அள்ளிப் போட்டாள். அந்த இடத்தின் மேல நெஞ்சளவில் தாழ்ந்திருந்த கிளையொன்றில் மண்வெட்டியால் அடையாளத்திற்காய் ஒரு வெட்டு வெட்டினாள். சற்றுத் தள்ளி நின்று பார்த்தபோது சருகுகளும் கஞ்சலும் ஈரமும் இருளுமாய் நிலம் பரந்திருந்தது. அது திருப்தியாயிருந்தது.

திலீபனின் நினைவு நாளுக்கு இன்னும் ஐந்து நாட்கள் இருந்த நிலையில் ஒருநாள் வெற்றி வீட்டிற்கு வந்தான். அப்பொழுது நிலாமதியும் அம்மாவும் வீட்டிலிருந்தார்கள். வெற்றி பச்சையும் சிவப்புமாய் கரை வைத்த வேட்டி கட்டி பறாளாய் முருகன் ஆலய தொண்டர் சபை என எழுதியிருந்த மஞ்சள் நிறச் சால்வையொன்றை உடம்பினில் போர்த்திருந்தான். நெற்றியில் திருநீற்றையும் நெஞ்சில் சந்தனத்தையும் அப்பியிருந்தான்.

எங்கேனும் வீதிகளில் மறித்து வெற்றி தன்னிடம் நோட்டீசுகளைக் கேட்கலாம் என நிலாமதி நினைத்திருந்தாள். அவன் வீட்டிற்கு வருவான் என்பதை யோசித்திருக்கவில்லை. எழுந்து படலையடிக்குச் சென்று ‘‘வாங்கோ..’’ என்றாள். பிறகு வந்து அம்மாவின் காதருகே குனிந்து ‘‘அவர் இயக்கம்’’ என்றாள். அவளின் பின்னாலேயே வெற்றி ‘‘எப்பிடியம்மா சுகமாய் இருக்கிறியளோ.." என்றபடி வந்து விறாந்தைக் குந்தில் அமர்ந்து கொண்டான். ‘‘பறாளாய் தேருக்கு எக்கச்சக்கச் சனம்.. எள் விழ இடமில்லை’’ என்றான். அம்மா இன்னும் இயல்பிற்கு வந்திருக்கவில்லை. வெற்றியைப் பார்த்தபடி இருந்தாள். ஒரு இயக்கப் பெடியனை அவள் இந்தக் கோலத்தில் எதிர்பார்த்திருக்கவில்லை. குண்டுகளையும் துப்பாக்கிகளையும் உடம்பு முழுவதும் சுற்றியவர்களாக அவர்களை அவள் கற்பனை செய்திருந்தாள். ‘‘நான் தந்ததுகளை எடுக்கலாமோ’’ என்று வெற்றி கேட்டபோதுதான் ‘‘என்ன’’ என்பதைப் போல அம்மா நிலாமதியை நோக்கினாள்.

"ஒண்டுமில்லையம்மா.. கொஞ்ச நோட்டீசுகள்.. ’’ என்று நிலாமதி சொன்னாள். பிறகு வெற்றி அழைத்துக்கொண்டு புளியமரத்தடிக்குப் போனாள். ‘‘இதில நில்லுங்கோ’’ என்று விட்டு உள்ளே நுழைந்தபிறகு வெற்றியும் உள்ளே வந்தான். மண்வெட்டியால் நிலத்தைக் கொத்தியபோது மூச்சிரைத்தது. மார்புகள் ஏறி இறங்கின. அதைக் குறித்து அலட்டிக் கொள்ளத்

தேவையில்லை என்று தோன்றியபோது உதட்டோரம் சிரிப்பு படர்ந்தது. பொலீத்தீன் பையை எடுத்து படிந்திருந்த ஈரலிப்பு மண்ணைத் துடைத்துவிட்டு வெற்றியிடம் கொடுத்தாள். அவன் புளியமரத்தடி நிலத்தை நோட்டம் விட்டான். பிறகு ‘‘இதுவொரு சோக்கான இடம்.’’ என்றான்.

வெளியே வந்தபோது அம்மா நின்றாள். அவள் சற்றுப் பயந்திருப்பது போல இருந்தது. வெற்றி அம்மாவிற்கு அருகில் போனான். ‘‘உங்கடை பயங்கள் எனக்கு விளங்குது.. யோசிக்காதையுங்கோ, மிஞ்சி மிஞ்சிப் போனால் இங்காலைப் பக்கம் என்னத்துக்கு வருவம்.. ஒரு நேரச் சோத்துக்கு வருவம்.. தரமாட்டியளோ’’

அம்மா சட்டென்று ஏதோ நினைவு வந்தவளாக ‘‘தம்பி சாப்பிட்டுட்டீரோ..’’ என்றாள்.

‘‘இன்றைக்கு பறாளாய் முருகன் அருளால்.. அன்னதானத்தில சாப்பிட்டுட்டன்’’ என்று வெற்றி சிரித்தான். வேறு யாரும் சிரிக்கவில்லை. வெற்றி கிணற்றடியில் கால்களை அலம்பினான். வாளித் தணீணீரை ஒரு கையால் சரித்து தலையைக் குனிந்து மறு கையால் தண்ணீர் குடிக்க முயற்சித்தான். தண்ணீர் முழுவதும் வெளியில் சிந்தியது. நிலாமதி வாளியை வாங்கி ஊற்றினாள். அவன் இரண்டு கைகளையும் ஏந்தி மள மளவென்று குடித்தான். கையிடுக்குகளால் வழிந்தோடிய தண்ணீர் கழுத்தினை நனைத்து மார்பில் இறங்கி சந்தனத்தைச் சேறாக்கியது. சால்வையால் அழுத்தித் துடைத்தான். ‘‘சரி நான் வரப்போறன், உங்கடை உதவிக்கு நன்றி’’ என்று வெளியேறினான். அவன் படலையடிக்குப் போனபோது அம்மா உரத்துச் சொன்னாள். ‘‘பட்டினி கிடக்கவேண்டாம். எப்பவெண்டாலும் வந்து சாப்பிடுங்கோ தம்பிமாரே’’

அதற்குப் பிறகு வெற்றி அடிக்கடி வந்து போனான். அவ்வப்போது அவனோடு வேறும் நண்பர்கள் வந்தார்கள். ஒரு பின்னேரக் கருக்கலில் அப்படி நண்பர்களோடு வந்த வெற்றி, ‘‘உங்களுக்குத் தெரியாமல் ஒரு காரியம் செய்து போட்டம். மன்னிச்சுக் கொள்ள வேணும்’’ என்றான். நிலாமதி ‘‘என்ன’’ என்றாள். அவர்கள் மண்வெட்டியோடு புளியமரத்தடிக்குப் போனார்கள். திரும்பி வந்தபோது உரப் பையில் சுற்றிய துப்பாக்கிகளையும் கிரேனைட்

குண்டுகளையும் கொண்டுவந்தார்கள். அன்றைக்குப் பிறகு அந்த வீட்டில் ஆயுதங்கள் வந்துபோகத் தொடங்கின.

வெற்றியிடம், இரு விளிம்புகளும் கூரான பளபளக்கிற கத்தியொன்றிருந்தது. அதற்கென வடிவமைக்கப்பட்ட உறையொன்றினுள் அது செருகப்பட்டிருந்தது. தனித்திருக்கும் பொழுதுகளில் உறையினின்று அதனை வெளியில் எடுத்து பெருவிரலால் அதன் கூர்மையைத் தடவிப்பார்த்து மீண்டும் உள்ளே செருகிக் கொள்வான் அவன். அதைப்போன்ற கூரிய கத்திகள் கூர்க்கா ஆமிக்காரர்களிடமும் இருப்பதாக நிலாமதி அறிந்திருந்தாள். அவர்கள் கத்தியை வெளியே எடுத்தால் இரத்தம் பார்க்காமல் உள்ளே வைக்கமாட்டார்களாம் என்றும் கேள்விப்பட்டிருந்தாள்.

சந்தியில் இரண்டு துப்பாக்கிச் சத்தங்கள் அடுத்தடுத்துக் கேட்ட அன்றைய மதியத்தில் வெற்றி நிலாமதி வீட்டுக்கு வந்திருந்தான். சைக்கிள் ஹேண்டிலில் தொங்கிய சொப்பிங் பையில் பனையோலையில் மடித்துப் பொதி செய்யப்பட்டிருந்த ஆட்டு இறைச்சி இருந்தது. கேரியரில் துப்பாக்கியை உரப் பையில் வைத்து மடித்துச் சுற்றியிருந்தான். அதன் மேலே பெரிய நீர்மட்டமும், சீவிலிக் கூடும் இன்னும் இரண்டொரு தச்சுவேலைச் சாமான்களும் இருந்தன. வாய் நிறைய வெற்றிலை போட்டிருந்தான். கதைக்கும் போது வெற்றிலைக் குழையை ஒரு கன்னத்தில் ஒதுக்கியிருந்தான்.

‘‘இதில ஆட்டிறைச்சி இருக்கு, உங்கடை கைப்பக்குவத்தில மணம் குணத்தோடை ஒருக்கா சமைச்சுத்தாங்கோ..’’ என்று நிலாமதியின் அம்மாவிடம் சொன்னான். ‘‘உங்களுக்குப் பிரச்சனை இல்லாட்டி சமைச்சுத் தர ஏலுமோ’’ என்று கேட்கிற பழக்கத்தை இப்பொழுது அவன் நிறுத்தியிருந்தான். அம்மா சமைக்கும் வரைக்கும் அவன் காத்திருந்தான். ‘‘எப்பிடி சுகமாயிருக்கிறியளோ.." என்றொரு கேள்வியோடு அம்மா சமையலில் மூழ்கினாள். நாட்டு நடப்புக்களைக் குறித்து அவனிடம் ஏதும் கேட்பதற்கு அவளுக்குத் தயக்கமாயிருந்தது.

முன்பொரு தடவை, ‘‘இதுக்கெல்லாம் எப்ப முடிவு வரும்’’ என்று அவள் எதார்த்தமாய்க் கேட்டபோது துப்பாக்கியைத் துடைத்தபடியிருந்த வெற்றி

தலையை நிமிர்த்தி ‘‘ஏன் நாங்கள் எப்ப வராமல் விடுவம் என்று பாக்கிறியளோ’’ என்று கேட்டிருந்தான். பிறகு ‘‘நாங்களே முடிஞ்சு போனாலும் இதுகளுக்கைதான் சுத்திக் கொண்டு திரிவம் அம்மா’’ என்றான். அவனது அம்மா என்ற வார்த்தை வாஞ்சையோடு அழகாயிருக்கும்.

வெற்றி இறைச்சிக்கறியை வட்டமான சில்வர் சாப்பாட்டுப்பெட்டியில் கொண்டு வெளியேறியபோது நிலாமதி பள்ளிக்கூடம் முடிந்து வீட்டிற்குள் நுழைந்தாள். வெற்றியைக் கண்டபோது இதுநாளும் அறியாத உணர்வொன்று உச்சந்தலையிலிருந்து உள்ளோடிக் குளிர்வித்தது. வாயில் இயல்பாகச் சிரிப்பு மலர்ந்தது. கொஞ்ச நாட்களாக இப்படித் தோன்றுகிறது. படலையடியில் வைத்து ‘‘றோட்டில வானரங்கள் ஏதாவது நிக்குதோ’’ என்று வெற்றி கேட்டான். ஒருநாள் பேச்சினிடையே அனுமன்தான் இலங்கையில் நுழைந்த முதலாவது இந்திய ஆக்கிரமிப்பாளன் என்று அவன் சொல்லியிருந்தான். நிலாமதி இல்லையென்று தலையை ஆட்டினாள். அப்பொழுது இரட்டைப் பின்னல்கள் தோள்களின் முன்னே விழுந்து பின் போயின. அவன் வேறேதும் கேட்கமாட்டானா என்று தோன்றியது. பிறகு அவளாகவே ‘‘போனமுறை கொண்டு போன சாப்பாட்டுப் பெட்டியும் கொண்டுவந்து தரேல்லை’’ என்று பேச்சை நீட்டினாள்.

‘‘அதை நீங்கள் வழக்கம்பரை ஆமிக்காம்பிலதான் போய்க் கேக்கவேணும். அவங்கள்தான் நாங்கள் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது ரவுண்ட்அப் பண்ணினவங்கள்.." என்றவன் சற்று அமைதியாயிருந்தான். பிறகு ‘‘எங்களில் ஒருவன் செத்தும் போனான்’’ என்றுவிட்டு சைக்கிளை மிதித்து வளைவுகளில் மறைந்தான். நிலாமதி தனக்குள் பதற்றத்தை உணர்ந்தாள்.

அன்றைக்குப் பின்னேரம் சந்தியில் நந்தபாலு என்கிற இளைஞனின் கைகளில் நான் துரோகி என்றெழுதப்பட்ட கடிதமொன்றை சத்தமாகப் படிக்கக் கொடுத்த வெற்றி அவனின் தலையில் துப்பாக்கியை வைத்துச் சுட்டான் என்ற செய்தி பரவிய போது நிலாமதி விம்மி விம்மி அழத்தொடங்கினாள். அன்றைக்கு இரவு முழுவதும் அவள் அழுதாள். அந்த நாளுக்குப் பிறகு வெற்றி காணாமற் போனான். நெடுங்காலத்தின் பின்னர் ஒரு காலையில் அவன் திரும்பி

வந்தபோது நிறையப் பசியோடும் களைத்தும் இருந்தான். முகம் வாடியிருந்தது. அவனோடு இளைஞர்களும் வந்திருந்தனர்.

அம்மா வீட்டிலிருக்கவில்லை. நிலாமதி இறுகியிருந்த முகத்தோடு அவர்களை வரச்சொன்னாள். துப்பாக்கிகள் சுவரோடு சாய்த்து வைக்கப்பட்டன. கிரேனைட் குண்டுகள் செருகப்பட்டிருந்த ஹோல்சர்களைக் கழற்றி அருகில் வைத்தார்கள். வெற்றி ‘‘என்ன சாப்பாடு இருந்தாலும் கொண்டுவாங்கோ, பசியிலை தலை சுத்துது’’ என்றான். நேற்றைய இரவு தண்ணீர் விட்டு வைத்த பழஞ்சோறு குசினிக்குள் மண்பானையொன்றில் குளிர்ந்தபடிக்கு இருந்தது. அடுப்பில் விறகுத் தணலை மூட்டி வெட்டிய கருவாட்டுத் துண்டங்களை அதற்குள் வைத்தாள். கருவாடு சுடுகிற மணம் வீட்டை நிறைத்தது. வெளியே வெற்றி ‘‘எடே கருவாடடா’’ என்று என்று நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தது கேட்டது.

பானைக்குள் சோற்றை வழித்தெடுத்து சருவச் சட்டியொன்றில் நிறைத்தாள். ஒன்றிரண்டு வெங்காயத்தை உரித்தபோது கண்கள் எரிந்தன. புறங்கையால் துடைத்த போது இன்னமும் எரிந்தன. கருவாட்டுத் துண்டுகளின் மேற்புறம் ஓரளவுக்குக் கருகிவந்தபோது அவற்றைத் தட்டி எடுத்தாள். கருவாட்டையும் வெங்காயத்தையும் சின்னக் கிண்ணத்தில் எடுத்து பழஞ்சோற்றுச் சட்டியுடன் கொண்டுபோய் வெற்றியின் அருகில் வைத்தாள். பிறகு தூணைச் சாய்ந்து கொண்டு நின்றாள்.

‘‘இவ்வளவு நாளும் எங்கை போனதெண்டு கேட்கமாட்டியளோ’’ என்றான் வெற்றி. நிலாமதி வறண்ட புன்னகையொன்றைப் படரவிட்டாள். ‘‘உங்களுக்கு ஆயிரம் வேலையள் இருக்கும். ஆமியைச் சுடுறது மட்டுமில்லாமல் சும்மா நிண்டவன், வந்தவன் போனவனையெல்லாம் சுடவேண்டியிருக்கும். ’’

வெற்றி பழஞ்சோற்றைப் பாத்தபடிக்கு அமைதியாயிருந்தான். திடீரென்று ‘‘நந்தபாலு உங்களுக்குச் சொந்தமோ’’ என்று கேட்டான். நிலாமதி பதில் சொல்லவில்லை. ‘‘சாப்பிடுங்கோ’’ என்றாள்.

வெற்றி சோற்றைப் பிசையத்தொடங்கிய போது நாயொன்றின் முதற் குரைப்புக் கேட்டது. கைகள் அப்படியே இருக்க அவன் அர்த்தம் பொதிந்த பார்வையை

நண்பர்களிடத்தில் வீசினான். தொடர்ந்து நாய்கள் குரைக்கத் தொடங்கின. குரைப்பொலிகள் அதிர்ந்து அதிர்ந்து ஒலித்தன. அவர்கள் எழுந்தார்கள். துப்பாக்கிகளையும் ஹோல்சரையும் வாரி எடுத்து பையொன்றினுள் திணித்தார்கள். சோற்றுப் பருக்கைகள் ஒட்டியிருந்த கையை வெற்றி சாரத்தில் துடைத்தான். தோள்களில் சுமந்த துப்பாக்கி மூட்டையோடு கிணற்றடிப் பக்கத்தால் வேலியைக் கடந்து, கிருஸ்ணபிள்ளை வாத்தியாரின் மரங்கள் மூடியிருந்த இருண்ட காணியைக் கடந்து, வீதியைக் கடந்து, கோயிலைக்கடந்து, வயலைக்கடந்து, ஊரைக்கடந்தே போனார்கள் அவர்கள். ஏதோ ஒன்றைக் கடந்து கொண்டிருந்த சமயத்தில் நிலாமதி வீட்டின் வேலிக்கு அப்பால் நெய் மணக்கிற உருவங்களின் சப்பாத்துக் கால்களின் சரக் சரக் சத்தங்கள் வந்து விட்டிருந்தன.

விறாந்தையில் சற்று முன்னர் போராளிகள் கூடியிருந்தார்கள் என்பதற்கான எந்தத் தடயமும் இல்லாதிருப்பதான திருப்தி நிலாமதிக்கு உருவான கணத்திலேயே அவள் அதனைக் கண்டாள். மூலைச் சுவரோடு ஒட்டியபடி பெரும் கரு வண்டு ஒன்று கிடப்பதைப்போல கிரேனைட் குண்டொன்று தனியனாய்க் கிடந்தது. ஒரே பாய்ச்சலில் தாவி அதனைத் தூக்கியபோது அது உள்ளங்கைக்குள் முழுவதுமாக அடங்கியது. புகைக் கூடு, புளியமரத்தடி, குப்பை மேடு என்ற நினைப்புக்கள் அவளுக்குள் தோன்றவில்லை. சலோ சலோ என்ற சத்தங்கள் வீதியில் மிகக் கிட்டத்தில் கேட்டன.

அவள் அணிந்திருந்த சட்டையின் முன் பக்க பட்டன்கள் ஒன்றிரண்டைக் கழற்றினாள். பிராவை விலத்தி கிரேனைட் குண்டை மார்புச் சதையை நசித்து உள்ளே தள்ளினாள். அது முழுவதுமாக அடங்கிக் கொண்டது. மீளவும் சட்டையைப் பூட்டிக்கொண்டாள். உள்ளே இரும்புக் குண்டு குளிர்ந்தபடி இருந்தது.

என்றுமில்லாதவாறு இராணுவம் படலையைத் திறந்து கொண்டு வந்தபோது நிலாமதிக்கு பயத்தினால் மூச்சிரைக்கத் தொடங்கியது. மார்புகள் மேலும் கீழும் ஏறி இறங்கின. அவள் மூச்சையடக்க முயற்சித்தாள். சிப்பாய்கள் பல்லை இளித்துக் கொண்டு முன்னால் நின்றார்கள். "இங்கே யாரெல்லாம்

இருக்கிறீர்கள்.." என்று கேட்டவனின் பார்வை அவளின் கண்களைத் தாண்டி கழுத்தினைத் தாண்டி மார்புகளில் நிலைத்து நின்றது.

‘‘நானும் அம்மாவும். ’’

‘‘அம்மா எங்கே’’

‘‘காணிக்கு புல்லுப்பிடுங்க போயிட்டா’’

அவர்களில் இருவர் கிணற்றடிக்குச் சென்றனர். மற்றவர்கள் வீட்டுக்குள் நுழைந்தனர். நிலாமதி விறாந்தைக்கும் வெளியே வந்து முற்றத்தில் நின்று கொண்டாள். குசினிக்குள் பாத்திரங்கள் விழுந்து உருளும் சத்தங்கள் கேட்டன. வானரங்கள் என்ற வார்த்தையை உதடு மெதுவாகத் தன்பாட்டில் உச்சரித்தது. அவர்கள் மீண்டும் முற்றத்திற்கு வந்தார்கள். அவர்களில் ஒருவன் அவளிடம் "சரி நீ சாப்பிடு பொண்ணு" என்றான். அப்பொழுதுதான் விறாந்தையில் பழஞ்சோறு நிறைந்த சட்டியை அவள் கண்டாள். ஓடிப்போய்த் தூக்கியோது உள்ளே கிரேனைட் குண்டு நகர்வதாய் இருந்தது. இதயத்தின் துடிப்புக்கள் காதின் அருகில் கேட்டன.

இராணுவத்தினர் வெளியேற எத்தனித்தபோது ஒருவன் என்னவோ சொல்லி அவர்களை நிறுத்தினான். தனது துப்பாக்கியை இன்னொருவனிடம் கொடுத்தான். அவன் நிலாமதியை நோக்கி நடந்தபோது அவளுக்கு அழுகை வெடித்திருந்தது. அவன் அருகே வந்தான். ‘‘ஏ பாப்பா அழாதே’’ என்றான். பிறகு ‘‘உள்ளே வா’’ என்று அவளது கையைப் பற்றி இழுத்தான். நிலாமதி கையைத் திமிறி விடுவித்தாள். முற்றத்தில் நின்றவர்கள் இவனைப் பார்த்து இந்தியில் என்னவோ சொல்லிச் சிரித்து கையை ஆட்டினார்கள். இவனும் பதிலுக்கு சொல்லிச் சிரித்தான். பிறகு ‘‘ரூமுக்குள்ளே பீரோ சாவி உன்னிடமுள்ளதா.. செக்கிங் செய்ய வேண்டும். உள்ளே வா’’ என்று அவளை இழுத்தான். நிலாமதி நடந்தாள்.

அலுமாரி சாமியறையில் இருந்தது. அதன் திறப்பு சாமிப்படங்களின் பின்னே இருந்தது. அதை எடுத்து நிலாமதி நீட்டினாள். அவன் வாங்கிக் கொள்ள வில்லை. அவளைச் சுவரோடு தள்ளினான். நிலாமதி ஒடுங்கினாள். மார்புகள்

வேகமாகத் துடித்தன. அப்பொழுது அவனிடத்தில் கோரமான புன்னகையொன்று தோன்றி வழிந்தது. தன் கைகளுக்குள் அவளை அடக்கி, சுவர்களில் ஊன்றி நின்றான். நிலாமதி வீரிட்டுக் கத்தத் தொடங்கினாள். அவன் அவளின் இடுப்பைச் சுற்றி தன்னோடு இழுத்து கழுத்துச் சட்டையைக் கிழித்தான். பட்டன்கள் சர சரவென கழன்று விழுந்து நிலத்தில் ஓடின. கண்களில் வெறி மிதக்க அவன் பிராவினைப் பற்றி கீழே இழுத்தபோது கிரேனைட் குண்டு வெளியேறி உடல்வழி ஓடி கீழே விழுந்து உருண்டது. நெருப்புச் சுட்டது போல அவன் கைகளை உதறி இரண்டடி பின்னால் பாய்ந்தான்.

‘‘ஏ.. நீ.. புலி ’’ அவனுக்கு வார்த்தைகள் குழறின. பதட்டத்தோடு ஒரு காளையை அடக்குகிறவனைப் போல பதுங்கி நின்று அவளைச் சுற்றிக் கொண்டு நின்றான். அவனது காலடியில் குண்டு அசைவு முடித்து ஓய்ந்திருந்தது. சட் என்று குனிந்து அதை எடுத்து நிமிர்ந்த போது மீண்டும் அவனில் கோரமான புன்னகை வழிந்தது. ‘‘செத்தாய் நீ ’’ என்றான் அவன். நிலாமதி வெறித்தபடி நின்றாள். இராணுவத்தான் அவளிலிருந்து விலகி கதவருகே ஓடினான். நடுங்குகிற விரல்களால் கிரேனைட்டின் கிளிப்பினைக் கழற்றி நிலாமதி மீது எறிய எத்தனித்த கணத்தில் நிலாமதி அவனில் பாய்ந்தாள். குண்டினை வைத்திருந்த அவனது கை உடல்களுக்கிடையில் சிக்கியது. அவன் அவலக் குரல் எழுப்பித் திமிறினான். நிலாமதி இரண்டு கைகளாலும் அவனை இறுக்கி அணைத்துக் கொண்டாள். அவனது கழுத்திடையே தன் முகத்தை வைத்து அழுத்தினாள். காலினால் ஒரு பாம்பைப்போல அவனைச் சுற்றிப் பிணைத்துக் கொண்டாள். அவளது வெற்று மார்புகள் அவனது சாக்கினை ஒத்த தடித்த பச்சை உடையில் அழுந்தி நின்றபோது அவளிடமிருந்து வார்த்தைகள் வெளியேறின.

‘‘இப்ப பிடிச்சுக் கசக்கடா.."

குண்டு வெடித்தபோது வெளியே நின்ற ஆமிக்காரர்கள் கண்டமேனிக்குச் சுடத்தொடங்கினார்கள்

# 6

சுபத்திரையும் மகளும் கொடிகாமத்தில் ஒரு கோயிலுக்குள் முடங்கியிருந்தார்கள். கோயில் என்றால் தேரும் தேர்முட்டியுமான பெரிய கோயில் இல்லை. ஓலைகளால் வேயப்பட்ட கொட்டிலொன்றை ஒத்ததாக அது இருந்தது. யாரேனும் தனியொருவரின் சொத்தாக அது இருக்கலாம். இப்படியான, பரம்பரை பரம்பரையாய்த் தனிக் குடும்பங்களுக்குச் சொந்தமான சிறிய வைரவர், மாயவர், நாகதம்பிரான் முதலான கோயில்கள் இந்தப் பகுதிகளில் நிறைய இருந்தன. அவற்றில் சிலவற்றுக்கு ஐயரும் வருவதில்லை. குடும்பத்தைச் சேர்ந்த யாரேனும் ஒருவர்தான் மணியடித்துப் பூசை செய்கிறார். சுபத்திரையின் தாத்தா அப்படியொரு பிள்ளையார் கோயிலைச் சொந்தமாக வைத்திருந்தார் என்றும் ஒரு போத்தல் கள்ளுக்காக அதனை பரியாரி ஒருவருக்கு விற்றார் ஏ்ன்றும் அவள் கேள்விப்பட்டிருந்தாள்.

இவர்கள் காளி கோயிலொன்றில் தங்கியிருந்தார்கள். பத்துக் கைகளிலும் பயங்கர ஆயுதங்களோடும், நாக்கை வெளித்தள்ளியும் காளி சுவர்களிலும், திரைச் சீலைகளிலும் வரையப்பட்டிருந்தாள். கோயில் மேற்கூரையை ஒன்பது மரத்தூண்கள் தாங்கியிருந்தன. அவைகளில் நான்கு தூண்களைச் சேலையால் சுற்றி சுபத்திரை மறைப்பொன்றை உருவாக்கியிருந்தாள். எஞ்சிய தூண்களுக்கிடையில் இரண்டு மறைப்புக்களும் இரண்டு குடும்பங்களும் அங்கே தங்கியிருந்தன. அவர்களில் இளந்தாரிப் பெடியன் ஒருவனும் இருந்தான்.

சுபத்திரையின் மகளுக்கு பதின்நான்கு வயது நடக்கிறது. எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தாள். தகப்பனைப் போலவே நல்ல வளர்த்தியாய் அவள் இப்பவோ அப்பவோ என்றிருந்தது சுபத்திரைக்கு நெருப்பை வயிற்றில் சுமந்துகொண்டிருப்பது போலானது. சனங்களை இரவோடிரவாக எழும்பிப் போகச் சொன்னபோது அவளுக்கு என்ன செய்வது என்று ஒன்றும் தோன்றவில்லை. அவள் கட்டாயம் போயே தீரவேண்டுமென்பதற்கு இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அவளது மகள். அங்கே ஆமி அப்பிடியாம் இங்கே நேவி இப்பிடியாம் என்று வருகிற கதைகளைக் கேட்கும் போது அவளை இராணுவக் கட்டுப்பாட்டில் வைத்து வளர்க்க முடியும் என்ற

நம்பிக்கை அவளுக்கு கொஞ்சமும் இருக்கவில்லை. இரண்டாவது காரணம் அவளது மகன், அவன் ஒரு போராளியாக இருந்தான்.

அன்றைக்கு இரவு சுபத்திரை தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறினாள். எண்பத்து ஐந்தில் குடியில் ஈரல் கருகி அவளது கணவர் செத்துப்போனபோது முதல் முறையாக அவள் தலையிலும் வயிற்றிலும் அடித்து இப்படிக் குளறினாள்.

கோயிலில் குளிப்பு முழுப்புக்களுக்குப் பெரும் சிரமமாக இருந்தது. விடிவதற்கு முன்னரேயே மகள் மரங்களின் மறைப்புக்களைத் தேடி அலைவதைப் பார்க்க நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது. அங்கிருந்த அபிஷேகக் கிணற்றில் பத்து வாளி அள்ளிய பிறகு, வற்றிப்போகிற அளவில் சேற்றுக் கலரில் தண்ணீர் இருந்தது. குடிக்கவும் சமைக்கவும் தண்ணீரெடுக்க தூர இடத்திற்குப் போய் வரவேண்டும். மூன்றாவது நாளில் இருந்து அங்கிருந்த மற்றவர்களோடு மகளும் தண்ணீர் எடுத்து வந்தாள். நீர் நிரம்பிய இரண்டு பெரிய பிளாஸ்டிக் வாளிகளை அவள் தூக்கமுடியாமல் தூக்கினாள். வாளியின் கைப்பிடிக் கம்பிகள் விரல்களில் அழுத்தி அழுத்தி சிவத்தக் கோடாக பதிந்திருந்தது. இப்படியான தருணங்களில் சுபத்திரைக்கு மகனில் கோபம் பொங்கிக் கொண்டுவரும். "நீ ஒரு நல்ல அண்ணனாய் இருந்திருந்தா இப்பிடிச் செய்திக்க மாட்டாய். நாங்களும் இப்பிடிக் கஸ்ரப்பட்டிருக்க மாட்டம்" என்று மனசுக்குள் பொருமுவாள்.

சுபத்திரையின் கணவரின் இரண்டு தம்பிகள் பிரான்சில் இருந்தார்கள். அவர்களில் இளையவன் இவளின் மகனின் வயதில் இருந்தான். இரண்டுபேரும் ஒன்றாகப் பள்ளிக் கூடம் போயிருந்தார்கள். ஊரியான் பாதை ஓடிக்கொண்டிருந்த போது மூத்தவன் பிரான்ஸ்சுக்குப் புறப்பட்டான். பிரான்ஸில அவனுக்குக் கேஸ் நடந்துகொண்டிருந்த போது, தம்பியையும் அழைத்துக் கொண்டான். அவனுக்குப் பாஸ் எடுக்க சுபத்திரை தான் பிணை நின்றாள். இளவயது ஆட்களுக்கு இயக்கம் பாஸ் கொடுப்பதில்லை. கொழும்பில் பரீட்சை அல்லது பயிற்சி இப்படியேதாவது சொல்லித்தான் விண்ணப்பிக்க வேண்டும். அவனுக்கும் அப்படித்தான் கேட்டார்கள். யாரையாவது பிணை வைக்கும்படி இயக்கம் சொன்னது. சுபத்திரை தனது பெயரைக்

கொடுத்திருந்தாள். ஒருமாதப் பாஸ் கொடுத்தார்கள். அவன் போனபோது கிளாலி ரூட் தொடங்கி கொஞ்ச நாட்களே ஆகியிருந்தது.

ஒரு மாதம் முடிந்து ஒருநாள் தாண்டிய ஒரு நாளில் கோண்டாவில் பாஸ் ஓபிஸிலிருந்து இரண்டு பேர் சுபத்திரையின் வீட்டிற்கு வந்தார்கள். ஓபிஸில் அவளுக்கு விசாரணை இருக்கிறது என்று சொன்னார்கள். சுபத்திரை அன்றைக்கே போனாள். அவளை விசாரித்தவன் மிகத் தன்மையாக விசாரித்தான்.

‘‘அம்மா, நீங்கள் பிணை நின்ற ஆள் அவருடைய காலம் முடிஞ்சும் திரும்பி வரவில்லை. அவர் வருவாரா இல்லையா என்றேதாவது தெரியுமா’’ என்று அவன் கேட்டான்.

‘‘அவர் வெளிநாட்டுக்குப் போகப்போறார். இனி வரமாட்டார்’’

பிணை முறித்தண்டமாக ஐம்பதாயிரம் ரூபாய்களை அவர்களுக்குக் கட்ட வேண்டியிருந்தது. நாலு பேரிடம் மாறி அவள் அதை செலுத்தினாள். போராளி குடும்பத்திடம் இயக்கம் அப்படிக் காசு வாங்குவதில்லை என்று ஊரில் பேச்சிருந்தது. உண்மையில் அவளும் அதைக்குறித்து இயக்கத்திடம் எதுவும் விசாரித்திருக்கவில்லை. அவர்களுக்குத் தெரியாத ஒன்றில்லை என்று அவள் நினைத்தாள்.

கொஞ்சக் காலத்துக்குப் பிறகு பிரான்சில் இருந்து சித்தப்பன்கள் அவ்வப்போது காசு அனுப்பத் தொடங்கினார்கள். எழுதுகிற எல்லாக் கடிதங்களிலும் இரண்டு வரிகளைச் சேர்க்க மறக்காதிருந்தார்கள். மகனை இயக்கத்திலிருந்து விலத்துற வேலையை மட்டும் இவளைப் பார்க்கச் சொல்லியும் அவனை பிரான்சுக்குக் கூப்பிடுகிற வேலையைத் தாங்கள் பார்ப்பதாகவும் அவை இருந்தன.

கோயிற் தூண்களில் கும்பம் சரித்து இருக்கிற சமயங்களில் தெருவில் இயக்க வாகனங்கள் அறம் புறமாக ஓடித்திருந்தன. அவைகளின் தன் மகன் தென்படுவானா என்று சுபத்திரை அங்கலாய்த்திருந்தாள். யாழ்ப்பாணத்தில் சண்டை நடந்து கொண்டிருந்ததால், நெஞ்சுக்குள் அந்தரமாயிருந்தது. அவனை ஒருக்கால் கண்ணால் கண்டுவிட்டால் நிம்மதியாக இருக்கும்.

இன்று பின்னேரம் இரண்டு இயக்கப்பெடியங்கள் இங்கு வந்திருந்தார்கள். அவர்கள் சைக்கிளை வெளியே வேலியில் சாய்த்துவிட்டு இறங்கி நடந்து வந்தார்கள். போராளிகள் யாராவது வீட்டிற்கு வந்தால் அவர்கள் காவி வருகிற செய்திகளைக் குறித்து உடம்பு நடுங்கத் தொடங்கி விடுகிறது. இன்றைக்கும் அப்பிடித்தான்.. ‘‘அம்மாளாச்சி, அப்பிடியெதுவும் நடந்திருக்காது..’’

அவர்கள் வேறொரு பிரச்சனையைத் தீர்க்க வந்திருந்தார்கள். அடுத்த சேலை மறைப்புக் கூட்டுக்குள் தங்கியிருந்த இளைஞன் அவர்களைக் கூட்டி வந்திருந்தான். இன்றைக்கு காலை அபிஷேகக் கிணற்றில் அவன் குளித்துக் கொண்டிருந்த போது கோயிற் சொந்தக்காரர் அங்கு வந்திருந்தார். அவருக்கு இந்தக் கோயிலில் சனங்கள் தங்கியிருப்பது ஆரம்பத்திலிருந்தே பிடிக்கவில்லை என்பதை சுபத்திரை அறிந்திருந்தாள். ‘‘அந்த இடத்தில வலு திறமான அகதி முகாம் ஒன்று இருக்கு நீங்கள் அங்கை போகலாம், நிவாரணம் நிறையக் கொடுக்கிறாங்கள்’’ என்ற மாதிரியான செய்திகளே அவர் எப்போதும் பேசுகிற வார்த்தைகளாக இருந்தன. சாடை மாடையாக ‘‘அம்பாள் குற்றம் பொறுக்கமாட்டாள், பாத்து கவனமா நடந்து கொள்ளுங்கோ’’ என்று அடிக்கடி அவர் சொன்னார். அன்றைக்கு அவன் அபிஷேகக் கிணற்றில் குளித்தது அவருக்கு உச்சி மண்டையில் கோபத்தைக் கிளறியிருக்க வேண்டும்.

‘‘இது அம்பாளின்ரை அபிஷேகக் கிணறு, இதில நீ குளிக்கக் கூடாது’’ என்று வாளியையும் கயிற்றையும் பிடுங்கினார் அவர். இளைஞன் அப்பொழுதுதான் இரண்டொரு வாளிகள் ஊற்றியிருந்தான். அவனுக்கு கோபம் வந்திருக்க வேண்டும்.

‘‘மனிசருக்குத்தான் கடவுளே தவிர கடவுளுக்கு மனிசர் இல்லை’’ என்று அவன் சொன்னான். அவரிடமிருந்து வாளியை வாங்க எத்தனித்தான்.

‘‘என்னடா எதிர்த்துக் கதைக்கிறாய்’’ என்று கோயிற்காரர் அவனுக்கு அடிக்க கை ஓங்கினார். இளைஞன் அவரது கையைப் பிடித்து தள்ளிவிட சமநிலை குலைந்து தண்ணீர் ஓடுகிற வாய்க்காலின் சேற்றுக்குள் கோயிற்காரர் விழுந்தார். உடுத்தியிருந்த வேட்டியும் சேட்டும் சேறாகின. முகத்திலும் சகதி தெறித்திருந்தது. எல்லோரும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். அவருக்கு

பெரிய அவமானமாகியிருக்க வேண்டும். விரல்களால் முகத்துச் சேற்றை வழித்தவாறு எழும்பினார்.

“எளிய பறைச்சாதி நீ, என்னைத் தள்ளி விடுறியோ அகதி நாயே.. இனிச் சரிவராது, ஈனப் பிறப்புக்களுக்கு இண்டைக்கு ஒண்டு சொல்லுறன், இன்னும் ஒரு மணித்தியாலத்துக்குள்ள எல்லா எளிய நாயளும் வெளியாலை போயிடோணும். ஓ.. ஒண்டும் இங்கை தங்கேலாது.” என்று படபடவென்று தூண்களைச் சுற்றியிருந்த துணிகளின் முடிச்சுக்களை அவிழ்த்தார். துணிகளை ஒரு கும்பமாகச் சுற்றி வெளியாலே எறிந்தார். “பாவங்கள் எண்டு பாத்தால் பறைச் சாதிக்கு செருக்குக் கூடிக்கொண்டே போகுது”

“அங்கையொரு பாவமும் நீங்கள் பாக்கேல்லை. பழைய ஆட்டமெல்லாம் இனி ஆடேலாது எண்டு அடங்கியிருக்கிறியள்” என்று இளைஞன் சொன்னான். குளித்த ஈரம் அவனில் காய்ந்து போயிருந்தது. மற்றவர்கள் அவனை அமைதியாயிருக்கும்படி சொன்னார்கள்.

“தம்பி ஆத்திரத்தில வார்த்தைகளை வெளிய விடாதையும், உம்மடை ஆத்திரத்தாலை இண்டைக்கு மூண்டு குடும்பம் நடுத்தெருவுக்குப் போகப்போது” என்றார் ஒருவர்.

“ஒருத்தரும் நடுத்தெருவுக்குப் போகத்தேவையில்லை. இண்டைக்கு நான் இதுக்கொரு முடிவு கட்டுறன்.” என்று சொல்லிவிட்டு இளைஞன் வெளியாலே போனான். வரும்போது இரண்டு இயக்க இளைஞாகளோடு வந்தான். அவர்கள் என்ன நடந்ததென்று ஒவ்வொருவரையும் விசாரித்தார்கள். பிறகு கோயிற்காரரின் வீடு யாருக்காவது தெரியுமா என்று கேட்டார்கள். தெரியுமென்று சொன்ன ஒருத்தியை அழைத்துக் கொண்டு போனார்கள்.

அடுத்த நாள் காலையில் கோயிற்காரர் வந்தார். அவரது முகம் இறுகியிருந்தது. “நீங்கள் எல்லாரும் என்னை மன்னிக்க வேண்டும்” என்று கைகளை உயர்த்தி அவர் சொன்னார்.

“நான் சாதியை இழுத்துக் கதைத்தது பெரிய பிழை. நீங்கள் ஒருத்தரும் இந்த இடத்தை விட்டுட்டு போகத் தேவையில்லை. எவ்வளவு காலமென்றாலும் இங்கேயே தங்கிக்கொள்ளுங்கோ.. ஆனால் நான் இனி இந்தக் கோயிலுக்கு

சாகும்மட்டும் வரமாட்டன். இந்தக்காளி கோயில் இனி இந்தக் கதிரவேலனுக்குச் சொந்தமில்லை..'' என்று கைகளை உதறி சத்தமாகச் சொல்லிவிட்டு திரும்பிப்பார்க்காது வெளியேறினார்.

மத்தியானம் போல இயக்ககாரர்கள் வந்தார்கள். கோயிற்காரர் வந்தாரா என்றும் மன்னிப்புக் கேட்டாரா என்றும் விசாரித்து அறிந்து கொண்டார்கள். பிறகு ''செருப்புத் தண்ணி குடிச்சதோடை அவருக்கு எல்லாம் விளங்கியிருக்கும்.'' என்று தமக்குள் அர்த்தத்தோடு பார்த்து குறும்பாகச் சிரித்தபடி சொன்னார்கள். சுபத்திரை அவர்களிடம் மகனைப் பற்றி விசாரித்தாள்.

''அவர் எந்தப் பிரிவில இருக்கிறார்''

''தெரியேல்லை. உங்கடை இயக்கம்தான்.. '' என்றாள் இவள்.

திரும்பவும் சுபத்திரை சேலைகளால் கூடு கட்டினாள். இரவு சாப்பிட்டுக் கொண்டிருந்த மகள் அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு நெளிந்தபோது அதுவரை நாளும் சுமந்த தீ விளாசி எரிவதைப் போல சுபத்திரை உணர்ந்தாள். தன் வாயில் விரலை வைத்து அவளைச் சத்தம் போடவேண்டாம் என்று சைகை செய்தாள். ஆறுதலாக மகளின் முதுகைத் தடவி விட்டாள். கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. சுபத்திரை தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறாத ஒரே துயரமாக அது இருந்தது. மகள் கால்களை மடித்து உட்கார்ந்து முகத்தை முழங்கால்களில் புதைத்திருந்தாள். அவளது இரத்த உடைகளைச் ஷொப்பிங் பை ஒன்றினுள் சுபத்திரை அடைந்தாள். அவளுக்கு துணிகள் அவசரமாகத் தேவைப்பட்டது. அம்மனுக்குக் சாத்திய பட்டுத்துணிகள் கதவுக் கம்பிகளில் சொருகப்பட்டிருந்தன. யாரும் பார்க்காத வகைக்கு அந்தத் துணிகளை அவள் எடுத்துக்கொண்டாள். படுக்கும் போது, ''அம்மாளாச்சி, நீயும் ஒரு பொம்பிளைதானே, குற்றம் குறையளை பெரிசுபடுத்தாமல் விடு'' என்று வேண்டிக்கொண்டாள்.

மகள் காய்ச்சலாய்க் கிடக்கிறாள் என்று சுபத்திரை கேட்கிறவர்களுக்குப் பொய் சொன்னாள். மூன்றாவது நாள் கோயில் அபிஷேகக் கிணற்றில்

அவளுக்கு அள்ளிவார்த்துத் தலையைத் துடைத்து விட்ட போது, துயரத்தை மீறி சந்தோசம் எட்டிப்பார்த்தது.

''மைதிலிக்குக் காய்ச்சல் சுகமோ'' என்று பக்கத்துக்கு கூட்டுக்காரர்கள் கேட்டார்கள்.

''ஓம்.. இப்ப கொஞ்சம் பரவாயில்லை''

போராளி, மாவீரர் குடும்பங்களைச் சேர்ந்தவர்களை இயக்கம் தங்களது ஏற்பாட்டில் வன்னிக்கு அனுப்பிக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்ட போது, சுபத்திரை தன்னையும் மைதிலியையும் பதிந்து கொண்டாள். அவர்கள்கட்டாயம் வன்னிக்குப் போயே தீரவேண்டும் என்பதற்கு இப்பொழுதும் இரண்டு காரணங்கள் இருந்தன. ஒரு பகலில் கிளாலியில் இருந்து புறப்பட்ட ஆறு தொடுவைப் படகுகளில் மூன்றாவதில் இவளும் மைதிலியும் உட்கார்ந்திருந்தார்கள்.

சற்றைக்கு முன்பாக கடற்புலிகளிலொருவன் இவளை அடையாளம் கண்டுகொண்டான். இடுப்பளவு தண்ணீரில் கூர் மூக்கினைக் கொண்ட படகொன்றின் பின்புறத்தே அதன் எஞ்சின்களில் ஒன்றைச் சரிபார்த்தபடியிருந்த அவன் கிரீஸ் அப்பியிருந்த கைகளை அசைத்து சுபத்திரையின் கவனத்தைக் கோரினான். பிறகு ''நீங்கள் அமுதன்ரை அம்மாதானே..'' என்றான். சுபத்திரை பிரகாசமானாள். அருகெங்கிலும் அமுதன் நிற்கிறானா எனப் பார்வை தேடிற்று. ''அவர் எங்கையப்பன்'' என்று அவள் உரத்துக் கேட்டாள்.

''என்னை நினைவிருக்கா.. முந்தியொருக்கா அமுதனோடை வீட்டை வந்திருந்தனான்.'' என்றவன் பிறகு ''நான் இப்ப கடற்புலியில, அமுதன்ரை தொடர்புகள் இல்லை. நான் ஆளைக்கண்டால் நீங்கள் வன்னிக்குப் போனதா அறிவிக்கிறன்.'' அவனது படகின் எஞ்சின் இரையத்தொடங்கியது. துள்ளியேறி அவனும் இன்னொருவனும் உட்கார்ந்தார்கள். நீரை வெட்டிக் கிழித்தபடி புறப்பட் படகு கண நேரத்தில் கண்களிலிருந்து மறைந்தது.

# 7

நானொரு நல்ல சண்டைக்காரன் என்பதில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும் அண்ணை கையால் திறமான சண்டைக்காரனுக்குரிய பரிசு எதுவும் வாங்கவில்லை என்ற கவலை எனக்குள் ஓடிக்கொண்டே இருக்கிறது. சண்டைக் களத்தில் சாதனைகளைச் செய்த போராளிகளுக்கு அண்ணை தன் கையால் பரிசுகள் வழங்குவார். அப்படிப் பரிசு பெற்றவர்களைப் பிறகு பிடிக்க முடியாது. அவர்கள் நிலத்துக்கும் ஆகாயத்துக்குமாகக் குதிப்பார்கள்.

அளம்பிலில் மட்டும் அந்தச் சம்பவம் நடக்கவில்லையென்றால், ஜெயசிக்குறு சண்டையிலேயோ, ஆனையிறவிலேயோ அல்லது தீச்சுவாலையிலேயோ கட்டாயமாக நான் அண்ணை கையால் ஒரு மணிக்கூட்டையாவது வாங்கியிருப்பேன். ஆனால் நான் சண்டை செய்ய முடியாதவனாகிப் போனேன்.

கடைசி வரைக்கும் இயக்கத்தில் சண்டைக்காரனாகவே இருந்துவிட விரும்பினேன். உண்மை என்னவென்றால் எனக்குச் சண்டையைத் தவிர வேறு எதுவும் தெரியாது என்பதுதான். சொல்கிற இடத்தில் அணியோடு இணைந்து அடித்துப் பிரித்து உடைத்துக் கொண்டு போகவும், செத்துவிழுகிற ஆமியின் கணக்கினைச் சரியாக எடுத்து அறிவிக்கவும், யாருக்கேனும் காயம்பட்டால் உடனடியாக முதலுதவிச் சிகிச்சை செய்து அப்புறப் படுத்தவும் தெரிந்திருந்தது. அதிக பட்சமாக எதிரியின் நிலைகளில் நின்று கொண்டு ஜிபிஎஸ் ஸ்பொட் சொல்லத் தெரியும்.

சண்டையற்ற காலங்களில் சண்டைப்படிப்பு என்ற ஒன்றை இயக்கம் நடத்தியது. எதுகை மோனையுடன் ஒரு தூசணத்தால் நான் அதைக் குறிப்பிடுவேன். அந்த வகுப்புக்களில் சற்றேனும் ஆர்வமில்லாமல் இருப்பேன். அல்ஜீரிய நாட்டு விடுதலைப் போர், வியட்னாம் வரலாறு மாதிரியான தமிழ்ப்படுத்திய புத்தகங்களை படிக்கச் சொல்லித் தருவார்கள். அவற்றை மருந்திற்கும் திறந்து பார்ப்பதில்லை. காலம் முழுவதுக்கும் இப்படி இருந்து விடலாம் என்று நம்பினேன். ஆனால் அளம்பிலில் வலது கால் துண்டாகிப் போனதோடு எல்லாம் போனது.

கால் போன வலியை விட இயக்கத்திற்குப் பாரமாகிப் போனேன் என்ற நினைப்புத்தான் ஆஸ்பத்திரியில் முதலில் வந்தது. அது இயக்கத்தின் ஆஸ்பத்திரி. இயக்க ஆட்கள்தான் டொக்டர்களாகவும் உதவியாளர்களாகவும் இருந்தார்கள். படுக்கும் போதும் எழும்பி உட்காரும் போதும் ஏதோ ஒன்று என்னில் குறைந்தது போல உணர்வு இருந்து கொண்டேயிருந்தது. ஓரளவுக்கு வலியெல்லாம் குறைந்த ஓர் இரவில் நான் தேம்பித் தேம்பி அழுதேன். திடீரென்று எல்லோராலும் கைவிடப்பட்ட ஒரு அனாதையைப் போலானதாக உணர்ந்தேன்.

ஆனால் இயக்கம் என்னை பாரமாக நினைக்கவில்லை. ஆஸ்பத்திரியில் கைகளையும் கால்களையும் இழந்தவர்கள், இடுப்பிற்கு கீழே இயங்காதவர்கள் என்று நிறையப்பேருக்கு சிகிச்சை நடந்தது. அவர்கள் எவரையும் இயக்கம் பாரமாக நினைக்கவில்லை. அவர்கள் என் தோள்களின் இடுக்குகளில் ஊன்று கோல்களை வைத்து பின்னேரப் பொழுதுகளில் ஆஸ்பத்திரி வளாகத்தில் நடை பழக்கினார்கள். ஒண்டுக்குப் போவதென்றாலும் துணைக்கு ஆட்களை அனுப்பினார்கள்.

காயம் முழுவதுமாகக் குணமாகியிருந்தது. முழங்காலுக்கு கீழேயே துண்டாகியிருப்பதால் செயற்கைக் கால் பொருத்துவதில் சிக்கல் இல்லையென்றும் கொஞ்சம் நாள் செல்லட்டும் என்றும் ஆஸ்பத்திரியில் சொன்னார்கள்.

நான் முகாமுக்கு வந்தேன். செயற்கைக் கால் பொருத்தப்பட்ட பிறகும் என்னால் ஊன்றுகோல் இன்றி நடந்துவிட முடியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ஊன்றுகோலைக் கைவிட்டு நடந்து பழக வேண்டியிருந்தது. அப்படி முயற்சித்த போது முழங்காலில் வலி பீறிட்டுக் கிளம்பியது. நடக்கும் பொழுது உடல் சமநிலை குலைந்திருந்தது. பொருத்திய காலைத் தூக்கி ஓர் அடி முன்னால் வைப்பதற்குள் உயிர் போய் வந்தது. நித்திரையால் எழுகின்ற சமயங்களில் கால் இல்லை என்ற நினைப்பு இருப்பதில்லை. சட்டென்று எழுந்து இரண்டு மூன்று தடவை விழுந்திருக்கிறேன். அழுகை முட்டிக்கொண்டு வரும். திடீரென்று நடந்தே தீருவது என்றொரு வன்மம் வரும். ஊன்றுகோல்களைத் தூர எறிந்துவிட்டு முழங்கால் வலிக்க வலிக்க நடப்பேன்.

ஆறாவது மாதம் ஜீன்ஸ்சும் சப்பாத்தும் அணிந்து நடந்தால் எனக்கு கால் இல்லை என்று எவருக்கும் தெரியாதபடிக்கு நடக்கத் தொடங்கினேன்.

என்னை அரசியற் துறைப் பிரிவில் இணைத்திருந்தார்கள். எந்தச் சண்டைப்படிப்பை வெறுத்து ஒதுக்கியிருந்தேனோ அதற்குத் தேவையான புத்தகங்களை வெளியிடுகிற பிரிவில் முதலில் பணியாற்றச் சொன்னார்கள். போதாதென்று அரசியற் படிப்பென்ற ஒன்றும் பின்னிணைப்பாகச் சேர்க்கப்பட்டது.

அரசியல் வகுப்பின் முதல்நாள் ‘‘யுத்தம் என்றால் என்ன.. அரசியல் என்றால் என்ன’’ என்றொரு கேள்வியை படிப்பிக்க வந்தவர் என்னைப் பார்த்துக் கேட்டார். நான் எழுந்து நின்று யோசித்தேன். பிறகு ‘‘யுத்தம் என்றால் அடிபடுறது. அரசியல் என்றால் அடிபாட்டை நிப்பாட்டிப் போட்டு பேச்சுவார்த்தைக்குப் போறது’’ என்று சொன்னேன். பதிலுக்கு அவர் இப்படிச் சொன்னார்.

‘‘யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல். அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம்’’

அந்தக் கணத்தில் அளம்பிலில் என் காலுக்கு குண்டெறிந்த ஆமிக்காரன் மேலே எனக்கு ஆத்திரம் பத்திக் கொண்டு வந்தது. ‘‘உன்னாலை தானடா இந்தக் கோதாரியெல்லாம்’’ என்று நான் பற்களை நறுமினேன். பக்கத்தில் இருந்தவன் என்னை வினோதமாகப் பார்த்தான்.

இயக்கம் தனது உட்சுற்றுத் தேவைக்காக உலக யுத்தங்கள் தொடர்பான புத்தகங்களையும் படங்களையும் வெளியிட்டுக் கொண்டிருந்தது. இங்கிலிஸில் தருவிக்கப்படுகிற இந்தப் புத்தகங்களையும் சினிமாப்படங்களையும் மொழிபெயர்த்துத் தருவதற்கு சம்பளத்திற்கு ஆட்கள் இருந்தார்கள். அவர்களில் நேரு ஐயாவும் ஒருவர். அவர் ஓய்வுபெற்ற ஒரு ஆங்கில ஆசிரியர். அவருக்கு ஜே ஆர் ஜெயவர்த்தனாவின் வயதிருக்கும். தான் ஜே ஆரோடு படித்ததாக ஒருதடவை அவர் சொல்லியிருந்தார். கொழும்பில் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக படிப்பித்ததாகவும் பிறகு எண்பத்து மூன்றோ எழுபத்து ஏழோ ஏதோ கலவரத்தில் ஓடி வந்த பிறகு போகவே இல்லையென்றும் மேலும் சொல்லியிருந்தார்.

கிளிநொச்சியிலிருந்து இடம்பெயர்ந்து வள்ளிபுனத்தில் நேரு ஐயா இருந்தார். அவரிடம் மொழிபெயர்க்க வேண்டிய புத்தகங்களை கொண்டுபோய் கொடுப்பதுதாள் எனது வேலையாக இருந்தது. அவர் மேலோட்டமாக ஒரு புரட்டுப் புரட்டிவிட்டு ‘‘இத்தனையாம் திகதி வந்து எடுத்துக்கொண்டு போம்’’ என்பார்.

புஸ்காப் தாள்களில் குண்டு குண்டான நடுங்கிய எழுத்துக்களில் அவரது மொழிபெயர்ப்பு இருக்கும். ஒவ்வொரு தாளின் மேலும் உ, சிவமயம் என்று மறக்காமல் எழுதியிருப்பார். ஒருபோதும் சொன்ன திகதியைத் தவறியதில்லை அவர்.

நேரு ஐயா நல்ல மனிதர். ஆனால் அவரிடம் கெட்ட குணமொன்று இருந்தது. அவர் எப்பொழுது பார்த்தாலும் இயக்கத்தில் நொட்டையும் நொள்ளையும் சொல்லிக் கொண்டிருந்தார். அதிலும் அவரது எல்லா முறைப்பாடுகளையும் நானே நடவடிக்கை எடுத்துத் தீர்ப்பவன் என்பது போல நடந்துகொண்டது அதைவிடக் கெட்ட குணமாக இருந்தது. அவரின் குற்றச்சாட்டுக்களில் ‘‘பள்ளிக்கூடங்களுக்குப் போய் ஏன் பிள்ளையளின்ரை படிப்பைக் கெடுத்து பிரச்சாரம் செய்யிறியள்.’’ என்பது முதலிடத்தில் இருந்தது.

அது ஜெயசிக்குறுச் சண்டைக்காலம். ஆமி கிளிநொச்சி வழியில் மாங்குளத்திற்கும் புதுக்குடியிருப்பு வழியில் ஒட்டுசுட்டானிற்கும் வந்து காம்ப் அடித்திருந்தான். யாழ்ப்பாணத்திற்குப் பாதை திறக்க என்று புறப்பட்டவர்கள், கடைசியில் எந்த பஸ்சிற்கு ரிக்கெற் கிடைக்கிறதோ அங்கேயே போகலாம் என்றமாதிரியான நினைப்பில் நிலைகொண்டிருந்தார்கள். இங்காலே சனங்கள் நிலைகொள்ளாமல் இருந்தார்கள்.

இயக்கம் அறம் புறமாக ஆட்சேர்ப்பில் ஈடுபட்டிருந்தது. பதுங்குகுழி வெட்டவென இளைஞர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்கள். பள்ளிக்கூடங்களிலும் ரியுசன்களிலும் பிரச்சாரங்கள் ஒவ்வொரு நாளும் நடந்தன. ‘‘படிப்பதற்காய் போர் செய்வோம்’’ என்று பிரச்சாரங்களில் சொன்னார்கள். முடிவில் பத்துப் பன்னிரண்டு பேரென்று ஒரேயடியாகக் கிளம்பி இயக்கத்திற்குப் போனார்கள். வீட்டுக்குப் போய் பள்ளிக்கூட யூனிபோர்மை

கழட்டி வைத்துவிட்டு இயக்கத்திற்கு போகும்படி அதிபர்கள் அழாக்குறையாக ப்ரேயர்களில் அறிவித்தார்கள்.

சந்தைகளில், கோயில்களில் திடீர் திடீர் என்று நடக்கும் தெருக்கூத்துக்கள், செய்வோம் அல்லது செத்துமடிவோம் என்று முடிந்தன. இது ஒரு நெருக்கடி நிலைக்காலம் என்று எங்களுக்கு அரசியல் படிப்பித்தவர் சொன்னார். இதையே நான் நேரு ஐயாவிற்கும் சொன்னேன். “ஐயா இது ஒரு நெருக்கடி காலம்.”

இத்தனை களேபரத்திற்குள்ளும் இயக்கத்தின் ரேடியோ நாள் தவறாமல் ஒலித்துக் கொண்டிருந்தது. ஓர் இரவு நேரச் செய்தியை கோகுலன் வாசித்துக்கொண்டிருந்த போது அருகில் குண்டு விழும் சத்தங்கள் கேட்டன. கொஞ்ச நேர அமைதிக்குப் பிறகு கோகுலன் மீண்டும் செய்தியை விட்ட இடத்திலிருந்து தொடர்ந்தார். ஈழநாதம் ஒவ்வொரு நாளும் வந்தது. சிலநேரங்களில் விசேட பதிப்புக்களும் பின்னேரங்களில் வந்தன. இயக்கம் தன் மொழிபெயர்ப்பு வேலைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தது. நேரு ஐயாவும் குண்டு குண்டான நடுங்கிய எழுத்தில் எழுதிக் கொண்டிருந்தார்.

ஒரு நாளின் காலைச் செய்தியை கொற்றவை இப்படி ஆரம்பித்தார். “வன்னிப் பெருநிலப்பரப்பின் மக்கள் வாழிடங்களை ஆக்கிரமித்து நின்ற சிறிலங்காப் படைகளின் வெற்றி நிச்சயம் நடவடிக்கைக்கு எதிராக தேசியத்தலைவரின் நேரடி நெறிப்படுத்தலின் கீழ் தமிழீழ விடுதலைப் புலிகள் பாரிய தாக்குதல்களை பல முனைகளிலும் இன்று அதிகாலை முதல் நடாத்தி வருகிறார்கள்.”

பிறகு அன்றைய விசேட ஒலிபரப்பில் “இதோ ஒட்டுசுட்டான் முழுவதுமாக புலிகளிடம் விழுந்துவிட்டது என்ற செய்தி வந்திருக்கிறது. மாங்குளத்தைத் தொடர்ந்து கனகராயன் குளத்திலிருந்தும் இராணுவத்தினர் விரட்டியடிக்கப் பட்டுக்கொண்டிருக்கின்றனர். நெடுங்கேணியில் பல நூற்றுக்கணக்கான படையினர் கொல்லப்பட்டிருக்கின்றனர்.” என்று தவபாலன் தொடர்ச்சியாக அறிவித்துக் கொண்டிருந்தார்.

அந்த நேரம் புலிகள் மனிதாபிமானம் சற்றும் இன்றி அரக்கத்தனமான தாக்குதல்களை தமது படையினர் மீது நடாத்துவதாக சந்திரிக்கா கொழும்பில் அறிவித்துக் கொண்டிருந்தா.

எனக்கு இருப்புக் கொள்ளாத அந்தரமாயிருந்தது. அளம்பிலில் என் காலைச் சிதைத்த ஆமிக்காரன் மீது திரும்பத் திரும்ப ஆத்திரம் வந்தது. அது மட்டும் நடந்திருக்காவிட்டால் இந்தச் சண்டைகளில் நானும் ஓர் அணியோடு நின்றிருப்பேன். சண்டைப் போராளியாக இருப்பது எவ்வளவு நல்லது. சனங்களைச் சந்திக்க வேண்டியிருப்பதில்லை. அவர்களின் கேள்விகளுக்குப் பதில் சொல்ல அல்லாட வேண்டியதில்லை.

இப்பொழுது சனங்களைத் தினமும் சந்திக்க வேண்டியிருக்கிறது. அவர்களை எப்படி அணுகுவது என்று வகுப்புக்களில் சொல்லித் தருகிறார்கள். சனங்கள் கேள்வி கேட்கிறார்கள். பலநேரங்களில் பதில் சொல்ல முடிவதில்லை. ‘‘மேலிடத்தில இதைப் பற்றிக் கதைக்கிறோம்’’ என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

நேரு ஐயாவின் ஒவ்வொரு கேள்விகளுக்கும் மரியாதைக்காகவேனும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. கடைசியாக அவரைச் சந்தித்த போது ‘‘இந்த வெற்றிகளாலேயே கடைசி வரைக்கும் நாட்டைப் பிடிக்க முடியும் எண்டு நான் நினைக்கேல்லை. இது ஒரு பேரம் பேசுகிற சக்தி. இந்தச் சண்டை முடிஞ்ச உடனை எப்பிடியும் சந்திரிக்கா பேச்சுவார்த்தைக்கு வருவாள். அதைத் தூக்கி எறியாமல் பேச்சுக்கு போங்கோ. இறுதி முடிவு சண்டையில வராது. அது மேசையிலதான் வரும்’’ என்று அவர் பெரிய லெக்சர் அடித்தார்.

‘‘அண்ணைக்கு எல்லாம் தெரியும்’’ என்று மட்டும் சொல்லிவிட்டு நான் வந்துவிட்டேன்.

ஆனால் சந்திரிக்கா வரவில்லை. பிறகு ஆனையிறவு விழுந்தது. இப்பொழுதும் சந்திரிக்கா வரவில்லை. சாவகச்சேரியும் விழுந்து யாழ்ப்பாணத்தை போராளிகள் சுற்றி வளைத்து நின்ற போதும் சந்திரிக்கா வரவில்லை. இந்தியன் நேவிதான் வருமென்றார்கள். யாழ்ப்பாணம் இன்றைக்கோ நாளைக்கோ விழுமென்றிருந்தது. அதற்குள் நாற்பதாயிரம் ஆமிக்காரர்கள் நின்றார்கள். அவர்களை இந்தியன் நேவி வெளியேற்றுமாம் என்று கதைபரவத் தொடங்கியது. அண்ணை என்ன நிலைப்பாட்டில் இருந்தார் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால் இந்தியா தங்களோடு உடன்பாட்டுக்கு வராமல் தன்போக்கில் இராணுவத்தை மீட்டால் இந்தியக் கப்பல்களை கரும்புலிகளைக்

கொண்டு தாக்கியழிக்க சூசையண்ணை அண்ணையிடம் அனுமதி கேட்டிருந்ததாக எங்களுக்குள் ஒரு கதை உலாவியது.

ஆனால் அதற்கெல்லாம் தேவையேற்படவில்லை. கடைசியாக இந்தியன் நேவியும் வரவில்லை. இயக்கம்தான் சாவகச்சேரியையும் யாழ்ப்பாண முற்றுகையையும் கை விட்டுவிட்டு வந்தது. எனக்கெல்லாம் விசர்தான் வந்தது. யாழ்ப்பாணத்தை ஏன் பிடிக்க முடியவில்லை என்பதற்கு எங்களுக்கு வகுப்பில் சொல்லப்பட்ட காரணங்கள் கீழ்வருமாறு.

1.பிடித்த இடங்களை தொடர்ந்தும் தக்க வைக்க போதிய ஆட்பலம் இல்லை.
2.காட்டுச் சூழலில் வெற்றிகரமாகச் சண்டை பிடிக்கும் இயக்கத்திற்கு கட்டடச் சூழலில் சண்டை பிடிக்கின்ற அனுபவம் போதாது.
3.ஆயுத வளப் பற்றாக்குறை

இவற்றை விட சனங்கள் இன்னொரு காரணத்தைச் சொல்லிக் கொண்டு திரிந்தனர். லண்டனிலுள்ள பாலாசிங்கத்திற்கு இந்தியாவிடமிருந்து ஒரு பக்ஸ் போனதாம். சண்டையை நிறுத்தச் சொல்லியும் தாங்கள் இலங்கைப் படையினரை வெளியேற்றப் போவதாகவும் அதில் இருந்ததாம். அதனாலேயே இயக்கம் வெளியேறியதாம். இந்தியா கடைசியில் ஏமாத்திப் போட்டுதாம் என்பதுவே அது.

நேரு ஐயா டி டே புத்தகத்தை மொழிபெயர்த்து முடித்திருந்தார். தமிழில் அதற்கு நோர்மன்டித் தரையிறக்கம் என்ற பெயரை வைக்கலாம் என்று அவர் அபிப்பிராயப்பட்டார். முதற்தடவையாக இயக்கம் மொழிபெயர்த்த புத்தகமொன்றை நான் முழுவதுமாகப் படித்தேன். முன்பு படியுங்கள் அறியுங்கள் என்றொரு சின்னப்புத்தகம் தனியே இயக்கக்காரர்களுக்கு மட்டும் என்று கிடைத்தது. அதில் இயக்கம் என்ன பிழைகளைச் செய்கிறது என்றும் எதையெல்லாம் செய்யக்கூடாது என்றும் சின்னச் சின்னத் துணுக்குகளும் ஜோக்குகளும் வரும். இயக்க வாகனங்களின் ஓவர் ஸ்பீட்டை நக்கலடித்துத்தான் நிறைய ஜோக்குகள் வந்தன. அங்கேயுள்ள றோட்டுகளுக்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாத வேகத்தில் கண்மண் தெரியாமல் இயக்கம் வாகனங்களை ஓட்டியதால் நான்கைந்து விபத்துக்களும்

சனங்களில் ஒன்றிரண்டு சாவுகளும் நடந்திருந்தன. ஒரு கார்ட்டுன் ஜோக் இப்படி இருந்தது.

விடியற் காலை தூக்கத்தால் எழுந்த சிறுமியொருத்தி ''அம்மா கனவில ஒரு பேய்.. ஊஊஊ என்று வந்து என்னைப் பிடிச்சது.'' என்று சொல்லிக் கொண்டே வருகிறாள். திடுக்கிடும் முகபாவனையில் வரையப்பட்டிருந்த அம்மா ''ஊ..ஊ என்று வந்தால் அது கட்டாயம் ஊனா வாகனம்தான். பிள்ளை நீ பள்ளிக்கூடம் போகாதை'' என்று சொல்லுவாள். போராளிகளின் வாகன இலக்கத்தகடு உ என்ற எழுத்தில் ஆரம்பித்தது. சனங்களிடையே இயக்கத்திற்கு ஊனா வாகனக்காரர் என்றொரு பெயரும் புழக்கத்தில் இருந்தது.

நோர்மன்டி என்பது பிரான்சின் நீளமான கடற்கரையொன்றின் பெயர். இரண்டாம் உலகப் போரின்போது பிரான்ஸ் முழுவதுமாக ஜேர்மனியிடம் விழுந்திருந்தது. ஜேர்மனிக்கு எதிராக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா ஆகிய நாடுகளின் படைகளும் பிரான்ஸ்சின் சுதந்திரப் படைகளும், ஜேர்மனியால் கைப்பற்றப்பட்டிருந்த மற்றைய நாடுகளின் நாடு கடந்த படைகளும் கடல் வழியாகவும் வான்வழியாகவும் பெரும் தரையிறக்கமொன்றை நோர்மன்டியில் நடாத்தினார்கள். ஒரு இரவுக்குகள் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் படையினர் கடல்வழியாக இறக்கப்பட்டனர். ஒரு மாதத்தில் பத்து லட்சம் படையினர் நோர்மன்டியூடாகப் பிரான்சுக்குள் நுழைந்தனர். ஜேர்மனியக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தனியே கடல், ஆகாய வழி விநியோகங்களை மட்டும் நம்பி நிலைகொண்டு அங்கிருந்து ஜேர்மனிக்கெதிரான ஓவர்லோட் நடவடிக்கையை நேசப்படைகள் மேற்கொண்டன. மூன்று மாதங்களுக்குப் பிறகு அவர்கள் பாரீஸை விடுவித்தனர்.

கிட்டத்தட்ட இதே மாதிரியான தரையிறக்கத்தை இயக்கம் கிட்டடியில் செய்திருந்தது. அப்பொழுது ஆனையிறவுக்கான சண்டையை நாங்கள் தொடங்கியிருந்தோம். யாழ்ப்பாணம் – ஆனையிறவு விநியோகப் பாதையைத் துண்டாட இயக்கம் முடிவெடுத்தது. ஆயிரத்து இருநூறு போராளிகள் பால்ராஜ் அண்ணை தலைமையில் கடலால் ஆமியின் கட்டுப்பாட்டில் இருந்த குடாரப்புக் கடற்கரையில் தரை இறக்கினார்கள். அதற்கு முன்னர் பால்ராஜ் அண்ணையோடு கதைத்த அண்ணை ''பால்ராஜ், உங்களைக் கொண்டுபோய்

விடத்தான் என்னாலை முடியும். ஏதும் சிக்கலெண்டாக்கூட திரும்பி வந்து கூப்பிடேலாது. நீதான் உடைச்சுக் கொண்டு ஏ நைனால வரவேணும்'' என்றாராம்.

நாற்பதாயிரம் ஆமி பால்ராஜ் அண்ணையையும் போராளிகளையும் சுற்றி நின்றது. அடியென்றால் அடி அப்படியொரு அடி. ரத்தம் குளம் மாதிரி நின்றதென்று சொல்லுவார்கள். ஒரு பொக்ஸ்க்குள்ளை நின்று பால்ராஜ் அண்ணை சண்டை பிடித்தார். எப்பிடியாவது அந்த பொக்ஸ்ஸில் வைத்து அவரை முடித்துவிட வேண்டுமென்று ஆமி தலைகீழாக நின்றது. பால்ராஜ் அண்ணை பொக்ஸை உடைத்தெறிந்தார். அவர்கள் கண்டி வீதியைப் பிடித்து ஆனையிறவைத் தனியன் ஆக்கினார்கள். பிறகு ஆனையிறவு விழுந்தது.

''நீங்கள் இருந்து பாருங்கோ, அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வரும்'' என்று நேரு ஐயா திரும்பவும் சொன்னார்.

அப்பிடி அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு வந்த போது ரணில் விக்கிரமசிங்க பிரதமராயிருந்தார். பிறகு எல்லாம் அடுத்தடுத்து நடந்தன. பாலசிங்கம் இரணைமடுவில் வந்து இறங்கினார். இயக்கம் தாய்லாந்தில் போய் இறங்கியது. முகமாலையைப் பாதையை இராணுவம் திறந்து விட்டது. இளம்பரிதியை சனங்கள் மாலை போட்டு தோளில் தூக்கி யாழ்ப்பாணத்திற்கு போனார்கள். கிளிநொச்சிக்கு ரெலிக்கொம் வந்தது. செல்போன் சிக்னல்களும் கிடைத்தன. ஓமந்தையைக் கடக்கிற எல்லாப் பொருட்களுக்கும் இயக்கம் வரி விதித்தது. இந்த உலகத்தில் எல்லாவற்றுக்கும் ஒரு பெறுமதி உண்டு என்பதால் அதற்கேற்ப வரிகளும் இருந்தன. வெளிநாட்டில இருந்து வருபவர்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது. அது வெட்கக்கேடான ஒரு விடயம் என்றார் நேரு ஐயா.

''நீங்கள் கூப்பிட்டா பங்கர் வெட்ட வந்து, நீங்க கூப்பிட்டா பிள்ளையை அனுப்பி, இந்த வன்னிக்கை கடைசி வரைக்கும் உங்களோடை இருந்தவன் தன்ரை விவசாயத்துக்கு தண்ணி இறைக்கிற மிசின் வாங்கிவந்தால் ரக்ஸ் வாங்கிறியள். எங்கையோ இருந்து எவனோ ஒருத்தன் ரிவி வாங்கி வாறன். அதுக்கு ரக்ஸ் பிறீ எண்டுறியள். எவ்வளவு வெக்கக்கேடான காரியம் இது''

‘‘அவை எங்கையோ இருந்து வாற எவையோ இல்லை. அவையும் எங்கடை மக்கள்தான். ராப்பகல் எண்டு பாராமல் உழைச்சு எங்கடை போராட்டத்துக்கு காசு தந்தவை’’

நேரு ஐயா ‘‘முருகா.. ’’ என்றார். தனது அதிருப்தியை இப்படியொரு வார்த்தையைச் சொல்லியே அவர் வெளிக்காட்டுவார்.

‘‘நீங்கள் குடை கொடி ஆலவட்டம் செங்கோல் என்று சனங்களிட்டை இருந்து துாரப்போய்க் கொண்டிருக்கிறியள்’’

‘‘நாங்கள் இப்ப ஒரு செமி கவர்மென்ட். யு என் ஓ காரர் வருகினம். நோர்வே காரர் வருகினம். யப்பான்காரர் வந்து அண்ணையைச் சந்திக்க அப்பொயின்ற்மென்ற் கேட்கினம். அமெரிக்காவான அமெரிக்காவே தொடர்பிலதான் இருக்குது. எங்கடை சனத்தின்ரையும் எங்கடையும் தியாகத்தால பெற்ற வெற்றி இது.’’

‘‘சனங்களுக்கு எப்பவும் அரசாங்கங்களைப் பிடிக்கிறேல்லை. இந்தியன் ஆமி காலத்தில பெடியங்கள் பெடியங்கள் எண்டு கோழி குஞ்சுகளைக் காப்பாற்றின மாதிரி உங்களை வைச்சிருந்த அதே சனம்தான் இப்ப உங்கடை சோலியும் வேண்டாம் சுரட்டும் வேண்டாம் எண்டு ஒதுங்கி நிக்குதுகள். ஏனெண்டா நீங்கள் இப்ப அரசாங்க ஆட்கள். அரசாங்கத்துக்கும் சனத்துக்குமான உறவுதான் இப்ப இங்கை இருக்கு. நீயே சொல்லு.. நீங்கள் செய்யிறதெல்லாம் சரியெண்டு நினைக்கிறியோ..’’

‘‘சரியெண்டதாலயும் தர்மம் எங்கடை பக்கமிருக்கிறதாலயும்தான் இருபத்தைஞ்சு வருசத்துக்கு மேலாயும் இந்தப் போராட்டம் உயிர்வாழுது. எங்கடை பக்கம் நியாயம் இல்லையெண்டால், இது எண்டைக்கோ முடிஞ்சு முடிஞ்ச இடத்தில புல்லும் முளைச்சிருக்கும். சில நேரங்களில தலைமைக்குத் தெரியாமல் சில தவறுகள் நடந்திருக்கலாம். சில போராளிகள் தவறு செய்திருக்கலாம். ஆனா இயக்கம் ஒருக்காலும் தவறு செய்யாது’’

‘‘தலைமைக்குத் தெரியாமலோ.. ச்சீக்.. என்ன கதை இது.. ஒரு பெரிய போராளி இயக்கம். தலைமைக்குத் தெரியாமல் நடந்ததெண்டு சொல்ல

வெக்கமா இல்லையோ.. உப்பிடிச் சொல்லி தலைமையை நீங்கள் அவமானப்படுத்திறியள்..''

உண்மையில் எனக்கும் அப்படிச் சொல்ல வெட்கமாகத்தான் இருந்தது. இனிமேல் தலைமைக்குத் தெரியாமல் நடந்தது என்று ஒருபோதும் சொல்வதில்லை என்று நினைத்துக் கொண்டேன். நேரு ஐயா கண்களை மூடி ஈசிசெயாரில் சாய்ந்தார். பிறகு சாய்ந்த படியே கண்களைத் திறந்தார்.

''இந்த உலகத்தில் நீங்கள் இல்லையென்று ஒருக்கா கண்ணை மூடி யோசிச்சுப் பார்த்தன். உலகம் எவ்வளவு சந்தோசமா இருக்குத் தெரியுமோ''

எனக்கு சுள் என்று கோபம் வந்தது. இது ஓவர். நான் ஸ்ரூலை அவருக்கு கிட்டவாக இழுத்துப் போட்டேன். அதில் உட்கார்ந்து கொஞ்ச நேரம் கண்களை மூடினேன். பிறகு திறந்தேன். நேரு ஐயா என்ன என்பதைப் போல பார்த்தார்.

''உங்கடை குடும்பத்தில நீங்கள் இல்லையென்று ஒருக்கா கண்ணை மூடி யோசிச்சுப் பார்த்தன். உங்கடை குடும்பம் எவ்வளவு கஸ்ரப்படுகுது தெரியுமோ'' என்றேன். நேரு ஐயா குலுங்கிக் குலுங்கிச் சிரித்தார். புறப்படும் போது ''இயக்கத்தைப் பிடிக்காது. இயக்கம் செய்யிற ஒண்டும் பிடிக்காது. பிறகெதுக்கு இயக்கத்துக்கு வேலை செய்யிறியள்'' என்று நான் நேரு ஐயாவிடம் கேட்டேன்.

அவர் சிம்பிளாக ''சம்பளம் தாறியள்'' என்றார். அப்படிச் சொல்லும்போது விரல்களால் பணத்தாள்களை எண்ணுவது போல காட்டினார்.

''அப்ப ஆமிக்காரனும் சம்பளம் தருவான். அவனிட்டையும் போய் வேலை செய்வியளோ'' என்று ரோட்டைப் பார்த்துக்கொண்டு நின்று கேட்டேன்.

''ஒப் கோர்ஸ்'' என்ற சத்தம் பின்னால் கேட்டது.

# 8

இவனை, தேவபாலுவை, சந்திரனை, காந்தனை இன்னும் ஊரின் இளைஞர்களை கைகளைப் பின்புறம் கட்டி வெறும் பென்ரரோடு குறுக்கும் மறுக்குமாக நிலத்தில் போட்டிருந்தார்கள். உடல் முழுவதும் முரட்டுச் சப்பாத்துக்களின் அடையாளம் புழுதியால் வரையப்பட்டிருந்தது. இரத்தம் கண்டிய காயங்கள் ஆங்காங்கே இருந்தன. நிறைய விபரிக்காமல் சுருக்கமாகச் சொல்வதென்றால், இரண்டு நாட்களாக இந்திய இராணுவம் இவர்களை மிதி மிதியென்று மிதிக்கிறது. இவர்கள் வலி பொறுக்காமல் துடி துடியென்று துடிக்கிறார்கள்.

பழைய செருப்புக் கள்ளனும் புதிய தேசத்துரோகியுமான நந்தபாலு சுடப்பட்ட அன்றைய பின்னேரம், இவன் சீக்காய் வயலுக்குள் புட்போல் விளையாடிக் கொண்டிருந்தான். துப்பாக்கி வெடிச்சத்தம் வயலின் முடிவிடத்தில் எதிரொலித்துக் கேட்ட போது ஒவ்வொருவராக வெளியேறத் தொடங்கினார்கள். இப்படிச் சத்தங்கள் கேட்டால் தெருவுக்கு இராணுவம் வந்துவிடும். நேரத்தோடு வீடுகளுக்குப் போய்விடவேண்டும். கேணியடியில் ஆள் நடமாட்டத்தைக் காணவில்லை. செத்துக் கிடந்த நந்தபாலுவின் தாயைத் தவிர தெரு யாருமற்று வெறிச்சோடியிருந்தது. அவள் அவனது தலையை மடியில் வைத்திருந்தாள். குண்டு தலையை துளையிட்டுச் சென்றிருக்க வேண்டும். இரத்தம் நந்தபாலுவின் நெற்றியிலும் கண்களிலுமாக வடிந்து மீசையில் ஊறி கடைவாயில் வழிவதுபோல் சொட்டிக் கொண்டிருந்தது. தாய் அவனது கன்னத்தில் தட்டித் தட்டிக் குழற நந்தபாலுவின் தலை அங்கேயும் இங்கேயுமென்று அசைந்தது.

“என்ரை குஞ்சு, இப்பிடிக் கொல்லக் குடுக்கத்தானோடா உன்னைச் சோறு போட்டு வளர்த்தனான்.. இஞ்சை பாரடா.. உன்ரை அம்மாவைப் பாரடா..” என்று அவள் பெருங்குரல் எடுத்துக் கத்தினாள். இவனுக்கு என்னவோ போல இருந்தது. திடீரென்று ஆவேசமுற்றவள், “என்ரை பெத்த வயிறெரிஞ்சு சொல்லுறன், உன்னைச் சுட்டவங்கள் புழுத்துத்தான் சாவாங்கள்” என்று

கைகளால் மண்ணை வாரி எறிந்தாள். இவன் சைக்கிளை விரைந்து மிதித்தான். கால்களில் குளிர் ஏறி நடுங்குவதைப் போல இருந்தது.

வீட்டிற்குள் நுழைந்தபோது ''கேணியடிப் பக்கமா என்னவோ சத்தம் கேட்டது'' என்றாள் அம்மா. இவன் தனக்கெதுவும் தெரியாது என்பதைப்போல தலையசைத்தான்.

இரவு பயங்கரக் கனவுகள் வந்தன. நந்தபாலு சிகரெட் புகைத்தபடி இராணுவப் பெரியவனின் அருகில் நின்றான். சிகரெட்டில் இருந்து மேகங்களையொத்த வெண்ணிறப் புகை வெளியேறி அவர்கள் நின்ற இடத்தை நிறைத்திருந்தது. இவன் இருமிக் கொண்டு நின்றான். தொண்டை கரகரக்குமாற் போல இருந்தது. இவனோடு புட்போல் விளையாடிய இளைஞர்கள் இருமிக் கொண்டு நந்தபாலுவின் முன் வரிசையாக நின்றார்கள். பிறகு இரண்டு சிப்பாய்கள் பனிக் காலங்களில் இவன் அணிகிற கறுப்பு நிற மப்ளரைக் கொண்டுவந்து நந்தபாலுவின் கண்களை மறைத்து முகத்தில் மாட்டினார்கள். அந்த மப்ளர் தன்னுடையது என்று இவன் கத்தினான். அது இவனது காதுகளுக்கும் கேட்காதிருந்தது. இராணுவப் பெரியவன் அதட்டும் குரலில் ''சொல் உன்னை யார் சுட்டு நீ செத்தாய்'' என்று நந்தபாலுவைக் கேட்டான். நந்தபாலு லேசாகச் சிரித்தபடி கைகளை மெதுவாகச் சுழற்றத் தொடங்கினான். சற்றைக்கெல்லாம் கைகள் வேகமெடுத்துச் சுற்றத் தொடங்கின. சிரிப்பின் சத்தமும் அகோரமாயிருந்தது. சட்டென்று பிறேக் அடித்ததுபோல அவன் நிறுத்தினான். அப்பொழுது நந்தபாலுவின் கை இவனை நோக்கி நீண்டு வளர்ந்து நெஞ்சில் தொட்டு நின்றது.

விடிவதற்கு நிறைய நேரம் இருக்கும் போதே இவன் திடுக்கிட்டு விழித்துக் கொண்டான். வியர்வையில் படுக்கை பிசு பிசுத்தபடியிருந்தது. எழுந்து உட்கார்ந்தான். ஜன்னலுக்கு வெளியே நிலத்தை இருள் மூடியிருந்தது. நிசப்தத்தைக் கிழித்தபடி தூரத்தே நாய்கள் குரைப்பது மெலிதாகக் கேட்கத் தொடங்கிய சற்றைக்குள் கனரக வாகனங்களின் உறுமல் சத்தங்கள் ஊரை நிறைத்தன.

அதிகாலை நான்கு மணிக்கெல்லாம் கிராமம் ரவுண்ட் அப் செய்யப்பட்டது. ஐந்து ஐந்தரைக்கெல்லாம் ஒவ்வொரு வீடுகளுக்குள்ளும் இந்திய இராணுவம்

புகுந்து கொண்டது. ஏழு மணியாகியபோது ஊரிலிருந்த இளைஞர்களை கேணியடியில் கொண்டுபோய் வரிசையில் இருத்தியது. இவன் தனது கால்களுக்குக் கீழே, சிவந்த வெற்றிலைச் சாறு ஊறியிருப்பது போல நந்தபாலுவின் ரத்தம் நிலத்தில் பரவிக் கிடந்ததைக் கண்டான்.

கேணியடிச் சந்தியில் மளிகைக் கடையொன்று இருந்தது. ஆனந்தா ஸ்ரோர்ஸ் என்று பெயர். கடைக்காரர் ஆனந்தியப்புவை ஆமிக்காரனொருவன் முதுகில் பிடித்துத் தள்ளிக் கொண்டு வந்தான். அவர் வெற்று உடம்புடனும் இடுப்பில் நழுவிய அழுக்குச் சாரத்துடனும் கைகளைக் கும்பிட்டபடி நடை தளர்ந்து வந்தார். இவன் அவரை நிமிர்ந்து பார்த்தான். கும்பிட்ட கைகள் நடுங்கிக் கொண்டிருந்தன. சிப்பாயொருவன் தமிழில் விசாரணைகளைத் தொடங்கினான்.

‘‘நேற்று நந்தபாலுவைச் சுட்டபோது நீ கடையைத் திறந்து வைத்திருந்தாயா’’

‘‘ஓம் சேர்..’’

‘‘என்ன நடந்தது.’’

‘‘இரண்டு பெடியங்கள் சைக்கிளில் வந்தவை. அதில ஒராளின்ரை சைக்கிள் பாரில நந்தபாலு இருந்தவர். பிறகு சந்தியில அவரை நிக்க வைச்சு ஏதோ வாசிக்கக் குடுத்தவை. பிறகு சுட்டுப் போட்டினம்’’

‘‘யார் சுட்டது..’’

‘‘தெரியா..’’ ஆனந்தியப்பு இன்னும் என்னவோ சொல்வதற்கு முயற்சித்தார். அதற்கு முன்னதாகவே ‘‘என்ரை அம்மாளாச்சி..’’ என்று கத்திக்கொண்டுபோய் முகம் குப்புற விழுந்தார். நாக்கை வெளியே தள்ளி பற்களால் கடித்தபடி முகத்தை விகாரப்படுத்திய சிப்பாயொருவன் தன் கால்களால் அவரை ஏறி மிதித்தான். ஆனந்தியப்புவின் வாயில் இருந்து கோழி கேருவதைப் போன்றதொரு ஒலி உண்டாகித் தேய்ந்தது. அதற்குப் பிறகு சத்தம் வரவில்லை. திரும்பவும் அவரின் கழுத்தைப் பிடித்து ஆமிக்காரன் தூக்கி நிறுத்தினான். அவர் தலையைத் தொங்கப் போட்டபடி விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தார். வாயிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. அவரை இளைஞர்களின் முன் இழுத்து வந்து நிறுத்தினார்கள்.

‘‘இவர்களில் நந்தபாலுவை சுட்டது யார்’’

ஆனந்தியப்பு ஒரு காலை இழுத்து இழுத்து நடந்தார். ஒவ்வொரு இளைஞனாக நிமிர்ந்து பார்ப்பதும் பிறகு தலையைத் தாழ்த்தியபடி அப்பால் நகர்வதுமாக அவர் இருந்தார். இவனதும் ஆனந்தியப்புவினதும் கண்கள் ஒருதடவை நேராய்ச் சந்தித்துக் கொண்டன. அவர் இவனையும் தாண்டிப் போனார்.

‘‘இல்லை சேர். இவையளில இல்லை. சுட்டவன் எங்கடை ஊர்க்காரனே இல்லை. அவனை நான் முன்னைப் பின்னை பார்த்ததும் இல்லை’’

இராணுவத்தினர் இவர்கள் ஒவ்வொருவரையும் சோதனை செய்தார்கள். சந்திரனிடம் இரண்டே இரண்டு கேள்விகளை அவர்கள் கேட்டார்கள். பிறகு போய் ட்ரக்கில் ஏறச் சொன்னார்கள். அவ்விரண்டு கேள்விகளும் பதில்களும் இப்படி இருந்தன.

‘‘பெயர் என்ன’’

‘‘சந்திரன்’’

‘‘முழுப்பெயர் என்ன’’

‘‘இராமச்சந்திரன்’’

‘‘போய் ஏறு..’’

இவனையும் தேவபாலுவையும் அவர்கள் இலகுவாக அடையாளம் கண்டுகொண்டார்கள்.

‘‘உனக்கும் நந்தபாலுவுக்கும் முதல்லயே ப்ராப்ளம் தானே’’ என்றான் அவர்களில் ஒருவன்.

இவன் எழுந்து சாரத்தைச் சரி செய்தான். ‘‘இல்லை சேர்.. அவர் என்ரை செருப்பைக் களவெடுத்து..’’ இராணுவக் கை இவனது முகத்தில் மூக்கை உடைத்துக் கொண்டு பதிந்தது. கண்கள் மேலே சொருகி இருண்டு கொண்டு வர இவன் குப்புற விழுந்தான். இவனது குண்டியில் ஏறியிருந்து கைகளை பின்புறமாக இழுத்து கட்டினார்கள். பிறகு உடல் தேயத் தேய ட்ரக்கிற்கு இழுத்துக் கொண்டு போனார்கள். மூக்கால் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. தெருவின் சிறிதும் பெரிதுமான கற்குறுணிகள் தோலைக் கிழித்தபடியிருந்தன.

இவன் கண்களை இறுக்க மூடி பல்லை கடித்து வலியைத் தாங்க முயற்சித்தான். சாரம் இடுப்பிலிருந்து நழுவி சுருண்டு கால்களில் இருந்தும் விலகியது. சாரம் கழன்றதைக் கண்ட சிப்பாய் இழுப்பதை நிறுத்தினான். இவனை மல்லாக்காகக் கிடத்தி சேட்டையும் கிழித்து எறிந்தான். திரும்பவும் வெறும் பென்ரரோடு கொற கொறவென்று இழுத்துக் கொண்டு போனான். அன்று இவனோடு தேவபாலுவும் இன்னும் ஏழு பேரும் பிடித்துச் செல்லப்பட்டார்கள்.

இந்திய ராணுவ முகாம்களில் மூக்கைச் சுழிக்கச் செய்யும் ஒருவித எண்ணெய் மணம் பரவியிருக்கும். அது என்னவோ சப்பாத்தி எண்ணெய் மணம் என்றார்கள். இவனை விசாரித்த முகாமிலும் அந்த மணம் இருந்தது. தலைப்பாகையும் தாடியும் வைத்த ஒருவன் இவர்களை விசாரணை செய்தான். அவனிலும் லேசாய் மணத்தது. இந்தியாவில் தலைப்பாகை வைத்தவர்களில் பாரதியாரையும் தாடி வைத்தவர்களில் திருவள்ளுவரையும் தவிர வேறு ஆட்களை இவனுக்குத் தெரிந்திருக்கவில்லை.

இவனது ஊரில் வேலாயுதம் பரியாரியின் வீட்டு விறாந்தைச் சுவரில் வரிசையாக இந்தியாக்காரர்களின் படங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றை நினைவில் கொண்டுவரப் பார்த்தான். ஹிப்பித்தலை வெட்டிய ஒரு அன்ரி, கண்ணாடிபோட்ட மொட்டைத்தாத்தா, காவிக்கலரில் தலைப்பாகை கட்டிய மீசையில்லாத மனிதர், வெள்ளைத்தலைப்பாகை கட்டிய மீசை வைத்த ஒருவர்.. ம்கூம்.. ஒருத்தர் கூட இந்த தாடிக்காரன் மாதிரி இருக்கவில்லை.

விசாரணையின் போது அவன் திரும்பத்திரும்ப ஒன்றைச் சொல்லிக் கொண்டிருந்தான். ‘‘இந்தியாவின் கொட்டைமாதிரி கீழே கிடக்கிற ஐலன்டில இருந்து கொண்டு ஆட்டமாடா போடுறீங்க’’

அவனின் விசாரணை வழிமுறைகளில் தீவிரம் மற்றும் மென்தீவிரம் என்று இரண்டு வகையிருந்தன. மென்தீவிரம் சிகரெட்டால் சுடுவதில் தொடங்கிய போது, தீவிரம் கொலையில் முடியலாம் என்று இவன் நம்பினான். அருகில் உட்கார்ந்து விசாரித்துக் கொண்டிக்கும் போதே, பதறாமல் கொள்ளாமல் தனது புகையும் சிகரெட்டின் நெருப்புத் தணலை அவன் இவர்களின் முதுகுத்

தசைகளில் வைத்து அழுத்தினான். தோலின் மெல்லிய மயிர்கள் பொசுங்குகிற மணத்தை அப்பொழுது உணரமுடிந்தது. தொண்டை கிழியக் கத்தாமல் அந்த வலியைத் தாங்கமுடியாது.

முதல்நாள் பொழுது சாயும் முன்னதாக மொத்த விசாரணையையும் தாடிக்காரன் முடித்துவிட்டான். ஒவ்வொரு விசாரணைக்குப் பிறகும் அவன் தன் மேசைக்குப் போயிருந்து மேசையில் தட தடவென்று தட்டினான். அவனது கதிரைக்குப் பின்புறத்தே சுவரில் பெரியதொரு இந்திய வரைபடம் ஒட்டப் பட்டிருந்தது. கீழே கொட்டை ஒரு பக்கம் வீங்கிப் போய்க் கிடந்ததை இவன் கண்டான்.

ஒரு முழு நாளுக்குப் பிறகு விசாரணைக் கேள்வியை அந்த அதிகாரி மாற்றினான். “நீங்கள் சுடவில்லையென்றால் யார் சுட்டது.”

இந்த தடவை விசாரணை சந்திரனிலிருந்து ஆரம்பித்தது. அவன் “தனக்குத் தெரியாது” என்றான். தணன்று கொண்டிருந்த சிகரெட் ஒன்று அவனது நெஞ்சில் மூன்றாவது ஓட்டையைப் போட்ட போது “சேர்.. சத்தியமா எனக்குத் தெரியாது சேர்.. நான் ஸ்ருடன்ற், மானிப்பாய் ஹின்டுவில படிக்கிறன்” என்று கெஞ்சினான். இறுதியில் சந்திரனின் இடது கைப்பெருவிரல் நகம் பிய்த்து எடுக்கப்பட்டபோது அவன் “வெற்றிதான் சுட்டது” என்று வீரிட்டுக் கத்தினான்.

சந்திரனின் நகம் குறட்டுக்குள் சிக்குப் பட்டிருந்த அதே நேரத்தில் ஆனந்தியப்பு கடையில் வெற்றி அரை றாத்தல் றோஸ் பாணும் கால் கிலோ வாழைப்பழமும் வாங்கிக் கொண்டு நின்றான். ஆனந்தியப்புவிற்குப் பதட்டமாக இருந்தது.

“இன்னும் ஏன் இந்த ஏரியாவில திரியிறாய். இங்கை காலமை ரவுண்ட் அப். எல்லாப்பெடியங்களையும் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள். இதுகளுக்கை நிற்காதே. கெதியா எங்கையாவது போய்த் தப்பு..” என்று அவர் அவனை விரட்டினார். வெற்றி வாசலைத்தாண்டிய சமநேரத்தில் இராணுவ முகாமில் தாடிக்காரன் சந்திரனைக் கேட்டான். “நல்லது. மை டியர் ப்ரண்ட், அப்படியே இங்கே யார் வெற்றியென்பதையும் சொல்லு..”

இப்பொழுது அவனது கையில் தோலில் வைத்து அழுத்தினால் வழுக்கியபடி வெட்டிச்செல்லக் கூடிய கூரான கத்தியொன்றிருந்தது.

இரவு ஏழு மணியாகியிருந்தபோது போது முகாமிற்கு சில தமிழ் இளைஞர்கள் வந்தார்கள். அவர்கள் விசிலடித்தபடி அங்கேயும் இங்கேயும் திரிந்தார்கள். தாடிக்காரனை அடிக்கடி சேர் என்று விளித்தார்கள். மற்றைய சிப்பாய்களோடு பகிடிகள் விட்டுச் சிரிப்பது போல சிரித்தார்கள். இவர்களைக் கடந்து போகின்ற சமயங்களில் தங்களுக்குள் அர்த்தத்துடன் பார்த்துக் கொண்டார்கள். மாலைக்குப் பிறகு விசாரணை எதுவும் நடக்கவில்லை. இவன் முதுகைச் சற்று நிமிர்த்தி சுவரோடு சாய்ந்து கொள்ளப் பார்த்தான். இடுப்பை வளைத்தபோது நாரிக்குள் விண் விண் என்று வலிகண்டது. உடம்பு முழுவதும் புண்ணாகிக் கிடந்தது. தெருவில் இழுத்த போது கல்லுக் கிழித்த முழங்காற் புண்கள் ஓரளவு ஆறி அயர் மூடியிருந்தன. அவற்றைச் சுற்றி வட்டமாகச் சொறியும் போது சுகமாயிருந்தது. இவன் சொறிந்தபடியிருந்தான்.

இரவு கவியத் தொடங்கிய போது ஊர் அடங்கியிருந்தது. முகாமிலிருந்து இவர்களை நடத்தியும் இழுத்தும் வந்து ஒவ்வொருவராக பஸ் ஒன்றினுள் ஏற்றினார்கள். சீற்றுக்களில் உட்கார முடியாதிருந்தவர்களை அவற்றுக்கிடையில் கிடத்தினார்கள். அப்படியானவர்களின் முனகல் ஒலிகள் கேட்டபடியிருந்தன. தமிழ் இளைஞர்களும் இன்னும் நாலைந்து இராணுவச் சிப்பாய்களும் ஏறிக் கொண்ட பிறகு ட்ரக் வண்டி புறப்பட்ட திசையில் அராலிச் சுடலை விரிந்து கிடந்தது.

தனது இறுதி நாள் இதுவென்று இவனுக்கு தெளிவாக விளங்கியிருந்தது. ஒரு வெறித்த நிலைக்கு இவன் வந்துவிட்டிருந்தான். அருகில் கை கால்களைக் குறண்டிக்கொண்டு தேவபாலு அனுங்கிக் கொண்டிருப்பதைப் பார்க்க அந்தரமாயிருந்தது. அவனுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்னர்தான் திருமணம் முடிந்திருந்தது. சிறுவயதுக் காதலில் சாதிப் பிரச்சனையில் வீட்டார் ஒத்துக் கொள்ளாமல் பிரச்சனைப்பட அவன் அவளை அழைத்துக் கொண்டு விசுவமடுவிற்கு ஓடியிருந்தான். நீண்டகாலத்துக்குப் பிறகு திரும்பி வந்தபோது தேவபாலுவின் அப்பா தனது சாவுக்குக் கூட அவன் வீட்டு வாசற் படியை மிதிக்கக் கூடாது என்று பிடிவாதமாகச் சொல்லிவிட்டிருந்தார். அவனுக்கு ஒரு குழந்தை பிறந்த பிறகு அம்மா அப்பாவிற்குத் தெரியாமல் களவாக வந்து போய்க்கொண்டிருந்தாள்.

ஒரு சோடிச் செருப்பிற்காக தேவபாலுவை நானே மரணவாசலுக்கு அழைத்துச் சென்றேன் என்று நினைத்தபோது இவனில் கண்ணீர் உகுத்தபடியிருந்தது. ஒரு வயதும் நிரம்பாத அவனின் குழந்தையின் சாபத்தில், செத்தபிறகும் நான் நிம்மதியடையப் போவதில்லை என்று நினைத்தான்.

சுடலையில் மத்தியான நேரத்துச் சவம் ஒன்று புகைந்து கொண்டிருந்தது. பிரேதத்தை எரிக்கிற போது உடனடியாகக் கிளம்பும் மணங்கள் தணிந்திருந்தன. பஸ்ஸிலிருந்து ஆமிக்காரர்களும் மற்றையவர்களும் தொப் தொப் என்று குதித்தார்கள். இவர்கள் அவ்வளவு பேரையும் இழுத்துக் கீழே போட்டார்கள். இருளில் கரிய உருவங்களாக அவர்கள் அசைந்தார்கள்.

‘‘எல்லாரும் அப்பிடி அப்பிடியே குப்புறப் படுங்க’’

துப்பாக்கி லோட் செய்யப்படுகிற சத்தம் எதையோ முறிக்கிற மாதிரிக் கேட்டது.

‘‘ஒருவரும் குளறவோ கத்தி ஆர்ப்பாட்டம் செய்யவோ கூடாது. அப்பிடி ஏதாவது நடந்தால் மண்டை சிதறும், இல்லாவிட்டாலும் சிதறும் ஹா ஹா’’ என்று சிரித்த குரல் தேய்ந்த கொஞ்ச நேரத்தில் சத்தம் கேட்டது.

‘‘டட் டட்’’

இவனது இரத்தம் சில்லிட்டு உறைந்ததைப் போல உணர்ந்தான். அடிவயிற்றுக்குள் குளிர்ந்தது. வாயிலிருந்து எச்சில் தன்பாட்டில் வழிந்து கொண்டிருந்தது. பிறகு இன்னுமொரு வெடியொலி கேட்டது. ஒவ்வொரு சத்தத்தின் போதும் இவன் கண்களை இறுக்க மூடிக்கொண்டான். சத்தங்கள் ஒன்று இரண்டு மூன்று எனத் தொடர்ந்து கொண்டிருந்தன. அடுத்த குண்டு தனக்கானது என்ற நினைப்பு ஒவ்வொரு முறையும் உள்ளே ஓடிற்று. ஏழு அல்லது எட்டுக் குண்டுகள் பாய்ந்த பிறகும் இவன் உயிரோடிருந்து அழுதுகொண்டிருந்தான்.

தேவபாலுவின் அனுங்கல் குரல் கேட்டது. திடீரென்று சிரிப்புச் சத்தங்களும் கேட்டன. அது கொலைச் சிரிப்பாக இருக்கக் கூடும் என்று நினைத்தான்.

‘‘என்ன எல்லாரும் பயந்திட்டியளே.. ஹா ஹா சரி, சரி எழும்பலாம்’’ செருப்பணிந்த கால்கள் இவனின் முதுகில் தள்ளி உடலைத் திருப்ப

முயற்சித்தன. தலையை மெதுவாகத் திருப்பினான். பக்கத்தில் காந்தன் அசைவது தெரிந்தது. உடம்பு எல்லா மூட்டுக்களிலும் கொழுவி இழுப்பது போல் வலித்தது. படுத்திருந்தபடியே உடலைத் திருப்பினான். துவக்குகளை மேலே உயர்த்திப் பிடித்தபடி தமிழ் இளைஞர்கள் நின்றிருந்தார்கள். "உங்களுக்கு நல்ல சாவே வராதடா நாயளே" என்ற வார்த்தைகள் இவனது உதடுவரை வந்து நின்றன.

"நீங்கள் ஏன் சாகவேணும்." என்று துப்பாக்கி மனிதர்களில் ஒருவன் கேட்டான். "வடிவா யோசிச்சுப் பாருங்க. எல்லாத்திற்கும் யார் காரணம் என்று யோசித்துப் பாருங்க. புலிகள் தங்கடை தாச்சி விளையாட்டை நிற்பாட்டும் வரைக்கும் இதுமாதிரியான சம்பவங்கள் நடக்கத் தான் செய்யும். அல்லது புலிகளை இல்லாமல் செய்யும் வரைக்கும்." அவன் நிறுத்தி சற்று நேரம் அமைதியாயிருந்தான். பிறகு "நீங்கள் ஏன் எங்களோடு சேரக் கூடாது." என்று கேட்டான்.

"எங்களுக்குப் பின்னால இந்தியா நிற்குது. எங்களோடை நிறையப் பேர் சேர்ந்து கொண்டிருக்கினம். நீங்களும் சேருங்க விட்டு விடுகிறோம்."

யாரும் எதுவும் பேசவில்லை.

அவன் சின்ன இடைவெளி விட்டுத் தொடர்ந்தான். "இல்லாட்டி வேறை வழி இல்லை. எல்லாரும் இப்பொழுதே போய்ச்சேர வேண்டியதுதான். ம். யாரெல்லாம் வாறியள்.. யாரெல்லாம் போறியள்.. "

சந்திரன்தான் முதலில் கையை உயர்த்தினான். பிறகு தேவபாலு இரண்டு கைகளையும் சரண்டர் ஆவதைப் போல உயர்த்தினான். மூன்றாவதாக இவனது கை உயர்ந்தது.

இரண்டாவது நாள் துவக்குச் சுடவும் கிரேனைட்டை கழட்டி எறியவும் இவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள். அப்படியே இரண்டு மூன்று நாள் பயிற்சிகள் கடந்த பிறகு ஒருநாள் இவன் பொறுப்பாளரிடம் தயங்கித் தயங்கிக் கேட்டான்.

"அண்ணன், எங்கடை தலைவர் யார் என்று இண்டைக்கு வரைக்கும் சொல்லேல்லை"

“இதென்ன வெட்கக் கேடு. எங்கடை தலைவர் வரதராஜப்பெருமாள்தானே”

இந்தச் சனியன்களிடமிருந்து தன்னைக் காப்பாற்றினால் பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு வருடா வருடம் காவடி எடுப்பதாக அந்தக் கணத்தில் இவன் நேர்த்தியொன்றை வைத்தான்.

# 9

தேவி ஊருக்குள் அவள் நிறையப் பெயர்களால் அறியப்பட்டிருந்தாள். ஒரு விசரியாக, ஒரு வேலைக்காரியாக, ஒரு மா இடிக்கிற பெட்டையாக, ஒரு குப்பை கூட்டுகிறவளாக, ஒரு விளையாட்டுக்காரியாக, ஒரு குடிகாரனின் மகளாக அவள் இருந்தாள். அவளைப் பற்றி நினைப்பெதுவும் கொண்டிராது தேவியின் அப்பா பாதி நேரம் தவறணையில் கள்ளும் பிளாவுமாக இருந்தார். மீதி நேரம் மூசி மூசி நித்திரை கொண்டார்.

தேவி அவளது அம்மாவை தனது பதின்மூன்றாவது வயதில் இழந்திருந்தாள். அன்றைக்கு இரவு, பலாலி இராணுவ முகாமிலிருந்து மூன்றே மூன்று ஆட்லறி நீண்டதூர ஷெல்களை இலங்கைப் படையினர் ஏவினார்கள். ஆயுதமோதல் வரலாற்றின் முதல் மூன்று ஆட்லறிகளாக அவையிருந்தன. இரவைக் கிழித்தெறியும் இரைச்சலோடு வானில் மீண்டும் ஒருமுறை வெடித்துப் பயணித்து விழுந்த முதலாவது ஷெல் சீக்காய் வயற்காணிக்குள் விழுந்து பெரும் பள்ளமொன்றினை தோண்டியது. சூழ இருந்த பனைமரங்களில் கோடாலியால் கொத்தியது போல கண்டபடிக்கு வெட்டுக்காயங்கள் விழுந்தன. அடுத்த ஷெல், மாயவர் கோயிலின் கிணற்றடியில் வாழைமரங்களை வெட்டிச் சரித்து வெடித்திருந்தது. மாயவர் தப்பித்திருந்தார். ஆனால் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை இரவுகளிலும் உடல் முழுக்க வீபூதியும் கழுத்தில் எலுமிச்சை மாலையும் தரித்து பறை முழங்க, தலையை ஆட்டியபடி மாயவர் உருவேறி வருகிற மனிதருக்கு தொடையோடு பிய்ந்து போயிருந்தது.

கடைசிச் ஷெல் தேவியின் அம்மாவின் தலையில் விழுந்திராவிட்டால் பின்வரும் எதுவும் நடந்திருக்காது. அவளது பிய்ந்த உடற் துண்டுகள் சிதறிக் கிடந்தன. தோள் மூட்டிலிருந்து பிய்க்கப்பட்ட ஒற்றைக் கையொன்று விரல்களைப் பொத்தியபடி முற்றத்தில் கிடந்தது. தசைத் துணுக்குகள் சிறிய நத்தைகளைப் போல சுவர்களில் ஒட்டியிருந்தன. தலையோட்டினில் இருந்து மூளை திரவக் கூழாகி ஒழுகியபடியிருந்தது. நீண்ட அவளது கூந்தல் ரத்தத்தில் குமைந்திருந்தது.

வெள்ளை வேட்டியொன்றில் தேவியின் அம்மாவின் சிதறிய உடற்துண்டுகளைச் சேர்த்து ஒன்றாக்கியபோது அது தலையணை அளவில் இருந்தது. அதனைச் சுற்றி நாலைந்துபேர் ஒப்பாரிவைத்தபோது சற்றுத்தொலைவில் தேவி, எல்லாப்பக்கங்களிலும் இரத்தம் ஊறியிருந்த அந்த வெள்ளை மூட்டையை வைத்தகண் வாங்காமல் பார்த்தபடியிருந்தாள். அவளது பின்னந்தலையைச் சுற்றி கட்டு இட்டிருந்தார்கள். கைகளில் சிராய்ப்புக் காயங்கள் இருந்தன.

‘‘விளக்கைப்பிடி நானும் வாறன், நான் வராட்டி, நீ முற்றத்தில் ஒண்டுக்கு இருந்துவிட்டு வந்திடுவாய்’’

அவர்கள் அடிவளவுக்குப் போயிருந்தார்கள்.

‘‘நல்ல நிலவு வெளிச்சம், காலைக் கழுவிப்போட்டு வந்து படு’’

முற்றத்து தென்னையின் அருகில் பாத்திரங்கள் கழுவுமிடத்தில் வாளிக்குள் தண்ணீர் இருந்தது. அதனை சரித்து ஊற்றி காற்பெருவிரலால் மறு புறங்காலைத் தேய்த்துக் கழுவியபோது அம்மா வாசலைக் கடந்து உட்சென்றாள். அப்பொழுது ஸ்ஸ் என்ற பேரிரைச்சலும் மரங்கள் முறிவதைப் போன்ற சத்தமும் பீதியுண்டாக்கும் படி கேட்டன. கணத்தில், பெரும் வெடிப்பொலியையும், பிழம்பு போல் தோன்றிய ஒளித் திரளையும் தேவி உணர்ந்தாள். அவள் துாக்கியெறியப்பட்ட கணமாகவும் அது இருந்தது.

வெண்ணிற மூட்டை முழுவதும் சிவப்பாகியிருந்தது. தேவியை அதன் அருகாக அழைத்தபோது அவள் பலமாக தலையையும் கைகளையும் ஆட்டி மறுத்தாள். வாய் இன்னதென அறியமுடியாத சொற்களை பிதற்றத்தொடங்கியது. தலை கவிழ்ந்திருக்க அவளது சுண்டுவிரல் மண்ணில் கோடுகளையும் வட்டங்களையும் வரைந்தபடியிருந்தது.

தேவியின் அம்மாவின் உடற்துண்டுகளைச் சுமந்தபடி பச்சைத் தென்னை ஓலையால் பின்னப்பட்ட சிறிய பாடையொன்று படலையைத் தாண்டிய பொழுது ‘‘அம்மா’’ என்ற தீனமான ஒலி தேவியிடத்தில் உண்டானது. அன்றைய நாளுக்கு சரியாக பன்னிரண்டு நாட்களின் பிறகு தேவி சாமத்தியப்பட்டாள்.

சிறுவர்கள் தேவியை லூசுத் தேவி என்று பின்னால் நின்று கைதட்டிச் சிரித்தார்கள். தேவி கற்களைப் பொறுக்கி அவர்கள் மீது ‘‘ஓடுங்கோடா’’ என்று

விட்டெறிந்தாள். ஒன்றிரண்டு நாட்களில் அதைப்பற்றிய நினைப்பு சற்றும் இல்லாமல், அவர்களோடு கிளித்தட்டு விளையாடினாள்.

கிளித்தட்டு விளையாட்டில் அவள் ஒரு சூரியாக இருந்தாள். ஒவ்வொரு லைனிலும் தன்னை மறித்து நிற்பவர்களுக்கு அங்கேயும் இங்கேயும் பாய்வதைப் போல பாவனை காட்டிவிட்டு அவள் கோடுகளைத் தாண்டிப் பாய்வது ஒரு குதிரை பாய்வது போல இருக்கும்.

ஒரே பாய்ச்சலில் கோடுகளைத் தாண்டி விட வேண்டுமென்பதைத் தவிர அவள் மூளைக்கு எதுவும் தோன்றுவதில்லை. சில சமயங்களில் பதினைந்துகளை நெருங்கிய விடலைகள் தேவி கோட்டைத் தாண்ட முன்னரே வேண்டுமென்று அவளது நெஞ்சில் அடித்து "அவுட்" என்பார்கள். அப்பொழுதும் கூட முதலில் "இது அளாப்பி ஆட்டம்" என்ற அவளது மறுப்புத்தான் பெரும் குரலில் வரும். சில வேளைகளில் "இப்பிடி அளாப்பினால் நான் விளையாட வரமாட்டன்" என்பாள்.

தேவிக்கென நாள் கடமைகள் எதுவும் இருந்ததில்லை. அவளுக்கு ஊரில் எல்லோரையும் தெரிந்திருந்தது. மத்தியானப் பொழுதுகளில் எந்த வீடென்றாலும் நுழைந்து "பசிக்குது.. " என்பாள். அப்படிச் சொல்லும்போது வயிற்றைத் தடவியபடியிருப்பாள். தலையை ஒரு மாதிரிச் சரித்துக் கெஞ்சுவதைப் போல அது இருக்கும். அப்படியான நேரங்களில் அவளுக்குச் சொல்லப்படுகிற பலதரப்பட்ட பதில்கள் அந்த ஊரில் இருந்தன.

"உதில இருந்து சாப்பிட்டுட்டுப் போ.."

"சோறு அடுப்பில, அதுவரைக்கும் உந்த முற்றத்தைக் கூட்டியள்ளி கொழுத்தி எரி, கூப்பிடுறன்."

"இந்தா, உந்தக் கிழிஞ்ச உடுப்பைப் போட்டுக் கொண்டு திரியாமல், இதில ரண்டு பழைய சட்டை கிடக்கு. மாத்திப் போடு.."

"ஆம்பிளையள் புழங்கிற வீடு, உப்பிடி உடம்பு தெரியிறமாதிரிக் கிளிஞ்ச சட்டையளோடை வராதை. போ.."

தேவி எந்த ஒரு வேலைக்கும் பின்னடித்ததில்லை. மாடு போல அவளால் வேலை செய்ய முடியும். தனி ஒருத்தியாக மூச்சை பெரும் சத்தத்தோடு

விடுவித்து உரலில் மா இடிக்கும் வேளைகளில் நிலம் திண் திண் என்று அதிர்ந்து கொண்டிருக்கும்.

நிவாரண நாட்களில் சங்கக் கடையில் சனங்கள் முண்டியடித்தபடியிருப்பார்கள். தேவியைக் கூப்பிட்டு ‘‘போய் இடம் பிடிச்சு வை. வருகிறோம்’’ என்றால் மனேஜர் சங்கக் கடையைத் திறக்கிற போது தேவி வாசலில் தூங்கி வழிந்தபடி முதல் ஆளாக நிற்பாள்.

‘‘புளி காயப் போட்டிருக்கு.. கோழியோ காகமோ கிட்டவராமல் பார்’’ என்றால் சுள்ளித் தடியொன்றை ஏந்தியபடி சூய் சூய் என்றுகொண்டு சுழன்று திரிவாள்.

தேவிக்கு சம்பளமென்று யாரும் கொடுப்பதில்லை. சாப்பாடும் எப்போதாவது பழைய துணிமணிகளும் கொடுப்பார்கள். இப்படித்தான் ஒருநாள் இந்திய இராணுவத்தைச் சேர்ந்த இரண்டு பேர் அவளுக்குச் சாப்பாடு கொடுத்தார்கள்.

ஒரு செக்போஸ்ட் கூண்டிலிருந்து அவர்கள் தேவியை அழைத்தார்கள். தறித்த பனைமரக் குற்றிகளால் அடுக்கப்பட்டிருந்த கூடுக்குள் சிறிய ஜன்னலுக்கால் துப்பாக்கியை நீட்டியபடி அவர்கள் இருந்தார்கள். தேவி தலையைச் சொறிந்து கொண்டு போனாள்.

‘‘எங்கே போகிறாய்’’ என்று அவர்களில் ஒருவன் கேட்டான்.

‘‘பசிக்குது’’ என்று தேவி சொன்னாள். துப்பாக்கிக் குழலுக்குச் சமாந்தரமாக அவர்களில் ஒருவன் நீட்டிய கைகளில் இரண்டு சப்பாத்திகள் இருந்தன. தேவி தயங்கியபடி நின்றாள். நீண்டிருந்த துப்பாக்கிகள் அவளுக்குப் பயத்தை உண்டுபண்ணின. கண்களில் அச்சம் நிறைந்திருக்க அவள் துப்பாக்கியையும் சப்பாத்தியையும் மாறி மாறிப் பார்த்தபடி நின்றிருந்தாள்.

இராணுவத்தினர் துப்பாக்கியை உள்ளே இழுத்தனர். பிறகு ‘‘சாப்பிடு.. ’’ என்றனர்.

தேவியை ஒருவன் உள்ளே அழைத்துச் சென்றான். நீண்ட நேரத்திற்குப் பிறகு அவள் புறங்கைகளால் கண்களை அழுத்தித் துடைத்தபடி அழுது கொண்டு வந்தாள். பிறகு மற்றவனும் அவளை இழுத்தான். ‘‘அம்மா..’’ என்று ஒரு குழந்தையைப் போல தேவி குலுங்கியழுதாள். ‘‘என்னை விடுங்கோ.. எனக்குப் பசிக்கேல்லை’’ என்று அரற்றினாள். அன்றைக்குப் பிறகு இராணுவ

ரோந்துகளில் தேவியை எங்காவது பார்த்தால், சாப்பாடு தருவதாக சிப்பாய்கள் கூட்டிப்போனார்கள்.

இப்போதெல்லாம் தேவிக்கு நிறையைப் பசிக்கத் தொடங்கியிருந்தது. அவளால் முன்னரைப் போல நீண்ட வேலைகள் செய்ய முடிவதில்லை. மா இடிக்க முடியாமல் மூச்சு முட்டி இளைத்தது. நீண்ட நேரம் வெயிலுக்குள் நிற்க முடியவில்லை. கால்கள் உளைவெடுத்து துவண்டன. ‘‘பசிக்குது’’ என்று வயிற்றைத் தடவுகிற நேரங்களில் அங்கே என்னவோ வித்தியாசத்தை அவள் உணர்ந்தாள்.

தேவிக்கு குழந்தை பிறப்பதற்கு இரண்டொரு மாதங்களே இருந்த ஒரு பேய் மழை பெய்த இரவில் ஊருக்குள் ஒரு வெடிச்சத்தம் கேட்டது. நிலம் ஈரலிப்பாக இருந்ததனால், துப்பாக்கியொலி வீட்டின் பின்புறத்தில் கேட்டதாக ஊரார் ஒவ்வொருவரும் உணர்ந்தனர். அடுத்த நாள் காலை வயிற்றைத் துளைத்த சூட்டுக்காயத்துடன் தேவியின் ஊதிப்பெருத்த உடலை வயற்காணிக் கிணற்றுக்குள் கண்டுபிடித்தார்கள். அப்பொழுதும் ஊரில் பலதரப்பட்ட கதைகள் அவளைப் பற்றி இருந்தன.

‘‘தேவியொரு உளவாளியாம்.. ஆமிக்காரங்களுக்கு மெசேச் எடுத்துக் குடுக்கிறவளாம்..’’

‘‘இவள் ஏதோ ஆமிக்காரங்களோடை போய்ச் சண்டை பிடிச்சவளாம். அவங்கள்தான் சுட்டுட்டாங்கள்’’

‘‘ஆமியோட தொடர்பு எண்டு இயக்கம்தான் போட்டதாம்’’

‘‘தேவிக்கு இது நல்ல சாவு, கிடந்து உழலாமல் போய்ச் சேர்ந்திட்டாள்’’

# 10

''இப்ப நாங்கள் இந்தியாவைக் கடந்து வந்திருப்பமே'' என்று நிர்மலன் பெரியய்யாவைக் கேட்டான். அவர் கைகளை விரித்து ''ஆருக்குத் தெரியும்.. '' என்று சொன்னார். அப்படியொரு விரக்தியான மனநிலையில்தான் எல்லோரும் வள்ளத்தில் இருந்தார்கள்.

பன்னிரண்டு நாட்களாகியும் நிலத்தைக் காணவில்லையென்ற கலவரம் எல்லா முகங்களிலும் இருந்தது. முன்னைரைப் போன்ற கலகலப்பும் குறைந்திருந்தது. எல்லோரும் சலித்துக் கொள்ளத் தொடங்கியிருந்தார்கள். இரவு கண்ணயரும் போது ''இன்றைய இரவுப் பயணத்தின் முடிவில் நாளை கண் விழிக்கும் போது நிலம் வெளிக்கும்'' என்ற நப்பாசைகள் ஒவ்வொரு விடியலின் போதும் நிராசைகள் ஆயின.

ஓட்டிகள் எதைப் பற்றியும் மூச்சு விடுகிறார்களில்லை. ஒன்றிரண்டு தடவைகள் அவர்களோடு கொழுவுப்பாடும் வந்தது. நேற்றைக்கு முன்தினம் மம்மல் பொழுதில் கடலுக்குள் சூரியன் முழுவதுமாகத் தாழ்ந்த பின்னரும் வெளிச்சமிருந்தது. ஓட்டிகளில் ஒருவன் ஓரமாக நின்று சிகரெட் புகைத்தபடி நின்றான். இளைஞன் ஒருவனின் பெயர் தெரியவில்லை, அவன் ஓட்டியை நெருங்கி ''உப்பிடியே போய்க்கொண்டிருந்தால் எப்பிடி, இன்னும் எத்தினை நாளில இத்தாலிக்கு போவியள் எண்டதைச் சொல்லலாம் தானே'' என்று கேட்டான். ஓட்டி அவனைப் பொருட்படுத்தாதவனாக மறுபக்கம் திரும்பி நின்று புகை ஊதி வெளியேற்றினான். இளைஞன் ஓட்டியின் தோள்களில் கை வைத்து அவனைத் திருப்பினான்.

''நான் விசரன் மாதிரி கேட்டுக்கொண்டிருக்கிறன். நீர் விறைச்ச தலையன் மாதிரி நிற்கிறீர். நாங்கள் லட்சக்கணக்கில காசு கட்டியிருக்கிறம். மரியாதையா பதில் சொல்ல வேணும்..''

ஓட்டி இளைஞனது கையை வெடுக்கென தட்டி விட்டான். ''ஹலோ நீங்க உடன போகவேணும் என்றால் பிளேனில போயிருக்கணும். இதில வந்திருக்கக் கூடாது. போட் இப்பிடித்தான் போகும். சரியா''

‘‘என்ன செருக்கு கதை கதைக்கிறீர்..’’ இளைஞன் ஓட்டியின் நெஞ்சைத் தள்ளியபடி சற்று முன்னால் போனான். சிகரெட்டைத் தூர வீசிய ஓட்டி இளைஞனை இழுத்துச் சுற்றி கைகளால் இறுக்கிக் கொண்டான். இதற்கிடையில் ஆட்கள் கூடியிருந்தார்கள். பெரியய்யா இருவரையும் விடுவித்தார்.

‘‘விடுங்கோடா.. விடுங்கோடா.. மனிசர் எப்ப கரையைக் காணுவம் எண்ட தவிப்பில இருக்கினம். நீங்கள் என்னடா என்றால் கட்டிப் பிரண்டு சண்டை போட்டுக் கொண்டிருக்கிறயள்’’ பெரியய்யா இளைஞனை இழுத்து தனக்குப் பின்னால் வைத்துக் கொண்டார். பிறகு ஓட்டியைப் பார்த்து ‘‘சொறி தம்பி, ஏதோ கோபத்தில நடந்து போட்டுது. நீங்கள் இதைப் பெரிசா எடுக்க வேண்டாம்’’ என்று சமாதானப்படுத்தினார்.

‘‘சிங்களவன்தான் றோலரை ஓட்டப்போறான் எண்டு முதலே தெரிஞ்சிருந்தா நான் கடைசி வரைக்கும் வந்திருக்கமாட்டன்’’ என்று முணுமுணுத்துக் கொண்டு இளைஞன் நகர்ந்து போனான்.

இவன் கால்களை நீட்டி உட்கார்ந்திருந்தான். கால்களுக்கு மேலே ட்ரவலிங் பை கிடந்தது. பொக்கற்றுக்குள் வீபூதி சுற்றப்பட்டிருந்த வெற்றிலை காய்ந்து சருகாகி தூள் தூளாய் ஆகியிருந்தது. அவற்றை உள்ளங்கைகளில் வைத்துக் கொண்டான். அந்த வெற்றிலையில் அகிலாவின் கை பட்டது என்ற நினைப்பு நெஞ்சை அழுத்தியபடியிருந்தது.

நாரியில் நோவெடுத்து வலித்தது. இந்திய இராணுவம் ட்ரக்கில் தூக்கி எறிந்த அன்றைக்கு பிறகு இவனால் ஒரு இடத்தில் நிறைய நேரம் உட்கார முடிவதில்லை. உடம்பு நிறைய இடங்களில் குத்தி உளைந்தது. இப்படி ஆகினால் கட்டாயம் காய்ச்சல் வரும். ஏற்கனவே வள்ளத்தில் நிறையப் பேருக்கு காய்ச்சலும் வாந்தியுமாக இருக்கிறது.

சின்னப்பெடியன் இரண்டு நாட்களாக காய்ச்சலில் கிடக்கிறான். அன்றைக்குக் காலையில் இருந்தே தலையைக் கவிழ்த்து, முழங்கால்களை மடித்து கைகளை தொடைகளுக்குள் செருகி கருப்பையில் ஒரு குழந்தையைப் போல அவன் சுருண்டபடி கிடந்தான். அப்பொழுது லேசான கணகணப்பாகத்தான் இருந்தது. பின்னேரத்திற்குள் அனலாகக் கொதிக்கத் தொடங்கியது.

கம்பளியொன்றால் அவனைச் சுற்றி கீழ் அறையில் வளர்த்தினார்கள். அதற்குப் பிறகும் கூதலில் அவனது உடம்பு தூக்கித் தூக்கி அடித்தது. பெரியய்யா அவனை வெகு கவனமாகப் பார்த்துக் கொண்டார். அவனது உடம்பு நடுங்கத் தொடங்கிய போது பண்டாரதான் ஓடிப்போய் தனது கம்பளியை எடுத்து வந்து அவனின் மேல் போர்த்தான்.

அவனும் சிங்கள இளைஞர்களும் சற்று நெருக்கமாக மற்றவர்களோடும் கதைக்கத் தொடங்கியிருந்தார்கள். அதனால் மாலைப் பொழுதுகளில் கார்ட்ஸ் விளையாடும் போது அவர்களையும் கூப்பிட்டு இருத்திக் கொண்டார்கள். ஊர்க் கதைகளும், பகிடிக் கதைகளுமாக அந்த நேரங்கள் கரைந்தன. அப்படியான ஒரு நாளிலேயே எவரும் கேட்காமல் பெரியய்யா தன் கதையைச் சொல்லத் தொடங்கினார்.

பெரியய்யா ஆறு சகோதரங்களின் அண்ணனாக இருந்தார். அவரையும் கடைக்குட்டியையும் தவிர்த்து மற்றதெல்லாம் பெண்பிள்ளைகள். அவருக்கு நேர் மூத்தவள் கல்யாண வயதைத் தாண்டிய பிறகு எண்பத்தேழில் அவர் சவுதிக்குப் போயிருந்தார். நான்கு பெண் சகோதரங்களுக்கும் கேட்கிற சீதனம் கொடுத்துக் கட்டிக்கொடுத்த போது அவருக்கு நாற்பது வயது முடிந்திருந்தது. கடைக்குட்டி பொடியன் மீது பெரியய்யா நல்ல பாசம் வைத்திருந்தார். வேலைக்குப் போன இடத்தில் நெஞ்சைப் பொத்திக் கொண்டு சரிந்த பெரியய்யாவின் அப்பாவை பிரேதமாக வீட்டுக்கு கொண்டு வளர்த்தியபோது கடைக்குட்டி தவழத் தொடங்கியிருந்தான். அன்றைக்கு பிரேதம் கிடந்த கட்டில் கால்களுக்கிடையில் அவன் தத்தித் தவழ்ந்து கொண்டிருந்த காட்சி இப்பொழுதும் பெரியய்யாவின் நெஞ்சுக்குள் நிற்கிறது.

சவுதிக்கு தாமதமாக வந்த கடிதமொன்றில் கடைக்குட்டி எங்களையெல்லாம் விட்டுவிட்டு இயக்கத்துக்குப் போய்விட்டான் என்றிருந்தபோது பெரியய்யா நிலைகுலைந்து போனார். தான் ஒரு கல்யாணம் முடிக்க முதல் கடைக்குட்டியை ஐரோப்பிய நாடொன்றுக்கு அனுப்பிவிட்டால் தனது கடமைகள் முடிந்து விடும் என்று அவர் நம்பியிருந்தார்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் பெரியய்யா ஊருக்கு வந்து கல்யாணம் கட்டினார். இப்பொழுது இரண்டு வயதில் குழந்தையொன்று இருக்கிறது.

சமாதான நேரத்தில் பாதைகள் திறந்தன. புலிகள் யாழ்ப்பாணம் வந்து அலுவலகங்களைத் திறந்தார்கள். பெரியய்யா கடைக்குட்டியின் வரவை எதிர்பார்த்திருந்தார். அவர் அவனுக்காக ஜில்லட் சேவிங் ரேசர், ஹொரக்கெடெயில் டீ சேர்ட்டுகள், நைக் காலணிகள் உடுப்புக்கள் என வாங்கி வைத்திருந்தார். கடைக்குட்டியைத் தேடி கொக்குவில்லுக்கும், கிளிநொச்சிக்கும், புதுக்குடியிருப்புக்கும் பெரியய்யா அலைந்து திரிந்தார். யாருக்கும் அவனைக் குறித்துத் தெரிந்திருக்கவில்லை.

அப்படியொருநாள், புதுக்குடியிருப்பில் வைத்து "கனகாலத்துக்கு முன்னர் சேர்ந்தது என்று சொல்லுறீங்கள். அவர் எங்கடை இயக்கத்திலதான் சேர்ந்தவரோ அல்லது வேற இயக்கமோ" என்று பெரியய்யாவைக் கேட்டார்கள். அவரிடமிருந்து நீண்டதொரு பெருமூச்சு வெளியேறியது. பெரியய்யா அமைதியாக "அவனுக்கு நினைவு தெரிந்து இதுதான் ஆமி, இதுதான் இயக்கம், இதுதான் துவக்கு என்று அறிய முதலே நீங்கள் மற்ற இயக்கங்களை முடிச்சு புதைச்ச இடத்தில புல்லும் முளைத்திருந்தது" என்று சொன்னார்.

"மாவீரர் பட்டியலில் பார்த்தனீங்களா.."

பெரியய்யாவுக்கு திக் என்றது. அவர் அந்தக் கோணத்தில் யோசித்திருக்கவே இல்லை. அழுகை வந்துவிடும் போல் இருந்தது. மனதைக் கல்லாக்கிக் கொண்டு அவர் அப்படியும் தேடிப்பார்த்தார். ஆனால் மாவீரர் பணிமனைக் காரர்களும் கைவிரித்தார்கள். ஒருவிதத்தில் பெரியய்யாவுக்கு அது மகிழ்ச்சியாகவும் இருந்தது.

இதற்கிடையில் கொழும்பில் கடைக்குட்டியை கண்டு பேசியிருந்த அவனது சினேகிதன் ஒருவனை பெரியய்யா சந்தித்திருந்தார். கடைக்குட்டி நன்றாக சேவ் செய்த வழுவழுத்த முகத்தோடும், விலையுயர்ந்த டெனிம் ஜீன்சும் ஹொரக்கெடெயில் ரீ சேர்ட்டும், நைக் காலணியும் அணிந்து வெள்ளவத்தையில் நின்றானாம். சினேகிதனைக் கண்டும் காணாமல் போகப் பார்த்திருக்கிறான். இவன் ஓடிப்போய் மறித்து விசாரித்தபோது, எல்லாவற்றையும் விட்டுவிட்டு வெளிநாடு போக வந்து நிற்கிறேன் என்றும் எல்லாம் அண்ணையின் ஏற்பாடுதான் என்றும் சொல்லியிருந்தானாம்.

அன்றைக்கு ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு கலதாரி ஹொட்டல் கார்ப் பார்க்கில் குண்டுகளோடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்று வெடித்து கொழும்பை அதிரச் செய்திருந்தது. சம நேரத்தில் வெளியே வாகனத்தில் இருந்து குதித்த இளைஞர்கள் ஹொட்டலை நோக்கி சரமாரியாகச் சுடத்தொடங்கினார்கள். சற்று நேரத்தில் ட்ரக்குகளில் வந்து குவிந்த இராணுவத்தினர் தட தடவெனக் குதித்து நிலையெடுத்து தாக்க ஆரம்பித்தார்கள்.

இராணுவத்தினர் இளைஞர்களைத் துரத்திச் சென்றனர். சம்புத்தலோகா விகாரைக்கு அருகாக இளைஞர்களில் ஒருவன் குண்டடிபட்டு விழுந்தான். அருகில் லேக்ஹவுஸ் கட்டடத்தில் நுழைந்த மூன்று இளைஞர்களுக்கு மூச்சு வாங்கியது. அவர்களால் மேலும் ஓட முடியவில்லை. நிறையவே களைத்துப் போயிருந்தார்கள்.

ஆயுததாரிகளைக் கண்டதும் கைகளை உயர்த்தியபடி லேக் ஹவுஸ் ஊழியர்கள் ஒரு மூலைக்குள் ஒதுங்கியிருந்தனர். அவர்களை அங்கிருந்து வெளியேறிப் போகுமாறு சைகை செய்தார்கள். தாகத்தில் நா வறண்டு போயிருந்தது. நீர்க் குழாயின் அருகில் வாயை வைத்து கைளால் ஏந்தி தண்ணீர் குடித்தார்கள். க்ளுக் க்ளுக் என்ற சத்தத்தோடு தொண்டைக் குழிக்குள் தண்ணீர் இறங்கிப் போனது. பிறகு அவர்கள் சயனைட் குப்பியை கடித்து உடைத்தபோது மெல்லிய கண்ணாடித் துண்டுகள் நாக்கையும் கடைவாய் உதட்டையும் வெட்டிக் கிழித்து இரத்தம் வரப்பண்ணியிருந்தன. அப்பொழுது தம்மிடமிருந்த மீதிக் குண்டுகளையும் அவர்கள் உடலோடு அணைத்து வெடிக்க வைத்தனர்.

பெரியய்யா இரண்டு கைகளையும் பின்னால் ஊன்றி உடலைச் சற்றுப் பின்னால் சரித்து வானத்தை வெறித்தபடியிருந்தார். நட்சத்திரங்கள் ஒவ்வொன்றாக ஒளிர்ந்தபடியிருந்தன. ஒன்றிரண்டு நட்சத்திரங்கள் மறைந்து போவதாயும் தோன்றியது.

‘‘இனிச் சவுதிக்குப் போய் உழைச்சு ஓடாக முடியாது. அதுதான் ஏதாவது ஒரு பெரிய நாட்டில ஒரு ஐஞ்சு வருசமெண்டாலும் பல்லைக் கடிச்சுக்கொண்டு

இருந்தேன் எண்டால் பிள்ளையின்ரை எதிர்காலத்துக்கும் என்ரை வாழ்க்கைக்கும் கொஞ்சம் சேத்துக் கொண்டு ஊரைப்பாக்க ஓடியிடுவன்''

''நல்லாக் கஸ்ரப்பட்டு விட்டீங்க பெரியய்யா.. இனி நல்ல காலம்தான்'' என்று இவன் சொன்னான்.

பெரியய்யா கார்ட்ஸ் அட்டைகளை கலைத்துப் போட்டார். ''எடப்போடா.. நானெல்லாம் கல்யாணம் கட்டியிருக்கக் கூடாது. அநியாயமா ஒருத்தியின்ரை வாழ்க்கையை பாழாக்கியிருக்கிறன். அரிப்பெடுத்தா சொறிஞ்சு போட்டு கடைசி வரைக்கும் இருந்திருக்க வேணும்.. ஹா ஹா ஹா''

அவரது சிரிப்பு அமிழ்ந்து கொண்டு போனது. பிறகு ''பிள்ளையின்ரை பிஞ்சு முகம்தான் கண்ணுக்குள்ளை நிக்குது'' என்று கண்களைத் துடைத்துக் கொண்டார்.

''அழாதீங்க லொக்கா'' என்றான் பண்டார.

வள்ளத்தில் ஒவ்வொருவருக்கும் ஒரு கதையிருந்தது. அவைதான் பொழுதைப் போக்குகின்றன. பண்டாரவிற்கும் ஒரு கதை இருந்தது. இப்படியொரு நாளிலேயே அவன் அதைச் சொல்லத்தொடங்கினான். அப்போது பண்டாரவும் பிரதீபனும் எதிரெதிராக ஒரு சோடியாக விளையாடினார்கள். இவனும் பெரியய்யாவும் இன்னொரு சோடியாக இருந்தார்கள். பிரதீபன் பண்டாரவை பண்டாரண்ணை என்று அழைத்தான். அது பெரிய பகிடியாகச் சிரிக்கப்பட்டது.

''பண்டாரண்ணை.. ஒன்று கேட்டால் குறை நினைக்க கூடாது. எங்களுக்கு நாட்டில எவ்வளவோ பிரச்சனைகள் இருக்கு, குண்டு, ஷெல், பிளேனடி, ஆமி, பொலிஸ்பதிவு ஜெயில் எண்டு எக்கச்சக்கம். ஆனா உங்களுக்கு என்ன பிரச்சனை. நீங்கள் என்னத்துக்கு நாட்டை விட்டு வெளியேற வேணும். உங்களுக்கு அப்பிடி என்ன பிரச்சனை..''

பண்டாரா பேசத்தொடங்கினான். அவனின் உடைந்த தமிழை ஒழுங்காகக் கோர்த்து எழுதுவது சிரமமானது. அதன் சுருக்கிய வடிவம் வருமாறு:

இலங்கையின் தெற்கே நகர வாழ்வு நெருங்காத சிங்களக் கிராமம் ஒன்றில் இரண்டு அக்காக்களுக்கு தம்பியாகப் பிறந்தான் பண்டார. அதற்குப் பிறகு இரண்டு அக்காக்களுக்கும் ஒரு அண்ணாவிற்கும் தம்பியாக

இன்னுமொருவனும் பிறந்தான். பண்டார பிறந்தகாலம் தொட்டே அப்பா வருத்தங்களோடு போராடினார். ஒருநாள் தோற்றுப்போய் விட்டார். இயல்பாகவே ஏழைப்பட்ட பண்டாரவின் குடும்பம் அந்தரித்துப் போய்விட்டது.

அந்தக் கிராமத்தில் ஒரு பிக்கு இருந்தார். அவர் தனது பிரசங்கங்களில் புத்தரின் அன்புக்கென அரைவாசி நேரத்தையும் தாய்நாட்டு விடுதலைக்கென மிகுதி நேரத்தையும் ஒதுக்கினார். சிலசமயங்களில் புத்தரின் அன்பு காணாமற் போய்விட சிங்கள இனத்தின் கௌரவமான வரலாற்றைப் பற்றியே அவர் அதிகம் பேசினார். கிராமத்தில் நிறைய இளைஞர்கள் இராணுவத்தில் பணியில் இருந்தார்கள். லீவுகளில் வரும் இராணுவத்தினர் பிக்குவிடம் ஆசி பெற்றார்கள். பிரேதப் பெட்டிகளில் வரும் இராணுவத்தினருக்கு அவர் அமைதி அளித்தார். ஒருநாள் பண்டாரவையும் இராணுவத்தில் சேர்ந்துவிடும்படி அவர் சொன்னார்.

“மகனே நீ நாட்டை மட்டுமல்ல உன் வீட்டையும் காப்பாற்றப் போகிறாய். இப்படியாக நாட்டையும் வீட்டையும் ஒரே சமயத்தில் காப்பாற்றும் அரிய வாய்ப்பு எல்லோருக்கும் கிடைத்துவிடாது. யோசித்துப் பார் மகனே. நீளும் மகாவம்சத்தின் வரலாற்றில் உனது பெயரும் நிச்சயம் இருக்கப் போகிறது. உனது தந்தையார் உன்னை ஆசீர்வதிப்பார்” என்று அவர் சொன்னார்.

பண்டார இராணுவத்தில் இணைந்தான். மகாவம்சம் நீள்வதைப் பற்றி அவன் யோசித்திருக்கவில்லை. சம்பளத் தொகை மேலும் அதிகரிக்குமா என்பதாகவே அவனின் நினைப்பிருந்தது. ராணுவ வாழ்க்கை சிரமமாக இருந்தது. அதிகாரிகள் ஒருபக்கத்தாலும் புலிகள் மறுபக்கத்தாலும் அவனை வதைத்தெடுத்தார்கள். பண்டாரவிற்கு புலிகளின் பெரிய தலைவர்களின் நினைவு நாட்கள் ஓரளவுக்கு மனப்பாடமாயிருந்தன. அன்றைய நாட்களின் விடியற்காலையில் புலிகள் புகுந்து தாக்க நேரலாம் என்பதால் தப்பிவிடுவதற்கு தயாராய் இருக்க வேண்டுமென்று அவன் பிரார்த்தித்துக் கொண்டான்.

ஒவ்வொருமாதமும் அம்மா பெற்றுக்கொள்ளும் சம்பளப் பணத்திற்காக பண்டார எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டிருந்தான். காரைநகர், பலாலி, முல்லைத்தீவு, கிளிநொச்சி, நெடுங்கேணியென்று அவன் பார்க்காத தமிழ் ஊர்கள் இல்லை. பண்டார கடைசியாக யாழ்ப்பாணத்தில் கடமையில்

நின்றான். அப்பொழுது சமாதான காலமாக இருந்தது. அவன் சற்றேனும் நிம்மதியாக நின்ற காலங்கள் அவை என்றான்.

தமிழ்ச்செல்வனும் குழுவினரும் தாய்லாந்திற்குப் புறப்பட்ட ஒருநாள் பண்டார மூன்று வார லீவுக்கு விண்ணப்பித்திருந்தான். தாய்லாந்தில் அன்ரன் பாலசிங்கமும் பீரிசும் சமாதானத்தின் அடையாளமாக மரக்கன்றுகளை நட்டுக் கொண்டிருந்த இன்னொருநாள் அவனுக்கு லீவு கையில் கிடைத்தது. முதலாவது வாரம் மூளையைப் போட்டுக் கசக்கினான். இரண்டாவது வாரம் இடைத்தரகர் மூலம் ஏஜென்சியை சந்திக்கக் கூடியதாகவிருந்தது. மூன்றாவது வாரம் முடிவதற்கு முன்பாக பண்டார இத்தாலிக்கு வள்ளமேறினான்.

பண்டார தன் கதையைச் சொல்லத்தொடங்கியபோதே பிரதீபனின் முகம் உணர்ச்சிகளைக் காட்டாதபடிக்கு விறைக்கத் தொடங்கியிருந்தது. பண்டார முடித்தபோது பிரதீபனின் கண்கள் எரிந்துகொண்டிருந்தன. விசுக் என்று அவன் எழுந்து நின்றான். கைகளில் கிடந்த கார்ட்ஸ்சுகளை வீசியெறிந்தான். அவை காற்றில் பறந்துபோய் கடலிலும் விழுந்தன.

“என்ரை தங்கச்சியை நாசமாக்கின நாயளோடை நான் கார்ட்ஸ் விளையாடுறன். கடவுளே...” என்று கத்திக்கொண்டு பிரதீபன் எஞ்சின் அறைக்குள் நுழைந்து கீழ் அறைக்குள் இறங்கினான். பண்டார சற்று பதட்டப்பட்டது தெரிந்தது. அவன் எஞ்சிய கார்ட்ஸ்களை கைகளால் கூட்டி ஒன்றாகச் சேர்த்து றப்பர் பான்டினால் சுற்றினான்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு திரும்பவும் சிங்கள இளைஞர்கள் அந்நியப்பட்டுப் போனார்கள். இவனுக்கும் அவர்களை எதிர்கொள்ள முடியாதிருந்தது. இருக்கிற ஆயிரத்தெட்டுப் பிரச்சனைகளுக்குள் இதுவொரு புதுப் பிரச்சனை.

கடல் சில நேரங்களில் சன்னதம் கொண்டு ஆடுகிறது. பக்கவாட்டில் மோதும் அதன் அலைகள் தண்ணீரை சோ என்ற இரைச்சலுடன் உள்ளே வீசி எறிகின்றன. வள்ளம் தொப் தொப் என்று தண்ணீரில் விழுந்தெழும்பி ஓடிக்கொண்டிருந்தது. கடல் எப்பொழுது அமைதியாகும் எப்பொழுது பொங்கும் என்று எவருக்கும் தெரியாதிருந்தது.

ஏறக்குறைய எல்லோருக்கும் கடி, சொறி, வட்டக்கடி நோய்கள் பரவிவிட்டிருந்தன. தக்காளிப்பழத் தோல் அழுகியதைப் போல இடுப்புக்கு கீழே அரையில் தோல் சுருங்கி நிறம் மாறியிருந்தது. விறாண்டிக் கொண்டே இருந்தால் சுகமாக இருக்கிறது. அப்பொழுது தோல் உரிந்து புண்ணாகி நிண நீர் கசிகிறது. கடல் தண்ணீரை எடுத்து அரையில் தேய்த்துக் கொள்கிறார்கள். உப்புத் தண்ணீர் புண்ணில் படும் போது பற்றி எரிகிறது. அப்படி எரிந்தால் நல்லதென்றும் காயம் விரைவில் ஆறும் என்றும் சொல்கிறார்கள்.

நிறையப் பேர் ஓங்காளித்து வாந்தியாக எடுத்துக் கொண்டிருந்தார்கள். சாப்பாடு அளவாகத்தான் கொடுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. கொஞ்சம் அரிசிச் சோறு. உவர்க்கிற தண்ணீரில் நிறையக் குழம்பு, அதில் ஒரு துண்டு மீன் அல்லது கருவாடு.

காலையில் சாப்பாட்டைத் தவிர்த்திருந்தார்கள். நோயாளிகளால் மத்தியானமும் சாப்பிட முடியவில்லை. சின்னப்பெடியனின் நிலை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டு வந்தது. அவன் பேச்சு மூச்சு இல்லாமல் கீழே கிடந்தான். அவனது உதடுகள் உலர்ந்து வெடித்துப் போயிருந்தன. அப்படியான நேரங்களில் பெரியய்யா சேலனைக் கரைத்து அவனது வாயில் பருக்கியபடியிருந்தார். அது கடைவாயால் வெளியே வழிந்து கொண்டிருந்தது.

இவனின் முகத்தில் முழுவதுமாக பொசு பொசுவென்று தாடி வளர்ந்திருந்தது. ஆள் இனியில்லையென்ற அளவிற்கு எலும்பும் தோலுமாய் அடையாளமே தெரியாமல் மாறிப் போயிருந்தான். எல்லோருமே இப்படித்தான் இருக்கிறார்கள். இராத்திரி படுக்கும் போது நிர்மலன் “இப்பிடியே போய் இத்தாலியில இறங்கினால் ஆரோ அமேசன் காடுகளில இருந்து ஆதிவாசிகள் வந்திருக்கினம் என்றுதான் அவங்கள் நினைப்பாங்கள்.. இப்பிடிக் கஸ்ரப்பட்டுத்தான் இத்தாலி போகவேணுமெண்டு தெரிஞ்சிருந்தால் வந்தே இருக்கமாட்டன். பிளேனில போறதுக்கு காசு கொஞ்சம் கூடத்தான். ஆனால் மிஞ்சிப் போனால் ஐஞ்சு நாளில போயிருக்கலாம்” என்று சலித்துக் கொண்டான்.

பக்கத்தில் படுத்திருந்த இவன் “நானும் பிளேனில போன ஆள்தான்” என்றவாறு உடலைச் சரித்துக்கொண்டான்.

“ஏன்.. சரிவரேல்லையே.. ”

“எல்லாம் சரிவந்திருக்கும்.. பிரெஞ்சு மொழியில் ஒன்று ரண்டு மூன்று.. பத்து வரைக்கும் சொல்லத் தெரிஞ்சிருந்தால்.. ” என்று இவன் சொன்னான். அதற்குப் பிறகு நிர்மலன் எதுவும் கேட்கவில்லை. என்ன நடந்தது என்பதை அவன் விளங்கியிருக்கலாம்.

“இஞ்சை அரைவாசிக்காசு, இறங்கினாப் பிறகு மிச்சக்காசு” என்றார் பிரான்ஸ் கனடா நாடுகளுக்கு ரூட் செய்த ஏஜென்சி. பிரேம் இல்லாத கண்ணாடி அணிந்து ஆசிரியர்களுக்கு உண்டான தோற்றத்தில் அவர் இருந்தார். இவன் கனடாவைத்தான் பெரிதும் விரும்பினான். ஆனால் இவனதும் அகிலாவினதும் அவசரத்திற்கு அவரால் ஒரு கனேடியப் பாஸ்போட்டை உடனடியாகப் புரட்டமுடியவில்லை. “உம்மடை சேப்பில ஒரு பிரெஞ்சுப் பாஸ்போட் இருக்குது. பிரான்ஸ்சுக்குப் போறீரா” என்று ஒருநாள் அவர் கேட்டார்.

“எங்கையெண்டாலும் இவர் உடனடியாப் போகவேணும்” என்றாள் அகிலா.

“இஞ்சை அரைவாசிக்காசு, இறங்கினாப்பிறகு மிச்சக்காசு”

“எவ்வளவெண்டாலும் இவர் உடனடியாப் போனாக் காணும்”

இவன் அன்று முழுவதும் அகிலாவை நன்றி பொங்கப் பொங்க பார்த்தான். அவளின் கைகளைப் பிடித்து “நன்றி அகிலா” என்றான். அகிலா இவனின் உச்சந்தலையைக் கோதிவிட்டாள். முத்தமிடுவாள் என்று இவன் எதிர்பார்த்தான்.

இரண்டாவது நாள் இவன் மலேசியாவிற்குப் பயணமானான். கஸ்டம்ஸ்ஸில் பயணம் எதற்கானது என்று கேட்டார்கள். “பிஸினஸ்” என்றான். பதினைந்து நாட்கள் விசாவினைக் குத்தி அனுமதித்தார்கள். அன்றைக்கு மட்டும் இவனுக்குப் பின்னால் பன்னிரண்டு பேர் மலேசியாவிற்குள் பிஸினஸ் செய்ய வந்தார்கள். அவர்கள் அவ்வளவு பேரும் ஒரு அறையில் தங்க வைக்கப்பட்டனர்.

இவன் புதிதாக ஒரு டிஜிற்றல் கமராவை நூற்றியிருபது டொலர்களுக்கு வாங்கினான். பத்துமலைக் குகை முருகனுக்குப் பக்கத்தில் நின்று எடுத்த படங்களை அகிலாவிற்கு ஈமெயிலில் அனுப்பினான். அந்த அறைக்குள் இரவு

படுப்பது மட்டும்தான் கஸ்ரமாக இருந்தது. அதற்குள் ஒரு ரிவி இருந்தது. அதில் ஆடை அணிந்த மனிதர்களை இவன் ஒருபோதும் கண்டதில்லை. இரவுகளில் மெல்லிய சத்தத்தில் இரண்டு செக்ஸ் சிடிக்கள் மாறி மாறி அதில் ஓடித் தேய்ந்தன. படம் ஓடிக்கொண்டிருக்கும் போதே சிலர் எழும்பி பாத்றூம் போனார்கள். கொஞ்ச நேரம் கழித்து வந்து ‘‘டேய்.. உந்த அரியண்டத்தை நிப்பாட்டிப் போட்டுப் படுங்கோடா’’ என்று போர்த்துக் கொண்டு படுத்தார்கள். கடைசி ஆளாக இவன் பாத்றூம் போனான்.

ஒருநாள் ஏஜென்சி பன்னிரண்டு பாஸ்போட்களைக் கொணர்ந்து ஆளுக்கொன்றாக விநியோகித்தார். அவை மண்ணிறம் சிவப்பு பச்சை நீலம் என்ற வண்ணங்களில் இருந்தன. இவனது பாஸ்போட்டிற்கும் இலங்கைப் பாஸ்போட்டிற்கும் நிறத்தில் வித்தியாசம் இருக்கவில்லை. மேலே union europeenne republique francaise என்று இருந்தது.

ஏஜென்சி சில ஆலோசனைகளை இவனுக்குச் சொல்லித்தந்தான். அதன்படி இவனும் பிரேம் அற்ற மூக்குக் கண்ணாடியொன்றை அணிந்து கொண்டான். தலைமயிரை ஜெல் வைத்து மேலே கோதி இழுத்தான். சேர்ட்டை உள்ளே விட்டு தோள்களில் லப்டொப் பையொன்றைக் கொழுவிக்கொண்டான்.

இலங்கையில் புங்குடுதீவை சேர்ந்தவனும் பிரான்ஸில் பதினேழு வருடங்களாக வாழ்பவனும் மலேசியாவிற்கு இரண்டு வாரங்கள் விடுமுறையில் வந்தவனும் பிரெஞ்சுக் குடியுரிமை பெற்றவனுமாகிய அன்ரனி வேல்ராஜ் பிரான்ஸ் திரும்புவதற்காக கோலாலம்பூர் எயார்போட்டில் போய் இறங்கி செக்கின்னை முடித்தபிறகு இரண்டு உருண்டையான மலேசிய கஸ்டம்ஸ் ஓபிஸர்கள் அவனை வழிமறித்து ஓரங்கட்டினர்.

இவனுக்கு கால்களில் நடுக்கம் ஒரு தேளைப் போல ஏறிக்கொண்டிருந்தது. கஸ்டம்ஸ் ஓபிஸர்கள் இவனது பாஸ்போட்டையும் இவனையும் மாறி மாறிப் பார்த்தனர். விசாரணைகளில் முகத்தை இயல்பாக வைத்துக் கொள்ளச் சொல்லி ஏஜென்சி சொல்லியிருந்தார். அப்படியிருப்பதற்காக உதடுகளைக் குவித்து மெதுவாக விசிலடித்தான். அது ஏதோ ஒரு பக்திப் பாட்டாக இருந்தது.

ஒபிஸர்கள் ஏதோ கேட்டார்கள். இவன் ‘‘உய்’’ என்றான். பிறகும் என்னவோ கேட்டார்கள். இப்பொழுது இரண்டு தடவைகள் ‘‘உய்’’ என்றான். ஒபிஸர்களின் முகத்தில் சந்தேகம் ஒரு நிழலைப் போல படரத்தொடங்கியதை இவன் பார்த்தான். அவர்களில் ஒருவன் தன் பத்து விரல்களையும் விரித்துப் பின் ஒவ்வொன்றாக மடித்தபடி என்னவோ சொன்னான். அப்படி அவன் மூன்றாவது முறையும் செய்தபோது இவனின் மூளையின் ஓரிடத்தில் பொறி தட்டியது.

‘‘நாசமறுப்பான்.. பிரெஞ் மொழியில் நம்பர் சொல்லச் சொல்லுறான்’’

வாய் ‘‘உய்ய்ய்ய்ய்’’ என்று இழுத்துக் கொண்டிருக்க தலைக்குள் குறு குறு என்று யோசனைகள் ஓடின. ஒன்று இரண்டு மூன்று.. வன் ரூ த்றீ.. ஏக் தோ தீன்.. எக்காய் தெக்காய் துனாய்.. முடியவில்லை. பிரெஞ்சில் ஒரு எழுத்துத் தன்னும் இவனுக்குத் தெரியவில்லை. அப்பொழுதுதான் இன்று வரை இவனுக்கு விளங்கிக்கொள்ள முடியாத அந்த வார்த்தைகளை இவன் உச்சரித்தான்.

‘‘கசெற்றா லுபுஸ்கா சாறே நைசா.. மொஸ்கோ போகலாம் வாடா ராசா.. ’’

மலேசியப் பொலிஸார் இவனது கைகளில் விலங்கு மாட்டி இழுத்துக் கொண்டு போனார்கள். விமான நிலையத்தில் பார்வை படுகிற இடங்களில் எல்லாம் போதைப் பொருட்களைக் கடத்துபவர்களுக்கு மரண தண்டனை என்று எழுதிக் கிடந்தது. மலேசியப் பொலிசாரின் கசையடியைப் பற்றி தமிழ்ப்படமொன்றில் இவன் பார்த்திருந்தான். ஜீன்சைக் கழற்றி குனிய வைத்து வெறும் குண்டியில் தோல் பிய்ந்து வருகிறமாதிரி அடிப்பார்களாம். நடைப்பிணம் போல பொலிசாருக்குப் பின்னால் நடந்தான்.

விசாரணையில் தனக்கு அன்ரனி வேல்ராஜ் யாரென்றே தெரியாது என்பதை இவன் ஒத்துக் கொண்டான். அவர்கள் குனிய வைத்து குண்டி கிழிகிற மாதிரியெல்லாம் அடிக்கவில்லை. அன்றைக்கு இரவு இவனையும் மேலும் ஆறு பிஸினஸ் புள்ளிகளையும் சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமானத்தில் ஏற்றியபோது ‘‘பயணம் இனிதே அமையட்டும்’’ என்று விமானி அறிவித்தபடியிருந்தான்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் இறங்கியபோது சிறிலங்கா குற்றப்புலனாய்வுத் துறையினர் அழைத்துச் சென்றனர். விமான நிலையத்தில்

இவன் கைதுசெய்யப்பட்ட அதே நேரத்தில் இன்னொரு பகுதியில் தமிழ்செல்வனும் கருணாவும் தமது இலங்கைக் கடவுச்சீட்டுக்களை கஸ்டம்ஸ் அதிகாரியிடம் ஒப்படைத்தனர். தமிழ்செல்வனின் வெள்ளைப் புன்னகைக்குப் பதில் புன்னகையை வழங்கிய அதிகாரி ‘‘பயணமும் பேச்சுக்களும் நல்லபடியாக அமையட்டும்’’ என்று கைலாகு கொடுத்து அவர்களை தாய்லாந்திற்கான விமானத்திற்கு அனுப்பி வைத்தார்.

குற்றப் புலனாய்வுத் துறையினர் இவனுக்கு ‘‘நியூட்டனைத் தெரியுமா’’ என்று கேட்டார்கள். வாழ்க்கையில் இரண்டாவது தடவையாக இந்தக் கேள்வியை இவன் சந்திக்கிறான். ஐந்தாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தபோது விஞ்ஞான பாடத்தில் சரஸ்வதி மிஸ் முதற்தடவையாக இந்தக் கேள்வியை இவனிடம் கேட்டார். அப்போதும் இல்லையென்றுதான் சொன்னான். சரஸ்வதி மிஸ் தலையில் குட்டினார்.

இப்பொழுதும் இவர்கள் கன்னத்தில் அறையவோ வயிற்றில் ஓங்கி உதையவோ கூடுமென இவன் எதிர்பார்த்தான். கடவுள் கிருபையில் அப்படியெதுவும் நடக்கவில்லை.

‘‘பொட்டம்மானின் ஆட்கள் நிறையப் பேர் கொழும்பில் திரிகிறார்களாமே உனக்குத் தெரியுமா’’

‘‘இல்லை சேர்.. ’’

‘‘வன்னிக்குள்ளே பழக்கமிருக்கிறதா..’’

‘‘இல்லை சேர்..’’

‘‘வன்னிக்குள்ளே திரிந்திருக்கிறாயா..’’

‘‘வர்ற போற வழிகளில் செக்கிங்குக்கும் ரீ குடிக்கவும் இறங்கியிருக்கிறன்.. ’’

‘‘சமாதானத்தைப் பற்றி புலிகள் என்ன நினைக்கிறார்கள்.. ’’

‘‘தெரியேல்லை சேர்..’’

‘‘இத்தாலிக்கு ஏன் போனாய்..’’

‘‘இங்கை தொழில் வாய்ப்புக்கள் இல்லை.. ’’

இவன் நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு குந்தகம் தரக்கூடிய ஆள் இல்லை என்பதை அவர்கள் விளங்கிக் கொண்டிருக்கலாம். பொலிசாரிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேறியதாக ஒரு கேஸைப் போட்டு இவனை நீர்கொழும்புச் சிறையில் அடைத்தார்கள். இவனுக்கு வாழ்க்கை சீயென்று வெறுத்துப் போனது.

சிறையில் போதைப்பொருள், கஞ்சா மனிதர்களும் சண்டியர்களுமே நிறைந்திருந்தார்கள். அவர்களது உலகம் வேறெங்கோ இயங்கியபடியிருந்தது. எப்பொழும் கண்களில் போதை படர்ந்து கிடக்க மரங்களின் கீழும் விறாந்தைகளிலும் அவர்கள் நீட்டி நிமிர்ந்து படுத்திருந்தார்கள். சிறைக்குள் சிகரெட்டும் போதையும் செல்போன்களும் தாராளமாகப் புழங்கின. அவர்களில் சிலர் இவனை ‘‘தெழிழுப் பண்டி’’ என்று கூப்பிட்டார்கள். திரும்பி பாராவிட்டால் பின்னால் ஓடிவந்து பிடரியில் அடித்தார்கள். இவன் செல்லுக்குள்ளேயே முடங்கிக் கிடந்தான். ஒருநாள் நேராக இவனிடம் வந்த பொலிஸ் அதிகாரியொருவன் ‘‘பிரான்ஸ் போவதற்கு ஏஜென்சிக்கு எவ்வளவு கொடுத்தாய்’’ என்று கேட்டான்.

இவன் எழுந்து உட்கார்ந்து தலையை நிமிர்த்தி அவரை வாஞ்சையோடு பார்த்தான். என்னை வெளியெற்றுங்கள் என்ற கெஞ்சல் அந்தப் பார்வையில் கலந்திருந்தது.

‘‘இருபது லட்சம்.. இலங்கைக்காசு. அரைவாசி முதலில.. கொடுத்தேன். அரைவாசி இறங்கினாப்பிறகு கொடுப்பதாகப் பேசிக் கொண்டோம்’’

‘‘இன்னும் பத்துலட்சம் காசு நீ கொடுக்கவில்லையா..’’

இவன் இல்லையென்று தலையாட்டினான்.

‘‘அதை என்னிடம் கொடு. உன்னை வெளியில் விட்டுவிடுகிறேன்.’’

அதற்கு பிறகு சற்று நேரம் அங்கு அமைதி நிலவியது. இவன் எதுவும் சொல்லாதவனாய் தலையைக் குனிந்து கொண்டான். இரண்டு மூன்று லட்சம் எனில் பரவாயில்லைப் போல இருந்தது. பொலிஸ்காரன் இப்பொழுது மறுபக்கம் திரும்பி இவனுக்கு முதுகைக் காட்டி நின்றுகொண்டான்.

‘‘கட்டுநாயக்காத் தாக்குதலில தொடர்புற்ற சில புலி உறுப்பினர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல வந்திருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்திருக்கிறது’’ என்று அவன் சொன்னான்.

அவன் மீளவும் இவனிடத்தில் திரும்பியபோது இவன் நெஞ்சாண் கிடையாக விழுந்து பொலிஸ்காரனின் கால்களைப் பிடித்து கெஞ்சியபடியிருந்தான். .

‘‘சேர்.. நான் எவ்வளவு காசென்றாலும் தாறன். என்னை இந்த நரகத்தில் இருந்து விடுதலை செய்யுங்கள்.’’

பொலிஸ்காரன் இவனது முதுகில் ஆறுதலாகத் தட்டினான். தனது மொபைல் போனை எடுத்துக் கொடுத்து ‘‘வீட்டோடு பேசு’’ என்றான். ஏறக்குறைய அதைப் பறித்து வாங்கிய இவன் அகிலாவின் இலக்கங்களை அழுத்தத் தொடங்கினான்.

‘‘பிறகு.. அகிலாவோ காசை தந்து உங்களை வெளியில எடுத்தது’’ என்று நிர்மலன் கேட்டான்.

‘‘அப்பிடியென்றில்லை, அவவின்ரை எக்கவுண்டுக்குத்தான் காசு வந்தது. நான் வைச்சிருக்கிறதும் பாதுகாப்பு இல்லை தானே. ’’

அடுத்த நாள் காலை குளிர்ந்தபடி விடிந்தது. கடல் முன்னரைப்போல் அல்லாது சற்று அமைதியாயிருப்பதைப் போல தோன்றிற்று. இருபது நாட்களைத் தாண்டிய பயணத்தில் முதன்முறையாக இவர்கள் இன்னுமொரு படகினைக் கண்டார்கள்.

அந்த வேகப்படகு இவர்களை நோக்கி விரைந்து வந்துகொண்டிருந்தது. அதன் முன் அணியம் நீரிலிருந்து உயர்ந்து நின்றது. வீரிய வலுவுள்ள எஞ்சின்கள் கடலில் நீளத்துக்கும் கிழித்து வருகிற கோடுகள் படகின் பின்னால் விரிந்தன. பத்துப் பன்னிரண்டுகளுக்கு மேற்படாத மனிதர்கள் அந்தப் படகில் நின்றிருந்தார்கள்.

வள்ளத்தில் எல்லோருக்கும் குதூகலம் தொற்றியிருந்தது. கைகளை உயர்த்தி அங்கேயும் இங்கேயும் அசைத்து மகிழ்ச்சியைக் காண்பித்தபடியிருந்தனர். விரிந்த பெரும் சமுத்திரத்தில் நாம் மட்டும் தனியே இல்லை என்ற நினைப்பு இவனுக்கும் தெம்பைக் கொடுத்தது. இரண்டு

விரல்களை வாயில் வைத்து பெரிய சத்தம் வரும்படி சிலர் சீக்காயொலி எழுப்பினர். அப்பொழுதே அவ் ஒலியையும் மீறி துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. துரத்தி வரும் வேகப்படகில் மனிதர்கள் துப்பாக்கிகளை வானத்தை நோக்கியவாறு ஏந்தி நின்றனர். துப்பாக்கிகள் மீளவும் ஒருதடவை சடசடத்தன.

‘‘வெடி வைக்கிறாங்கள். குப்புறப் படுங்கோ.. ’’ என்று யாரோ கீச்சிட்ட குரலில் கத்தினார்கள். வள்ளம் ஓட்டத்தை முற்றாக நிறுத்தியிருந்தது. அதற்கு அணைவாக தமது சிறு படகினை நிறுத்திய சோமாலியக் கடற் கொள்ளைக்காரர்கள் இவர்களது வள்ளத்திற்குள் திபு திபுவெனக் குதித்தனர் என்று ஈழப்போர் பின்னணியில் ஒரு திகைப்பூட்டும் த்ரில்லருக்குரிய சஸ்பென்ஸோடு இந்த அத்தியாயம் முடிகிறது.

# 11

ஏ 9 பாதை வாகனங்களாலும், கிளிநொச்சி வான்பரப்பு ஹெலிகொப்டர்களாலும் நிறைந்திருந்தன. ஹெலியில் நோர்வேக்காரர்களும் யப்பான் ஆட்களும் அவ்வப்போது அன்ரன் பாலசிங்கமும் அடேல் அன்ரியும் வந்து இறங்கினார்கள். சில சமயங்களில் வெறுமனே வந்திறங்கும் ஹெலியில் கருணாம்மான் மட்டக்களப்பிற்குப் பறந்தார். சில இயக்கக்காரர்கள் கொழும்பில் அப்பலோ ஆஸ்பத்திரிக்கு போனதாகவும் பேசிக்கொண்டார்கள். அந்த ஆஸ்பத்திரியின் மேற் கூரையிலேயே ஹெலி இறங்கும் தளம் உள்ளதென்றும் அவர்கள் சொன்னார்கள்.

ஹையஸ் வாகனங்களிலும் லக்சறி பஸ்களிலும் பிதுங்கப் பிதுங்க சனங்கள் வந்து ஓமந்தையில் ஒருதடவையும், புளியங்குளத்தில் இன்னொரு தடவையும், முகமாலையில் மற்றுமொரு தடவையும் இறங்கி ஏறினார்கள். புளியங்குளத்தில் இயக்கம் நான்கு அறிவிப்புக்களை எழுதி வைத்திருந்தது. அவற்றில் மூன்று தமிழிலும் ஒன்று சிங்களத்திலும் எழுதப்பட்டிருந்தன. அவையாவன

1. வெளிநாட்டிலிருந்து வரும் தமிழீழ மக்கள் இந்த வழியால் வரவும்.
2. இந்தியாவிலிருந்து வரும் அனைவரும் இந்த வழியால் வரவும்.
3. வன்னி யாழ்ப்பாண மக்கள் இந்த வழியால் வரவும்.
4. சிங்கள மக்கள் இந்த வழியால் வரவும்.

நான் இப்பொழுது வெளியீட்டுப் பிரிவில் கடமையில் இல்லை. எனது பணியினை மாற்றியிருந்தார்கள். நேரு ஐயாவையும் சந்தித்து நாட்களாகிறது. அதனால் ஒரு தொண தொணப்பு குறைந்தது போல தோன்றிற்று. அவர் யாழ்ப்பாணம் திரும்பி இங்கிலிஷ் ரியூசன் சென்ரர் ஒன்றை நடாத்துவதாக கேள்விப்பட்டேன். இடையில் சற்றுக்காலம் யாழ்ப்பாணத்தில் அரசியல் பணியிலிருந்த போது அவரை வீரசிங்கம் மண்டபத்தில் சந்தித்தேன். மானுடத்தின் தமிழ்க் கூடலுக்கு அவரையும் அழைத்திருந்தார்கள். எப்பொழுதும் இயக்கத்தை குற்றம் சொல்கிறவர் அன்றைக்கு மேடையில் இயக்கத்தைப் புகழ்ந்து தள்ளினார். அனைத்துலக அங்கீகாரம் என்பது

புலிகளின் ராஜதந்திர நகர்வுகளுக்கு கிடைத்த வெற்றி என்றும் தம்பி பிரபாகரனின் தீர்க்க தரிசனமான வழி காட்டல் இன்றி தற்போதைய இடத்தை அடைய முடிந்திருக்காது என்றும் நேரு ஐயா பேசிக்கொண்டிருந்ததை நான் ஆச்சரியத்துடன் கேட்டுக் கொண்டிருந்தேன்.

அன்றைக்கு மேடையில் இருந்த நிறையப்பேரோடு இயக்கம் முன்பு முரண் பட்டிருந்தது. செங்கை ஆழியானும் புதுவை இரத்தினதுரையும் அருகாக போடப்பட்ட கதிரைகளில் அமர்ந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். செங்கை ஆழியான் தங்களோடு வன்னிக்கு வராமல் யாழ்ப்பாணத்திற்கு திரும்பி ஓடியபோது, புதுவை நையாண்டி கவிதையொன்றை எழுதியிருந்ததாக முன்னர் கேள்விப் பட்டிருந்தேன். படித்திருக்கவில்லை.

அன்றைக்கு மாலை உதயன் பேப்பரில் தீபன் அண்ணையும் சரத் பொன்சேகாவும் முகமாலையில் ஏதோ ஒரு சந்திப்பில் கைகொடுத்தபடி சிரித்துக் கொண்டிருந்த படத்தைக் காட்டிய நேரு ஐயா இது ஒரு பகைமறப்புக் காலம் என்றார்.

நான் சிரித்தபடி "உங்களுக்கும் எங்களுக்குமாகவும் இருக்கட்டும்" என்றேன்.

கழுத்தில் சயனைட் குப்பியும் கயிறும் இன்றித் திரிவதில் என்னவோ வேறுபாட்டை நான் உணர்ந்தேன். கை தன்பாட்டில் கழுத்தைத் தடவுவதும், திடுக்கிடுவதும், பின்னர் ஒப்பந்தத்தை நினைவுக்கு கொண்டுவருவதும் அடிக்கொரு தடவை நிகழ்ந்து கொண்டிருந்தது. இராணுவப் பகுதிகளில் ஆயுதங்களோடும் சயனைட் குப்பியோடும் நடமாட முடியாதபடிக்கு போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சரத்துக்கள் இருந்தன.

பெண்போராளிகள் இடுப்பில் கட்டியிருந்த சற்று அகலமான பெல்ட்டையும் கழற்ற வேண்டும் என்று இராணுவம் ஒற்றைக்காலில் நின்றது. ஒருநாளி பொன்னாலைப் பாலத்தில் வைத்து பெண்போராளிகளை மறித்த இராணுவத்தினர் பெல்ட்டையும் இரட்டைப் பின்னல்களையும் அவிழ்த்தால் ஒழிய காரைநகருக்குப் போகமுடியாது என்று வற்புறுத்தினர். போராளிகள் பயணத்தை கைவிட்டு திரும்பவேண்டியதானது.

யாழ்ப்பாணத்தில் எங்களது அரசியல் பணி என்ன என்பதில் எனக்குச் சரியான தெளிவு இருக்கவில்லை. இது பற்றி நிறைய சந்திப்புக்கள் எங்களுக்கு

நடந்தன. எதிலிருந்து தொடங்கலாம் என்ற ஆராய்ச்சியின் முடிவில் முதற்காரியமாக இயக்கம் எல்லாப் பத்திரிகைகளிலும் பின்வருமாறான அறிவிப்பொன்றை வெளியிட்டது.

அன்பார்ந்த தமிழீழ மக்களே,

எதிரியானவன் மிகத் திட்டமிட்டு நமது பண்பாட்டு விழுமியங்களைச் சிதைக்கவும், போரிடும் நமது ஓர்மத்தை இல்லாதொழிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறான். இராணுவத்தாலும் ஒட்டுக் குழுக்களாலும் கடந்த காலங்களில் ஆபாச நீலப் பட ஒளித்தட்டுக்களும் ஒளிப் பேழைகளும் இளைஞர்களிடத்தில் குறிப்பாக மாணவர்களிடத்தில் விநியோகிக்கப்பட்டன என்பதை நாம் நன்கு அறிவோம். அவ்வாறான இழி நிலையைத் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது. ஆகவே உங்களிடமுள்ள அவ்வாறான ஆபாச நீலப் பட ஒளித்தட்டுக்களையும் ஒளிப்பேழைகளையும் உடனடியாக நாம் குறிப்பிடும் பணியகங்களில் ஒப்படைக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

பணியகங்கள்: கொக்குவில், வட்டுக்கோட்டை, காரைநகர், மானிப்பாய்

அரசியல் துறை

தமிழீழ விடுதலைப் புலிகள்

யாழ்ப்பாணம்

கொக்குவில் பணியகத்தில் நான் கடமையிலிருந்தேன். ஒப்படைக்க வருபவர்களின் பெயர் விபரங்களை ஆவணப்படுத்துவதே எனது கடமையாக இருந்தது. ஆனால் ஒரு வாரத்திற்கு மேலாகியும் எனது கடமையை ஆரம்பிக்க முடியவில்லை.

பணியகத்திற்கு பல தேவைகளுக்கும் சனங்கள் வந்தார்கள்.

‘‘எங்கடை ஊரில ராசுவன் எண்டொருவன். ஆமியோடை நல்ல வாரப்பாடு. ஒருக்கா கவனியுங்கோ’’ என்ற தகவல் தர, ‘‘ஊரில வாசிக சாலைக்கு புதுக்கட்டிடம் திறக்கிறம். பொறுப்பாளர்தான் வந்து திறந்து வைக்கோணும்’’ என்ற அழைப்புத் தர, ‘‘விளையாட்டுப் போட்டி நடத்திறம். நீங்கள்தான் பிரதம விருந்தினர்’’ என்ற கௌரவம் தர, ‘‘தம்பியவை படிக்கவெண்டு போன மகள்

திரும்ப வரேல்லை. முகமாலையில உங்கடை ஆட்களோடை நிண்டவளாம். எனக்கிருக்கிறது ஒரே மகள். அவளை விட்டிடுங்கோ" என்ற வேண்டுகோளை தரவென பணியகம் எப்பொழுதும் சனங்களால் நிரம்பி வழிந்தது. ஆனால் நீலப்படத்தட்டுகளோடு ஒரு ஈ காக்கா கூட நுழையவில்லை.

இயக்கம் இன்னுமொரு செய்தியை ஏழு நாள் இடைவெளியில் வெளியிட்டது. முன்னைய பழைய அறிவிப்பில் கீழ்காணும் இரண்டு புதிய செய்திகள் சேர்க்கப்பட்டிருந்தன.

1.உங்களிடமுள்ள ஒளித்தட்டுக்களையும் ஒளிப்பேழைகளையும் கீழ்க் குறிப்பிடும் இடங்களில் பிரேத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடும்படி கேட்டுக் கொள்கிறோம்.

2.இவ் வேண்டுகோளைப் புறந்தள்ளுபவர்கள் மீதும் தொடர்ந்தும் ஆபாச ஒளித்தட்டுக்களை பேணுபவர்கள் மீதும் தவிர்க்க முடியாமல் நடவடிக்கை எடுக்க நேரிடும்.

அவ்வாறு புதிதாக வைக்கப்பட் பெட்டிகள் அத்தனையும் மூன்றாவது நாளில் நிரம்பியிருந்தன. இன்னும் இரண்டு தடவைகள் புதிய பெட்டிகள் வைக்கப்பட்டன.

பணியகத்தில் குப்பையை போல ஒளித்தட்டுக்கள் குவிக்கப்பட்டிருந்தன. எண்ணினால் ஏழாயிரத்தை தாண்டக் கூடும். நிறைய ஒளித்தகடுகள் பெயர் அற்றவையாக இருந்தன. சிலவற்றில் திருவிளையாடல், இராமயாணம், மகாபாரதம் என்றும் எழுதப்பட்டிருந்தன. எதேச்சையாக கையில் சிக்கிய சிடி ஒன்றில் படத்தின் பெயர் பாய்ஸ் என்றும் இயக்கம் ஷங்கர் என்றும் இசை ஏ ஆர் ரஹ்மான் என்றும் இருந்தது.

அத்தளை ஒளிவட்டுக்களையும் சனங்களின் முன்னிலையில் கொழுத்துவதென்று முடிவு செய்தோம். யாரேனும் மாவீரர் குடும்பத்து ஆளை தீமூட்ட அழைக்கலாம் என்று நான் ஆலோசனை சொன்னேன். பெருமளவான மக்களின் பங்களிப்புடனும் ஒத்துழைப்புடனும் அந்தப் பணிகள் நிறைவடைந்தன.

பிறகு பல்கலைக்கழகத்தோடு இணைந்து சிலவேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. அதற்கான ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சமயத்திலேயே எனக்கும் மேலிடத்திற்கும் பிரச்சனையொன்று ஏற்பட்டிருந்தது. திரும்பவும் வன்னிக்கு அழைக்கப்பட்டு புதிய பணியொன்றுக்கு நியமிக்கப்பட்டிருந்தேன்.

புளியங்குளத்தில், முதலாவது அறிவிப்பு வழியூடாக வந்தவர்கள் கனடா, சுவிஸ், லண்டன், பிரான்ஸ் முதலான நாடுகளைச் சேர்ந்தவர்களாயிருந்தார்கள். இவர்களை பற்றிய சாதுவான பார்வையை இயக்கம் எப்பொழுது எடுத்திருந்தது என்பது சரியாகத் தெரியவில்லை. முன்னைய காலங்களில் வெளிநாடு போகிறவர்கள் அனுமதி எடுப்பதற்காக பாஸ் ஒபிஸ்களில் கடும் தவம் செய்ய வேண்டியிருந்தது. அவ்வேளையில் பத்துக்கு எட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. வயதுக் கட்டுப்பாடு, பிணை, பிணைமுறி தண்டம் என்று ஏகத்துக்கும் தடங்கல்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அத்தனை கெடுபிடிகளையும் தாண்டி இவ்வளவு சனம் எப்படி வெளியேறினார்கள் என்பது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. முன்னர் இவர்களைப் பற்றிய கதையொன்றை அரசியல் வகுப்பில் தமிழ்செல்வன் அண்ணை சொல்லியிருந்தார்.

‘‘முந்தி இந்தப் புலம் பெயர்ந்த சனங்களில எனக்குப் பெரியளவில் நம்பிக்கையிருக்கவில்லை. அவர்கள் மண்ணை விட்டுப் போனவர்கள், அத்தோடு முடிந்தது. இனிமேல் இந்த மண்ணுக்கும் அவர்களுக்கும் தொடர்பு இல்லை என்றுதான் நானும் வேறு சில தளபதிகளும் நினைச்சிருந்தனாங்கள். இது கனகாலத்துக்கு முன்னர் நடந்தது. அப்ப ஒருதரம் அண்ணையைச் சந்திச்சு கதைக்கும் போது இந்தக் கதை வந்தது. அப்ப நான் சொன்னேன். அந்தச் சனங்கள் இனி இந்த மண்ணின்ரை சனங்கள் இல்லை. அவை போற இடத்தில அந்தந்த நாடுகளோடை கரைஞ்சிடுவினம் என்று. அண்ணை கொஞ்சநேரம் என்னை பாத்திட்டுச் சொன்னார். தமிழ்செல்வன் நீ இருந்து பார்.. எங்கடை போராட்டத்தை கடைசியா இந்தப் புலம்பெயர்ந்த மக்கள்தான் கைகளில தாங்குவினம் என்று. அண்ணையின்ரை தீர்க்க தரிசனம்தான் கடைசியா வெண்டது.’’

இப்படியாக போராட்டத்தை கையில் வைத்துத் தாங்கியோ என்னவோ களைத்து இளைப்பாற வந்த அவர்களில் வெளிநாட்டுச் செயற்பாட்டாளர்கள், மாணவர்கள், பத்திரிகையாளர்கள் என்று பல தரப்பட்டவர்களும் இருந்தார்கள்.

செயற்பாட்டாளர்கள் குடும்பத்தோடு வந்து இரணைமடுக் குளம், முல்லைத்தீவுக் கடல் என்று சுற்றிப்பார்த்தார்கள். சூசை அண்ணையின் பெடியங்கள் அவர்களை கடலுக்குள்ளும் அழைத்துச் சென்றார்கள். அணியத்தில் ஏறி நின்று வி வடிவில் விரல்களை விரித்தும், படகில் பொருத்தியிருந்த ஓலிகன் பீரங்கிகளை அணைத்தபடியும், போராளிகளின் தோள்களை கட்டிப்பிடித்தபடியும் அவர்கள் படங்களாக எடுத்து தள்ளினார்கள்.

தமிழ் பத்திரிகையாளர்கள் தயா மாஸ்டரோடு நாட்களை போக்கினார்கள். இரண்டு பக்கங்களாலும் வளைந்து மேலேறும் படிகளைக் கொண்ட ஊடக நிலையத்தில் இரண்டாவது தளத்தில் அவரது மேசை இருந்தது. ‘‘இராணுவம் போர் நிறுத்தத்தை மீறியிருக்கிறதே. அதற்கு புலிகளின் பதில் என்ன’’ என்று பத்திரிகையாளர்கள் கேட்பதுவும் ‘‘பொறுமையின் எல்லையில் நின்று நாங்கள் இதனைக் கண்டிக்கிறோம்’’ என்று தயாமாஸ்டர் சொல்வதும், இரண்டு நாட்களுக்கொருமுறை நடந்தது.

வேற்று நாட்டு பத்திரிகையாளர்களுக்கு விசேட வசதிகள் செய்யப்பட்டிருந்தன. உதவிக்கென ஆட்களும் நியமிக்கப்பட்டிருந்தார்கள். தளபதிகளிடம் பேட்டிகள் மேலும் ஆவணப்படங்கள் என்று அவர்கள் தயாரித்தார்கள். அப்படி படம்பிடிக்கிற காட்சிகள், பிரதேசங்கள் குறித்து அவதானமாக இருக்கும்படி உதவியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

கடந்த வருடம் அண்ணையின் பத்திரிகையாளர் சந்திப்பு நடந்தது. எண்ணுக் கணக்கின்றி மீடியா ஆட்கள் வந்திருந்தார்கள். ஒவ்வொருவரையும் அடிமுதல் நுனிவரை அலசி ஆராய்ந்து அனுமதிப்பதற்குள் இயக்கம் திணறிப் போய்விட்டது. அப்படி இந்தியாவிலிருந்து வந்திருந்த இரண்டு பேரைக் காட்டி ‘‘இவங்கள் றோவின்ரை ஆட்கள்’’ என்று தவபாலன் சொன்னார். அவர்களில் ஒரு முகத்தை எங்கேயோ பார்த்தமாதிரியாக இருந்தது. எவ்வளவோ முயற்சித்தும் நினைவுக்கு வரவில்லை.

பதட்டமும் கோபமும் உண்டாகியிருந்தன. ‘‘உடனை பிடிச்சு அடைக்க வேண்டியதுதானே’’ என்றேன்.

‘‘அப்பிடி நினைச்ச உடனே பிடிக்கமுடியாது.’’ என்ற தவபாலன் உதட்டுக்குள் சிரித்து கொண்டார். ‘‘அதுதான் யுத்தத்திற்கும் சமாதானத்திற்கும் இடையில் இருக்கிற வித்தியாசம். எப்பொழும் அரசியல் செய்யிறது என்பது சண்டையைச் செய்யிறதைவிடக் கஸ்ரம் எண்டு விளங்குதா’’

நான் மாணவர்களுக்கு பொறுப்பாளனாக இருந்தேன். அவர்கள் கனடா, அவுஸ்ரேலியா, நோர்வே நாடுகளில் இருந்து ஒவ்வொரு குழுக்களாக வந்தார்கள். அவர்களிடமிருந்து முகாமைத்துவம், அரசியல், தலைமைத்துவம் முதலான அறிவினை பகிர்ந்து கொள்ள முடியும் என்பதற்காக இயக்கம் அவர்களை அழைத்திருந்தது. அப்படி வந்தவர்களில் ஒன்றிரண்டு பேர் இயக்கத்தோடு நிரந்தரமாக தங்கிவிட்டனர். இரண்டாவது நாளில் ‘‘நான் இனி புலிகளோடேயே இருக்கப் போகிறேன்’’ என்ற ஒன்றிரண்டு பேர் பின்னர் ‘‘இந்த முறை போய்விட்டு அடுத்தமுறை வந்து நிற்கிறோம்ம்’’ என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் போனார்கள். சிலர் வந்த இடத்தில் காதலிலும் விழுந்தெழும்பினார்கள்.

நான் தேவையே இல்லாத காதல் கதையொன்றைச் சொல்ல விரும்புகிறேன். கனடாவில் இருந்து மூன்று வார விடுமுறையில் வந்திருந்தது அந்தக் குழுவின் பன்னிரண்டு பேர்களில் நான்கு பேர் பெண்களாக இருந்தார்கள். இவர்களது வகுப்புக்களை ஒருங்கிணைக்கின்ற பணியிற்காக நான் நியமிக்கப் பட்டிருந்தேன். என்னோடு உதவியாக யோகன் நின்றான்.

யோகன் இயக்க ஆள் கிடையாது. இருந்தாலும் அதுபற்றியெல்லாம் யாருக்கும் சொல்லவேண்டாம் என்று அவன் என்னை கேட்டிருந்தான். அவனைப் போன்ற நிறையப்பேர் இயக்க நினைப்பில் திரிகிறார்கள். கடும் கலரில் சேட்டும் ஜீன்ஸ்சும் போட்டுக்கொண்டு புதிய பல்ஸர் மோட்டர் சைக்கிளில் அலைந்தால் இயக்கமாகலாம் என்று நம்புகிறார்கள்.

கனடா மாணவர்களில் சுகன்யா என்றொருத்தி இருந்தாள். மிகுந்த கலகலப்பாக எல்லோரோடும் பழகிப் பகிடிகள் விட்டு அவள் சிரித்தாள். வெளிநாடுகளிலிருந்து வருகிற பெண்பிள்ளைகள் அப்படித்தான் நடந்து கொள்கிறார்கள். உண்மையில் இப்பிடி பகிடியும் பம்பலுமாக பழகுகிற ஒருத்தியை இப்பொழுதுதான் காண்கிறேன்.

ஒருநாளின் முடிவில் மாணவர்களை தங்குமிடங்களில் அனுமதித்துவிட்டு திரும்பி வரும்போது ‘‘அண்ணை நானும் சுகன்யாவும் காதலிக்கிறம்’’ என்று யோகன் கூறினான். நான் அப்படி ஏதும் நடக்கலாம் என்ற நினைப்பிலிருந்தேன். சுகன்யா அவனில் சற்று அதிக அக்கறையோடு பழகுவதாக எனக்கு தோன்றிற்று.

‘‘அவளும் உன்னைக் காதலிக்கிறாளா’’ என்று கேட்டேன்.

‘‘அவவுக்கு என்னிலை சரியான பாசம்.. காதலிக்கிறா போலைதான் இருக்கு’’ என்றான் யோகன்.

மாணவர்கள் கனடாவுக்குத் திரும்புவதற்கு தயாராக நின்றார்கள். புறப்படும்போது சுகன்யா யோகனைக் கட்டியணைத்து விடைபெற்றாள். அவளது தோளினில் முகத்தைப் பதித்திருந்த யோகன் என்னை குறுகுறுப்பாக நோக்கி பூரிப்புடன் சிரித்தான்.

பிறகு சுகன்யா ஒவ்வொருவராக எங்கள் எல்லோரையும் கட்டியணைத்து ‘‘உங்கள் ஒருவரையும் மறக்க மாட்டன்’’ என்றாள். அங்கிருந்த இளைஞன் ஒருவன் ‘‘அடுத்த முறை நாங்கள் தமிழீழத்தில் சந்திப்போம்’’ என்றான். இஸ்ரேலை அடைய முன்னர் யூதர்கள் தமது ஒவ்வொரு சந்திப்புக்களிலும் இவ்வாறு தான் சொல்வார்கள் என்றும் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கும் யூதர்களுக்கும் பெரிய வித்தியாசம் இல்லையென்றும் அவன் சொன்னான்.

அவர்கள் போன பிறகு சுகன்யா தனக்கு மட்டும் அவளது போன் நம்பரை தந்ததாக யோகன் கண்ணடித்தான். எட்டு நாட்களுக்குப் பிறகு சுகன்யாவிடமிருந்து ஒரு நீண்ட ஈமெயில் எனக்கு வந்திருந்தது. அதன் பொருட் தலைப்பு poruppaalarin kavanathitku என்றவாறாக இருந்தது.

சுகன்யாவின் ஈமெயில் கடிதம்

பொறுப்பாளர் அவர்களுக்கு, தம்பிராஜா சுகன்யா ஆகிய நான் ஒரு மாதத்திற்கு முன்பாக தாயகத்திற்கு வந்து தேசப் பணிகள் சிலவற்றை உங்களது பொறுப்பின் கீழ் மேற்கொண்டிருந்தேன். அப்பொழுது உங்களது உதவியாளர் யோகன் என்பவரின் பழக்கம் அறிமுகமாகியது. அவரோடு மற்றவர்களை போலவே இயல்பாக பழகினேன். அவர் அதனைத் தவறாகப் புரிந்து கொண்டு தன்னைக் காதலிக்கும்படி கேட்டார். அவர் தனது

குடும்பத்தில் தான் தனிப்பிள்ளையென்றும் தனது அப்பா இறந்து விட்டதாகவும் நிறையக் காலங்கள் தனிமையிலேயே வாழ்ந்து விட்டதாகவும் தனது காதலை ஏற்றுக்கொள்ளுமாறும் வற்புறுத்தினார். நான் மிகவும் பக்குவமாக என்னால் முடியாதென்றும் அவ்வாறான ஒரு நிலைமையில் நான் இல்லை என்றும் எடுத்துச் சொன்னேன். அதன் பின்னர் நாங்கள் நண்பர்களாகவே இருக்கலாம் என்று எனக்குச் சொன்னார்.

தற்பொழுது நான் கனடா திரும்பிய பிறகு அவரது தொலைபேசித் தொல்லைகள் எல்லை மீறிப் போகின்றன. இரவு பகலென்று பாராமல் ஒரு நாளைக்கு நூறு தடவைகள் அவர் போன் பண்ணுகிறார். தன்னோடு தொடர்ந்தும் பேசிக்கொண்டிருக்கச் சொல்கிறார். தன்னைக் காதலித்துவிட்டு நான் ஏமாற்றியதாகவும் அதனால் சயனைட்டைச் சாப்பிட்டுச் சாகப்போவதாகவும் அவர் சொல்கிறார். அவர் ஒரு சைக்கோவைப் போல நடந்து கொள்கிறார். எனக்குப் பெரும் மன உளைச்சலாக உள்ளது. தயவு செய்து இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கவும். தற்போதும் அவர் மீது எனக்கு எந்தக் கோபமும் இல்லை என்றும் கூறவும்.

சுகன்யா

மாலைப் பொழுதொன்றில் ஏ 9 தங்ககத்தில் யோகனைச் சந்தித்தபோது இதைப்பற்றி கேட்டேன். ‘‘சுகன்யா, உன்னைக் காதலிக்கிறாள் என்றுதானே நீ சொன்னனி.. ஆனால் அவள் அப்படியெதுவும் இல்லையெண்டுறாள். என்ன விசயம்..’’

‘‘அதற்கு இப்போ என்ன’’ என்பதைப்போல யோகன் என்னைப் பார்த்தான். பார்வையே ‘‘இது உனக்கு தேவையற்ற சமாச்சாரம்’’ என்பதை உணர்த்தியது. ‘‘இயக்கத்தில உறுப்பினராக இருக்கும்போது காதலிப்பது கூட இப்பொழுது பெரிய விசயம் கிடையாது. நான் இயக்கமும் இல்லை. நீங்கள் எப்பிடி என்னை விசாரிப்பீர்கள்’’ என்று அவன் எடுத்த எடுப்பிலேயே என்னைக் கோபப்படுத்தினான். எனக்கு தலைக்குள் கிறுகிறுத்துக் கொண்டு வந்தது.

‘‘இயக்கமில்லையெண்டு தெரியுதுதானே.. பிறகென்ன மயிருக்கடா சயனைட் அடிப்பன் எண்டு சொன்னனி.. ’’

யோகன் சட்டென்று அமைதியானான். சுகன்யா எல்லாவற்றையும் இன்னொரு மூன்றாம் நபருக்கு சொல்லி விட்டாள் என்பது அவனுக்கு ஏமாற்றமாய் இருந்திருக்க வேண்டும். நிலத்தைப் பார்த்தபடி நின்றான்.

''போடா போ.. அவள் உன்னைக் சைக்கோ என்று சொல்லுறாள். நீ காதல் எண்டு கொண்டு திரியிறாய்.. '' நக்கலான மொழியில் நான் சொன்னேன். அவனின் குரல் அழுகிற நிலைக்கு வந்திருந்தது. கண்களில் நீர் துளிர்த்திருந்தது. அவனை காயப்படுத்தி விட்டேனோ என்று அவனில் இரக்கம் தோன்றிற்று.

''அண்ணை நான் அவளை சீரியஸாகக் காதலிக்கிறன். அவளுக்கு அது விளங்குதில்லை'' என்றவன் கொஞ்ச நேரம் அமைதியாயிருந்தான். பிறகு ''என்ரை காதல் உண்மையானது எண்டதை அவவுக்கு எப்பிடிக் காட்டுறன் எண்டு பாருங்கோ..'' என்று சொல்லி விட்டு கண்களைத் துடைத்து மூக்கை உறிஞ்சியபடி போனான்.

இது நடந்து இரண்டாம் நாள் சுகன்யாவிடமிருந்து இன்னொரு மெயில் வந்தது. இம்முறை பொருட்தலைப்பு Urgent என்று இருந்தது. அஞ்சலோடு ஸ்கான் செய்யப்பட்ட கடிதமொன்றையும் அவள் இணைத்திருந்தாள். மெயிலில் அவள் அழுதேயிருந்தாள்.

எனது நிம்மதி தொலைந்தே போய்விட்டது. எதற்காக தாயகத்திற்கு வந்தேன் என்று இப்பொழுது யோசிக்கிறேன். தயவு செய்து இத்தோடு அனுப்பியிருக்கிற கடிதத்தைப் பார்க்கவும். யோகன் தனது ரத்தத்தால் கடிதம் எழுதி அதை ஸ்கான் செய்து எனக்கு அனுப்பியிருக்கிறார். எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. படிப்பிலும் வேலையிலும் என்னால் கவனம் செலுத்த முடியவில்லை. எப்பொழுது அவர் தனது சைக்கோத்தனத்தை விட்டொழிக்கப் போகிறாரோ தெரியவில்லை.

என்று கடிதத்தை சுகன்யா முடித்திருந்தாள். நான் இரத்தத்தால் எழுதப்பட்டு ஸ்கான் செய்யப்பட்ட கடிதத்தைப் பார்த்தேன். அது கவிதை மாதிரி இருந்தது. அதை எழுதுவதற்கு யோகன் அதிகபட்சமாக பத்துத் துளி இரத்தத்தைச் செலவழித்திருக்கலாம் என்று தோன்றியது. சரியாக ஐந்தே வரிகளில் சாய்ந்த எழுத்துக்களில் அது இருந்தது.

இரத்தக் கடிதம்

நீ விட்டுப் போனபிறகும்

தொட்டுத் தொடர்கின்றன

உன் நினைவும்.. அருகாமையும்

சொட்டுகிற இந்த ரத்தத் துளிகள் சொல்லட்டும்

உன் மீதான என் பிரியத்தை..

நான் இரத்தக் கடிதம் குறித்து யோகனிடம் எதுவும் கேட்கவில்லை. சுகன்யாவிற்கு மட்டும் ஒரு பதில் எழுதினேன். அதில் யோகன் உண்மையிலேயே ரத்தத்தால் இந்த கடிதத்தை எழுதவில்லையென்றும் இதற்காகப் பிரத்தியேகமாக இறைச்சிக் கடையில் போத்தலொன்றில் அவன் இரத்தம் வாங்கியதை சில நண்பர் உறுதிப்படுத்தியுள்ளார்கள் என்றும் மனதை வீணாக அலட்டிக் கொள்ள வேண்டாம் என்றும் தொடர்ந்தும் உங்களது சேவை நாட்டிற்குத் தேவை என்றும் எழுதியிருந்தேன்.

இதற்கிடையில் பிரெஞ்சு நாட்டு தொலைக்காட்சியொன்று சண்டைக்களங்களில் ஊனமுற்ற போராளிகளின் வாழ்வு எனும் பெயரில் படம் எடுக்க கிளிநொச்சி வந்திருந்தது. நான் அதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்தேன். சில தயார்ப்படுத்தல்களை செய்யவேண்டியிருந்தது. பிரெஞ்சுக்காரர்களை ஆச்சரியப் படுத்துகிற நோக்கில் மீண்டும் நோர்மன்டித் தரையிறக்கம் புத்தகத்தை படித்து முடித்தேன்.

எனது கால் எப்படித் துண்டானது என்று அவர்கள் கட்டாயமாக கேட்கக் கூடும். சில சம்பவங்களைக் கோர்வையாக நினைவு படுத்திக்கொண்டேன். அவர்கள் கேட்காவிட்டாலும் இப் பிரதி முடிவதற்கிடையில் நான் சொல்லியாக வேண்டும்.

நான் யோகனை முல்லைத்தீவுக் கடற்கரையில் பிறகு சந்தித்தேன். அப்பொழுது நோர்வேயிலிருந்து வந்திருந்த மாணவர்களை கடற்கரைக்குக் கூட்டி வந்திருந்தோம். யோகன் அவர்களோடு மினக்கெட்டுக் கொண்டிருந்த நேரம் “என்னமாதிரியடா சுகன்யான்ரை விசயம்” என்று அவனை கேட்டேன்.

அவன் உதடுகளைச்சுழித்து ப்ச் என்றான். பிறகு அவள் ‘‘சரிப்பட்டு வரமாட்டாள் அண்ணை’’ என்றான்.

‘‘ஏன்ரா’’

‘‘அவள் நிக்கரோடையும் பிராவோடையும் பப்ளிக்கான இடங்களில குளிக்கிற பெட்டை.. எங்கடை கலாச்சாராத்துக்கு அதெல்லாம் சரிப்பட்டு வராது.’’ என்று கதையை முடித்த யோகன் பிறகு ‘‘அந்தா பாருங்கோ.. அதில நிற்கிற கப்பல்தான் நாங்கள் அடிச்சு இழுத்துக்கொண்டு வந்த கப்பல். இப்ப அதிலதான் நாங்கள் ரெயினிங் எடுக்கிறம்’’ என்று நோர்வேக் குழுவுக்கு விளங்கப்படுத்தத் தொடங்கினான். அவர்களில் ஒருத்தி அந்தக் கப்பலை ஆ என்று பார்த்துக் கொண்டு நின்றாள். அந்த ஒருத்தியை யோகன் ஆ என்று பார்த்துக் கொண்டு நின்றான்.

# 12

ஊர்காவற்துறையிலிருந்து நயினாதீவிற்குப் புறப்பட்ட பயணிகள் படகு, அலையரசி கடல்வழியில் இடைத்துாரத்தில் போய்க்கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் மதியம் பன்னிரண்டு மணிக்கு ஊர்காவற்துறையிலிருந்து புறப்படும் அலையரசி பின்னேரம் நான்கு மணிப்பொழுதில் மீண்டும் நயினாதீவிலிருந்து திரும்பும். இலங்கைத் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமான அந்த படகில் நயினாதீவிற்கான தபாற் சேவைகள் நடைபெற்றன. அந்த பயணத்தில் கோயிலுக்கு செல்லும் பொது சனங்களையும் ஏற்றிச் சென்று மீண்டும் அழைத்து வந்தார்கள். தலைக்கு ஒரு ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டது.

அலையரசி நயினாதீவை அடைவதற்கு இன்னும் இருபது நிமிடங்கள் இருந்தன. அலைகள் மிருதுவாக வருடுவதை போல அலையரசியின் அடிப்பகுதியில் மோதியபடியிருந்தன. கடல் அமைதியாக இருந்தது. துாரத்தே தீவும் படகுத் துறையும் தெரியத்தொடங்கிய சற்றைக்கெல்லாம் அலையரசியின் பின்னாலேயே அதனை துரத்தியபடிவந்த வேகப்படகொன்று பெரும் சத்தத்துடன் முந்தியது. பிறகு நீரைக் கிழித்தபடி அரைவட்டத்தில் திரும்பி அலையரசியை வழிமறித்து நின்றது.

அந்தப் வேகப்படகில் இவனும் சந்திரனும் இன்னும் இரண்டு இளைஞர்களும் நின்றிருந்தனர். இவன் தனது கைகளில் எல் எம் ஜியை வானத்தை நோக்கி உயர்த்திப் பிடித்திருந்தான். சற்று முன்னர் அதிலிருந்து மூன்று நான்கு குண்டுகள் கடல் அதிரும் சத்தத்தோடு வெளியேறியிருந்தன.

அலையரசிக்கு அருகில் படகினை அணைத்த பிறகு இவனும் சந்திரனும் அதற்குள் இறங்கினார்கள். துப்பாக்கிகளை கண்ட சனங்களின் முகத்தில் மிரட்சியின் நிழல் படரத்தொடங்கியது. சிறுவர்கள் துவக்குகளை வைத்த கண் வாங்காமல் வெறித்துப் பார்த்தனர். சந்திரன் அவர்களை எண்ணத்தொடங்கினான். பத்தொன்பது பெண்கள், பதினைந்து சிறுவர்கள் குழந்தைகள், ஒன்றிரண்டு வயது போனவர்களையும் சேர்த்து நாற்பத்தேழு பேர் அலையரசியில் இருந்தார்கள். இவன் துப்பாக்கியைத் தோள்களில் தாங்கிக்

கொண்டான். பிறகு படகினை ஊர்காவற்துறைக்கே திருப்புமாறு உத்தரவிட்டான்.

‘‘ஏன்..’’ என்று ஓட்டி கேட்டான். இந்த கேள்விக்கு பதில் எதுவும் சொல்லத் தேவையில்லை என்பதைப்போல இவன் பயணிகளுக்கு நடுவில் நின்றுகொண்டு ‘‘ஒண்டுக்கும் பயப்பிட வேண்டாம். உங்கடை ஐடென்ரிக்காட்டுகளை இவரிட்டைக் குடுங்கோ’’ என்று சந்திரனைக் காட்டினான்.

நடுத்தரவயதான ஒரு மனிதர், அவரது தோள்களில் குழந்தை தூங்கிக் கொண்டிருந்தது, இவனுக்கு அருகில் வந்து தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார்.

‘‘தம்பி என்ரை பேர் தனபாலன், தொல்புரம் விக்கினேஸ்வரா அதிபர்’’

‘‘குட் ஆப்ரர்னுான் சேர்.. நல்லது உங்கடை இடத்தில போய் இருங்கோ’’ என்று ஒரு கையால் கும்பிடு வைப்பதுபோல சைகை செய்து இவன் சொன்னான்.

சந்திரன் எல்லா அடையாள அட்டைகளையும் வாங்கிச் சேர்த்திருந்தான். அலையரசி திரும்பவும் ஊர்காவற்துறையை நோக்கித் திரும்பியது.

‘‘என்னத்துக்கு எங்களைத் திரும்ப கூட்டிக் கொண்டு போறீங்கள் எண்டு தெரிஞ்சு கொள்ளலாமோ.." என்று அதிபர் கேட்டார்.

‘‘கொண்டு வரச் சொல்லி ஓடர்"

‘‘யாரிட்டை இருந்து.’’

‘‘மேலிடம்’’

‘‘தம்பி இந்த சனங்கள் நயினாதீவுக்கு சற்றுலாவுக்கு போகேல்லை. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தேவை. பாரும்.. என்ரை தலை நரைச்ச பிறகு பிறந்தவள் இவள். இந்தப் பிள்ளைச் செல்வம் கிடைக்கோணும் எண்டதுக்காக நயினா தீவு அம்மாளிட்டை நேர்த்தியொண்டு இருக்கு. அதைச் செய்யவேணும். எங்களை விட்டுவிடும்’’

இவன் இதற்கும் பதில் எதுவும் தேவையில்லை என்பதைப் போல வெளியே பார்த்தபடி நின்றான். அதிபர் இவன் தோள்களைத் தட்டினார்.

‘‘ஐசே.. நானொரு அதிபர். கவர்மென்ட் உத்தியோகத்தன். இஞ்சை பாரும் சனங்களை.. குழந்தைகள் வயதுபோனதுகள் எண்டு நிறையப் பேர். இப்பிடி

நீங்கள் செய்யக் கூடாது. சனங்களின்ரை சாபம் உங்களைச் சும்மா விடாது. நீங்கள் செய்யிறது நல்லதில்லை.''

இவனுக்கு உச்சந் தலைக்குள் கொதித்துக் கொண்டு வந்தது. ''நாங்கள் செய்யிறது நல்லதில்லை எண்டு எங்களுக்கும் தெரியுமடா நாயே'' என்று அவரைப் பிடித்துத் தள்ளினான். தடுமாறி விழப்போனவரை அவரது மனைவியாக இருக்கவேண்டும், ஓடிவந்து தாங்கிப் பிடித்துக் கொண்டாள். தோள்களில் சாய்ந்திருந்த குழந்தை நித்திரை குழம்பி கத்தத் தொடங்கியது. இவனுக்கு இன்னும் கோபம் அடங்கிய மாதிரி தெரியவில்லை.

''எடியே உன்ரை புருசனிட்டைக் கேள்.. உயிரோடை கரைக்குப் போக விருப்பமோ இல்லாட்டி செத்த சவமா கடலுக்கை போக விருப்பமோ எண்டு''

அதற்குப்பிறகு அலையரசி அமைதியானது. ஒன்றிரண்டு விசும்பல்கள் மட்டுமே கேட்டன.

கரையில் வெயில் கடுமையாக இருந்தது. இவர்களை அழைத்துப்போக இரண்டு மினிபஸ்கள் அங்கே நின்றன. முன்னொரு காலத்தில் குப்புறக்கிடத்தி சுட்டு சுட்டு விளையாடிய இவனது இப்போதைய பொறுப்பாளன் இவர்களை வரவேற்றான். அலையரசியில் இருந்து இன்னும் சனங்கள் இறங்கி கொண்டிருந்தார்கள். எல்லாக் குழந்தைகளும் வீரிட்டுக் குழறி அந்தச் சூழலை களேபரப்படுத்தியபடி இருந்தன. சில தாய்மார்கள் ''சனியனே கத்தாமல் கிட" என்று குழந்தைகளின் உதடுகளில் விரல்களால் சுண்டினார்கள். குழந்தைகள் மேலும் கத்தத் தொடங்கினார்கள்.

''எவ்வளவு தேறினது.'' என்று இடுப்பில் கை வைத்துக் கொண்டு பொறுப்பாளன் கேட்டான்.

''நாப்பத்தி ஏழு.. ஆனா நிறையக் குழந்தைகள்.''

''அது பரவாயில்லை.. ஆட்கணக்குத்தான் முக்கியம்''

எல்லோரையும் பஸ்சில் ஏற்றினார்கள். இரண்டு பஸ்களிலும் தள்ளி அடைந்த பிறகும் இன்னும் இரண்டு மூன்று பேர்களை ஏற்றுவதற்கு இடம் இருந்தது. பொறுப்பாளன் இறங்கிப்போய் அலையரசியின் ஓட்டியுடனும், தபாற்கந்தோர் ஊழியன் ஒருவனுடனும் திரும்பி வந்தான்.

''நீங்களும் ஏறுங்கோ.. ''

தபால் ஊழியர் சற்று தயங்கினார். ‘‘எனக்கு டியூட்டி இருக்கு. கடிதங்கள் கொண்டு போகவேணும் எடுத்துக் கொண்டு வரோணும். உங்கடை ஆட்டங்களுக்கு நிண்டு ஆடேலாது. நான் வரமாட்டன்" என்று அவர் சொன்னார். பொறுப்பாளன் எதுவும் பேசவில்லை. இவனிடமிருந்த துப்பாக்கியை ‘‘இஞ்சை கொண்டா’’ என்று வாங்கி மேலே உயர்த்தினான்.

‘‘அப்பிடியொரு அவசரமும் இல்லை. கடிதங்களை நாளைக்கும் குடுக்கலாம்தானே’’ என்ற ஊழியர் பஸ்ஸில் ஏறினார்.

வழி நெடுகிலும் சனநடமாட்டத்தை காணவில்லை. கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் முழுவதும் ஹர்த்தால் அனுஸ்டிக்கப்பட்டு கொண்டிருந்தது. வீதியில் தெரிந்த வாகனங்கள், ஒன்றில் இந்திய இராணுவத்தைச் சுமந்து செல்கிற ஜீப்புகளாக இருந்தன. அல்லது இப்படி சனங்களை அடைத்து போகிற பஸ்களாக இருந்தன. அன்றைய ஒரு நாளில் யாழ்ப்பாணத்தின் எல்லாப் பாதைகளும் முற்றவெளிக்கே என்றவாறாக நிலைமை இருந்தது.

முற்றவெளி சனங்களால் பிதுங்கியது. ஆஸ்பத்திரிக்கு போனவர்கள், பள்ளிக்கூடம் போனவர்கள், வேலைக்குப் போனவர்கள், ரியுசனுக்குப் போனவர்கள், நயினாதீவிற்குப் போனவர்கள், கேதீஸ்வரம் போனவர்கள், இப்படி எங்கேயும் போகாமல் ‘‘சிவனே’’ என்று வீட்டில் இருந்தவர்கள் என்று எல்லோரையும் அழைத்து வந்திருந்தார்கள்.

அதிபர் தனபாலன் அங்கிருந்த இந்திய ராணுவ அதிகாரியிடம் சென்று என்னவோ சொன்னார். அவன் கைகளை விரித்து இல்லையென்று தலையாட்டினான். அதிபரின் மனைவி ‘‘வாங்கோப்பா பேசாமல்’’ என்று அவரைப் பின்னால் நின்று இழுத்தாள்.

முதலில் அதிபர் முற்றவெளியில் நின்ற ஒட்டுமொத்த மக்களுக்காகவும் பேசினார். அவர்களின் அலுவல்களை செய்யவிடாமல் இப்படி கட்டாயப்படுத்திக் கூட்டி வந்தது பெரும் பிழை என்று அவர் சொன்னார்.

‘‘இதனை நாங்கள் ஏற்பாடு செய்யவில்லை. எங்களுக்கும் இதற்கும் சம்மந்தமே இல்லை. இதனை நீங்கள்தானே செய்கிறீர்கள்" என்றான் அதிகாரி.

பிறகு அதிபர் தன்னோடு நயினாதீவுக்கு புறப்பட்ட பக்கத்து வீட்டுக்காரர்களுக்கும் தனக்குமாகப் பேசினார். கோயிலுக்கு ஒரு நேர்த்தியின் நிமித்தம் செல்வதாகவும் இப்பொழுது விட்டாலும் நாங்கள் குறிகட்டுவானுக்குப் போய் அங்கிருந்து படகினைப்பிடித்து நயினாதீவுக்குப் போகமுடியும் என்று அவர் சொன்னார்.

‘‘இன்று ஹர்த்தால் என்று நினைக்கிறேன். நீங்கள் கோயிலுக்குப் போக முடியாது. மேலும் இப்படி உங்களை வீட்டுக்கு அனுப்புகிற எனக்கு அதிகாரம் இல்லை. இது மக்களாக இணைந்து நடத்துகிற ஊர்வலம்." என்றான் அதிகாரி.

இறுதியாக அதிபர் தனக்காகவும் மனைவிக்காகவும் குழந்தைக்காகவும் மட்டும் கதைத்தார்.

‘‘சேர், கோயிலுக்குப் போக முடியாவிட்டாலும் பரவாயில்லை. குழந்தைக்கு வெயிலில் நின்று உடம்பு தணலாய் கொதிக்குது. என்னையும் மனைவியை மட்டுமென்றாலும் விடுங்கோ.. நாங்கள் வீட்டை போறம். இந்தியா ஒரு மனிதாபிமானமுள்ள நாடல்லவா" என்று கெஞ்சினார்.

அதிகாரி இறங்கி வந்தான். அதிபரும் மனைவியும் வீட்டுக்குப் போகலாம் என்றான். வழியில் எவரேனும் மறித்தால் அவர்களுக்குத் தனது பெயரையும் பதவியையும் சொல்லச் சொன்னான். அதிபரது முகத்தில் புளுகம் தலைவிரித்தாடியது. அவர் மனைவியிடம் ‘‘வெளிக்கிடடி கெதியில" என்றார். புறப்படும்போது பக்கத்து வீட்டு ஆட்களிடம் ‘‘நானொரு அதிபர் எண்டும் கவர்மென்ட் உத்தியோகத்தன் எண்டும் சொன்னன். உடனை வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டுட்டான்" என்றார்.

முற்றவெளியில் இனி நிற்பதற்கு இடமில்லை என்றாகி போனது. சனங்களின் கைகளில் பதாகை தட்டிகைளை வழங்கி அவற்றை உயர்த்திப் பிடிக்கச் சொன்னார்கள். இவன் பள்ளிக்கூட மாணவர்களது கைகளில் திணித்த தட்டிகளில் கீழ்வரும் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இந்திய இராணுவமே.. எங்களை அனாதையாக விட்டுவிட்டுப் போகாதே..

போகாதே போகாதே இந்திய இராணுவமே..

இந்திய இராணுவமே இடைநடுவில் போகாதே..

இந்தியா நீயே எமது மக்களின் பாதுகாவலன்

இந்தியாவே உனது சேவை எமக்கு இன்னமும் தேவை..

முற்றவெளியிலிருந்து ஊர்வலம் மெதுவாக நகரத் தொடங்கியது. முன்னால் நீளமான பெரிய பனரில் "இந்திய இராணுவம் திரும்பப் பெறப்படுவதை கண்டித்து தமிழ் மக்கள் நடாத்தும் மாபெரும் கண்டனப் பேரணி" என எழுதப்பட்டிருந்தது.

லவுட் ஸ்பீக்கரில் "இந்தியா.." என்று கத்தினார்கள். பின்னால் சனங்கள் சுரத்தில்லாமல் "வாழ்க" என்று கத்தினார்கள். பிறகு "பிரபாகரன்" என்று கத்தினார்கள். அதற்கும் சனங்கள் "வாழ்க" என்றே கத்தினார்கள். அப்பொழுது ஊர்வலம் சற்று சலசலத்தது. பிறகு லவுட் ஸ்பீக்கரில் "பிரபாகரன்" என்று கத்தி "ஒழிக" என்றும் அவர்களே எடுத்துக் கொடுத்தார்கள்.

பின்னால் நின்ற சனங்களுக்கு இந்திய இராணுவமா, பிரபாகரனா என்பதெல்லாம் கேட்கவில்லை. அவர்கள் தம்பாட்டுக்கு ஒரு ஒழுங்கில் "வாழ்க" என்றும் "ஒழிக" என்றும் கத்திக்கொண்டு வந்தார்கள். இதனால் சில வேளைகளில் பிரபாகரன் வாழவும் இந்தியா ஒழியவும் வேண்டியேற்பட்டது.

பேரணியின் முடிவில் கண்டனக் கூட்டமும் நடந்தது. பாடசாலை ஆசியர்கள், கோயில் ஐயர்கள், சேர்ச் பாதிரிகள் எனப் பலரும் இந்திய இராணுவத்தின் அருமை பெருமைகளை எடுத்துச் சொன்னார்கள். முடிவில் "ஈழத்தமிழர்களுக்கு சுபீட்சமான ஒரு முடிவைப் பெற்றுக்கொடுக்கும் வரை இந்தியா தனது படைகளை வாபஸ் வாங்கக் கூடாது" என்று முடித்தனர். இப்படியாக இரவு தொடங்கியதும் ஊர்வலம் முடிந்தது. சனங்கள் திரும்பவும் தங்களை ஊர்களுக்கு கொண்டுபோய் விடும்படி ஏற்பாட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்தனர். அவர்கள் வீடுகளுக்கு நடந்தே போகலாம் என்று அறிவுறுத்தப்பட்டது.

இவனும் தோழர்களும், முகாமுக்குத் திரும்பினார்கள்.

அடுத்து வந்த காலங்கள் பதற்றம் மிகுந்தவையாக இருந்தன. இவனது பொறுப்பாளர்கள் பேயறைந்ததைப் போல திரிந்தார்கள். இந்தியப் படைகள் வெளியேறப்போவது கிட்டத்தட்ட உறுதியானது. வன்னிக் காட்டுக்குள் நின்ற

பெரிய பெரிய புலிகளெல்லாம் கொழும்பில் ஹில்டன் ஹொட்டலில் தங்கி நின்று பிரேமதாசாவுடன் சிரித்து பேசிக்கொண்டிருந்தார்கள். இடைப்பட்ட காலத்தில் தமிழ்த் தேசிய இராணுவத்தை சேர்ந்த பலரை போட்டுத்தள்ள புலிகள் தொடங்கியிருந்தார்கள். அவர்களில் தேவபாலுவும் ஒருவனான்.

அவன் வீட்டுக்குப் போயிருந்த போது அது நடந்தது. அன்றைக்கு அவனது குழந்தையின் பிறந்தநாள். விடிய ஆறுமணி பொழுதில் அவன் வீட்டுக்குப் புறப்பட்டான். குழந்தையை முதுகில் சுமந்து ஒரு யானையைப் போல தேவபாலு தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்த எட்டு மணிவாக்கில் வெளிப்படலையை இரண்டு இளைஞர்கள் தட்டினார்கள். அதற்கு சற்றுநேரம் கழித்து அவர்கள் தேவபாலுவையும் தட்டினார்கள்.

படலயைடியில் துப்பாக்கிகளோடு அவர்களைக் கண்ட மாத்திரத்திலேயே குளித்துமுடித்து முற்றத்தில் துளசிச் செடியை சுற்றியபடி நின்ற மனைவி பெருங்குரலில் ஒப்பாரிவைக்கத் தொடங்கியிருந்தாள். தேவபாலு குழந்தையை இறக்கிவிட்டு கதவை திறந்துகொண்டு முற்றத்துக்கு வந்தான். பின்னாலேயே குழந்தையும் ‘‘ப்பா ப்பா’’ என்றபடி தவழ்ந்து வந்தது.

இளைஞர்களில் ஒருவன் தேவபாலுவின் நெற்றியில் துப்பாக்கியை வைத்து அழுத்தியபோது கண்கள் இருளத் தொடங்கின. தேவபாலுவின் குரல் நடுக்கமுற்று கீச்சிட்டது.

‘‘நீங்கள் நினைக்கிற மாதிரி இல்லை.. நான்’’ என்று அவன் முடிக்க முன்பாகவே சத்தம் அதிர பிடரியைப் பிய்த்துக் கொண்டு குண்டு பறந்தது. அவன் தேர் சரிவதை போல பின்புறமாக விழுந்தான். திறந்து கிடந்த விழிகளில் திகைப்பு அடங்கியிருக்கவில்லை. மனைவி மூச்சுப் பேச்சின்றி சரிந்தாள். அவளது கண்கள் நெற்றிக்குள் ஏறிக்கிடந்தன. ஒரு கேவல் ஒலிமட்டும் அவளிடமிருந்து வந்து கொண்டிருந்தது. தேவபாலுவின் குழந்தை அவனது தலைக்கு அருகில் உட்கார்ந்து இரத்தத்தில் கைகளை அளைந்து விளையாடியது. பிறகு ‘‘ப்பா ப்பா’’ என்று அவனது கன்னத்தில் தட்டியது. சற்று நேரத்தில் வீரிட்டுக் கத்தத் தொடங்கியது.

தேவபாலுவின் சாவு இவனைக் கலங்கடித்திருந்தது. இந்தியப் படைகள் வெளியேறும் நாள் நெருங்க சாவு வாயைப் பிளந்தபடி இவனை நோக்கி விரைவதை போலவே இருந்தது. சுழிபுரத்தில் இந்திய இராணுவ முகாம்

ஒன்றிற்குள் இவனும் மற்றவர்களும் முடங்கிக் கிடந்தார்கள். பொறுப்பாளர்களை கண்ணில் தெரியவில்லை. திடீரென்று அவர்கள் காணாமற்போயிருந்தார்கள். இராணுவ அதிகாரிகளிடம் விசாரித்த அளவில் தாம் சில தலைவர்களை இந்தியாவிற்கு அழைத்துச் செல்வதாகவும் சில முக்கியமானவர்களை கொழும்பிற்கு அழைத்துச் சென்று விடுவதாகவும் சொன்னார்கள்.

இந்திய இராணுவம் வெளியேறிய பிறகு என்ன செய்வது என்பதைப் பற்றி இவர்கள் தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்தார்கள். அதன்படி எல்லோரும் வீடுகளுக்குக் கலைந்து செல்வதாகவும் பின்னர் ஊர்ப் பெரியவர்களான பாடசாலை ஆசிரியர்கள், கோயில் ஐயர்கள், சேர்ச் பாதிரிகள் போன்றோரின் துணையுடன் புலிகள் இயக்கத்தில் சரணடைவதாகவும் முடிவெடுக்கப்பட்டது.

திருகோணமலைத் துறைமுகத்தில் இந்திய இராணுவம் மூட்டை முடிச்சுக்களோடு கப்பல் ஏறக் காத்திருந்த அன்றைக்கு இரவு இவர்கள் வீடுகளுக்குப் போனார்கள். இவன் அம்மாவையும் தங்கச்சியையும் கட்டிப்பிடித்து அழுது தீர்த்தான். அம்மாவின் மடியில் சாய்ந்து அப்படியே நித்திரையாகிப் போனான். கண்ணயரும் நேரம்வரை அவள் தலை கோதிபடியிருந்தாள்.

விடியற்காலை வீட்டிற்கு வந்த புலிகள் இவனை கைது செய்தார்கள். அம்மா தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறத் தொடங்கினாள்.

# 13

அகன்ற அடி பருத்த மரங்கள் விசாலமாக வளர்ந்து மேலே படர்ந்து கிளைபரப்பியிருந்தன. கிளைகளுக்கு ஊடாக வெளிச்சம் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிலத்தில் படிந்திருந்தது. இலைகள் அசைகிற போது உருவான மிருதுவான காற்று ஒரு குழந்தையின் காற் பாதம் போல உடலில் வருடியது. நல்ல குளிர்ச்சியாக இருந்தது.

தடித்த டெனிம் ஜீன்சும் மேலே தொள தொள என சட்டையும் அணிந்திருந்த பிரெஞ்சு பெண்மணி நிறைய வெள்ளைத்தாள்களை கையில் வைத்திருந்தார். அடிக்கொருதடவை தன் மொழிபெயர்ப்பாளரிடம் அவர் பேசிக்கொண்டிருந்தார். செம்பட்டை நிறத்தில் கட்டையான தலைமயிர்களை உடைய, வெளிறிய நீல நிறத்தில் அரைக் காற்சட்டையும் கசங்கிய ரீசேர்ட் ஒன்றும் அணிந்திருந்த பிரெஞ்சு இளைஞனிடம் கமெரா இருந்தது. அவன் கமெராவை கண்களில் பொருத்தியபடி வெளிச்சங்களை அளவிட்டுக் கொண்டிருந்தான்.

நான் ஒருவிதமான பதட்டத்தோடு நின்றிருந்தேன். மொழிபெயர்ப்பாளர் எல்லாவற்றையும் விளங்கப்படுத்தியிருந்தார். இதுவொரு பேட்டி நிகழ்ச்சி இல்லையென்றும் ஆவணப்பட வகையைச் சேர்ந்தது என்றும் அவர் சொன்னார். அதனால் யாரும் அருகேயிருந்து கேள்வி கேட்கப் போவதில்லை என்று நான் நினைத்தது சரியாக இருந்தது.

பருத்தமரத்தின் அருகில் சாய்ந்தும் சாயாததுமாகிய ஒரு நிலையில் நின்றுகொண்டேன். பிரெஞ்சுப் பெண்மணி கமெரா இளைஞனுக்கு பக்கத்தில் நின்று கொண்டார். விரல்களை மடித்து பெருவிரலை மட்டும் உயர்த்தி ‘‘தயாரா’’ என்பதபோல சைகை செய்தார். நான் சரி என்பதை போல தலையசைத்தேன்.

‘‘ஸ்ரார்ட்’’ கமெரா ஓடத்தொடங்கியது.

‘‘எனது பெயர் அமுதன். கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக புலிகள் அமைப்பில் இணைந்து போராடி வருகிறேன். நான் பல சண்டைகளில் பங்கேற்றுள்ளேன். அப்படியொரு சண்டை முல்லைத்தீவில் நடந்தபோது..’’

பேசத்தொடங்கியபோது உடல் விறைப்பதை போல தோன்றிற்று. கைகளை நேராக்கி விரல்களை இறுக்கி பொத்திக் கொண்டேன். கண்களை அகல விரித்தபடி கமராவை நேராக நோக்கி நான் பேசியபடியிருந்தேன்.

பெண்மணி விரல்களால் நெற்றியை அழுத்தி துடைத்து அப்படியே கண் மூக்கு கன்னங்கள் என வழித்து இறக்கினார். உதடுகளை சுழித்து தனது திருப்தியின்மையை வெளிப்படுத்தினார். இளைஞன் தோள்களிலிருந்து கமராவை இறக்கி கைகளில் வைத்துக் கொண்டான்.

மொழிபெயர்ப்பாளர் போதும் என்பதை போல சைகை செய்தார். நான் இறுதி வார்த்தைகளை இழுத்தபடி நிறுத்தினேன். இப்படி இடையில் நிறுத்தினால் திரும்பவும் முதலேயிருந்துதான் வரவேண்டியிருக்கும். பொத்தியிருந்த விரல்களை விரித்து இலேசாக்கினேன். அப்பொழுது உடலும் இலேசானது போல தோன்றிற்று.

அவர்கள் ‘‘மேடையில் பேசுவது போல அல்லாமல் வெகு இயல்பாக பேசுங்கள்’’ என்றார்கள். நடந்து கொண்டு, சிரித்துக்கொண்டு, கமராவைப் பார்க்காமல் ஒரு பக்கமாகப் பார்த்துக்கொண்டு பேச வேண்டுமாம்.

என்னவோ தெரியவில்லை. கமெரா ஓடத்தொடங்கினால் உடல் விறைத்து விடுகிறது. அற்றென்ஷன் பொசிஷனுக்கு வந்துவிடுகிறேன். முன்னர் யுத்தகள ஒளிப்பதிவுகளிலும் இவ்வாறாகத்தான் நடந்தது. ஒபரேஷன் புலிப்பாய்ச்சல் நடந்தபோது ஒளிவீச்சுக்காக நான் பேசியிருந்தேன். பின்னால் சூட்டுச் சத்தங்கள் இன்னமும் கேட்டுக்கொண்டிருக்க, சில இடங்களில் எரிவு அடங்காமலிருக்க, வியர்த்த முகத்தோடும் தோள்களில் சுமந்திருந்த துப்பாக்கியோடும் நான் பேசியிருந்தேன்.

‘‘எதிரியானவன் எங்களது வாழ் நிலங்களை ஆக்கிரமித்து நின்ற நிலையில் அண்ணனின் வழிகாட்டலில் இன்றைக்கு இந்த சண்டையை நாங்கள் நடத்தியிருந்தோம். நூற்றுக்கணக்கில் எதிரிகளை கொன்று மீண்டும் நமது நிலங்களை நாம் மீட்டுள்ளோம். புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’’

அது மிகவும் நன்றாயிருந்தது என்று அப்போது சொன்னார்கள். தங்கச்சியின் பள்ளிக்கூடத்தில் நடந்த பிரச்சாரம் ஒன்றில் அந்த வீடியோவை ஒளிபரப்பிய போது அவள் அண்ணா என்று கத்தினாளாம்.

மொழிபெயர்ப்பாளர் அருகில் வந்தார். தமிழ் இளைஞர். பிரான்சில் இருந்து அவரை அழைத்து வந்திருந்தார்கள். தாடியில் கோடுகளும் குறுக்கு வெட்டுகளும் வைக்காமல் மழித்திருந்தார். நிறப் பூச்சுக்கள் அற்ற தலைமயிரை பக்க உச்சி பிரித்து வாரியிருந்தார். ‘‘நல்ல கலாசாரமான குடும்பமாக்கும்’’ என்று நினைத்துக் கொண்டேன். என்னை அண்ணா என்று அழைத்தார்.

‘‘அண்ணா, முதலில் சும்மா கதைப்பம் எண்டு கேட்கினம். இப்ப நீங்க என்னோட, உங்கட நண்பர்களோடை கதைக்கிறமாதிரி அவையோடையும் கதைக்க வேணும்’’

‘‘அப்ப நல்ல தமிழில கதைக்க வேண்டாமோ’’ என்று நான் கேட்டேன். இளைஞர் பதில் சொல்லாமல் பிரெஞ்சுப் பெண்மணியோடு பேசினார். அவர்களது வார்த்தைகள் வாயில் வழுக்கி கொண்டு போகுமாப்போல இருந்தன. ‘‘உய்.. உய்’’ என்ற சொற்கள் சிரிப்பை உண்டாக்கின.

சற்று பேசி பழகலாம் என்று அவர்கள் கேட்ட கேள்விகள் நீண்டவையாக இருந்தன. எழுதினால் இரண்டு மூன்று பத்திகளில் வரக்கூடும். எனது பதில் வெறும் ஒற்றை வரியில் முடிந்திருந்தது.

‘‘பெண் போராளிகள் சண்டை செய்கிறார்கள், பெரிய மோட்டார் பீரங்கிகளை கட்டியிழுக்கிறார்கள். தற்கொலைப் படையாகவும் இருக்கிறார்கள். ஆனால் இதெல்லாம் இயக்கத்தில் இருக்கும் வரைதான் நடக்கிறதா என்ற கேள்வி எழுகிறது. நாங்கள் கேள்விப்பட்ட அளவில், இயக்கத்தில் இருந்து பிறகு வெளியேறி திருமணம் செய்த பெண்போராளிகள் கூட திரும்பவும், உங்களது தமிழ்ச் சமூக வழக்கத்தின்படிதானே வாழ வேண்டியுள்ளது. இன்னும் சொன்னால், திருமணத்திற்கு பிறகு தங்களது கணவர்களிடம் அடிவாங்குகிற முன்னாள் பெண் போராளிகளைக் கூட நாங்கள் சந்தித்திருக்கிறோம். பரந்துபட்ட சமூக நோக்கத்தில் ஏன் இந்த விடயத்தில் உங்களால் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த முடியவில்லை. பெண் விடுதலையை அனுபவிக்க வேண்டும் என்றால் இயக்கத்தில் இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளதா..’’

தலையை வறு வறு என்று சொறிய வேண்டும் போல எனக்கு தோன்றிற்று. வெளிநாட்டு ஆட்களின் முன் அப்படி நடந்துகொள்வது நாகரீகமில்லை

என்பதால் சொறியவில்லை. இப்படியெல்லாம் கேள்விகள் உள்ளன என்பது ஆச்சரியமாக இருந்தது. தமிழ் பத்திரிகையாளர்கள் ஒருபோதும் இப்படி கேட்டதில்லை. அவர்கள் தயங்கி தயங்கி கேட்கிற ஒரே கேள்வியாக ‘‘தலைவர் எப்பொழுது சண்டையைத் தொடங்குவார்’’ என்பதே இருந்தது. நாங்களும் ‘‘அண்ணை தொடங்கிற நேரத்திலே தொடங்குவார்’’ என்று முடித்து விடுவோம்.

பிரெஞ்சு பெண்மணி எனது பதிலுக்காக மொழி பெயர்ப்பவரை பார்த்தபடி நின்றார். நான் எழுந்து நின்றேன். அவர்கள் எதிர்பார்த்த இயல்பை என்ன வழியிலேனும் கொண்டுவர முயன்றேன். அலட்சியமான பார்வையையொன்றை அவர்களைத் தவிர்த்து வெளியே வீசினேன். பிறகு பதிலைச் சொன்னேன்.

‘‘இப்பிடியான கேள்விகளுக்கு நீங்கள் தமிழினி அக்காவைத்தான் தொடர்பு கொள்ளவேணும்’’

பெண்மணிக்கு பதிலில் திருப்தியிருக்கவில்லை. ஆனால் அவர்கள் தேடிய யதார்த்தம் கிடைத்திருக்கவேண்டும். கமரா இயங்கத் தொடங்கியது. நான் நடந்து வருவதைப் அவர்கள் படம் பிடித்தார்கள். பின்னர் உட்கார்ந்ததை, எழுந்து கொண்டதை, சப்பாத்துக்களை கழட்டுவதை என பல கோணங்களில் கமராவைச் சுழற்றினார்கள். இறுதியில் கமரா முகத்துக்கு நேரே இல்லாமல் பக்கவாட்டில் என்னைப் பதிவு செய்தபடி இருந்தது.

"நீங்கள் நோர்மன்டித் தரையிறக்கம் பற்றி உங்களது பாடப்புத்தகங்களில் படித்திருப்பீர்கள், அப்படியொரு தரையிறக்கத்தை இலங்கை இராணுவம் அளம்பிலில் நடத்தியது."

பிரெஞ்சு பெண்மணி அடியும் நுனியும் புரியாதவளாய் விழித்ததை நான் புரிந்துகொண்டேன். தொடக்கத்தில் இருந்து சொன்னாலன்றி எவராலும் புரிந்து கொள்ள முடியாத கதைகளாக இவையிருந்தன. நான் சொல்ல தொடங்கினேன்.

யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றியபோது எனக்கெல்லாம் பைத்தியம் பிடித்தது மாதிரியிருந்தது. அப்படியொன்று நடக்கும் என்பதை நாங்கள் நினைத்தும் பார்த்திருக்கவில்லை. விரக்தியும், வேதனையும், கோபமும் உணர்வுகளை எப்பொழுதும் ஆட்கொண்டிருந்தன.

வன்னியில் புதுக்குடியிருப்புக்கும் வள்ளிபுனத்திற்கும் இடையில் கைவேலியில் காட்டுக்குள் புதிய முகாமினை அமைத்திருந்தோம். காடுகளுக்கு நடுவிலாக முகாம் எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. கொழும்புத்துறையில் பெரிய உயர்ந்த மதில்கள் எங்களது முகாமைச் சுற்றியிருந்தன. நீண்ட பரப்பில் காணியும், நடுவில் இருந்த கல்வீடும் வெளிநாட்டுக்கு சென்று தங்கிவிட்ட ஒரு குடும்பத்திற்கு சொந்தமாயிருந்தன. முகாமை சுற்றி சனங்கள் வீடுகளிருந்தன.

பொங்கல் தீபாவளி நாட்களில் எப்பொழுதும் அடைக்கப்பட்டிருக்கும் எங்களது பெரிய கேற்றில் வந்து நின்று தட்டி அவர்கள் பலகாரங்களை தருவார்கள். கடைசி இரண்டு வருடங்களில் இயக்கம் தைப்பொங்கலை கொண்டாடியிருந்தது. முதல் வருடம் அயல் சனங்களுக்கு பொங்கலை கொடுத்தபோது அப்படியொரு அதிசயமாக அவர்கள் எங்களை பார்த்தார்கள்.

காட்டுக்குள் பொங்கமுடியுமென்று தோன்றவில்லை. காட்டு மரங்களும் பற்றைகளும் புற்களும் அந்த பிரதேசத்தை நிறைத்திருந்தன. காட்டுக்கென்று தனியான வெக்கையொன்று உண்டு. அது எப்பொழுதும் உடலை அழுத்திக்கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் பறிபோன வெப்பியாரம் அதனை இன்னமும் அதிகப்படுத்தியிருந்தது.

இயக்கம் இரண்டொரு மாதங்களில் யாழ்ப்பாணத்திற்குள் புகுந்துவிடும் என்று நாங்கள் பேசிக்கொண்டோம். குடாநாட்டு வரைபடத்தை விரித்து வைத்துக் கொண்டு ஆளாளுக்கு திட்டமிட்டோம். பூநகரியிலும் ஆனையிறவிலும் இராணுவம் தரித்துநிற்க யாழ்ப்பாணத்திற்குள் எப்பிடி புகுவது என்று தோன்றவில்லை. நான் வன்னியில் இருந்து சில கோடுகளை மண்டைதீவுக்கும் சாவகச்சேரிக்கும் கிளாலிக்கும் கீறினேன். எல்லாக் கோடுகளும் பூநகரியையும் ஆனையிறவையும் பிரித்து கொண்டே போயின.

‘‘யாழ்ப்பாணத்துக்கு அடி விழமுதல் பூநகரி அல்லது ஆனையிறவு இதில இரண்டில் ஒன்றுக்கு அல்லது ரண்டுக்கும்தான் அடிவிழும்’’ என்று நான் நண்பர்களுக்கு சொன்னேன். அப்படி சொல்லியிருந்த கொஞ்ச நாட்களில் பயிற்சிகள் தொடங்கின. வரைபடத்தில் பூநகரி இருந்த இடத்தில் புள்ளடியிட்டு வைத்தேன்.

கடும் பயிற்சிகள் தொடங்கியிருந்தன. எந்த முகாமிற்கான தாக்குதல் என்பது யாருக்கும் அறிவிக்கப்படவில்லை. அது பூநகரிதான் என்ற எனது ஊகத்தை

மற்றவர்கள் நம்ப தொடங்கினார்கள். பூநகரிக்கு அருகாக பரந்த வெட்டையில் டம்மிகள் தயார்ப்படுத்தப்பட்டிருந்தன. சுற்றிவளைத்தும், பதுங்கி சென்றும், நேரடியாக நுழைந்தும் தாக்குதலை தொடுப்பதற்கான பயிற்சிகள் அதிகாலை தொடங்கி நடந்தன.

‘‘இந்தச் சண்டையில்தான் இயக்கத்தின் எதிர்காலம் இருக்கிறது’’ என்று எங்களுக்கு சொல்லப்பட்டது.

சண்டைக்கான திகதி சொல்லப்பட்டபோது இன்னும் ஒரு வாரம் இருந்தது. சண்டைக்கான இடத்தைச் சொன்னபோது இன்னும் மூன்று நாட்கள் இருந்தன. நிலைகளுக்கு கொண்டுபோய் இறக்கியபோது சண்டைக்கு இன்னும் இரண்டு மணி நேரம் இருந்தது. இடைப்பட்ட நேரத்தில் தளபதிகள் பேசினார்கள்.

‘‘இந்த முகாமில கிட்டத்தட்ட ஆயிரத்து இருநூறு படையினர் இருக்கினம். இவர்களில ஒருவரும் மிஞ்சக்கூடாது எண்டதுதான் எங்கடை நோக்கமா இருக்க வேணும்’’

‘‘சிங்கள அரசு புலிகளை முழுக்கத் தோற்கடிச்சிட்டம் என்று பரப்புரை செய்யுது. இந்த அடியில அது சுக்குநூறாக உடையவேணும்’’

‘‘இந்த முகாமின் உள்ளே இரண்டு ஆட்லரிகள் இருக்குது என்பது உங்களுக்கு தெரியும். அண்ணைக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கு. அதுவும் உங்களுக்குத் தெரியும்’’

நடுச்சாமம் கடந்து விடிந்த நாள் ஒன்பதாம் நம்பரில் இருந்தது. ஒன்பதாம் நம்பரில் நாங்களும் தொடங்குவோம் என்பதை முல்லைத்தீவிலிருந்த இராணுவம் எதிர்பார்த்திராது என்று நினைக்கிறேன்.

நந்திக்கடல் பக்கமாக எங்களது அணிகள் சன்னதம் கொண்டன. இருண்ட வானத்தில் வால் நட்சத்திரங்கள் எரிந்தபடி தாறுமாறாக பறந்து விழுவதை போன்று குண்டுகள் பாய தொடங்கின. எரிமலையின் ஒடுங்கிய வாயிலிருந்து நெருப்பு மேலெழும்புவதை போல குண்டுகள் வெடித்த இடங்களில் தீக்கோளம் மேலெழுந்தது. சற்றுப் பின்னர் சத்தங்கள் குறைந்திருந்த போது முதல் காவல் சுற்று உடைத்திருந்தது.

நான் நிலையெடுத்திருந்த சேர்ச்சின் உட்புறச் சுவற்றில் கரிக்கட்டிகளாலும் ஓட்டு துண்டுகளாலும் பெண் உடல்கள் நிர்வாணமாக வரையப்பட்டிருந்தன.

அவற்றில் சிலவற்றின் தொடைகளுக்கிடையில் துப்பாக்கியைச் செருகுவது போலவும், கிரேனைட் வெடித்துச் சிதறுவது போலவும் இருந்தது. சுவரைக் கண்டால் காலைத் தூக்குகிற நாய்களைப் போல இராணுவத்திற்கு இப்படியொரு வியாதி இருக்கிறது. சண்டைகளில் பெண் போராளிகளோடு இந்த அசிங்கங்களை எதிர்கொள்ள நேரிடும் போது அசூசையாக உள்ளது.

வெளிச்சம் நன்றாக பரவியிருந்த போது நாங்கள் ஹெலி தளத்திற்கு வந்திருந்தோம். அதற்கு சற்றுப் பிந்தி மற்றுமொரு அணி ஆட்லறித் தளத்திற்குள் நுழைந்ததாக செய்தி வந்தபோது இன்றைக்கு இரவு சண்டையின் பெயரை அறிவிக்கலாம் என்று நினைத்தேன்.

பதுங்கு குழிகளில், மண் மூட்டை அரண்களில், தெருக்களில் எங்கேயும் இராணுவ உடல்கள் சிதறுண்டு கிடந்தன. அவற்றை கிளியர் பண்ண சனங்களை கூட்டிவந்தார்கள். அவர்கள் ஓடித்திரிந்து ஆயுதங்களை பொறுக்கி சேர்த்து ட்ரக்டர்களில் ஏற்றியனுப்பினார்கள். சில கைத்துப்பாக்கிகளும் துப்பாக்கி ரவைகளும் வீடுகளுக்கும் போயின. அதற்கென பின்னர் அன்பான தமிழீழ மக்களுக்கு ஒரு அறிவிப்பை ரேடியோவில் விடவேண்டியிருந்தது.

சனங்கள்தான் இராணுவத்தினரின் உடல்களையும் அப்புறப்படுத்தினார்கள். அவை வீங்கிப் பெருத்து மணத்துக்கொண்டிருந்தன. மூக்கு முட்ட குடிக்காமல் அவர்களால் கையாள உடல்களை கையாள முடியவில்லை. முல்லைத்தீவு முகாமின் அதிகாரிகள் தங்குமிடங்களில் ஏராளமான வெளிநாட்டு மது வகைகள் இருந்தன. சனங்கள் அவற்றை தம் வசப்படுத்திக்கொண்டார்கள்.

சடலங்கள் ஆயிரத்தையும் தாண்டியிருந்தன. அவற்றை ஒப்படைப்பதற்கு இயக்கம் செஞ்சிலுவை சங்கத்திடம் அறிவித்தது. செஞ்சிலுவைச் சங்கம் சந்திரிக்காவிற்கு அறிவித்தது. பதிலுக்கு சந்திரிகா வெறும் முப்பது சடலங்கள் மட்டுமே இராணுவத்தின் சடலங்கள் என்று அறிவித்தா.

மூக்கினை சுற்றி நீலநிற துணி கட்டிய வெள்ளைக்கார பெண்ணொருத்தி உடல்களை பொறுப்பெடுத்தாள். முல்லைத்தீவில் வெறும் முப்பது இராணுவத்தினரே இருந்தார்கள் என்பது அவளுக்கு ஆச்சரியமாக இருந்திருக்கக் கூடும். எஞ்சிய ஆயிரத்து நூற்று சொச்ச ஆட்களும் யார் என்றும் அவள் யோசித்திருக்கலாம். தனது ஆட்களையே தண்ணீர் தெளித்துவிட்ட சந்திரிகா மீது எனக்கு இன்னதென விபரிக்க முடியாத கோபம்

உருவாகியிருந்தது. இயக்கத்தில் இருப்பதில் பெருமையாக இருந்தது. இயக்கம் ஒருபோதும் இப்படி செய்யாது என்பதற்கு நிறைய வரலாறுகள் இருந்தன.

சந்திரிகா கைவிட்ட உடல்களையும் சனங்களே எரித்தனர். புதுக்குடியிருப்பிலும் கொக்காவிலிலும் அடுக்கப்பட்ட சடலங்களின் மீது காய்ந்த விறகுகள் கொட்டப்பட்டு தீ மூட்டப்பட்டது. நெருப்பின் நாக்குகளில் உடல் தசைகள் உருகி உருகி எரிய தொடங்கின. மேலும் மேலும் விறகுகளைப் போடவேண்டியிருந்தது.

இராணுவ அடையாள அட்டைகளையும், குறிப்புப் புத்தகங்களையும் முன்னதாக இயக்கம் எடுத்து கொண்டது. ஒவ்வொரு சிப்பாயும் தனது பேர்சுக்குள் ஒரு இளம் பெண்ணின் படத்தையோ, வயதான தாயின் படத்தையோ அல்லது குழந்தையின் படத்தையோ தவறாமல் வைத்திருந்தார்கள். எழுதி முடிக்கப்படாத சில சிங்களக் கடிதங்களும் இருந்தன.

பதுங்கு குழியொன்றில் விழிகளை திறந்தபடி செத்து கிடந்த ஆமிக்காரனின் முகமொன்று என் நினைப்பில் வந்தபடியிருந்தது. அவன் காயப்பட்டு இரத்த இழப்பின் பின்னர் இறந்திருக்க வேண்டும். வயிற்றின் அடியில் ஆழமான காயமிருந்தது. உடலை தூக்கி வெளியில் எடுத்தபோது விரல்கள் ஒரு படத்தை அழுத்தி பிடித்திருந்தன. படத்தில் வெள்ளைச் சிறுமியொருத்தி சிரித்தபடி இருந்தாள். அன்றைக்கு இரவு எனக்கு நித்திரை வரவில்லை.

அடுத்தநாள் காலை மீண்டும் பெரும் சண்டை மூண்டது. நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் அளம்பில் கடற்கரையில் தரையிறங்கினார்கள். சிலாபத்துறையில் ஹெலியில் இறங்கியிருந்த கொமாண்டோக்கள் கடற்கரையை கிளியர் செய்து கொடுக்க கடல்வழி இறக்கத்தை இராணுவம் முடித்திருந்தது. அங்கிருந்து கடலோரமாக நகர்ந்து முல்லைத்தீவை மீளவும் கைப்பற்ற அவர்கள் திட்டமிட்டிருந்தார்கள்.

கடற்கரையில் சண்டை மூண்டது. நாங்கள் வழிமறித்து தாக்க தொடங்கினோம். நேருக்கு நேர் சண்டைகளில் பார்த்துப் பார்த்து சுடுவதில் ஒரு பரவசம் இருக்கிறது. இராணுவத்திற்கும் அப்படி இருந்திருக்கலாம். எங்கள் பக்கமும் விழுந்து கொண்டிருந்தார்கள். இயக்கத்தின் பின்தளங்களில் இருந்து

கடற்கரையை குறிவைத்து ஷெல்கள் விழத்தொடங்கின. கடலில் தூரத்தே இரண்டு கப்பல்கள் தீப்பற்றி எரிவது தெரிந்தது. சற்று முன்னர் சக்கைப் படகுகள் கப்பல்களில் கச்சிதமாக முட்டியிருந்தன.

படையினரால் ஒரு அடி தன்னும் நகர முடியவில்லை. முல்லைத்தீவிலும் வழித்துத் துடைத்தாயிற்று. அளம்பிலில் தரையிறங்கியவர்கள் தாமாகவே திரும்பி போவார்கள் என்பது அண்ணையின் எதிர்பார்ப்பாக இருந்தது. அப்படியே தான் நடந்தது. இரண்டு நாட்களுக்குப்பிறகு அவர்களை பத்திரமாக மீட்டுப் போவதற்கு இன்னொரு தரையிறங்கு கலம் கரைக்கு அருகாக வந்தபோது சக்கைப்படகு ஒன்றிடம் அரும்பொட்டில் தப்பியிருந்தது. அவசர அவசரமாக அது இராணுவத்தினரை தனக்குள் ஏற்றியது.

நாங்கள் கரைகளுக்கு வந்திருந்தோம். தண்ணீரில் பாய்ந்து விழுந்து பதறி துடித்து நீந்தி சிப்பாய்கள் கலத்தை நெருங்கினர். கரையினில் நமது துப்பாக்கிகள் முழங்கியபடியிருந்தன. தரையிறங்கு கலம் புறப்பட்டது.

அங்கொன்றும் இங்கொன்றுமாகவே குண்டுச் சத்தங்கள் கேட்டன. கரை முழுவதும் பொதி செய்யப்பட்ட புதிய ஆயுதங்கள் சிந்தியிருந்தன. வங்க கடலின் அலைகள் உயர்ந்து எழுந்து மூசிக்கொண்டிருந்தன. ஒன்றிரண்டு சடலங்களை அலை கரையினில் சேர்த்தது. நான் எனது டாஷ் ரூவைத் தயார்நிலையில் வைத்து அலையினில் எவரேனும் தட்டுபடுகிறார்களா என்று தேடினேன்.

எனது உதடுகளில் புன்னகை வழிந்த அந்தப் பொழுதில் அலைகளில் தள்ளாடும் கறுப்புத் தலையொன்றை நான் கண்டுகொண்டேன். தண்ணீருக்குள் முங்குவதும் பிறகு மிதப்பதுமாக பச்சை பனியன் அணிந்த அந்த ஆமிக்காரன் அல்லாடி கொண்டிருந்தான். அவனுக்கு நிறைய தூரத்தில் தரையிறங்கு கலம் போய்க்கொண்டிருந்தது.

தண்ணீருக்குள் தூரங்களை மட்டுக்கட்ட முடியாது. எனது டாஷ் ரூ அவனது தலையைச் சிதறடிக்கும் என்று நான் நம்பவில்லை. நிமிடத்திற்கு அறுநூறு ரவுண்சுகளை முன்னூறு மீற்றர்கள் வரை செலுத்துகிற ரி 56–2 வகையைச் சேர்ந்த, ஏ கே 47 இற்கான சீனாவின் பிரதியீடு அது. அதனை கண்களில் பொருத்தி அவனைக் குறிபார்க்கிற நேரங்களில் அவன் அலைகளில் மறைந்து

போனான். பிறகு வெளித்தெரிந்தான். இது வேலைக்கு ஆகாது என்று தோன்றியது.

அருகில் நின்றவனை பார்த்தேன். அவன் டொங்கானை வைத்திருந்தான். அதனை சிறிய ஷெல் அடிக்கும் கருவியென்று புரியவைக்கலாம்.

‘‘அடியடா அந்த நாய்க்கு..’’ என்று கடலினுள் கையை காட்டிக் கத்தினேன். ஆர்வத்தோடு அவனது கண்கள் சற்று நேரம் அலைந்தன. ஆமிக்காரனை கண்டுகொண்ட போது அவனது கண்களிலிலும் உதட்டிலும் புன்னகை தோன்றியிருந்தது. டொங்கானை தோள்களில் பொருத்தினான். ‘‘ஓயாத அலைகள் ஒன்றில் சாகப் போகிற கடைசி ஆமியாக இவன் இருக்கலாம்’’ என்று அவன் சொன்னான்.

ஆமிக்காரன் என்ன பாடுபட்டேனும் தரையிறங்கு கலத்தை அடைந்து விடுகிற முனைப்பில் நீந்திக் கொண்டிருந்தான். அவ்வப்போது கைகளை உயர்த்தி உயர்த்தி வீசினான். பொங்குகிற அலைகளையும் கடலையும் தோற்கடித்துவிடுகிற அவனது வெறியை என்னால் உணர முடிந்தது. கடந்த நாட்களின் இரவுகளில் என் நினைவுகளில் வந்தவனே நீந்திச் செல்வதாய் என் மண்டைக்குள் மின்சாரம் போன்றதொரு பொறி தோன்றியதுவும் பக்கத்தில் நின்றவனின் டொங்கானை நான் பறித்து வாங்கியதுவும் சம நேரத்தில் நடந்தன.

‘‘அடியடா’’ என்று கத்தினான் அவன். நான் இன்னமும் தலையை தேடிக்கொண்டிருந்தேன்.

‘‘அந்த ஸ்பொட்டிலேயே அடி’’ என்று திரும்பவும் கத்தினான்.

நான் வேண்டுமென்றே தாமதப்படுத்துவது அவனுக்கு விளங்கியிருந்தது. பச்சை தூசணத்தில் அவனிடமிருந்து வார்த்தைகள் வரத்தொடங்கின. ஒருநாளும் இல்லாதவாறு எனது கைகளில் நடுக்கம் தொற்றிக்கொண்டது. முகம் வியர்த்து கொண்டு வந்தது. உள்ளங்கைகளும் வியர்த்திருந்தன.

அருகிலாக எங்கேயோ குண்டுச் சத்தம் கேட்ட போது உடலின் சமநிலை ஒரு நொடியில் குலைந்து போனதை நான் உணர்ந்தேன். வலது கால் குளிர்ந்ததை போன்று தோன்றிற்று. மேலும் நிற்க முடியவில்லை. பின்னால் கைகளை ஊன்றியவாறு நிலத்தில் விழுந்தேன்.

கண்ணுக்கு முன்னால் முழங்காலுக்கு கீழேயான, இரத்தம் வழிந்தபடி தசைத் துணுக்குகள் பிய்ந்து தொங்கிய காலொன்றை கடல் அலைகள் தம்மோடு உள்ளிழுத்தன. அந்த காலும் அதன் மேலிருந்த வரிச்சீருடைத் துணியும் எனக்கு சொந்தமாய் சற்றுமுன்னர் வரையிருந்தன.

‘‘ஓயாத அலைகள் ஒன்றில் சாக போகிற கடைசி புலியாக நான் இருக்கலாம்’’ என்பதுவே இறுதியாக எனக்குள் ஓடிய நினைப்பாக இருந்தது.

மொழிபெயர்க்கும் இளைஞனிடமிருந்து பெருமூச்சொன்று வெளியேறியது. முடித்த பிறகும் நீண்டநேரம் அமைதியாக இருந்த என் முகத்தை கமரா தொடர்ந்தும் படம் பிடித்துக் கொண்டிருந்தது. என்னிடமிருந்து வேறும் ஏதேனும் வார்த்தைகளை அது எதிர்பார்த்திருக்கக் கூடும். ஆனால் சொல்லவே கூடாது என்று திட்டமிட்டு மறைத்த இரண்டு கதைகள் இன்னமும் மிச்சமிருந்தன. அவற்றை நான் சொல்லப்போவதில்லை.

1.சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் இருந்த காலத்தில் ஒருநாள் ஒரேயொருதடவை இப்படியொரு கனவு கண்டேன். கைகளில் மலர்களை ஏந்திய வெள்ளை சிறுமியொருத்தி என் முழங்கால்களுக்கு கீழ் நின்று அண்ணாந்து என்னை நன்றியுடன் பார்த்து சிரித்தாள். பின் தன் கைகளை நீட்டினாள். நான் பற்றிக் கொண்டேன். அப்பொழுது எனக்கு கால்கள் இருந்தன.

2.ஒரு சிப்பாயை தப்பிக்க விட்டதாக தங்களுக்கு தகவல் கிடைத்ததாகவும், அது குறித்து மேலும் விளக்கம் அளிக்கும் படியும் மேலிடம் என்னைக் கேட்டிருந்தது. சிகிச்சை முடிந்தபிறகு நான் காரணங்களை விளக்கி எழுதினேன். அவனை உயிரோடு பிடிக்க முடியும் என நான் நம்பியதாகவும் அவ்வாறு கைது செய்வது பிற்காலங்களில் அரசியல் ரீதியாகப் பயன்படலாம் என நினைத்ததாகவும் அதில் குறிப்பிட்டிருந்தேன். ஒருவேளை அந்த கடிதத்தின் பிறகே என்னை அரசியல் துறையில் இணைக்க மேலிடம் முடிவு செய்திருக்கலாம்.

# 14

எவருக்கும் இத்தாலியை சென்றடைந்துவிடலாம் என்ற எதிர்பார்ப்பு இருக்கவில்லை. அப்படியான நம்பிக்கைகள் செத்து நாட்களாகியிருந்தன. வள்ளம் அதுபாட்டுக்கு ஓடிக்கொண்டிருந்தது. சுயஸ் கால்வாயினை கடந்து செல்கிற ஏற்பாடுகளில் ஓட்டிகள் தீவிரமாயிருந்தனர். அவர்களை அழைத்து செல்ல யாரோ வெளியாருக்காக காத்திருப்பதாய் தோன்றியது. அதற்கென நீண்டதூரம் பயணம் செய்வதும், பின்னர் சரிவராது புறப்பட்ட இடத்திற்கே திரும்பிவிடுவதுமாக இரவும் பகலும் கழிந்தன.

முன்னைய நாட்கள் மாதிரி இல்லாமல் இப்பொழுது கண்களுக்குத் தெரிகிற தூரத்தில் கன்ரெய்னர்கள் ஏற்றப்பட்ட கப்பல்கள் நாளுக்கு ஒன்றாவது போயின அல்லது வந்தன. அண்ணாந்து பார்த்தால் கழுத்து சுழுக்குகிற அளவுக்கு கடலில் பெரிய மிருகங்கள் நகர்வதுபோல அவை தோன்றின. அப்படியான ஏதேனும் கப்பலில் வருகிற எவராவது இவர்களை அழைத்து செல்ல வேண்டுமென்ற பிரார்த்தனைகள் மட்டுமே ஒவ்வொருவரிலும் எஞ்சி இருந்தன.

இந்தியாவிற்கு படகில் போகிற சனங்களை ஓட்டிகள் மணற்திட்டுக்களில் இறக்கி விட்டு திரும்பிவிடுவார்களாம். பின்னர் மீனவர்களோ இந்திய கடற்படையோ வந்து அழைத்து செல்வார்கள் என்று இவன் கேள்விப்பட்டிருந்தான். அப்படியொரு நினைப்பு இங்கு யாருக்கும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஓட்டிகள் பதட்டமடைந்திருக்கவில்லை. எப்பொழுதும் போலவே இருந்தார்கள். கடல் கொந்தளிப்புக்களினால் பயணம் சற்று தாமதமாகலாம் என்றும் அதற்கேற்ப அரிசியைச் சமைக்கசொல்லியும் அவர்கள் சொல்லியிருந்தார்கள். சமையல் இரண்டு நாட்களுக்கு ஒருதடவை என்றான பிறகு எல்லோரும் உடல் சுருண்டு கிடைத்த இடங்களில் படுத்து கிடந்தனர். வள்ளத்தை எவரும் துப்பரவாக்குவதில்லை. ஓங்காளித்த இடங்களில் வாந்தி காய்ந்து கிடந்தது. அவ்வப்போது தண்ணீர் அவற்றின் மேல் தெறித்து மீளவும் ஈரலிப்பானது.

கடற்கொந்தளிப்பினாலும் அச்சத்தினாலும் கடந்த நாட்களில் என்னென்னவோ நடந்து விட்டிருந்தன. சரியாக சொன்னால் சோமாலிய கொள்ளையர்களின் வருகையோடு வள்ளத்தில் ஏழரை சனியன் ஏறியிருக்கவேண்டும்.

அன்றைக்கு கொள்ளையர்களின் படகு கண்ணில் பட்டபோது இன்னொரு அகதிப்படகாக இருக்கலாம் என்றுதான் எல்லோருக்கும் தோன்றியது. சற்று நேரத்தில் அங்கிருந்து புறப்பட்ட வெடிச்சத்தம் அந்த நினைப்பை துடைத்தழித்து போட்டது. அதற்கு பிறகு நடந்தவை எல்லாம் கனவைப் போல இருக்கிறது.

வள்ளத்தின் ஓட்டத்தை முற்றாக நிறுத்தி ஓட்டிகள் தளத்திற்கு வந்தார்கள். வள்ளம் அலைகளில் ஆடியபடியிருந்தது. காற்றின் திசையில் நகர்வதுபோலவும் தோன்றிற்று.

‘‘பயப்பிட வேண்டாம், இது நோர்மல்தான். அவங்க சொல்ற மாதிரியே செய்யுங்க’’ என்றான் ஓட்டி. எல்லா முகங்களிலும் பேயறைந்திருந்தது. பிரதீபன் இவனுக்கு பின்னாக நின்றிருந்தான். இவனது காதருகில் ‘‘இவங்கள் இடி அமீன்ரை ஆக்கள் போல இருக்கு. இடி அமீனை தெரியும்தானே, அவன் மனிதர்களை வெட்டித் துண்டாக்கி சாப்பிடுகிற ஆள் என்று தினமுரசில படிச்சிருக்கிறேன்’’ என்று முணுமுணுத்தான். இவனுக்கு அப்படி தோன்றவில்லை. ஆபிரிக்காவில் ஏதேனும் விடுதலை இயக்க போராளிகளாக இருக்கலாம் என்று நினைத்துகொண்டான். அவர்களும் இருபது இருபத்தைந்து வயதுகளில் அப்படிதான் இருந்தார்கள். கைகளில் வைத்திருந்த துப்பாக்கிகள் துருப் பிடித்திருந்தன. அவற்றை நிறைய இடங்களில் கம்பிகளால் கட்டியும் சேலோ ரேப்பால் சுற்றி ஒட்டியும் வைத்திருந்தார்கள். இவன் தன் கைகள் இரண்டையும் மேலே உயர்த்தினான்.

எல்லோரும் வரிசையில் உட்கார பணிக்கப்பட்டார்கள். இவன் தனது ட்ரவலிங் பையை மடியில் வைத்தபடி கால்களை நீட்டி உட்கார்ந்தான். எல்லோரிடமிருந்தும் பைகளை வாங்கினார்கள். சின்னப்பெடியன் இன்னமும் நினைவு தப்பிய நிலையில் கீழே படுத்திருந்தான். அவனது ட்ரவலிங் பையை கொள்ளையர்களில் ஒருவன் காவி வந்தான். பைகளை சோதனை செய்து

மணிக்கூடுகள், பேர்ஸ்சுகள், பெல்ட்டுகள், புதிய உடைகள் அனைத்தையும் வேறாக்கினார்கள்.

ஒருவன் முழுக்க உடைந்த ஆங்கிலத்தில் இவர்களோடு பேசினான். ‘‘சிறிலங்காவில் இருந்தா வருகிறீர்கள்..’’

‘‘ஓம்’’

‘‘தமிழர்களா சிங்களவர்களா..’’

‘‘தமிழர்களும் சிங்களவர்களும்’’

அவன் கண்களை சுருக்கி கழுத்தை வளைத்து ஆச்சரியமாக பார்த்தான்.

‘‘அங்கே இப்பொழுது சண்டை இல்லையே..’’ யாரும் இதற்கு பதில் சொல்லவில்லை. சோமாலியர்களிடம் நிறைய மணிக்கூடுகளும் டொலர்களும் சேர்ந்திருந்தன. இவனது பேர்ஸில் அகிலாவின் படம் இருந்தது. அதனை காட்டி ‘‘மனைவியா..’’ என்று கேட்டவன் சிநேகமாகச் சிரித்தான். இவன் சற்று இயல்பு நிலைக்கு வந்திருந்தான். மற்றவர்களிலும் பதற்றம் குறைந்திருந்தது. சோமாலிய இளைஞர்கள் தங்களது படகுக்குள் குதித்தார்கள். அவர்கள் புறப்பட்டபோது ‘‘சந்தோசமாகப் போய்வாருங்கள்’’ என்றொருவன் சொன்னான்.

அன்றைக்கு இரவு கடல் திமிறத்தொடங்கியது. லேசான குளிரும் மழைத்தூறலும் பின்னேரத்தில் இருந்தே தொடர்ந்தது. கவிந்த இருளுக்குள் வள்ளத்தில் டிம் லைட் வெளிச்சமும், கடலுக்குள் தேய்ந்த பிறை நிலவின் வெளிச்சமும் பரவியிருந்தன. நிலவில் பதிந்திருந்த பார்வையை இவன் சட்டென்று தாழ்த்திக் கொண்டான். இது நாலாம் பிறையாக இருக்கக் கூடும். நாலாம் பிறை நாய்ப்பிறை என்று அம்மா சொல்லுவாள். பார்த்தால் கெட்டகாரியங்கள் நடக்கும் என்று அவள் மேலும் சொல்லியிருந்தாள்.

உடல் குளிர்ந்து கொண்டு வந்தது. கீழறைக்குள் கிடக்கிற சின்னப்பெடியனின் உடல் முழுவதுமாகக் குளிர்ந்திருந்தது. அவனது விரல்கள் விறைத்திருந்தன. உள்ளங்கைகளை தேய்த்து பெரியய்யா இரண்டு மூன்று நாட்களாகச் சூடேற்றினார். அவனிடம் முன்னர் இருந்த அனுங்கலும் இப்பொழுது இல்லை.

இன்றைக்கு மதியம் நடுங்கும் புறக் கைகளால், இவன் சின்னப்பெடியனின் மூக்கில் விரலை வைத்துப் பார்த்தான். என்னவோ அப்படிப் பார்க்க வேண்டும் போல தோன்றியது. கைகள் மூச்சுக் காற்றை உணரவில்லை. இவனுக்குள் பதற்றம் பெரும் அலையை போல உருவானது. சின்னப்பெடியனின் கன்னங்கள் கட்டியாக இறுகிப் போயிருந்தன. இவன் ‘‘பெரியய்யா’’ என்று கத்தினான்.

முதலில் ஓட்டிகள் உள்ளே இறங்கினார்கள். பிறகு பிரதீபன், பிறகு பண்டார, பிறகு பெரியய்யா என்று வந்தார்கள். இவனுக்கு வார்த்தைகள் திக்கத் தொடங்கின.

‘‘பெரியய்யா.. இவன்ரை மூச்சை ஒருக்காப் பாருங்கோ.. ’’ என்றான். பெரியய்யா முழங்கால்களில் உட்கார்ந்து தனது கன்னங்களை சின்னப்பெடியனின் மூக்கினருகே கொண்டு போனார். பதட்டம் அவரிலும் தொற்றிக்கொண்டது.

‘‘ச்சீ.. அப்பிடியொண்டும் நடந்திருக்காது.. நீயொருக்கா உள்ளங்காலைத் தேய்..’’ என்றார். இவன் பெடியனின் உள்ளங்கால்களை தனது மடியில் வைத்துத் தேய்க்க தொடங்கினான். அவனில் ஒரு சிறு அசைவையும் காணமுடியவில்லை.

ஓட்டிகளில் ஒருவன் பெரியய்யாவின் அருகில் வந்து அவரது தோள்களை பற்றினான். பெரியய்யா திரும்பிய போது அவரது கண்கள் நீரை உகுத்தபடியிருந்தன. ஓட்டி சின்னப்பெடியனின் கண் மடல்களை திறந்து பார்த்தான். நெஞ்சில் கைவைத்து கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தான். பிறகு தலையை குனிந்தபடி ‘‘ஆள் முடிஞ்சுது ’’ என்றான். அதற்கு பிறகான அவனது வார்த்தைகளில் இவனுக்கு நெஞ்சடைப்பது போல இருந்தது.

‘‘இப்பிடியே விடமுடியாது. தூக்கி எறிய வேண்டும்.’’

பெரியய்யா விசுக் என்று எழுந்தார். ‘‘இப்படியெல்லாம் வாய்க்கு வந்தபடி கதைக்க வேண்டாம்’’ என்றார்.

‘‘இதனால வள்ளத்தில இருக்கிற மற்றவர்களுக்கு தான் கூடாது. வேறு நோய்கள் தொற்றலாம்’’

‘‘அது அவன் செத்து போயிருந்தால்த்தானே.. எனக்கென்னவோ அவன் உயிரோடதான் இருக்கிறான் என்று தோன்றுது. தயவு செய்து கொஞ்ச நாள் பொறுங்கோ..’’ பெரியய்யா கெஞ்சுவதை போல கேட்டார்.

‘‘இங்கே வருகிற அவ்வளவு பேருக்கும் நாங்கள்தான் பொறுப்பு. சில விடயங்களை நீங்களா உணர்ந்து செய்யவேணும்’’ என்றபடி ஓட்டிகள் மேலே ஏறிப் போனார்கள். பெரியய்யா இவனைத் தன்னோடு வைத்துக் கொண்டார். சின்னப் பெடியனை என்ன பாடுபட்டேனும் உயிரோடு எழுப்பிவிட வேண்டும் என்பதில் அவர் குறியாயிருந்தார்.

‘‘உனக்குத் தெரியும்தானே.. செத்துப் போனதென்று கைவிட்ட எத்தினை பேர் திரும்பி எழும்பி வந்திருக்கினம்..’’ அவர் தனது சொற்களுக்கூடாகவே தன்னைத் தைரியப்படுத்தினார். ஒருதடவை குரல் தழுதழுத்தவாறு அவர் இப்படிச் சொன்னார். ‘‘எனக்கு இவனை பார்க்கும் போதெல்லாம் என்ரை கடைக்குட்டியின்ரை ஞாபகம்தான் வருகுது’’

சின்னப்பெடியன் செத்துவிட்டான் என்பதை இவன் நம்ப தொடங்கினான். பெரியய்யாவிடம் அதை சொல்ல முடியாமலிருந்தது. அவர் அதனை வெகு சீக்கிரமாக உணர்ந்து கொள்ளவேண்டும் என மனது நினைத்தது.

சின்னப்பெடியன் தன் மனதிற்குள் இவனை நெருக்கமாக உணர்ந்திருக்க வேண்டும். பயணத்தின் முதல் நாளிலிருந்து வாகனத்திற்குள், கடற்கரையில், வள்ளத்தில் இவனது அருகாமையை அவன் விரும்பியிருந்தான். கடலின் முதல் இரவு இவனை கட்டிப்பிடித்து செருகிக்கொண்டு படுத்திருந்தது நேற்று போன்று இருக்கிறது. அவனது கண்களில் தெரிந்த குழந்தைத் தனத்திற்குப் பொருந்தாத மாதிரி எங்கேனும் வெறித்துக் கொண்டும் கண்களைத் தாழ்த்திக் கொண்டும் அவன் இருந்தான். நோய் வந்து படுத்த படுக்கையாகிய தொடக்க நாட்களிலும் மேலே வெறித்தபடியிருந்த கண்களில் நீர் கசிந்து கொண்டிருந்தது.

இவன் மேலேறி வந்த கொஞ்ச நேரத்தில் கடல் வெளி வழமையை மாற்றியிருந்தது. மேலே இருட்டியிருந்தது. மோதும் அலைகளின் வேகமும் சத்தம் அதிகரித்திருந்தன. இவன் தளத்தின் நடுவில் உட்கார்ந்திருந்தான். ஓங்காளிப்புச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

இருட்டிய பிறகு பெரியய்யா மேலே ஏறி வந்தார். இன்றைக்கு முழுவதும் அவர் சின்னப்பெடியனின் அருகிலேயே இருந்தார். சாப்பிட்டதாகவும் தெரியவில்லை.

‘‘ஒருக்கா அவனை பாத்துக்கொள், நான் கக்கூசுக்குப் போட்டுவாறன்.. வயித்துக்கை என்னவோ செய்யுது..’’ என்று சொல்லிவிட்டு நகர்ந்தார். இவன் ‘‘ம்..’’ என்றான். சின்னப்பெடியன் செத்துப்போனதாக வள்ளத்திற்குள் மெதுவாக பரவியிருந்தது. சாவுப் பயம் வானத்தை மூடுகிற கரிய இருளைப் போல எல்லோரிலும் கவிந்திருந்தது. எவரும் எவருடனும் பேசியதாக தெரியவில்லை. ஏதோ ஒரு கால்வாயை கடந்தால் போதுமென்று காலையில் ஓட்டி சொல்லியிருந்தான். அதைப்பற்றி யாரும் அக்கறைப் பட்டிருக்கவில்லை.

பெரியய்யா கக்கூசிலே போய் உட்கார்ந்ததை இவன் கண்டான். முன்னால் தொங்கிய கயிற்றை இழுத்து அவர் தனது கையினில் சுற்றிக் கொண்டார். இன்னொரு கை அடிக்கடி வயிற்றை தடவி விட்டுக்கொண்டது.

அலைந்து கொண்டிருந்த இவனது பார்வை ஓர் இடத்தில் நிலைகுத்திய முதற் கணத்தில் மூளை அதை உடனடியாக கிரகித்து கொள்ளவில்லை. பிறை நிலவின் மெல்லிய வெளிச்சம், ஒரு பெரிய மலையைப் போல நகர்ந்து வந்த அலைத்திரளில் படிந்திருந்தது. பெரியய்யாவுக்கு பின்னால் ஒரு பூதம் வருவதைப் போல அதனை இவன் கண்டான். கம்பமொன்றை இறுக்கி பற்றியபடி ‘‘போட் கவிழப் போகுது’’ என்ற இவனின் கதறல் அடங்குவதற்கு முன்னர் வள்ளம் காற்றில் தூக்கப்பட்டு அந்தரத்திலே விழுந்தது. பிடியை தளர்த்தாமல் கண்களை இறுக்க மூடினான். ஒரு வெடிப்புச் சத்தத்துடன் லைற் அணைந்திருந்தது. ‘‘என்ரை அம்மா’’ என்ற ஓலத்தையும் ‘‘அம்மே..’’ என்ற பெருங்குரலையும் இவன் சம நேரத்தில் கேட்டான்.

சட்டென்று பெரியய்யாவின் நினைப்பு வந்தபோது என்னவோ நடந்துவிட்டது என்ற உணர்வும் ஓடி வந்தது. அலை பெரியய்யாவின் பின் முதுகில் மோதியது. அவர் வள்ளத்தின் உள்ளேயே எங்காவது விழுந்திருக்க வேண்டும்.

‘‘பெரியய்யா..’’ என்று இவன் கத்தினான். ‘‘அண்ணையாக்கள், பெரியய்யா உள்ளை எங்கையாவது விழுந்து கிடக்கிறாரோ எண்டு பாருங்கோ..’’ என்று குளறினான்.

‘‘ஐயோ அங்கை பாருங்கோ..’’ என்று இரண்டு பேர் ரொய்லட் அருகே ஓடினார்கள். அவர்கள் கை காட்டிய தூரத்தில், கடலினில் பெரியய்யா கைகைளை உயர்த்தி வீசியடித்தபடியிருந்தார். வார்த்தைகள் ஏதுமற்ற ஓலத்தை அவர் எழுப்பினார். அலைகள் அவரை அலைக்கழித்தன. தண்ணீருக்குள் மூழ்குவதும் திரும்ப எழும்புவதுமாக அவர் தத்தளித்தார்.

‘‘போட்டை நிப்பாட்டச் சொல்லுங்கோ’’ என்று இவன் கத்தினான். பிரதீபன் ஓடிப்போய் ஓட்டிகளில் ஒருவனை கூட்டி வருவதற்கிடையில் பெரியய்யாவுக்கும் வள்ளத்திற்குமிடையிலான இடைவெளி அதிகரித்தது. அவரது குரல் தேயத் தொடங்கிய பொழுதில் பெரியய்யா கடலுக்குள் மட்டுமில்லாமல் இருளுக்குள்ளும் மூழ்கிக்கொண்டிருந்தார்.

‘‘அண்ணை.. போட்டைத் திருப்புங்கோ.. அவரைத் தேடுவம்’’ என்று இவன் ஓட்டியிடம் கத்தினான். அவனும் இருண்ட கடலுக்குள் ஏதேனும் அசுமாத்தம் தெரிகிறதா என்று கண்களை அலைய விட்டிருந்தான்.

‘‘இப்பிடியே நிற்காமல், ஏதாவது செய்யுங்கோ’’ என்று ஓட்டியை பிடித்து உலுக்கினான். இதற்கிடையில் இரண்டொரு பேர் பெருங்குரலெடுத்து அழத் தொடங்கியிருந்தனர். ‘‘இப்பிடி நடுக்கடலில ஒரு சாதிக்கும் தெரியாமல் சாகத்தானோ நாங்கள் வந்தனாங்கள்.. ’’

ஓட்டி இவன் தோள்களை ஆதரவாக பற்றினான். பிறகு நிதானமாக சொன்னான். ‘‘எதிராக அடிக்கிற அலைகளின் நடுவே எங்கேயென்று தெரியாமல் தேடமுடியாது. மற்றது இந்த அலைகளுக்கே நடுவே நாங்கள் தேடுகிற நேரமளவுக்கு அவரால் தாக்குப் பிடிக்க முடியாது. ’’

அன்றைய இரவு முழுவதும் அழுகையொலிகளும் கேவல்களும் பெரும்குரலில் பிரார்த்தனைகளும் வள்ளத்தை நிறைத்திருந்தன. சில மணி நேரத்திற்கு முன்னர் பெரியய்யா உட்கார்ந்திருந்து வயிற்றை தடவியபடியிருந்த காட்சி கண்ணுக்குள்ளேயே விரிந்து நின்றது.

இவன் அகிலாவின் தொலைபேசி இலக்கத்தை இவனுக்கு தெரிந்த ஆறு பேரிடம் கொடுத்து ‘‘எனக்கு ஏதாவது நடந்தால், நீங்கள் எவ்வளவு நாளானாலும் பரவாயில்லை, இந்த நம்பருக்கு அடிச்சு தகவல் சொல்ல

வேணும்'' என்றான். இவனை போலவே ஆளாளுக்கு தங்களது இலக்கங்களை பகிர்ந்து கொண்டார்கள்.

அடுத்த காலை விடிந்த போது சின்னப்பெடியனின் சடலத்தைக் கீழறையில் இருந்து மேலே கொண்டு வந்தார்கள். பண்டார கீழ்த்தளத்திலிருந்து தூக்கி உயர்த்த இவன் சடலத்தின் கமக்கட்டுக்குள் பிடித்து உயர்த்தினான். சடலம் தலையைத் தொங்கப் போட்டிருந்தது. அதனை மேல் தளத்தில் வளர்த்தினார்கள். நேற்றைக்கு இரவு அழுதவர்கள் திரும்பவும் தலையில் அடித்து குளறத் தொடங்கியிருந்தார்கள். சின்னப்பெடியனின் ட்ரவலிங் பையிலிருந்த புதுக் காற்சட்டையையும் சேட்டையும் இவன் அவனுக்கு அணிவித்தான். பையில் இத்தாலி முகவரிகள் எழுதிய டயரியொன்றும் சில படங்களும் பாவித்த சேலை ஒன்றும் இருந்தன. டயரியை இவன் பத்திரப்படுத்திக் கொண்டான். படங்களை மடித்து அவனின் சேட்டுப் பொக்கற்றுக்குள் வைத்தான். சேலையால் சின்னப் பெடியனை முழுவதுமாகச் சுற்றினான்.

நான்கு பேர் சடலத்தைத் தூக்கிக் கொண்டார்கள். இரண்டு நிமிடங்களாவது வள்ளத்தை மெதுவாக ஓட்டும்படி இவன் கேட்டான். நிறுத்தி வைத்தார்கள். பெரியய்யாவின் ரொய்லெட் இருந்த பக்கமாக சடலத்தைக் கொண்டு சென்றார்கள். கால் பக்கம் பிடித்திருந்தவர்கள் முதலில் தண்ணீருக்குள் இறக்கினார்கள். இவன் தோள்களைத் தாங்கியிருந்தான். படகின் விளிம்போடு குனிந்து சடலத்தில் தனது கடைசிப் பிடியைத் தளர்த்தியபோது அது தண்ணீருக்குள் வேகத்தோடு இறங்கியது.

வள்ளம் புறப்பட்ட சற்றைக்கெல்லாம் தூரத்தே சேலையொன்று மிதந்ததை இவர்கள் கண்டார்கள்.

# 15

புலிகள் வீட்டிற்குள் புகுந்தபோது அவர்களது கைகளில் துப்பாக்கிகள் எதனையும் கொண்டுவரவில்லை. வெளிச்சம் பரவிய கொஞ்ச நேரத்தில் இரண்டு சைக்கிள்களில் ஜீன்ஸ் சேட்டில் மிகச் சாதாரணமாக வந்திருந்தார்கள். அம்மா கதவை திறந்த பிறகு அவர்கள் மிக ஆறுதலாக உள்ளே வந்தார்கள். "ஆரப்பு நீங்கள், என்ன வேணும்" என்று அம்மா கேட்டாள்.

"மகனை கூப்பிடுங்கோ"

வாயிற்படிகளில் சாவுக்கு இரண்டு சோடி கால்கள் முளைத்து நிற்பதை இவன் கண்டான். என்ன நடக்கப் போகிறது என்பது ஓரளவுக்குத் தெரிந்துவிட்டது. இப்படித்தான் முன்பொரு நாள் தேவபாலுவின் வீட்டின் வாசலிலும் சாவு முறைத்தபடி நின்றது. தலையினுள் என்னவெல்லாமோ மின்னுவதைப் போன்று தோன்றி மறைந்தன. பின் விறாந்தை கதவுகளை திறந்து பாய்ந்தால் வேலுமாமா வீடு வரும், அதையும் தாண்டினால் தெருவில் ஏறி வயற்காணிக்குள் இறங்கலாம். நீளத்திற்கும் ஓடினால் ஊரைத் தாண்டிவிடவும் முடியும். பிறகு..

இவன் வெளியே வந்தான். "தம்பி யாரோ உன்னைத் தேடித்தான் போல.." என்றுபடி அம்மா இவனருகில் வந்தாள். அவர்களும் வந்தார்கள். பிஸ்டல்கள் இடுப்பில் செருகப்பட்டு சேட்டால் மறைக்கப்பட்டிருக்கலாம் என்று இவன் நினைத்துக் கொண்டான். சாவுக்கும் இவனுக்கும் இரண்டொரு நிமிட இடைவெளிகள் இருக்கக் கூடுமென தோன்றியபோது கைகள் தன்பாட்டுக்கு உயர்ந்தன. அப்பொழுது விபரீதம் ஏதோ நடக்கப்போவதை அம்மா உணர்ந்தாள்.

"நாங்கள் இயக்கத்தில இருந்து வாறம்" என்று அவர்கள் அறிவித்தபோது அம்மா அவர்களுக்கும் இவனுக்குமிடையில் நின்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறத் தொடங்கினாள்.

‘‘அப்பு ராசாக்கள், உங்களைக் கையெடுத்துக் கும்பிடுறன், இவன் எதையும் விரும்பிச் செய்யேல்லை. காலமும் நேரமும் அவனை இப்படி அலைக்கழிக்குது. தயவுசெய்து அவனை விட்டுட்டு போங்கோ..’’ இவனை தன் பின்னால் தள்ளி மறைத்துக் கொண்டாள்.

‘‘ஒரு விசாரணை இருக்குது. அவரை எங்களோடை அனுப்பி வையுங்கோ’’ அவர்கள் அம்மாவிற்குப் புறத்தே நின்ற இவனது கையைப் பிடித்தார்கள். உடல் நடுங்கத் தொடங்கியபோது வார்த்தைகள் அதுபாட்டுக்கு வந்தன.

‘‘உங்களுக்குத் தெரியாத ஒன்றில்லை. ஈபி என்னை வைபோசாகத்தான் பிடித்தது. அவ சொன்னதைத் தான் நான் செய்தன்’’

‘‘அது எங்களுக்குத் தெரியும்’’ என்றார்கள் வந்தவர்கள். ‘‘கொஞ்சப் பேரை அடையாளம் காட்ட வேணும்.’’

இவன் தலையாட்டிகளை நினைத்தான். புலிகளிடமிருந்து சரணடைந்த அல்லது பிடிபட்ட இளைஞர்களை இந்திய இராணுவம் தலையாட்டிகளாக நியமித்திருந்தது. வீதிச்சோதனைகளில் தலையை மறைத்து அவர்கள் தயாராக நின்றார்கள். கண்டிப்பாக ஒரு புலியைத்தன்னும் காட்டிக்கொடுக்கவேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டிக்கக்கூடும். வரிசையில் காத்து நிற்கிற சனங்கள் ஒவ்வொருவராக தலையாட்டி முன்னால் நின்றார்கள். தலையாட்டி ஓம் என்று மேலும் கீழுமாகத் தலையாட்டினால் நிற்பவர் புலி, இல்லையென்று இடதும் வலதுமாக ஆட்டினால் தப்பித்தார். அவர் பொதுமகன்.

இப்படியொரு நுட்பமான அறிவியல் முறையை இந்திய இராணுவம் கடைசி வரை பயன்படுத்தியது. காலையிலிருந்து ஒரு புலியைத் தன்னும் பிடிக்காவிட்டால் தலையாட்டிகளுக்கு கலக்கம் பிடிக்கத்தொடங்கியது. ஒப்புக்கு யாரையாவது பார்த்து ஓம் என்று ஆட்டவேண்டியிருந்தது.

புலிகளுக்கும் தலையாட்டிகளுக்கான தேவை இருக்கிறது என இவன் நம்பினான். தலையைத் தொங்கப்போட்டபடி நடந்து வந்து சைக்கிளில் ஏறினான். ஒழுங்கையை தாண்டும் வரையில் அம்மாவின் ஒப்பாரி கேட்டுக் கொண்டிருந்தது.

போகிற வழியில் புலிகள் சந்திரனையும் கைது செய்தார்கள். இவனை இன்னமும் உயிரோடு பார்த்தபிறகு சந்திரனுக்குப் பதற்றம் தணிந்திருந்தது. ஆளுக்கொரு சைக்கிளில் இவர்கள் ஏற்றப்பட்டார்கள். அப்பொழுது "கோயில் ஐயாவோடையோ அல்லது அதிபரோடையோ இன்றைக்கு வந்து சரண்டராகத்தான் இருந்தானங்கள்" என்று சந்திரன் சொன்னான்.

நகரின் இரண்டாம் குறுக்குத்தெருவில் மதிற்சுவர்களை மேலும் உயர்த்தி தகரங்களால் வேலியிடப்பட்டிருந்த காணியில் அந்த பெரிய வீடு இருந்தது. சென்றவாரம் வரைக்கும் இந்தியப்படையினரின் பிரதான தளமாக அது இயங்கியிருந்தது. முன்னே வீதியில் இன்னமும் அகற்றப்படாத மண்மூட்டைக் கூடுகள் வெறிச்சோடிக் கிடந்தன.

இவர்கள் நுழைந்தபோது அங்கு ஏற்கனவே கோயில் ஐயர்கள், பள்ளிக்கூட அதிபர்கள், சேர்ச் பாதிரிகள் சரணைடைந்திருந்தார்கள். பருத்த உடம்பினையுடைய புலிகளிலொருவன் அவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தான். "நீங்கள் ஊரில சனங்களிட்டை மதிப்பும் மரியாதையும் உள்ள ஆட்கள், நீங்களே இப்பிடி இந்தியன் ஆமிதான் திறம் எண்டு கதைச்சால் என்ன நடக்கும் எண்டு யோசியுங்கோ.. சனம் என்ன நினைக்கும். அட அதிபரே இப்பிடிச் சொன்னபடியா எண்டுதானே கதைக்கும் என்ன சொல்லுறியள்.."

"நீர் சொல்லுறது மெத்தச் சரி தம்பி, இப்ப பாரும், நீர் எப்பிடித் தன்மையா கதைக்கிறீர்.. ஆனால் அவங்கள் அப்பிடியோ கதைச்சவங்கள். அவங்கள் எங்கை கதைச்சவங்கள், துவக்குத்தானே கதைக்கும் எண்டவங்கள்.." வெற்றிலைச் சிவப்பில் வாயும், சற்றுப் பெருத்த கொட்டைப் பாக்கு அளவில் குடுமியும் உள்ள ஐயர் சொல்லிக் கொண்டிருந்த போது இவனும் சந்திரனும் அவர்களைக் கடந்து உள்ளே போனார்கள்.

முற்றத்தில் தொடங்கி உள் அறைகள் வரை துரோகிகளால் நிரம்பி வழிந்தது. தெரிந்த முகங்களைக் காண்கிற போதெல்லாம் இவன் தலையைக் குனிந்து கொண்டான். வெளித் தரையில் இவர்கள் இருத்தி வைக்கப்பட்டார்கள். "இதில இருங்கோ, அண்ணை வருவார்.."

இவனும் சந்திரனும் உட்கார்ந்தார்கள். இவனது கூட்டாளிகளில் தேவபாலுவை தவிர்த்து மற்றையவர்கள் ஏற்கனவே அழைத்து வரப்பட்டிருந்தனர். உள்ளே ‘‘சொல்லடா நாயே’’ ‘‘சாக விருப்பமோ’’ ‘‘எங்களுக்கு எல்லாம் தெரியும்’’ முதலான வார்த்தைகள் கடூரமாக ஒலித்தவண்ணம் இருந்தன. ஒன்றிரண்டு தூசணச வார்த்தைகளையும் கேட்டனர். சந்திரன் காதுக்குள் கிசுகிசுத்தான். ‘‘உனக்கு ஞாபகம் இருக்குதா, அரியாலைச் சுடலைக்குள்ளை எங்களைச் சுடக் கொண்டு போகமுதலும் இப்பிடித்தான் வரிசையில் இருட்டும் வரைக்கும் இருத்தி வைத்திருந்தார்கள். இப்ப இருட்டி கொண்டு வருகுது’’

நிலம் இருண்ட பிறகு வீட்டின் கோடியில் ஜெனரேட்டர் இரையத்தொடங்கியது. நிறையப்போரை எச்சரிக்கையின் பின்னர் திருப்பியனுப்பியிருந்தார்கள். இவர்கள் மீதான விசாரணையை கட்டையும் கொஞ்சம் தொக்கையுமான புலி வீரன் இப்படித் தொடங்கினான்.

‘‘நாங்கள் விசாரிச்சு புதுசா உன்றையும் உங்களிடம் இருந்து புடுங்கப் போறதில்லை. ரி என் ஏ க்கு போன ஆட்கள் எப்பிடி போனவையென்று எங்களுக்குத் தெரியும். துவக்கைக் காட்டி வா என்றால் போகத்தானே வேணுமென்ன..’’ கொஞ்சம் தோழமையோடு அவன் பேசுவதாக தோன்றிற்று. இவர்களது மூச்சுக்கள் சீராகின.

‘‘ஆனா துவக்கு கையில கிடைச்ச உடன கொஞ்சப்பேர் ஆட்டம் போடத்தொடங்கி விடுவார்கள். அந்த ஆட்டக்காரர்தான் எங்களிடமிருந்து தப்பமுடியாது’’ என்று அவன் சிரித்தான். பிறகு ‘‘நீங்களெல்லாம் ஒரே செட்டா, எத்தினை பேர்’’ என்று கேட்டான்.

‘‘ஏழு பேர், அதில தேவபாலு என்றவர் செத்திட்டார்..’’

‘‘எங்க நடந்த சண்டையில..’’

‘‘சண்டையில இல்லை. வீட்டை பிள்ளையின்ரை பிறந்த நாளுக்குப் போய் நிற்கும்போது இயக்கம் சுட்டது..’’ இவனுக்கு முதலில் நீங்கள் சுட்டீர்கள் என்றுதான் வார்த்தைகள் வரப்பார்த்தன. கவனமாகத் தவிர்த்து இயக்கம் சுட்டது என்றான்.

விசாரணையாளன் ‘‘ம்..’’ என்றொரு சொல்லை மட்டும் உதிர்த்துவிட்டு ‘‘உங்கடை இடத்தில தானே வெற்றி நிண்டவர். அவர் வீர மரணம் தெரியுமோ’’ என்று கேட்டான்.

வெற்றி ஒரு சண்டையில் செத்திருந்ததாக இவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். அன்றைய நாளில் முகாமில் இந்திய சிப்பாய்கள் மகிழ்ச்சியை மது அருந்திப் பகிர்ந்து கொண்டார்கள். வெற்றி ஒரு தனி ஆளாக இரண்டு, இரண்டரை வருடங்கள் அவர்களுக்குத் தண்ணி காட்டியிருந்தான். வெற்றி என்ற பெயரைத் தவிர எவரும் அவனை அறிந்திருக்கவில்லை.

வீதி ரோந்தில் திடீரென்று பின்னால் போகிற சிப்பாய் கிரேனைட் குண்டு வெடித்து செத்துப் போவான். சனங்களைப் பிடித்து உதைத்து விசாரித்தால் வெற்றிதான் எறிந்துவிட்டு ஓடினான் என்பார்கள். எங்கேனும் சந்திகளில் தலையாட்டியொருவன் தலையில் இரத்தம் வழிய கிடப்பான். ஊரையே ரவுண்ட்அப் செய்து விசாரித்தால் வெற்றிதான் சைக்கிளில் ஏற்றிவந்து சுட்டது என்பார்கள்.

தனியே வெற்றியை மட்டும் குறிவைத்து இந்திய இராணுவம் எத்தனையோ ஒபரேஷன்களை நடத்திவிட்டது. ஒன்றிலும் அவன் அகப்பட்டானில்லை. சுழித்து தப்பியபடியிருந்தான். ‘‘வெற்றியென்றால் யாரென்றே தெரியாது ஐயா’’ என்று அப்பாவிகளாக சொன்னவர்கள், பனை மரக் கூடல்களிலும் மாந்தோப்புக்களிலும் அவனுக்குக் களவாக சாப்பாடு கொடுத்தார்கள். அடுத்த முறை வெற்றியைக் காணும்போது முதல் வேலையாய் ஆமிக்கு அறிவிக்கின்றோம் என்று கற்பூரம் அணைக்காத குறையாக சத்தியம் செய்தவர்கள் அவனது ஒற்றைத் துப்பாக்கியையும் ஒன்றிரண்டு கிரேனைட்டுக்களையும் பாதுகாத்துக் கொடுத்தனர். மக்கள் என்ற கடலில் மீனைப்போல அவன் இருந்தான்.

வெற்றிக்கு கிடைத்திருந்த ஒரு தகவலையடுத்து அந்த சண்டை ஆரம்பித்தது. அவன் இந்திய சிப்பாய்களோடு மினக்கெட்டதை விட அதிகமாக அவர்களோடு சேர்ந்து இயங்கிய தமிழ் இளைஞர்களோடு மினக்கெட்டான். அப்படித்தான் அப்பொழுதும் நடந்தது. வீதியில் மோட்டர் சைக்கிளில் வந்த அவர்களில் நால்வரை வெற்றி வீதி வளைவொன்றில் எதிர்கொண்டான்.

அவனது துப்பாக்கி கொஞ்சம் சன்னங்களை கக்கிய பிறகு வந்தவர்களில் ஒருவன் மட்டும் மதில் பாய்ந்து குதித்தான். மற்றவர்களிலிருந்து இன்னமும் இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. மதிலுக்கு உள்ளே எவருடையதோ வீடு இருந்தது. வெற்றி வீட்டுக் கேற்றை தள்ளித் திறந்து கொண்டு நுழைந்தான். வீட்டில் இருந்தவர்கள் விறைத்துப் போய் நின்றார்கள். பத்துப் பன்னிரண்டு வயதுகளில் தெரிந்த சிறுவன் ஒருவன் தண்ணீர்த் தொட்டியைக் கையைக் காட்டினான். வெற்றி துவக்கைப் பொஷிசனில் வைத்தபடி தொட்டிக்கு முன்னால் வந்தான். பின்புறம் சருகுகள் மிதிபடும் சத்தம் கேட்டது. வெற்றி கத்தினான்.

‘‘மரியாதையாச் சரண்டர் ஆகு. உன்னட்டைத் துவக்கில்லையெண்டு எனக்குத் தெரியும். ’’

தொட்டிக்குப் பின்புறமிருந்து கைகளை மேலே உயர்த்தியவாறு இளைஞன் ஒருவன் வெளியே வந்தான். வெற்றியை விட இரண்டொரு வயதுகள் கூட இருக்கலாம். முகத்தை மறைத்து தாடி வளர்த்திருந்தான். கடும் நீலத்தில் டெனிம் ஜீன்ஸ்சும், முழங்கால்களைத் தொடும் சேட்டும் போட்டிருந்தான்.

வெற்றி புன்னகைத்துக் கொண்டான். அப்பொழுதே மூளாய் பிள்ளையார் கோயிலடி முன்றல் என்று மனதிற்குள் குறித்துக் கொண்டான். அவனின் கைகளை கட்டி ஏற்றிச்செல்ல வசதியாக ஏதேனும் கயிறு கிடைக்குமா என்று வெற்றி பார்வையை அசைத்த நிமிடத்தில் அது நடந்தது.

சேட்டை தூக்கி இடுப்பினில் செருகப்பட்டிருந்த பிஸ்டலை உருவியெடுத்த தாடிக்காரன், தனக்கும் வெற்றிக்கும் இடையில் ஒன்றிரண்டு அடிகள் இருக்கத்தக்கதாக வெற்றியை சுட்டான். வெற்றியிடமிருந்து முதலில் துப்பாக்கி நழுவி விழுந்தது. பிறகு வெற்றியும் சுருண்டு விழுந்தான். அவன் செத்தபிறகும் அவன் மீது குண்டுகள் பாய்ந்து கொண்டிருந்தன.

அன்றைக்கு பொழுது சாயும் வரைக்கும் வெற்றியின் சல்லடையாக்கப்பட்ட உடல், தண்ணீர் தொட்டிக்குப் பக்கத்தில் சேற்றுப் பாத்தியருகில் இரத்தம் காய்ந்துபோய் கிடந்தது. பிறகு இந்திய இராணுவத்தினர் அவனது உடலை ஜீப்பில் கட்டியிழுத்துக்கொண்டு போய் கேணியடியில் போட்டனர். அடுத்தநாள் காலை தேவபாலு சுடப்பட்டான்.

‘‘ஒருமுறை உள்ளை வந்து பாருங்கள்’’ என்று அழைத்தான் விசாரணையாளன். இவர்கள் உள் அறைகளுக்கு நடந்தார்கள். அங்கு நிறையப் பேருக்கு விசாரணைகள் வேறுமாதிரியும் நடந்து கொண்டிருந்தன. இவன் தன்னையுமறியாமல் ‘‘பொறுப்பாளர்’’ என்று கூவினான். இவனது முன்னாள் பொறுப்பாளர், கைகள் பின்னால் கட்டப்பட்டு வெறும் ஜட்டியோடு தலையைக் குனிந்தபடி உட்கார்ந்திருந்தார். அவரை இந்தியாவுக்கு கூட்டிப்போயிருப்பார்கள் என்றுதான் இவன் நம்பியிருந்தான். ‘‘இந்திய வேசை மக்கள் நம்ப வைச்சுக் கழுத்தறுத்துப் போட்டாங்கள்’’ என்று விசாரணையின் இடைவேளையொன்றில் அவர் முனகியதாக, விசாரணையாளன் சிரித்துக் கொண்டு சொன்னான். பொறுப்பாளர் நிறைய இடங்களில் காயம் பட்டிருந்தார். அவருக்கு வயர்களாலோ அல்லது திருக்கை மீனின் வாலைக் கொண்டோ அடி விழுந்திருக்கலாம். உடலில் வரி வரியாகத் தழும்புகள் இருந்தன.

‘‘ஆளைப்பாத்தா வரிப்புலி மாதிரி இருக்கென்ன..’’ என்றான் விசாரணையாளன். இவனில் புன்னகை கசிய முயற்சித்தது.

‘‘உங்களுக்கு தெரியாத ஒன்றில்லை. இவர்கள்தான் பெரிய தலைகள். இவர்களால் நாங்கள் நிறைய இழந்துமிருக்கிறம். இவாகளைப் பற்றி எங்களுக்கு தெரிந்ததை விட அதிகமாக உங்களுக்குத் தெரியும். யார் யார் என்ன நடவடிக்கைகைளில ஈடுபட்டவை என்ற விசயங்களை நீங்கள் தரவேணும்’’

இவன் தரலாம் என்பதை போல தலையசைத்தான். அது தலையாட்டி அசைப்பதைப் போல மேலும் கீழுமாக இருந்தது. பிறகு சொல்லத்தொடங்கினான்.

‘‘இவர்தான் இந்தியன் ஆமியைப் போக வேண்டாமென்று ஊர்வலம் ஏற்பாடு செய்தவர், சனங்களை பிடிச்சுக் கொண்டுவரச் சொல்லி ஓடர் போட்டவர். அதுக்கு நானே சாட்சியாக இருக்கிறேன். அதோ வாயைப் பொத்திக் கொண்டு நிற்கிறார் பாருங்கோ, அவர் எவ்வளவு ஆட்டம் போட்டவர் தெரியுமா.. திரேசம்மா என்றொரு கிழவி, இயக்கத்துக்குச் சாப்பாடு குடுத்தவ. அந்தக் கிழவியை இவர்தான் சுட்டவர்.’’ ஒரு பொழுதில் இவன் தன்னிலை மறப்பதாக உணர்ந்தான். சொற்கள் தம்பாட்டுக்கு வேகம் கொண்டன.

“இங்க கொட்டையைப் பொத்திக்கொண்டு இருக்கிறார். இவர்தான் எங்கடை பொறுப்பாளரா இருந்தவர். இந்தியன் ஆமிக்குச் சப்பாத்தி சுட்டு குடுக்கிறதை விட வேறை ஒன்று செய்திருக்காது நாய்.. பிறகு பொறுப்பாளராம். ஆமி போகப்போது என்று கேள்விப்பட்ட உடனே இவரின் மூஞ்சையைப் பார்த்திருக்க வேண்டும், முழுசிக்கொண்டு திரிஞ்சது. எனக்கொரு ஆசை, இந்தக் குரங்கைக் குப்புற வளர்த்திப்போட்டு திரும்பிப்பாத்தால் மண்டையில வெடி வைப்பன் எண்டு சொல்லி ஐந்தாறு மேல் வெடி வைக்கவேணும். கடைசி வெடியை இவன்ரை மண்டையில வைக்க வேணும்.”

விசாரணையாளன் மிகச் சாதாரணமாக “அதுக்கென்ன., செய்தாப் போச்சு, நீர் எங்களோடையே நில்லுமன்..” என்றான். பிறகு “வெற்றியும் முந்தி ரெலோவில இருந்து எங்களோடை சேர்ந்த ஆள்த்தானே” என்று சொன்னான்.

இவன் மிக மிகச் சாதாரணமாக “சரி” என்றான்.

மூன்று மாதங்களுக்கு பிறகு இவனுக்கென்று புதிய பொறுப்பாளர்கள், புதிய நண்பர்கள் கிடைத்திருந்தனர். பயிற்சி நாளொன்றின் காலையில் “உங்களுக்கு ஏதாவது கருத்துக்கள் இருந்தால் சொல்லலாம்” என்றபோது இவன் தான் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் தனது வாழ்வுக்கு ஒரு அர்த்தம் இருப்பதாக உணர்வதாகவும் சொன்னான். தேவபாலுவை நினைத்தால்த்தான் கவலையாக இருக்கிறது என்றும் சொன்னான். அப்பொழுது பொறுப்பாளர் “சில விசயங்கள் தலைமைக்குத் தெரியாமல் நடந்து விடுகின்றன. ஒரு சில போராளிகள் பிழை செய்வினம், ஆனா இயக்கம் ஒருக்காலும் பிழை விடாது.” என்றார்.

# 16

பள்ளிக்கூடம் பக்கத்தில்தான் இருந்தது. ஆனால் எனக்கும் அதற்குமான தூரம்தான் அதிகமாயிருந்தது. இயக்கத்திற்கு வருவதற்கு நிறையக் காலம் முன்னரேயே நான் பள்ளிக்கூடத்தைத் தள்ளி வைத்திருந்தேன். படிப்பு துளியும் மண்டையில் ஏறவில்லை. எனக்கும் பள்ளிக்கூடத்திற்குமான கொஞ்ச நாட்களில் கூட பின்வாங்குகளை நான் தேடி விரும்பினேன். பின்வாங்கான் முன்வாங்கான் என்று மனோன்மணி மிஸ் சொல்லுவா. அதன் அர்த்தம் கூட அப்பொழுது எனக்கு சரியாக புரிந்திருக்கவில்லை. என் புத்தகப் பையில் புத்தகங்களை விட புளியம்பழங்களே அதிகமிருந்தன. புரொக்டர் குமாரசாமி வீட்டுப் புளியமரம் தெருவை மூடிப் படர்ந்திருந்தது. அதற்குப் பெயர்தான் புளியமரமே தவிர, இனிப்புப் பழங்களையே அது உலுத்தியது. வாயைக் கூசச் செய்கிற சுவை.

பாருங்கள், பள்ளிக்கூடத்தைப் பற்றிப் பேசுகிற பொழுது என்னால் புளியம்பழங்களைப் பற்றியே பேச முடிகிறது. பள்ளிக்கூட வளவில் நின்ற மரத்து நெல்லிக் காய்கள், மில்கார பாலன் வீட்டு ஜம்முநாவல் என புளியம்பழங்களைப் போலவே வேறும் பல இருந்தன. பதின்நான்கு வயதுகளுக்குப் பிறகு இந்தப் பட்டியலில் பாமினி என்றொரு வடிவான பெண்ணும், பவானி என்கிற இன்னொரு அழகான பெண்ணும் புதிய வரவாகச் சேர்ந்து கொண்டனர்.

பள்ளிக்கூடத்து நாட்களில் பாயும் புலி பண்டாரவன்னியனையும் மறக்க முடியாது. அதுவொரு நாடகம். என்னை விட ஒரு வயதிலும் ஒரு வகுப்பிலும் குறைந்த பெடியனொருவன், வேறு வேலையற்று அதனை எழுதியிருந்தான். காக்கைவன்னியனாக நான்தான் நடிக்க வேண்டும் என்றும் அவன் ஒற்றைக்காலில் நின்றான்.

நாடகப் பிரதியை மனப்பாடம் செய்யும் மந்திர சக்தி எனக்கு இருக்குமென்றால், நான் ஏன் தவணைக்கொருதடவை எல்லா ரீச்சர்களிடத்தும் காதில் முறுக்கும் புறங்கையில் புற்றூால் மட்டை அடியும் வாங்கப் போகிறேன்

என்று நான் மறுத்திருந்தேன். அதற்கு அவன் காக்கை வன்னியனுக்குக் கதைக்க ஒன்றுமில்லையென்றும், வெள்ளைக்காரத் துரையோடு அருகே நின்று பழரசம் குடித்தால் போதுமென்றும் மிகுதியை பண்டாரவன்னியன், அவன்தான் அது, பார்த்துக் கொள்வான் என்றும் சொன்னான். அப்பொழுதுதான் நான் சபலப் பட்டிருக்க வேண்டும்.

நான் சம்மதித்தேன். ஆனால் கடைசி நாளன்று அந்நாளைய அரசர்கள் போல வேட்டியைக் கவட்டுக்கால் மடித்து ஒரு கோவணத்தைப் போல கட்ட முடியாது என்ற எனது நிபந்தனையை பண்டாரவன்னியன் எதிர்பார்த்திருக்கவில்லை. அவன் காலில் விழாத குறையாக என்னிடம் கெஞ்சிப்பார்த்தான். காக்கை வன்னியன் அசைந்து கொடுக்கவில்லை. அவன் ஜீன்சும் ரீ சேட்டும் அணிந்து கொள்வதில் இருநூறு வீதம் உறுதியாயிருந்தான்.

நாடகம் தொடங்கியது. வெள்ளைக்காரத் துரையாக நடித்த விசுவலிங்கம் வெள்ளைக்காரர்களுக்கு எல்லாமே வெள்ளை என்று நினைத்திருக்க வேண்டும். வெண்ணிறத் தலை, வெண்ணிற மீசை, வெள்ளை நிற உடை வெள்ளை நிற சப்பாத்து அதே நிறத்து சொக்ஸ் என்று வெளிறிப் போயிருந்தான். அவன் அருகே நான் மஞ்சள் நிறப் பழரசத்தை அருந்தியபடி நின்றேன். வெள்ளைத் துரையும் பண்டாரவன்னியனும் அடியடா பிடியடா என்று சண்டை பிடித்தார்கள். ‘‘போரென்றால் புலிக்குணம், பொங்கும் இன்பக் காதல் என்றால் பூமணம்’’ என்று பண்டாரவன்னியன் உறுமினான். வெள்ளைத் துரையும் விட்டுக் கொடுக்கவில்லை. ‘‘ஏய்.. மிஸ்டர் மன்னிப்புக் கேட்கிறாயா இல்லையா’’ என்று அவன் கேட்ட இந்த இடத்தில்தான் நாடகம் திருப்பமொன்றைச் சந்தித்தது.

திடீரென்று பண்டாரவன்னியன் என் பக்கம் திரும்பினான். நான் இன்னும் பழரசத்தைக் குடித்து முடிக்கவில்லை. ‘‘அடேய் காக்கை வன்னியா’’ என்றான் அவன். நான் க்ளாஸை வாயினின்றும் எடுத்து ‘‘என்ன’’ என்பதைப்போல பார்த்தேன். ஏனெனில் இது சீனிலே இல்லாத காட்சியாயிருந்தது. இதற்கு முன் எந்த ரிகர்சலிலும் பண்டாரவன்னியன் என்னை இப்படி அழைத்ததில்லை.

‘‘பதவிக்கு ஆசைப்பட்டு என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டாயல்லவா..’’ இதற்கு என்ன பதிலைச் சொல்வதென்று எனக்குத் தெரியவில்லை. நான் மேலும் கீழும் தலையை ஆட்டி ‘‘ஓம்..’’ என்றேன். இதற்குப் பிறகு பண்டாரவன்னியன் என்னைக் கண்டபடிக்கு திட்டத் தொடங்கினான். வெள்ளைத் துரை கூட எங்களிருவருக்குமான இந்தச் சண்டையில் என்ன ரியாக்ஷன் கொடுப்பது எனத் தெரியாமல் விழித்தபடி நின்றார். எனக்குத் தலை சூடாகிக் கொண்டு வந்தது.

‘‘துட்டனே, ஆங்கிலேய நாய்களோடு சேர்ந்ததுமல்லாமல் காலம் காலமாய் நாம் கட்டிக்காத்த நமது கலாசாரத்து ஆடையைத் துறந்து அவர்களின் குழல்களை அணிந்திருக்க உனக்கு வெட்கமாயில்லையா...’’

எனக்குப் புரிநிதுவிட்டது. பண்டாரவன்னியன் திட்டமிட்டுப் பழிவாங்குகிறான். தலைக்குள் நிறைந்து குமைந்திருந்த சூடு ஒருகட்டத்தில் தாங்காமல் கொள்ளால் என் வாயில் வெளியேறத் தொடங்கியது. முதற் சொல் ஒரு தூசணமாகத் தொடங்கி ஆண்டி என்று முடிந்தது.

‘‘அடே வேசை மகனே பண்டாரவன்னியா, உனக்குப் பெரிய நினைப்பா, நாடகம் பழகும் போது சொல்லித்தராத கண்டறியாத வசனங்களை நீ கதைக்கிறாய். விரும்பினால் நீயும் ஒரு ஜீன்சைப் போட்டுக் கொண்டு வா, யார் உன்னைப் போட வேண்டாம் என்றது.. அதைவிட்டு விட்டு தேவையில்லாமல் கதைத்தால் உன் செவிட்டைப் பொத்தி அறைவேனடா.. ’’ இறுதிச் சொல்லும் ஒரு தூசணமாகி மகனே என்று முடிந்தது. சிலையென்றாகிய பண்டாரவன்னியன் சுதாகரித்து ஓடிப்போய் திரைச்சீலையை இழுத்து மூடினான். ஓட்டமும் நடையுமாய் வந்து மேடையில் ஏறிய அதிபர் என்னை இழுத்துக் கொண்டு தனது அறைக்குள் போனார். நான் அவர் கைகளினின்றும் விடுவித்துக் கொள்ளப் போராடினேன். அதிபர் கதவை இழுத்து மூடினார். தோல் சீவப்பட்டுக் காய்ந்திருந்த கொழுத்த கிளுவம் தடியொன்று முறிய முறிய என் பின்னங்கால்களிலும் முதுகிலும் விளாசப்பட்ட போது அவர் சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள் இப்படியாயிருந்தன.

‘‘எளிய பறை நாயே, நீ மேடையில தூசணம் கதைக்கிறியோ..’’

இதற்குப் பிறகு பள்ளிக்கூடத்தை நான் தவிர்க்கத் தொடங்கினேன். இடையில் ஒரு காலம் மூன்று மாதங்களிற்கு பள்ளிகள் இயங்காதிருந்தன. அவை மீள இயக்கத் தொடங்கிய போது நான் அவற்றை மறந்து விட்டிருந்தேன். பண்டாரவன்னியனையும் மறந்திருந்தேன். இயக்கத்தில் இணைந்த நெடுங்காலத்தின் பிறகு அவனின் கல்வெட்டொன்றைக் கற்சிலை மடுவில் கண்டேன். இங்கே பண்டாரவன்னியன் ஆங்கில அதிகாரி டிறபேக்கினால் தோற்கடிக்கப்பட்டான் என்று அதில் எழுதப்பட்டிருந்தது. அதற்குப் பிறகு போன வருடம் வல்வெட்டித்துறை அம்மன் கோயிலில் நான் பண்டாரவன்னியனைப் பார்க்க வேண்டியதாய்ப் போனது.

நீண்ட காலத்தின் பிறகு அந்தக் கோயிலில் திருவிழா பெரும் கொண்டாட்டமாக விடிய விடிய நடந்தது. முன்னைய காலங்களில் இந்தியாவிலிருந்து கடலால் அழைத்து வரப்பட்ட பெரும் இசைக் கலைஞர்கள் அங்கு கச்சேரிகள் வைத்துச் செல்வார்களாம். ஒவ்வொரு வீதியையும் குறுக்காக மறித்து மேடைகள் அமைத்திருந்தார்கள். ஒவ்வொரு மேடைகளும் பாடல்களாலும் நடனங்களாலும் நிறைந்திருந்தன.

நானும் பணியகத்திலிருந்த இன்னுமொருவனும் அங்கு போயிருந்தோம். அருகெங்கோ ஒரு மேடையில் சாந்தன் இந்த மண் எங்களின் சொந்தமண் என்று பாடிக்கொண்டிருந்தார். வானத்தில் வெளிச்சக் கூடுகள் மேலேறிக் கொண்டிருந்தன. பரசூட் மாதிரியான கூடுகளின் கீழே நெருப்புச் சுவாலையை மூட்டி அப்படிப் பறக்க விட்டுக் கொண்டிரந்தார்கள். நான் பராக்குப் பார்த்தபடி நின்றேன். திடீரென்று யாரோ அழைத்தார்கள்.

“டேய் காக்கை வன்னியா”

நான் எதேச்சையாகத்தான் திரும்பினேன். கேற் அருகே மதிற்சுவரில் ஒரு காலை மடித்து ஊன்றியபடி பண்டாரவன்னியன் சாய்ந்து நின்றான். எனது முகம் பிரகாசமாகி, உதடுகள் சிரிப்பதற்குத் தயாரான பின்னர் சட்டென்று இறுகின. கேற்றுக்கு மேலே வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தேன். அதில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, வடமராட்சி அலுவலகம் என்று எழுதப்பட்டிருந்தது. அதன் ஒரு பக்கத்தில் வீணையும் மற்றையதில் டக்ளஸ் தேவானந்தாவும் வரையப்பட்டிருந்தார்கள். நான்

பண்டாரவன்னியனுக்கு அருகாகப் போனேன். “என்ன இந்த பக்கம்” என்று கேட்டேன்.

“இப்ப இங்கைதான் நிக்கிறன்..” என்று அவன் மேலே பெயர்ப் பலகையைக் காட்டிச் சொன்னான்.

அதற்குப் பிறகான எனது முதற்சொற்கள் “உனக்கு வெக்கமாயில்லையோ” என்றவாறாக இருந்தன. அவன் “என்னத்துக்கு” என்று கேட்டான். பிறகு “உங்கடை அரசியல் பணிகள் எல்லாம் எப்பிடிப் போகுது” என்றான். நான் எதுவும் பேசுவதாக இல்லை.

“இந்த நாய்கள் எல்லாம் எங்களுக்கு முன்னுக்கு நிண்டு கதைக்கிற அளவுக்கு காலம் வந்திட்டுது” என்று எனக்கு நோர்வே நாட்டிலும் எரிக் சொல்ஹெய்மிலும் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நான் அமைதியாக நின்றேன். பண்டாரவன்னியன் என் வாயைக் கிளறப் படாதபாடு பட்டான்.

“கடைசியில மத்தியில கூட்டாட்சி எண்டுதானாம் பாலசிங்கம் சைன் வைச்சுப் போட்டுப் போயிருக்கிறார்..”

“அதைப்பற்றி உனக்குத் தேவையில்லை”

“துவக்கில்லாமல், கோல்சர் இல்லாமல் உங்களைப் பாக்கப் பாவமா இருக்கடா.. சயனைட்டைக் கூட கழட்டிவிச்சுப் போட்டாங்கள்” அவனது எள்ளல் வார்த்தைகளைப் புரிந்து கொள்வது சிரமமாக இருக்கவில்லை. அவன் காதுகளிற் குனிந்து “வாயைப் பொத்து” என்றேன். பிறகு “வன்னிப் பக்கம் ஒருக்கா வந்து பார்” என்று அழைத்தேன். அவன் அதைப் பெரிது படுத்தியதாகத் தெரியவில்லை.

வன்னிக்கு இவர்களால் வரமுடியாது. ஒப்பந்தத்தில் அப்படியெதுவும் சொல்லப்படவில்லையென்றாலும் இவர்களால் அங்கு கால் பதிக்க முடியாது. பரந்தன் சந்தியில் புலனாய்வுப் போராளிகளின் பார்வையைத் தாண்டி எந்தவொரு தாடிக்காரரும் நகர முடியாது.

புலனாய்வுக்காரர்கள் சந்தேகப்படுகிற வாகனங்களை மறித்து தாடிக்காரர் யாரேனும் இருக்கிறார்களா என்று சோதனையிட்டார்கள். அப்படியொரு சோதனையில் தாடிக்காரனொருவன் சிக்கிக் கொண்டான். விசாரணையின் முதற் கேள்வி இப்படியிருந்தது.

‘‘என்னத்துக்கு தாடி வளத்திருக்கிறியள்.. ’’

அவன் தலையைக் குனிந்து கொண்டான். அமைதியாக இருந்தான்.

‘‘கேக்கிறமெல்லே, சொல்லும், என்னத்துக்குத் தாடி வைச்சிருக்கிறீர்.’’ இவர்கள் இறுக்கினார்கள். அவனது தொடர்ந்த நீண்ட மௌனத்தை இவர்கள் ஈபிடிபி என்று மொழி பெயர்த்தார்கள். பிறகு அவனை இறக்கினார்கள். வாகனத்திலிருந்து இறங்கித் தள்ளி நின்று கொண்டான் அவன்.

‘‘உமக்கு அவ்வளவு துணிவோ.. ஆரைச் சுழிச்சுப் போட்டுப் போகலாம் எண்டு பாக்கிறீர்.. அவரும் அவற்றை தாடியும்..’’

அவன் சட்டென்று போராளியொருவனின் கையை தன் இரண்டு கைகளாலும் பற்றிப் பிடித்தபடி ‘‘லவ் பெயிலியர் அண்ணை’’ என்றான். போராளிகள் கண்களை விரித்து அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அப்பொழுதே அவர்களிடத்தில் சிரிப்புத் தோன்றியிருந்தது.

‘‘மூன்று வருசக் காதல், தகப்பனுக்குப் பிடிக்கேல்லை. பெரிய பிரச்சனையாகி கடைசியா அவள் என்னை வேண்டாம் எண்டுட்டாள்.’’

புலனாய்வுப் போராளிகளுக்கு ஒரு மாதிரியாகப் போனது. ‘‘இதை வாகனத்துக்குள்ளேயே சொல்லியிருக்கலாம்தானே..’’ என்றார்கள் அவர்கள்.

‘‘வாகனத்துக்குள்ளை அவளும் அவளின்ரை அப்பாவும் இருக்கினம். அவளைக் கொழும்புக்கு கூட்டிக்கொண்டு போகினம். அண்ணை, நான் இதைக் காவல்துறையிட்டை முறையிட்டால் அவையள் எங்களுக்குக் கல்யாணம் கட்டித் தருவினமோ..’’

சென்ற தடவை கிளிநொச்சிக்குப் போனபோது இந்தக் கதையைச் சொல்லி சிரி சிரியென்று சிரித்தார்கள். அம்மானின் காதுவரை இந்தக் கதை போயிருந்ததாம்.

‘‘பெட்டையளின்ரை பெல்ட்டையும் கழட்டச் சொல்லி ஓடராம். உண்மையோ’’ என்றான் பண்டாரவன்னியன்.

‘‘அப்பிடியெல்லாம் கொன்டிஷன் போட முடியாது’’

‘‘ஏன். கழட்டினால் மோட்டர் சைக்கிள் ஓடேக்கை சேட்டு மேல பறந்து எல்லாம் தெரிஞ்சு போடுமென்றோ..’’

இதற்குப் பிறகு பண்டாரவன்னியன் மூக்கைப் பொத்தி ‘‘ஐயோ, என்ரை அம்மா’’ என்று குளறியபோது இரண்டு விடயங்கள் நடந்தேறின. ஒன்று அவனது மூக்கிலிருந்து கொள கொள என்று இரத்தம் வழிந்து சேட்டில் பரவியது. மற்றையது புலிகளின் போர்நிறுத்த மீறல்கள் ஒன்றால் அதிகரித்தது.

நான் வன்னிக்குத் திருப்பி அழைக்கப்பட்டபோது தவபாலன் சொன்னது சரியானதுதான் என்பதை உணர்ந்து கொண்டேன். சண்டை செய்வதை விட சமாதானம் பேசுவது மிகக் கடினமாக தான் இருந்தது. ஈபிடிபிக்காரனுக்கு முகத்தில் குத்தியதற்கெல்லாம் கூப்பிட்டு விசாரிக்கிற அளவிற்கு சமாதானம் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிட்டிருந்தது. கண்காணிப்புக் குழுவினர் சம்பவம் பற்றிய அறிக்கைகளை வன்னிக்கு அனுப்பியிருந்தனர். அவர்கள் கண்டனமும் தெரிவித்திருந்தனர்.

நான் முழுமையாக அனைத்தையும் விவரித்தேன். தண்டனைகைளைப் பற்றி நான் கவலைப்படவில்லை. அது பழகிப் போன ஒன்று. அண்மையில் பரந்தன் சந்தியை மணிக்கு எழுபது கிலோமீற்றர் வேகத்தில் கடந்ததை காவல்துறை பதிவு செய்து மேலிடத்திற்கு அனுப்பியிருந்தது. அந்த தாளில் மிகை வேகம் என்ற தலைப்பில் சகல விபரங்களும் எழுதப்பட்டிருந்தன. பனிஸ்ட்மென்ட்டாக கிளிநொச்சியிலிருந்து பரந்தன் சந்திவரை பெற்றோல் அற்ற மோட்டர் சைக்கிளை உருட்டிக் கொண்டு போக வேண்டியிருந்தது. இப்படியாக பனிஸ்ட்மென்ட் ஒரு பிரச்சனை இல்லை. எதையும் எதிர்கொண்டு விடுவது என்றிருந்தேன். ஆனால் அது முடியாமற்போனது. அந்த முடிவினை நான் எதிர்பார்த்திருக்கவில்லை.

நான் யாழ்ப்பாணத்திலிருந்து மீளப் பெறப்பட்டேன்.

நான் அதிருப்தியுற்றிருந்தேன். திரும்பவும் என்னை அங்கு அனுப்பிவிடும்படி கேட்டிருந்தேன். சண்டை நாட்களின் போது என்னை களமுனைக்கு அனுப்புங்கள் என்ற கோரிக்கைகள் இயக்கத்தில் சாதாரணமானவையாக இருந்தன. ‘‘அது எனது சொந்த ஊர், அங்கே என் முற்றத்தில் நான் மகிழ்வோடு விளையாடியிருந்தேன். ஆகவே அதை மீட்கும் சண்டையில் நான் கட்டாயமாக இருந்தே ஆகவேண்டும்’’ என்று போராளிகள் எழுதிக் கேட்பார்கள்.

அப்படியேதும் இன்றிய எனது வேண்டுகோள் புதிதாகவும், புதிராகவும் இருந்திருக்க வேண்டும். ஒரு காலைப் பொழுதில் அது பற்றி விசாரிக்க வந்தவர் அரசியற் துறையில் முக்கிய பொறுப்பில் இருந்தார். அண்மையில்தான் பிரான்ஸ் சுவிஸ் நோர்வே என்று பயணத்தை முடித்து வந்திருந்தார். ஒன்றிரண்டு தடவைகள் அரசியல் வகுப்புகளுக்கும் வந்திருந்தார். அருமையான மனிதர். அவர் என் மீதான விசாரணையை கீழ் வரும் கேள்வியுடன் ஆரம்பித்தார்.

''யாரப்பன் அந்தப் பெட்டை..''

# 17

பல்கலைக் கழகத்தின் சுற்று வீதிகளில் சிவப்பும் மஞ்சளுமான முக்கோண வடிவ வண்ணக் கொடிகள் மெல்லிய கயிற்றில் கோர்க்கப்பட்டு வீதியின் இருமருங்கிலும் நின்ற கம்பங்களை இணைத்துக் கட்டப்பட்டிருந்தது. அவை கண்ணுக்கு எட்டிய தூரம் வரை நீண்டிருந்தன. தெருவின் வளைவுகளிலிருந்த மின்சாரக் கம்பங்களின் உச்சத்தில் ஆங்காங்கே லவுட்ஸ்பீக்கர்கள் பொருத்தப்பட்டிருந்தன. அவற்றிலிருந்து தேனிசை செல்லப்பாவின் குரலில் வரிகள் புரியாத இரைச்சலில் பாடலொன்று ஒலித்தபடியிருந்தது. மேடையின் அருகே ஊருக்கே சமைக்குமாற்போன்று பெரியளவு பொங்கற் பானையொன்றை வைத்திருந்தார்கள். பானையில் வளைவான எழுத்துக்களில் பொங்கு தமிழ் என்று எழுதப்பட்டிருந்தது. மைதானம் நிறையுமாற்போல சனங்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

திருவிழா ஒன்றில் நிற்கின்ற உணர்வோடு அகிலா நின்றிருந்தாள். அவள் சிவப்பு நிறத்தில் நீளக் காற்சட்டையும் மஞ்சள்வண்ண சட்டையும் அணிந்திருந்தாள். இடுப்பில் சிவப்பு நிற றிபன் ஒன்றை சுற்றியிருந்தாள். கைகளில் தமிழ்த் தேசியம், மரபு வழித்தாயகம், சுயநிர்ணய உரிமை என தலைப்பிடப்பட்டிருந்த துண்டுப் பிரசுரங்களை அவள் விநியோகித்தபடியிருந்தாள். விழிகள்

சுற்றுமுற்றும் யாரையோ தேடிக்கொண்டிருந்தன. சென்ற ஒன்றிரண்டு மணிநேரமாக வளாகத்தைச் சுற்றி வந்தாயிற்று. அவன் தென்படவேயில்லை.

அவனை இப்படியெங்காவதுதான் சந்திக்க முடிகிறது. நாலு வார்த்தை பேசி மனம் நிறைய முடிகிறது. கொஞ்சம் சிணுங்கவும், வெட்கப்படவும் முடிகிறது. அன்றைக்கு இரவு தூங்க முடிகிறது. ''கள்ளன்'' என்று அகிலா தன்பாட்டில் சொல்லிக் கொண்டாள்.

முதன்முதலாக சற்றுக் காலத்தின் முன்னர் ஒரு சந்திப்பிற்காக யாழ் மாவட்ட அரசியற் துறைக்காரரோடு அவன் பல்கலைக் கழகத்திற்கு வந்திருந்தான். மாணவர்களுக்கும் அவர்களுக்குமான கூட்டமாக அது ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவர்களுக்கான கதிரைகள் முன்னால் போடப்பட்டிருந்தன. அவன் தனக்கான இருக்கையில் அமர்ந்திருக்கவில்லை. அங்குமிங்குமாக நோட்டமிட்டபடி திரிந்தான்.

குள்ளமான உயரமும் அடர்த்தியான தும்புத்தடி மீசையும் கொண்டவரான அவர்களில் ஒருவர் ''இந்த சமாதானம் நிலைக்குமென்று நீங்கள் நினைக்கிறீங்களா'' என்று ஆரம்பித்தார்.

''ரணிலின்ரை நடவடிக்கைகள் நம்பிக்கையளிப்பதாகத்தானே தலைவர் பத்திரிகையாளர் சந்திப்பில சொல்லியிருக்கிறார்.'' என்று மாணவனொருவன் எழுந்து சொன்னான். அப்பொழுது கைகளை அசைத்து அவனை உட்காரச் சொன்னவர் ''அது ராஜதந்திர அறிவிப்பு'' என்று சொன்னார். தொடர்ந்தும் நீண்ட நேரத்திற்கு சந்திப்பு நீண்டது.

இறுதியாக அவன் பேசத்தொடங்கினான். கொஞ்சம் பதட்டப்பட்டது போலத் தோன்றிற்று. ''வணக்கம், நான் அமுதன்'' என்று ஆரம்பித்தான். அதிகம் பேசவில்லை. முடிக்கும்போது ''இதுவொரு அரசியற்போர். இதில சில அழுத்தங்களை நாங்கள் செய்யமுடியாது. நீங்கள்தான் செய்யவேண்டும்'' என்று முடித்தான். அப்பொழுது வியர்த்திருந்தான்.

அன்றைக்கு மாணவர்களை உள்ளடக்கிய செயற்பாட்டு குழுவொன்றை அவர்கள் அமைத்த போது யாரோ அகிலாவின் பெயரையும் அதற்குப் பரிந்துரைத்தார்கள். அவளுக்கு சற்று பெருமையாகவும் இருந்தது. அதற்கடுத்த நாட்களில் ஒன்றிரண்டு தடவைகள் அவளும் நண்பர்களும், அவனது

பணியகத்திற்குப் போகவேண்டியிருந்தது. பிறிதொருநாள் அகிலா தனியே போகும்படியாய் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது.

அகிலாவிற்கு ஈவ்டீசிங் என்ற வார்த்தை அவ்வளவு நெருக்கமானதாயிருக்கவில்லை. அவள் ஆனந்தவிகடன், குமுதம் முதலான புத்தகங்களின் ஊடாகவே அந்த வார்த்தையை அறிந்து வைத்திருந்தாள். ஆயினும் அன்றைக்கு அந்த சம்பவத்தை ஈவ்டீசிங் என்றே அவள் முறையிட்டாள்.

பல்கலைக் கழகத்திற்குச் செல்லும் வழியில் பெரும் மழையொன்று பெய்து ஓய்ந்திருந்தபோதும் இலேசாகத் தூறியபடியிருந்தது. அகிலா சைக்கிளில் சென்று கொண்டிருந்தாள். அவளது நண்பிகளில் ஒரு சிலர் ஸ்கூட்டி வாங்கியிருந்தார்கள். சமாதானத்திற்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக் கடைகளிலேயே ஸ்கூட்டி வாங்கக் கூடியதாக இருக்கிறது. அகிலா ஒன்றிரண்டு தடவைகள் ஸ்கூட்டி ஓடிப் பார்த்திருக்கிறாள். ஏறி உட்கார்ந்தபோது அவளுக்குள் அடங்கிவிடுவதான அளவில் அது இருந்தது. சீரான வேகத்தில் பயணம் இதமாக இருந்தது. அப்படியொன்றை வாங்கித் தரும்படி அப்பாவிடம் கேட்டிருக்கிறாள். அவள் கேட்டால் அவர் ஒருபோதும் மறுத்ததில்லை. இரண்டொரு மாதங்களில் கிடைத்துவிடும்.

மற்றுமொரு மழை பெய்யக்கூடும் எனத் தோன்றியதால் அகிலா குடையை ஏந்தியிருந்தாள். குண்டும் குழியுமான வீதிகளில் வெள்ளம் தேங்கி ஸ்கேர்ட்டில் தெறித்தபடியிருந்தது. அருகில் சென்ற வாகனங்களும் சேற்றை புளிச் புளிச் என அள்ளித் தெளித்தபடியிருந்தன. ஒரு கையால் ஹான்டிலைப் பிடித்தபடி சேற்று நீரை விலத்தியபடி ஓடினாள். அப்பொழுதுதான் அவளுக்கு பின்புறத்தே முதுகுச் சட்டையில் சுளீரென்று உறைக்குமாற்போல ஐந்து முரட்டு விரல்கள் அழுத்தமாக பதிந்து கீழ்நோக்கி தடவி விலகின. சட் என்று பிரேக் அடித்தவள் சுதாகரித்து இறங்கி கொண்டாள். அவளுக்கு முன்னால் இளைஞன் ஒருவன் சைக்கிளை நிறுத்தி கால்களால் ஊன்றியபடி நின்று தலையைச் சரித்து பற்கள் முழுதும் தெரியத்தக்கதாக சிரித்தான். பிறகு ‘‘என்ன, உள்ளுக்கை ஒன்றும் போடேல்லையா.. கைகளில் தட்டுப்படவில்லை’’ என்றான்.

அகிலா ‘‘பரதேசி’’ என்று முணுமுணுத்துக் கொண்டாள். அவன் கொஞ்ச நாட்களாக இப்படி பின்தொடர்ந்து வருகின்றான். இரண்டொரு மாதங்களுக்கு

முன்னர் அவளை சைக்கிளில் முந்திய அவன் இரண்டு கைகளையும் ஹான்டிலில் இருந்து தூக்கி சாகசம் செய்பவனைப்போல விரித்து ‘‘எப்பிடி சுகமாயிருக்கிறீங்களா’’ என்று கேட்டபோதே அகிலாவிற்கு அறிமுகமாயிருந்தான். ‘‘மூதேசி, பிரண்டு விழப்போகுது’’ என்று அப்போது தோன்றியது. மேலும் அவனைக் குறித்து அலட்டிக் கொள்ளவில்லை. காலையில் அவனைக் காணும் போது மட்டும் ‘‘மைனர் டியூட்டிக்கு வந்திட்டார்’’ என்று சிரித்துக் கொண்டாள். நெருங்கிய நண்பிகளுக்கு மைனரைப் பற்றி சொல்லியுமிருந்தாள்.

இன்னொருநாள் நான்காக மடிக்கப்பட்ட வெள்ளைநிறக் காகிதமொன்றை ஹரியரில் செருகிவிட்டு ‘‘படிச்சுப் பார்த்து நல்ல பதில் தாங்க’’ என்று அவன் சொன்னான். அதனை அவனுக்கு முன்னாலேயே கிழித்துப்போட்டால் என்ன என்று தோன்றிற்று. அதையும் மீறி அப்படி என்னதான் எழுதியிருக்கிறான் என்று அறிகிற ஆர்வக் குறுகுறுப்பும் உள்ளே ஓடிற்று. பார்க்கிங்கில் சைக்கிளை நிறுத்திவிட்டு வரும் இடைவெளி நேரத்தில் கடிதத்தை எடுத்துப்படித்தாள். அவளையும் அறியாமல் சிரிப்பு உண்டாகியது.

கடிதத்தின் ஓரத்தில் இரண்டு இதயங்களை ஒரு அம்பு குத்தி கிழித்திருந்தது. இதயங்கள் பூவரசம் இலையை ஒத்தனவாக இருந்தன. ஒரு இதயத்திலிருந்து இரத்தம் வடிவதுபோல சிவப்பு நிறப் பேனாவினால் வரைந்திருந்தான். மற்றைய பூவரசம் இலையின் நடுவில் கேள்விக்குறிகள் இடப்பட்டிருந்தன. நிறைய வண்ணப் பேனாக்களைக் கொண்டு கடிதம் எழுதப்பட்டிருந்தது. உனது பெயர் எனக்குத் தெரியவில்லை, உனது ஊர் எனக்குத் தெரியவில்லை, இருந்தாலும் எனக்குப் புரியவில்லை என்று ஆரம்பித்து என்னவெல்லாமோ எழுதியிருந்தான். இறுதியில் வாழ்ந்தால் உன்னோடுதான் இல்லையேல் மண்ணோடுதான். பதிலுக்கு ஏங்கும் மணிவண்ணன் என்று முடித்திருந்தான்.

அப்படியொரு கடிதம் கிடைத்ததில் பெயரிடமுடியாத மகிழ்வொன்றை அகிலாவால் உணரமுடிந்தது. ஆனால் அவனில் தனக்கொரு காதலும் இல்லையென்று தோன்றிற்று. அன்று மாலை சைக்கிள் கடையொன்றில் அகிலாவின் வருகைக்காக காத்திருந்த மணிவண்ணன் அவளைப் பின்தொடர்ந்தான். அவளுக்குச் சமாந்தரமாக வந்து ‘‘எனக்கு நீங்கள் பதில் சொல்லவில்லை’’ என்றான். அப்படி அவன் அருகாக வருவதை அவள்

விரும்பவில்லை. தெருவில் சென்றவர்கள் அவர்களை பார்த்தபடி போனார்கள். அப்பாவிற்கு தெரிந்தால் வீணாண பிரச்சனைகள் வருமெனத் தோன்றிற்று.

‘‘எனக்கு அப்பிடியொரு ஐடியாவும் இல்லை’’ என்று வெடுக்கெனச் சொல்லிவிட்டு சைக்கிளில் அவனை முந்தினாள். அவன் பேச வார்த்தைகள் அற்றவனாக சைக்கிளை மெதுவாக்கினான். முகத்தில் ஏமாற்றம் இருண்ட மேகத்தைப் போல படரத் தொடங்கியது. ‘‘அப்ப ஏனடி கடிதத்தை வாங்கிக் கொண்டு போனாய்’’ என்று கத்தவேண்டும் போலிருந்தது.

மணிவண்ணன் அடுத்தநாளும் வந்தான். ‘‘ஒவ்வொரு நாளும் நாயைப்போல உங்களுக்குப் பின்னாலேயே வாறனே, கொஞ்சமென்றாலும் யோசிக்க மாட்டீங்களா’’ என்று இரண்டொரு முறை கெஞ்சிப்பார்த்தான். ஒருநாள் அருகாக சைக்கிளை ஓடியபடி அகிலாவின் ஹான்டிலில் கை வைத்தான். அவள் சட்டென்று பிரேக் அடித்து அவனை எரித்து விடுவதுபோல பார்த்தபோது ‘‘ஏன் எங்களைப் பார்த்தால் ஆம்பிளையளாத் தெரியேல்லையோ’’ என்று அவன் கேட்டான். அதற்கு பிறகு அவனது நடவடிக்கைகள் மோசமானதாக மாறியிருந்தன. காதுகளை கூச செய்கிற மாதிரி அவன் பேசத்தொடங்கினான். முதுகில் அடித்துத் தடவுகிற வரைக்கு முன்னேறியிருந்தான்.

அப்பொழுதே அகிலாவுக்கு அரசியற் துறையினரின் நினைவு வந்தது. ‘‘இவனெல்லாம் வாயால சொன்னால் கேட்கமாட்டான்’’ என்று தோன்றியபோது சைக்கிளை பணியகத்திற்கு திருப்பினாள். பல்கலைக் கழகத்திலிருந்து கொஞ்சம் தொலைவில் அது இருந்தது. அமுதன் அங்கிருந்தான். ஒன்றிரண்டு தடவைகள் அகிலா வந்துபோயிருந்த இடமாயினும் அன்று தயக்கமாயிருந்தது. நண்பர்கள் அற்று தனியே வந்திருக்கிறாள். முற்றத்தில் வைக்கப்பட்டிருந்த கதிரைகளில் நாலைந்துபேர் காத்திருந்தார்கள். அவற்றிலொன்றில் அமர்ந்தாள். உள்ளே தொலைபேசி மணி அடிக்கிற சத்தங்களும் வோக்கி இரைந்து இரைந்து பேசுகிற சத்தங்களும் கேட்டபடியிருந்தன.

அமுதன் அகிலாவைக் கண்டு உள்ளே அழைத்தான். எழுந்து போனாள். ‘‘என்னமாதிரி செயற்பாடுகள்’’ என்று அவன் கேட்டான்.

‘‘ஒரு பிரச்சனை’’

‘‘சொல்லுங்க’’

அகிலா அந்த இளைஞன் கடிதம் தந்தது முதல் காலை முதுகில் அடித்ததுவரை மிச்சம் வைக்காமல் சொல்லிமுடித்தாள். ‘‘உள்ளுக்கை ஒன்றும் போடேல்லையா.. கைகளில் தட்டுப்படவில்லை’’ என்று கேட்டதைச் சொல்ல கூச்சமாயிருந்தது. தவிர்த்துக் கொண்டாள். அவள் சொல்லத்தொடங்கியபோது அமுதன் தன் கைகளிலிருந்த பேனாவால் வெற்றுத்தாளில் ஒருசில கோடுகள் வரைந்தபடியிருந்தான். முடித்தபோது தாள் குறுக்கும் நெடுக்குமான அழுத்தமான கோடுகளால் நிரம்பியிருந்தது. பிறகு இப்படிச் சொன்னான்.

‘‘இந்த நாட்டில ஒரு விடுதலைப் போர் நடக்குது என்ற ஒரு யோசனையும் இல்லாமல் சிலதுகள் திரியுதுகள். நாளைக்கு நாங்கள் விடுதலையைப் பெற்று சனங்களிடம் கொடுத்தால், இந்தமாதிரியான ஆட்களால் எல்லாம் கெட்டு நாறிப்போயிடும். நீங்கள் யோசிக்கவேண்டாம். ஆளை மட்டும் அடையாளம் காட்டுங்கள். அவர் பிறகு உங்கடை பக்கம் தலைவைத்தும் படுக்காதபடிக்கு நாங்கள் செய்யிறம்’’

அகிலாவுக்கு மனசு இலேசாயிருந்தது போல உணர்ந்தாள்.

ஒன்றிரண்டு வாரங்கள் கடந்துவிட்டிருந்தன. பல்கலைக் கழக மாணவர்கள் பெரிய எழுச்சி நிகழ்வொன்றுக்கு திட்டமிட்டிருந்தார்கள். அகிலா அடிக்கடி சந்திப்புகள் என்று திரிந்தாள். ஐந்தாறு நாட்களாக பின்னாற் தொடர்கிற மணிவண்ணனைக் காணவில்லை. என்னவோ முறையாகக் கொடுத்திருக்கிறார்கள் என்று மட்டும் புரிந்தது. அமுதனுக்கு நன்றி சொல்லவேண்டுமென நினைத்தாள்.

சந்திப்பொன்றின் பிறகான நேரத்தில் அமுதனே கேட்டான். ‘‘ஆள் இப்பவும் வாறவரோ’’

அகிலா தலையைக் குனிந்து சிரித்தாள். தனக்குள் வெட்கமென ஏதோ படரத்தொடங்குவதை அவள் உணர்ந்து கொண்ட பொழுதாக அது இருந்தது. ‘‘தாங்க்ஸ்’’ என்றாள். அமுதன் சிரித்துக் கொண்டான். அப்படி சிரித்தபோது இரண்டு கன்னங்களிலும் குழி விழுந்ததை அகிலா கண்டாள்.

‘‘சும்மா வெருட்டித்தானே விட்டனியள், வேறை ஒன்றும் செய்யேல்லைத்தானே..’’ பொய்யாக உருவாக்கிய அக்கறையோடு கேட்டாள். அப்படி என்னதான் தனக்காக அவன் செய்தான் என்று அறியவேண்டுமென்கிற ஆவல் மேற்கிளம்பிற்று.

‘‘ச்சீ.. காவல்துறையிட்டை ஆளை அனுப்பினோம்.’’ என்றவன் சட்டென்று சிரித்து ‘‘அதிலயொரு பகிடி’’ என்று நிறுத்தினான். என்ன என்பதுபோல அகிலா ஏறிட்டு நோக்கினாள்.

‘‘வீட்டுக்குப் போய் அறிவிச்ச பிறகு ஆள் நேரே கிளிநொச்சியில காவற்துறையிட்டை போயிருக்கிறார். முதலே காவல்துறைக்கு விபரங்கள் போயிட்டுதுதானே. அவையள் என்ன ஏதென்று விசாரிச்சிருக்கினம். நீங்களும் தன்னை லவ் பண்ணுறதா சொன்னவராம். காவல்துறை ஆதாரமேதும் இருக்கோ என்று கேட்டிருக்கு. பிறகு நீங்கள் மாட்டன் என்று சொன்னது, அவர் சொறிச் சேட்டை விட்டது எல்லாத்தையும் சொல்லி எச்சரிச்சிருக்கிறது. ஆள் பயந்திட்டார். காவல்துறை பைன் கட்டவேணும் என்றதாம். இவர் எவ்வளவு என்று கேட்டிருக்கிறார். முந்நூற்று அறுபத்தைந்து ரூபா என்றிருக்கிறார்கள். ஐநூறு ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு மைனர் மாதிரி நின்றிருக்கிறார். காவல்துறை அதனை திருப்பி கொடுத்துவிட்டு ஒரு ரூபாய் தரச்சொல்லியிருக்கிறது. முதலில இவருக்கு ஒன்றும் பிடிபடவில்லை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு ரூபாய் கொண்டுவந்து தரச்சொல்லி சொல்லியிருக்கிறார்கள். இதுவரைக்கும் ஏழு அல்லது எட்டு ரூபாய்களை செலுத்தியிருப்பார்..’’

அகிலாவுக்கு சிரிப்படக்க முடியவில்லை. அவள் சுற்றவர ஆட்கள் நிற்பதையும் மறந்து சிரித்தபடியிருந்தாள். இரண்டொரு பேர் அவளைப் பார்த்து முகத்தை கேள்விக் குறியாக்கியபடி கடந்து சென்றனர்.

‘‘உங்கடை ஊரில இருந்து கிளிநொச்சி போய் வர எவ்வளவு நேரம் எடுக்கும்..’’

‘‘காலையில் போனால் வர பின்னேரமாகும்.’’ என்றபோதுதான் தண்டனையின் வீரியம் என்ன என்பது அவளுக்குப் புரிந்து சிரிப்பழிந்தது. அமுதன் மீது இன்னதெனச் சொல்லமுடியாத உணர்வொன்று தோன்றிற்று. அமுதன் மெலிதாகச் சிரித்தான். அப்பொழுது அவனிலும் அவ்வுணர்வு தொற்றியிருந்தது.

தொடர்ந்த நாட்களில் அவர்கள் ஒரு சில கடிதங்களையும் புகைப்படங்களையும் பரிமாறியிருந்தார்கள். பச்சை நிற வரிச் சீருடையில் நெஞ்சில் ஹோல்சர் கட்டி துப்பாக்கியை நெஞ்சோடு அணைத்தபடி நின்ற படங்களை அமுதன் கொடுத்திருந்தான். அகிலாவின் சேலையுடுத்திய படங்கள் ஒன்றிரண்டை கேட்டு வாங்கினான். கடிதங்களில்தான் அதிகம் பேசிக் கொள்ள முடிந்தது.

இயக்கத்தில் நீண்டகாலமாக இருந்துவிட்டபடியால் திருமணம் செய்து கொள்வதில் தடையேதும் இருக்கப்போவதில்லையென்றும் விரைவில் தனது காதல் குறித்து இயக்கத்துக்கு அறிவிப்பதாகவும் அமுதன் எழுதியிருந்தான். அகிலா வீட்டிற்கு இன்னமும் தெரியப்படுத்தியிருக்கவில்லை. இயக்கமென்பதால் அப்பா சற்று தயங்கக் கூடும் என்றும் ஆனால் தான் சமாளித்துவிடுவேன் என்றும் அவள் ஒருமுறை எழுதியிருந்தாள்.

திருமணத்தின் பின்னும் தொடர்ந்தும் இயக்கத்திலேயே இருக்கப்போவதாகவும் அதற்கு உமக்கு சம்மதமோ என்றும் ஒருநாள் அகிலாவிடம் அமுதன் கேட்டான். அவள் முகத்தைப் பிரகாசமாக்கி ‘‘ஓம்.. அதுதானே எனக்கும் பெருமை’’ என்று சிரித்தாள்.

# 18

கடந்த ஒரு வாரமாக நீண்டதூரம் பயணம் செய்வதும், சில ஏற்பாடுகள் சரிவராது மீளத்திரும்புவதுமாக காலம் கழிந்தது. சுயஸினைத் தாண்டுவதற்கான ஏற்பாடுகளை எகிப்தைச் சேர்ந்த அதிகாரியொருவன் கவனித்துக்கொள்வதாக இருந்தது. அதற்கான ஒழுங்குகளை ஏஜென்சி முன்னரேயே செய்திருந்தான். ஓட்டிகளுக்கு டயலொக் துராய தொலைபேசியொன்றை அவன் வழங்கியிருந்தான். ஒரு பொலீத்தின் பையினால் சுற்றப்பட்டு கீழறையில் அது மாட்டப்பட்டிருந்தது. ஓட்டிகள் அதனை மிகக் கட்டுப்பாடாகப் பயன்படுத்தினர். சின்னப்பெடியனின் உடலை கடலில் வீசிய அன்றைக்கு அவனது டயறியிலிருந்த தொலைபேசி இலக்கத்திற்கு அறிவிக்க இவன் விரும்பியிருந்தான். அப்பொழுது ''இந்தப்பயணத்தில் இப்பொழுது அது முக்கியமற்றது'' என்று ஓட்டிகள் மறுத்திருந்தார்கள். அவர்களும் கூட தமது செய்திகளை ஒன்றிரண்டு வார்த்தைகளுக்குள் எப்போதும் அடக்கியிருந்தார்கள். ''கம்மிங்'' ''வெயிட்டிங்'' என்ற வார்த்தைகளை விட வேறெதுவும் பேசினார்கள் இல்லை.

அப்படியொரு மாலை அவர்களது அழைப்பிற்கு பதில் இல்லாமல் போனது. இரண்டாவது தடவை முயற்சித்துக் கிடைக்காதபோதும் ஓட்டிகள் பெரிதாய் கலவரப்பட்டிருக்கவில்லை. அன்றைக்கு இரவு முழுவதும், அடுத்தநாள் காலையுமாக அது தொடர்ந்துகொண்டிருக்க அவர்கள் பதட்டப்படத் தொடங்கினார்கள்.

இரண்டுநாட்களாக பேய்மழை பெய்தது. கடலும் வானமும் தமது நீல நிறத்தைத் தொலைத்திருந்தன. கரிய மேகங்கள் அச்சம் தருகிற பிசாசுகளின் உருவங்களாக அலைந்தன. எங்கோ வெகு தூரத்தில் மேகம் யானையின் தும்பிக்கையைப் போல கீழிறங்கி கடலைத் தொட்டிருந்ததை இவன் கண்டான். அப்பொழுது மாமாவின் நினைவு வந்தது. இவனுக்கு பன்னிரெண்டு வயதுகள் நடந்தபோது, இதே மாதிரியான நீர்ச் குழலொன்றை பொன்னாலைப் பாலத்தில் வைத்து இவன் கண்டான். அப்பொழுது காரைநகரில் வாங்கிய பின்னேர முரல் மீன்களை ஒரு பையில் சுமந்தபடி மாமாவின் சைக்கிளில் இருந்தான்.

தூரத்தே கடலின் முடிவிடத்தில் கருமேகம் ஒரு லவுட் ஸ்பீக்கரின் குழாயைப்போல மேலிருந்து கீழொடுங்கியிருந்தது. மாமா சைக்கிளை நிறுத்தி ‘‘அங்கை பாரடா மேகம் தண்ணி குடிக்குது’’ என்று அதனைக் காட்டினார். இவன் ஆச்சரியத்தில் விரிந்த கண்களோடு பார்த்தான்.

‘‘இஞ்சையிருந்து பார்த்தால் கண்ணுக்குத் தெரியாது. ஆனால் இப்ப மேகம் தண்ணியை உறிஞ்சி மேலே இழுக்கும்’’

‘‘அங்கை நிற்கிற மீன்கள்..’’ என்று இவன் கேட்டிருந்தான்.

‘‘அதுகளும்தான்..’’

‘‘மீன்பிடிக்கப்போற மனிசர்..’’

‘‘அவையளையும்தான்..’’

# 19

சற்று நாட்களாகவே மனச் சோர்வொன்று என்னை அழுத்தியபடியிருந்தது. வெளியே வேலைகளும் அதிகமாயிருந்தபடியால் உடலும் சோர்வுற்றிருந்தது. வெளிநாடுகளிலிருந்து வருகிற இளைஞர்களுக்கு ஒரு குறையும் வைக்காமல் கவனிக்க சொல்லி அறிவுறுத்தப்பட்டிருந்தது. காலையில் அந்தப்பணிகளை ஆரம்பித்தால் முடித்து வரும்போது பத்து பதினொரு மணியாகியது. இரவிலும் நித்திரை வருவதில்லை. தொடர் யோசனைகள்,

அகிலாவை காதலிப்பதாக விசாரிக்க வந்தவரிடம் சொல்லிவிட்டேன். அதனை முறையான அறிவிப்பாக இயக்கம் கருதிக் கொள்ளும். நான் சொல்லி முடிக்கும்வரை ஆர்வத்தோடு கதை கேட்கும் முகபாவனையுடன் அவர் அமைதியாயிருந்தார். அவ்வப்போது புன்னகைத்துக் கொண்டார். கடைசியாக ‘‘சினிமாப் படம் போலயே காதலிக்கிறீர்கள் இப்பவெல்லாம்’’ என்றார்.

‘‘நான் இயக்கத்தில சேர்ந்தும் பத்துப் பன்னிரண்டு வருசமாகுது. இதில தடையேதும் இருக்காது என்று நினைக்கிறன். அவவுக்கு படிப்பு முடிய ரண்டு

வருசம் இருக்கு. அதுக்குப் பிறகுதான்..'' என்று இழுத்து முடித்த போது அவர் என் தோள்களில் ஆதரவாகத் தட்டினார்.

''ஒரு பிரச்சனையும் இல்லை. எல்லாம் அதற்கு ஏற்ப நடக்கும். ஆனா, அமுதன் ஒரு பணிக்குப் போன இடத்தில அந்த நேரத்தை எடுத்து இப்படி நடந்து கொள்ளுறது சரியானதில்லை'' என்று அவர் சொன்னார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஒரு நிமிட நேரம் கூட செலவு செய்யாமல் காதல் என்ன இரவோடிரவாக வந்து என்னோடு படுத்துக் கொள்ளுமா என்று கேட்கவேண்டும் போலிருந்தது. இப்படியெல்லாம் யோசித்துக் கொள்வதே புதுமையான அனுபவமாயிருந்தது.

இப்போதெல்லாம் இன்றைய காக்கைவன்னியனும் அன்றைய பண்டாரவன்னியனும் என்றைக்கோ சொல்லியிருந்த ''போர் என்றால் புலிக்குணம் பொங்கும் இன்பக் காதல் என்றால் பூமணம்'' என்ற வார்த்தைகள் நினைவுகளில் அடிக்கடி வந்து போயின. அப்போது வெட்கப் புன்னகையும் தோன்றிற்று. ''என்ன அமுதன், தனியச் சிரிக்கிறாய்'' என்று நண்பர்கள் கேலி செய்தார்கள்.

அகிலா காதலை வீட்டில் தெரியப்படுத்தியிருந்தாள். அவள் இரண்டு தடவைகள் கிளிநொச்சிக்கு வந்து சந்தித்தாள். இரண்டாவது தடவை அவளது அப்பாவும் கூடவே வந்தார். அவர் சொல்லிக் கொள்கிறமாதிரி ஒன்றும் பேசினார் இல்லை. பொத்தாம் பொதுவாக ''எல்லா அப்பாமார்களுக்கும் தங்கடை பிள்ளை நல்லதொரு வாழ்க்கை வாழ வேணும் என்றதுதான் விருப்பம்'' என்று சொன்னார். அப்பொழுது நானும் அதனை ஆமோதிப்பது போல தலையாட்டினேன்.

''அகிலா ஒரேயொரு மகள். அவவின்ரை ஆசைகளுக்கு குறுக்கை நிற்க எங்களுக்கு விருப்பமில்லை. நாங்கள் சிலதை விட்டுக்குடுக்கிறமாதிரி அவையும் சிலவற்றை புரிஞ்சு நடக்கவேணும்''

அவரைப் புரிந்து கொள்வது சிரமமாக இருந்தது. அகிலா அவரைப் பொருட்படுத்தியமாதிரி தெரியவில்லை. அவள் அடிக்கடி நேரத்தை பார்த்த வண்ணம் பேசியபடியிருந்தாள். நாங்கள் மூவரும் வட்டக் கொட்டிலொன்றில் உட்கார்ந்திருந்தோம். அருகாகப் போன போராளிகள் சற்றுத் தலையைத்

தாழ்த்தி எங்களைப் பார்த்துச் சென்றனர். அது ஒருமாதிரியான இயல்புக்கு மாறான சூழலாக எனக்குத் தோன்றிற்று.

“அகிலா, இப்படி அடிக்கடி இங்கை வரவேண்டாம். ”

“நீங்கள் யாழ்ப்பாணம் வரமாட்டீங்களா..” அகிலா என் கண்களைப் பார்த்தபடி கேட்டாள். தலையைத் தாழ்த்திக் கொண்டு “இப்போதைக்கு கஸ்ரம்..” என்றேன்.

அவர்கள் புறப்பட்டபோது வீதிவரை வந்து அனுப்பினேன். அப்பொழுது அகிலாவின் அப்பா அருகில் வந்து நின்றார். நான் சப்பாத்து அணிந்திருக்க வில்லையாதலால் செயற்கைக் காற் பாதங்கள் வெளித்தெரிந்தன. சற்று நேரத்திற்கு அதனையே கூர்ந்து பார்த்தபடி நின்றார். பின்னர் சுற்றும் முற்றும் பார்த்து யாரும் அருகில் இல்லையென்று உறுதிப்படுத்திக் கொண்டார். தாழ்த்திய மெலிதான குரலில் “இயக்கத்தில ஐந்து வருசம் இருந்தால், விலத்தி வரலாம் என்று சொல்லுகினம் உண்மையோ, நீர் எத்தினை வருசமா இருக்கிறீர்” என்று கேட்டார். நான் பதிலேதும் சொல்லவில்லை. “சரி, போயிட்டு வாங்கோ” என்றேன்.

நான் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய இயக்கத் தேவையெதுவும் இருக்கவில்லை. எனது அடையாள அட்டையினை திரும்பப் பெற்றிருந்தார்கள். புலிச்சின்னமிடப்பட்ட அவ் அட்டையில் பெயரும் உறுப்பினர் இலக்கமும் எழுதப்பட்டிருந்தது. அது எனக்கான பனிஸ்ட்மென்டின் ஒரு பகுதியாக இருக்கலாம் என்று அன்று இரவு தோன்றிற்று. அன்றைக்கு துாக்கம் வரவில்லை. காதல் ஒரு தனி மனிதனின் சுதந்திரமில்லையா என்ற யோசனை அன்றைக்குத்தான் முதலில் தோன்றியிருக்க வேண்டும்.

முன்பொருநாள் நேரு ஐயா சொல்லியிருந்தார். “நீங்கள், இனத்தின்ரை சுதந்திரத்திற்காக என்று சொல்லிக் கொண்டு, தனி மனிதரின்ரை சுதந்திரங்களிலை தலையிட்டுத் தடுக்கிறீங்கள். அது சரியில்லை.”

அவர் எதைக் குறித்துச் சொன்னார் என்று சரியாக நினைவில்லை. வன்னியில் சினிமாப் படங்களைத் தடை செய்தபோது அப்படிச் சொல்லியிருக்கவேண்டும். நான் பதிலுக்கு “அண்ணைக்கு எல்லாம் தெரியும்” என்று சொல்லியிருக்கக்

கூடும். நேரு ஐயாவின் நிறையக் கேள்விகளை நான் எப்பொழுதும் அப்படித்தான் எதிர்கொண்டேன்.

“அண்ணைக்கு எல்லாம் தெரியுமா” என்றொரு கேள்வி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு தோன்றுவது ஆச்சரியமாயிருந்தது. அப்பொழுது மனதும் உடலும் ஒருங்கே பதற்றமடைவதாய் தோன்றிற்று. ஆனால் நேரு ஐயா சொல்லியுள்ளார். “கேள்வி கேட்கவேணும். அது ஒரு மனிதன்ரை உரிமை, அதே மாதிரி ஆகக் குறைஞ்சது கேள்வி கேட்கிறதை நீங்கள் அனுமதிக்கே வேணும். அது உங்கடை கடமையும் கூட..”

ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னான நேரு ஐயாவின் ஒவ்வொரு வார்த்தைகளையும் நான் நினைவு படுத்த முயன்றேன். “நீங்கள் முதலில் சனத்தின்ரை மனநிலையை புரிந்து கொள்ளவேணும். நீங்கள் எடுக்கிற முடிவுகளை அவர்களில திணிக்கமுடியாது. ஒரு உதாரணத்திற்கு பேச்சுவார்த்தை நடக்குது. அதில இருந்து நீங்கள் விலகப் போறதென்றால் உங்கடை பாட்டிற்கு விலகமுடியாது. சனம் எதை விரும்புகினம் என்றதை அறியவேணும்.. அதன்படிதான் உங்கடை முடிவு இருக்க வேணும்”

நான் நேரு ஐயாவை நினைவுகளில் கொண்டுவர முயற்சித்தேன். வெறும்மேலுடனும் வெண்ணிறத் தாடியுடனும் ஈசி செயாரில் சாய்ந்திருந்தபடி நெஞ்சு மயிர்களை கைகளால் வருடியபடி நேரு ஐயா எனக்குள் பேசினார்.

“நீங்கள் முதலில அமுதன்ரையும் அகிலாவின்ரையும் மனநிலையை புரிந்து கொள்ள வேணும். நீங்கள் எடுக்கிற முடிவுகளை அவர்களில் திணிக்க முடியாது. ஒரு உதாரணத்திற்கு அமுதன் அகிலாவைச் சந்திக்க விரும்புறார். உங்கடைபாட்டிற்கு இல்லையென்று தடுக்க முடியாது. அவர்கள் எதை விரும்புகினம் என்பதை அறிய வேணும். அதன்படிதான் உங்கடை முடிவு இருக்க வேண்டும்.”

கண்ணயருகிற நேரம், அகிலாவின் அப்பாவின் குரல் காதுகளில் இரைந்தது. இயக்கத்தை விட்டு விலகுவதைப் பற்றி நான் நினைத்தும் பார்த்திருக்கவில்லை. அகிலாவை அன்றைக்கும் கேட்டபோது நான் இயக்கத்தில் தொடர்ந்தும் இருப்பதே தனக்கும் பெருமையென்று அவள் சொல்லியிருந்தாள். இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது என்று எனக்கு ஏன் தோன்றுகிறது..

விலகுவதற்கான துண்டைக் கொடுத்தால் பங்கர் காலத்தையும் உள்ளிட்டு எப்படியும் மூன்று வருடங்களுக்காவது பனிஸ்ட்மென்ட் கிடைக்கும். அப்படியொன்றை நினைத்துப் பார்க்க விசர் பிடிக்குமாற்போல இருந்தது. முன்னர் சண்டைகளில் அறிமுகமான நண்பனொருவன் திருமணத்தின் பின் விலகுதற் பொருட்டு இப்பொழுது தண்டனையனுபவித்தபடியிருந்தான். தொடக்கத்தில் அவனை ஆறுமாதங்கள் பங்கரில் போட்டார்கள். உடல் இளைத்து கண்கள் உட்சென்று அடையாளம் தெரியாதபடிக்கு அவன் உருமாறியிருந்தான். ஒருநாள் நடு மதியத்தில் எதேச்சையாக அவனைச் சந்தித்தேன்.

முகாம் ஒன்றில் இருநூறு பேர் அமரக் கூடிய புதிய கொட்டகையொன்றின் நிலத்தை தனியொருவனாய் நின்று அவன் செப்பனிட்டபடியிருந்தான். கொட்டகையின் கூரைமட்டும் வேயப்பட்டிருந்தது. அவன் காணியின் ஓரத்தில் வெட்டிய குழியில் இருந்து மண்ணைக் கடகத்தில் ஏந்தி தோள்களில் சுமந்து வந்து நிலத்தில் கொட்டினான். பத்துப் பதினைந்து கடக மணலை நிறைத்த பிறகு தட்டிப் பரவினான். பின்னர் மொங்கானால் ஓங்கிக் குத்தி அழுத்தமாக்கினான். வெற்றுடல் வியர்வையில் குளித்தபடியிருந்தது.

அருகில் சென்று ‘‘மச்சான், எப்பிடியிருக்கிறாய்’’ என்று கேட்டேன். அவன் திரும்பி நெற்றியை அழுத்தித் துடைத்தபடி மௌனமாக நின்றான். அவனைப் பார்க்கப் பாவமாக இருந்தது. யாழ்தேவி சண்டையில் அவன் அறிமுகமாயிருந்தான். அப்பொழுது கிளாலியில் வைத்து டாங்கியொன்றைத் தறித்திருந்தோம். அதன் சங்கிலிகள் சிதறிப் பறந்து, நெருப்பு மூண்டெழுந்து டாங்கியை மூடியபோது அவன் துப்பாக்கியை உயர்த்திப் பிடித்துக் கூவியபடி குதித்தது இப்பொழுதும் நினைவில் நிற்கிறது.

அவனது தோள்களை வருடி ‘‘சரி மச்சான், சந்திப்பம்’’ என்று திரும்பியபோது ‘‘காதலித்தது பிழையாடா மச்சான்’’ என்று அவன் கேட்டான்.

அப்பொழுது நான் அகிலாவைச் சந்தித்திருக்கவில்லை. ‘‘நீ காதலித்தது பிழையில்லை. அது வழமையா நடக்கிறதுதானே, ஆனா இயக்கத்தில இருந்து விலகவேணும் என்று நினைச்சாய் பார், அதுதான் பிழை. அண்ணையும் காதலித்துத்தான் செய்தவர். ஆனா அவர் உன்னை மாதிரி நினைக்கவில்லை. அன்றைக்கு அவர் அப்பிடி நினைச்சிருந்தால் இன்றைக்கு இயக்கமே இல்லை’’

என்று அவனுக்குச் சொன்னேன். அவன் என்னவோ வாயிற்குள் முணுமுணுத்தபடி அப்பால் நகர்ந்து சென்றான்.

ஒரு முடிவுக்கு வரமுடியாதபடி இரவு நீண்டுகொண்டிருந்தது. அகிலாவின் அப்பா ஏன் அப்படிக் கேட்டார் என்று தெரியவில்லை. மூன்று வருடங்கள் பனிஸ்ட்மென்ட் என்றால், அதற்குப் பிறகு உடல் தளர்ந்து நெஞ்சு உள்ளொடுங்கி முதுகு கூனி வெளியேறி...

கண்களை இறுக்க மூடுவதும், பிறகு திறந்து இருட்டுக்குள் துலாவுவதுமாக நேரம் கழிந்தவண்ணம் இருந்தது. எல்லாம் பண்டாரவன்னியனாலே வந்தது. யாருக்கோ சட்டை காற்றில் மேலே பறக்கிறது, நமக்கென்ன என்று இருந்திருக்க வேண்டும். இரத்தக் கொதிப்பில் அவனைக் குத்தப்போய் எல்லாம் பிழைத்து நிற்கிறது. அது மட்டும் நடந்திருக்காவிட்டால் அகிலாவின் படிப்பு முடிகிற இரண்டு ஆண்டுகள் வரை சரியாகப் போயிருந்திருக்கும்.

இற்றைவரை மூளைக்குள் கோடுகளையும் வரைபடங்களையும் வரைந்து பழக்கப்பட்டிருந்த நாள் முதற்தடவையான இதயமொன்றைக் கீறினேன். அதன் குறுக்காக நிற்கிற மனிதர்களை கோடுகளாய் சித்தரித்தேன். அகிலாவின் அப்பா, அவளது அம்மா, தினமும் ஒரு ரூபாய் தண்டம் செலுத்துகிற மணிவண்ணன், என்வீட்டில் யாரேனும், வேறும் வேறும் யாரேனும்.. எந்தக் கோடுகளும் குறுக்காக நிற்கவில்லை. ஒரு பெரும் தனிக்கோடு துப்பாக்கியைப் போல இதயத்தை குறுக்கறுத்துப் போனது. அந்தக் கோட்டினை நான் இயக்கம் என்று குறித்தேன்.

ஒருமுறை கண்களை இறுக்கி மூடித் திறந்தபோது நேரு ஐயாவின் குரலில் ஒலிப்பது போலத் தோன்றிய அந்தச் சொற்கள் இப்படியிருந்தன.

“இந்த உலகத்தில, இயக்கம் இல்லையென்று ஒருதடவை கண்ணை மூடி யோசித்துப் பார்த்தேன். நீயும் அகிலாவும் எவ்வளவு சந்தோசமாக இருக்கிறீர்கள்.. ”

நடுநிசி தாண்டிய பிறகு எனக்கு தூக்கம் வருவது போல தோன்றிற்று.

# 20

அலைகளின் பேயாட்டத்தில் வள்ளத்தின் பக்கவாட்டு விளிம்புகள் நீரைத் தொடுவது போலச் சரிந்து நிமிர்ந்தன. கிறீச் கிறீச் என்ற சத்தங்கள் கேட்கத்தொடங்கியபோது ஒன்றிரண்'' இடங்களில் மரச் சட்டகங்கள் விலகியிருந்தன. திசையை அனுமானிக்க முடியவில்லை.

**மிகத்தூரத்தே கன்டெயினர்கள் அடுக்கப்பட்டிருந்த பெரிய** கப்பலொன்றில் வெள்ளை நுரைகள் ஓர் அரவியைப் போல மோதுவதையும் மலை சாய்வதைப்போன்று நீருக்குள் அது தாழ்ந்து அசைவதையும் கண்டபோது இவன் ஒரு நொடியில் வெறுமையுற்றதைப் போன்று உணர்ந்தான். அப்போதுதான் அது நடந்தது. மின்னல் பொழுதின் பேரிரைச்சலுக்குப் பின் இவன் நீரில் மூழ்கிக்கொண்டிருந்தான்.

பெருநிலத்தில் மூண்டு ஓடிப்படந்து மூசி எரியும் தீயின் நாக்குகளைப் போன்றே நீரின் நாக்குகளும் அசைந்து மேலெழுந்து மடிந்து சுருண்டு விழுந்தன. அச் சுழல்களுக்கிடையில் இவன் மனிதர்களைக் கண்டான். அவர்கள் அலைகளைத் தோற்கடிக்கின்ற வெறியில் கைகளையும் கால்களையும் கண்டமேனிக்கு அடித்தும் உதைத்தும் பெருங்குரலில் ஓலமிட்டும் மறைந்தனர். கரிய பூதமொன்று தன் நீண்ட நாவினால் கவ்விப் பற்றுவது போல கடல் அவர்களை உள்ளிழுத்தது. அது கருமையுற்றிருந்தது அன்றைய வானத்தைப்போல.

இவன் தத்தளித்தபடியிருந்தான். ஒரு வீடொன்றினைப்போல முப்பத்தியிரண்டு நாட்களாக மனதுக்குநெருக்கமாயிருந்த வள்ளம் முழுவதுமாக உடைந்து உருக்குலைந்திருந்தது. துண்டுகளாக அது மிதந்தபடியிருந்தது. அவற்றினிடையே பைகள், மண்ணெண்ணெய் பரல், ரொய்லட் தகரம், பாய், சோற்றுப்பானை, கம்பளிப்போர்வை முதலானவை குப்பையைப்போல பரவியிருந்தன. மிதக்கும் அப்பொருட்களைப் பற்றிப்பிடிக்க முயற்சித்த சில மனிதர்கள் தோற்றபடியிருந்தனர்.

தண்ணீருக்குள் முழுவதும் மூழ்கியபோது கால்கள் தம்பாட்டில் அடிக்கத் தொடங்கின. நீரின் அசைவு இவனை ஓரிடத்திலன்றி அலைகழித்தது. தலையை அங்குமிங்கும் உதறித் திணறியபோது உப்பு நீர் தொண்டைக்குழிக்குள் கசந்து உள்நுழைந்தது. மேலே வானத்தைப் பார்க்குமாற்போன்று தலையை உயர்த்தி முதுகை நீரில் அணைத்து நீந்துவதற்கு இவன் முயற்சித்தான். கால்களை உதையத் தொடங்கிய போது வலதுகால் திடீரென்று பாரம்கொண்டதைப் போல தோன்றிற்று. அதனை உயர்த்தி நீரில் உதைக்க முடியவில்லை. கைகளால் சமநிலை செய்யப் படாதபாடு பட்டான். மூழ்குவதைத் தவிர்க்க முடியவில்லை. உடல் சோர்வடைந்திருந்தது. நீருக்குள் தாழ்ந்தபோது வெளிச்சம் குறைந்து கண்கள் இருளடைந்தன. இடது காலைத் தண்ணீருக்குள் உதைத்தபடி கைகளினால் மற்றைய முழங்காலில் பொருத்தப்பட்டிருந்த பட்டிகளின் கட்டுக்களை அவிழ்த்தான். ஒற்றைக் காலினால் தண்ணீரை தள்ளி மிதித்தபடி ஒரு பறவையைப் போல கைகளை வீசி நீரின் மேற்பரப்பிற்கு வந்தான்.

பளபளப்பான பைபர் க்ளாஸினால் வார்க்கப்பட்டிருந்த இவனது வெண்புறா செயற்கைக் கால், முன்னைப்போல கொப்பளிக்கும் இரத்தமும் பச்சை வரிகளாலான பிய்ந்துபோன சீருடைத் துணியும் இன்றி வேகத்தோடு தண்ணீரில் மிதந்து சென்றது.

நீர்த்திரளொன்று இவனைப் புரட்டி வீசியபோது தண்ணீர் உடலை மூடி மேற்பரவியது. நிமிர்ந்தும் புரண்டும் உடல் தன்பாட்டில் சுழன்று கொண்டிருந்தது. கண்களை வலிந்து திறந்தான். வெளிச்சத்திலிருந்து இருளுக்குள் நுழைவதைப் போன்று தோன்றிற்று. வாயிலிருந்து குமிழிகள் வெளியேறின. மூச்சை அடக்கி உடலை இறுக்கி மேல்நோக்கி உந்தும் தருணங்களில் யாரோ தலையைப் பிடித்து ஆழத்திற்கு அழுத்துவது போலிருந்தது. நெஞ்சுக்கும் வயிற்றுக்குமிடையில் பலூனொன்று வெடிக்குமாற்போல ஊதி ஊதி விரிந்தது. கைகள் ஓய்ந்தன. உடல் பஞ்சாய் தோன்றிற்று. நினைவுகள் திணறின.

பொங்குகிற அலைகளையும் கடலையும் தோற்கடித்துவிடுகிற வெறியில் பச்சை நிறத்திலாலான பனியனை அணிந்த ஆமிக்காரனொருவன்

நீந்திக்கொண்டிருந்தான், சுவரில் சாய்ந்து நின்று சிணுங்கிய அகிலா என்னையொரு வழி பண்ணவோ என்று வெட்கித்தாள், அம்மா தலைவிரி கோலமாய் இந்தியச் சிப்பாயொருவனின் முன்நின்று தலையிலும் வயிற்றிலும் அடித்துக் குளறினாள். அலையரசியில் சிறுகுழந்தையொன்று கால்களை உதைத்து வீரிட்டுக் கத்தியது. நைட்டியணிந்திருந்த அகிலா கழுத்துச் சட்டையை கைகளால் அழுத்தியபடி குனிந்து தேனீர் கோப்பையை வைத்தாள். பொங்கும் இன்பக் காதலென்றால் பூமணம் என்றான் பண்டாரவன்னியன். அகிலா கண்களை இடுக்கிச் சிரித்தாள். அம்மா ''இனியாவது உனக்கொரு வாழ்க்கை வேணும்'' என்றாள். மைதிலி காதலிக்கிற இளைஞனை யாரென்று தெரியவில்லை. பனிஸ்ட்மென்ட் செய்பவன் வியர்வையில் ஊறியிருந்தான். அகிலாவின் வெற்று மார்புகள் சுட்டன. அவள் ''இன்றைக்கு மட்டும்தான். நெடுகலும் கேட்கக்கூடாது'' என்று காதுக்குள் கிசுகிசுத்தாள்.

# 21

இத்ரிஸ் என்கிற எரித்திரியக் கிழவனுக்கு முப்பது வருடங்களுக்கு முன்னர் கருமையும் திரண்ட தோள்களும் உருக்குலையாத கட்டான உடலும் வாய்த்திருந்தது. இப்பொழுது போன்று இடுங்கிய கண்களும், ஒடுங்கிய கன்னங்களும், கோடுகளாய்ச் சுருங்கிய தோல்களும் அவனுக்கு இருக்கவில்லை. அகன்ற நெற்றியும் தலையோட்டினை ஒட்டிச் சுருள் சுருளாயிருந்த தலைமயிரும் அவனுக்கிருந்தன. எப்பொழுதும் எதையோ சொல்லத்துடிப்பது போல தடித்த உதடுகளை அவன் கொண்டிருந்தான்.

உறுதியான கரங்கள் எதித்தோப்பிய படைகளிடமிருந்து பறிக்கப்பட்ட துப்பாக்கிகளைத் தாங்கியிருந்தன. இருண்ட வானத்தில் இரண்டு சூரியனைப் போன்ற பிரகாசமான கண்கள் அவனுக்கிருந்தன. அவற்றில் சதா காலத்திற்கும் ஒரேயொரு கனவு மீதமிருந்தது. அது தனி எரித்திரிய விடுதலை தேசம்.

இத்ரிஸ் வீட்டைவிட்டு ஓடிவந்து எரித்திரிய விடுதலை முன்னணிப்படையில் இணைந்து கொண்டபோது அவனுக்கு இருபது வயதுகளாயிருந்தது. துப்பாக்கிகள் மீதான காதலையும் தாண்டி எரித்திரிய தேசக் கனவுகள் அவனில் சஞ்சரித்த வண்ணமிருந்தன.

சீனாவிற்குப் பயிற்சிக்குப் போயிருந்த ஐசேயாஸ் அபேவேர்கி திரும்பி வந்த சற்று காலத்தில் அவரை கொமாண்டர் ஆக்கியிருந்தார்கள். இத்ரிஸின் வயதுகள்தான் அவருக்கும் இருந்திருக்கக் கூடும். சீனப் பயிற்சியின் பின்னர் எதிதோப்பிய சிப்பாயினர் மீது பரவலாக கெரில்லாத் தாக்குதல்களை ஐசேயாஸ் தொடங்கினார். இத்ரிஸ் அவர்மேல் கவரப்பட்டிருந்தான். ஆனால் சீனாவா, யாரோ எவரினதும் உதவியோடு சுதந்திரத்தைப் பெறமுடியுமென்று அவன் நம்பாதவனாயிருந்தான். சண்டையற்ற அமைதியான இரவுகளில், வெம்மைக் காற்று உடலைத் தழுவியபடியிருக்க, துப்பாக்கியை நெஞ்சில் அணைத்து வெறுத்தரையில் உடல் சாய்த்து நட்சத்திரங்களைப் பார்த்தபடி அவன் பாடுவான். “ஓ வழிப்போக்கனே, உன் வழியில் என் எரித்திரியத் தாயைப் பார்த்தால் கூறு, அவள் சுதந்திரத்தை நானே பெற்றுத் தருவேன் என்று”

ஐசேயாஸ் அபேவேர்கி எரித்திரிய விடுதலை முன்னணியில் இருந்து சடுதியாக விலகியபோது அதன் தத்துவக் காரணங்களை இத்ரிஸினால் சரிவரப் புரிந்து கொள்ளமுடியவில்லை. அன்றைக்கு இரவு நிலம் வறண்டு பாளம் பாளமாய் வெடித்திருந்த கடற்கரை வழியே நடந்து கொண்டிருப்பதாய் இத்ரிஸ் கனாக்கண்டான். உடலை உருக்குகிற தகிப்பில் அனல் அடித்தது. கடல் நீர், கண்ணுக்கு முன்னால் வற்றியபடியிருக்க, அதன் ஆழ்நிலத்தில் புதிய வெடிப்புக்கள் கோடுகளாய் உருவானபடியிருந்தன. முடிவில்லா இலக்கு நோக்கி அவன் கண் விழித்தவரை நடந்து கொண்டிருந்தான். அன்றைக்கே அவன் ஐசேயாஸின் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணியில் தன்னை

இணைத்துக் கொண்டான். சற்று நாட்களில் அதுவே எரித்திரியாவின் ஏகப்பிரதிநிதி இயக்கமென்று ஐசேயாஸ் அறிவித்தார்.

இத்ரிஸ் கிழவனுக்கு அசாப் நகரின் தொலைவில் மீனவக் கிராமமொன்றில் குடிசையொன்றிருந்தது. மண்ணைக் குழைத்து எழுப்பிய அரைச்சுவற்றின் மேலே புற்களால் பின்னப்பட்ட பாயினால் சுற்றி அது அடைக்கப்பட்டிருந்தது. காய்ந்த சுள்ளிக் கம்புகளை அடர்த்தியாகப்பரவி அதன் கூரையினை வேய்ந்திருந்தார்கள். நீண்ட காலத்தின் பின் சூடானிலிருந்து எரித்திரியாவுக்கு திரும்பியபோது இத்ரிஸ் இந்த கிராமத்திற்கு வந்தார். அப்பொழுது லண்டனில் எரித்திரியாவிற்கும், எதிதோப்பியாவிற்கும் இடையில் பேச்சுக்கள் நடந்தபடியிருந்தன.

இத்ரிஸ் கிழவன் சூடானுக்கு ஓடித்தப்பிய அந்த நாட்களை குடிசையின் வெறுந்தரையில் படுத்தபடி அடிக்கடி நினைத்துக்கொள்வார். அப்பொழுது நெருக்கமாக அடுக்கப்பட்ட சுள்ளித்தடிகளின் நீக்குகளால் ஒன்றிரண்டு நட்சத்திரங்களை அவர் காண்பார். “ஓ வழிப்போக்கனே” என்ற பாடல் தீனமாக அவரிடமிருந்து ஒலித்தபடியிருக்கும்.

எதித்தோப்பியா அப்படியொரு அசுரபலத்தினைப் பெறுமென இத்ரிஸ் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. குவிக்கப்பட்ட சோவியத்தின் வளங்களைத் தின்று கொழுத்த காளையாக அது மூசியபடியிருந்தது. அதுவொரு மே மாதம். நாடுமுழுவதும் யுத்தத்தில் எரிந்து கொண்டிருந்தது. தெற்கே செங்கடலைத் தொடுகின்ற இதே அசாப் நகரின் கோடியில் இத்ரிஸின் அணியினர் முகாம் அமைத்திருந்தார்கள். ஒரு நள்ளிரவில் எதிரிகள் அவர்களைச் சூழ்ந்த சற்றைக்கெல்லாம் அதிர்ந்தபடியிருந்த நிலம் அமைதியாகிவிட்டிருந்தது.

இத்ரிஸ் வலிபொறுக்க மாட்டாதவனாய் கடற்கரையோர நிலத்தில் சரிந்து கத்தினான். தலைக்குள் நட்சத்திரங்கள் மின்னுவதைப் போல் தோன்றிற்று. கரைகளைத் தொடும் அலைகளின் இரைச்சல் சீரான இடைவெளியில் இரவினை நிறைத்திருந்தது. அவ்வப்போது நீர்த் தூறல்கள் அவனில் பட்டன. இத்ரிஸ் வலது காலின் தொடைகளுக்கு கீழே இரத்தப்பிசுபிசுப்பை

உணர்ந்தான். கைகளால் மெதுவாகத் தடவியபோது முழங்காலில் உடற்சூடு தணியாத இறைச்சிக் குவியலில் கைகள் அளைந்தன. அவனது கண்கள் நீரை உகுத்தபடியிருந்தன. கடற்கரை மணல் உடலில் தேய அவனை யாரோ இழுத்துச் சென்றார்கள்.

இத்ரிஸ் கிழவனிடம் தோள் இடுக்குகளில் பொருத்தி நடக்கமுடிகிற இரண்டு ஊன்று கோல்கள் இருந்தன. சூடானில் அவனுக்குப் பொருத்தப்பட்டிருந்த தகரத்திலாலான கால்கள் துருப்பிடித்து பழுதடைந்த பின்னர் அந்த ஊன்றுகோல்களை அவன் பெற்றிருந்தான். அவனுக்கு தொழிலென்று ஒன்றிருக்கவில்லை. காலையில் சுருட்டொன்றைப் புகைத்தபடி ஊன்றுகோல்களை துணையாக்கி ஒற்றைக்காலால் தத்தித் தத்தி கடற்கரையை நோக்கி நடப்பான். முழங்கால் வரையான இன்னொரு கால் அந்தரத்தில் தொங்கியபடியிருக்கும்.

கடற்கரைச் சனங்களின் நேசத்துக்குரியவனாக இத்ரிஸ் கிழவன் இருந்தான். உட்கார்ந்த இடத்தில் அவன் செய்வதெற்கென சில வேலைகளை அவர்கள் வைத்திருந்தார்கள். மீனவர்களின் வலைகளைச் சிக்கெடுக்கும்போது இலாவகத்துடன் அவனது கை வளைந்து நெளியும் அழகை சிறுவர்கள் வேடிக்கை பார்த்தபடி நிற்பார்கள். மீன்களைக் கொட்டி கூறுகளாக்கி பங்கு பிரித்தளிப்பான். மாலையில் அவனிடம் கொஞ்ச நக்பாக்களும் ஒரு சமையலுக்குத் தேவையான மீன்களும் மிச்சமிருக்கும். அவனிடம் ஓரளவுக்கு நக்பாக்கள் சேர்ந்திருந்தன. சாவதற்கிடையில் தகரத்திலாலான காலொன்றைப் பொருத்தி நடக்க வேண்டுமென அவனுக்கொரு கனவிருந்தது.

அன்றைக்கு காலை, இத்ரிஸ் கிழவனுக்கு அசதியாயிருந்தது. மேலே வெறித்தபடி படுத்திருந்தான். கூரையின் நீக்குகளினால் உள்நுழைந்த ஒன்றிரண்டு வெளிச்சக் கோடுகள் அவனது கண்களைக் கூசச் செய்தன. குடிசையின் வாயிலில் தொங்கிய பாயினை விலத்தியபடி இரண்டு இளைஞர்கள் வந்தார்கள். கிழவன் தலையை நிமிர்த்தி அவர்களைப் பார்த்தான். அவர்கள் கடற்கரை இளைஞர்கள், அவர்களில் ஒருவனிடம்

மீன்பிடி வள்ளமொன்றிருந்தது. கடலில் எல்லை தாண்டியதாக யேமன் கடல் படையினர் அவனை முன்னர் கைது செய்து சிறையில் அடைத்திருந்தனர்.

“இத்ரிஸ், ஒருதடவை கடற்கரைக்கு வரவேண்டும். கடலில் சில மனிதர்களின் பொருட்களும் சில மனித உடல்களும் கரை தட்டியிருக்கின்றன.”

இத்ரிஸ் கிழவன் எழுந்து கொள்வதற்கு அவர்களிலொருவன் உதவினான். சுவரைப் பற்றியபடி நடந்து கிழவன் ஊன்று கோல்களை தோள் இடுக்கில் மாட்டினான். பிறகு வந்தவர்களோடு நடந்தான்.

கடற்கரையில் சனங்கள் மொய்த்தார்கள். பயணப் பொதிகள், பைகள், உடைகள், பீப்பாக்கள், பிளாஸ்டிக் வாளிகள் என ஓரிடத்தில் குவிக்கப்பட்டிருந்தது. ஒன்றிரண்டு இளைஞர்கள் அவற்றைக் கிளறியபடியிருந்தனர். புதிய நீளக்காற்சட்டையொன்றை அவர்களில் ஒருவன் தனக்கெனப் பத்திரப்படுத்திக் கொண்டான். சிலர் கடற்கரைக்கு ஓடி வேறும் ஏதேனும் கிடைக்கிறதா என தேடினர்.

அடர்த்தியான மீசையும் நீண்ட தாடியையும் கொண்ட வெளிர் நிறம் பாய்ந்த இரண்டு மெல்லிய உடல்கள் கைகளை மேலே உயர்த்தியபடி மணலில் வளர்த்தப்பட்டிருந்தன. உடலின் சில இடங்கள் கை வைத்தால் உள்ளே போகுமளவிற்கு நொதித்துப் போயிருந்தன. சனங்கள் மூக்கைப் பொத்திக் கொண்டு நடந்தார்கள்.

இத்ரிஸ் கிழவன் பெருமூச்சொன்றுடன் கடலை வெறித்தபடி நின்றான். அலையில் படகொன்றில் சிதிலடைந்த துண்டுகள் மிதந்து வந்தன. கிழவன் பார்வையை மேலும் கூர்மையாக்கினான். சிவப்பு நிறத்தில் தோளில் சுமக்கிற பையொன்று மிதந்தது. பிறகொரு சாக்கு, பிறகு..

கிழவன் கைகளை விரித்து நெற்றியில் பிடித்து வெளிச்சக் கூசலைத் தவிர்த்தான். ஊன்று கோல்களை இரண்டடிகள் முன்வைத்துப் போய் நின்றான். இப்பொழுது கடல் அலைகள் மிக மெலிதாக அவனது பாதத்தை வருடிச் சென்றன. கால் போலொன்று அலைகளில் அல்லாடுவதை அவன் கண்டான். சற்று கிட்டநெருங்கியபோது அதுவொரு செயற்கைக் காலென்று அவனுக்குப்

புரிந்தது. இத்ரிஸ் கிழவனின் கண்கள் விரிந்தன. பைபர் க்ளாஸினால் ஆக்கப்பட்ட வழுவழுப்பான செயற்கைக் காலொன்று சற்றைக்கெல்லாம் அவனது காலடியில் கிடந்து.

இத்ரிஸ் கிழவன் அதனைக் கைகளில் ஏந்தியபடி ஓடிப்போய் படகொன்றில் முதுகினைப் பதித்தபடி கால்களை நீட்டி உட்கார்ந்தான். மொட்டையாகிக்கிடந்த அவனது வலது காலில் அதை வைத்துப் பார்த்தபோது அளவு ஓரளவுக்குச் சரியாகலாம் போல் தோன்றிற்று. நீண்ட பத்தாண்டுகளுக்குப் பிறகு கிழவனுக்கு புன்னகை தோன்றிற்று.

இத்ரிஸ் கிழவன் அச் செயற்கைக் காலினைக் கையினில் ஏந்தி முகத்தினருகே கொண்டு வந்து தொடர்ந்து முத்தமிட்டபடியிருந்தான்.